# ஆலயப் பாமலர்

## திருப்பலி - பாடல்கள்

நாஞ்சில் புக் ஸ்டால்
நாகர்கோவில்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

J. Jose Mathe

# ஆலயப் பாமலர்

## திருப்பலி - பாடல்கள்

தொகுப்பு

**A. மரிய எலியாஸ்**

சில் புக் ஸ்டால்
67/1 கோர்ட் ரோடு
நாகர்கோவில் - 629 001
Ph : 233853

அருட்பணி. A. ஜான் பெர்க்மான்ஸ்
பங்குத்தந்தை
தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம்
மேல் ஆசாரிபள்ளம்

## அன்புரை

இசை -
உணர்வுகளை எல்லாம் ஆட்கொள்ளும்
ஓர் உன்னத சக்தி!
உறவுகளின் வடிகால்!
இறைவனிடம் உறவாட இம்மாபெரும் சக்தி
நமக்கு துணையாக இருக்கின்றது.
வெறும் ஸ்வரங்களை உணர்வு இல்லாமல்
வெளிப்படுத்தினால் அவை நெஞ்சைத் தொடாது.
அவைகள் உணர்வு பூர்வமானதாக
இருக்க வேண்டும்.
நாஞ்சில் பதிப்பக நிறுவனத்தார்
பல்லாண்டுகளாக உணர்வுப்பூர்வமான
பக்திப் பாடல்களைக் கோர்த்து
வெளியிட்டு வருகின்றார்கள்
அந்த வரிசையில் இந்த "ஆலயப் பாமலர்"
தொகுப்பும் அமைந்திருக்கின்றது.
ஆன்மீகப் பணியில் ஆர்வம் காட்டும்
அவர்களின் முயற்சி சிறக்கட்டும்!
அதன்மூலம் நம் ஆலயங்களில்
வழிபாடுகள் மணம் கமழட்டும்!

அச்சிட்டோர் :
நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
67/1 கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 1
போன் : 233853
e-mail:nanjil@sancharnet.in

## பதிப்புரை

திருப்பலி, செபம் மற்றும் ஆராதனை வேளைகளில்
சிந்தனையை ஒன்றித்து
இறைவனின் புகழைப் பாடவும்
இறை வரங்களைப் பெற்றுக்கொள்ளும்
வழியிலாக இருப்பவை **திருப்பலிப் பாடல்கள்.**

நம் ஆண்டவர் இயேசுவின் அன்னையும்
நம் அன்னையுமாகிய
கன்னிமரியின் பாதம் பணிந்து
புனிதர்களையும் புகழ்ந்து
பாடுவதற்கு ஏற்றவை இப் பாடல்கள்.

அன்புரை வழங்கிய
கோட்டாறு மறைமாவட்டம்
மேல ஆசாரிபள்ளம்
பங்குத்தந்தை **A. ஜான் பெர்க்மான்ஸ்** அவர்களுக்கும்
இந்த அரிய பாடல்களைத் தொகுத்து வழங்கிய
தலைமை ஆசிரியர் **A. மரிய எலியாஸ்** அவர்களுக்கும்
மற்றும் ஏனைய பாடலாசிரியர்களுக்கும் நன்றி.

42 ஆண்டுகள் இறைபணியாற்றும்
எமது **பதிப்பகம்** இப்பாடல் நூலை வெளியிடுகிறது.

அருட்பணியாளர்களுக்கும் பயன்படுத்தும்
நல்லுள்ளங்களுக்கும் எம் நன்றி என்றும் உரியது.

இந்த ஆலயப் பாமலர் மூலம்
இறைவன் புகழ் பாடும் அனைவரும்
இறைஆசீர் பெற்று
நலம் பெற ஆசிக்கின்றோம்!

பணிவுடன்
**நாஞ்சில் பதிப்பகம்**

67/1, கோர்ட் ரோடு,
நாகர்கோவில்

# திருப்பலி செபங்கள்

ஆண்டவரே இரக்கமாயிரும் (2)
கிறிஸ்துவே இரக்கமாயிரும் (2)
ஆண்டவரே இரக்கமாயிரும் (2)

உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நன்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக. உம்மைப் புகழ்கின்றோம், உம்மை வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம். உம்மை மகிமைப்படுத்துகின்றோம். உமது மேலான மாட்சிமையின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆண்டவராகிய சர்வேசுரா, வானுலக அரசரே, எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரா, ஏக சுதனாய் செனித்த ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவே ஆண்டவராகிய சர்வேசுரா சர்வேசுரனின் செம்மறியே பிதாவின் சுதனே.

உலகின் பாவங்களை போக்குபவரே எங்கள் மேல் இரக்கமாயிரும். உலகின் பாவங்களை போக்குபவரே எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். பிதாவின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே எங்கள் மேல் இரக்கமாயிரும்.

ஏனெனில் இயேசு கிறிஸ்துவே நீர் ஒருவரே பரிசுத்தர்
நீர் ஒருவரே ஆண்டவர் நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியோடு பிதாவாகிய சர்வேசுரனின்
மாட்சிமையில் இருப்பவர் நீரே - ஆமென்.

## விசுவாச அறிக்கை

ஒரே சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.

வானமும் பூமியும் காண்பவை காணாதவை யாவும் படைத்த எல்லாம் வல்ல பிதா அவரே. சர்வேசுரனின் ஏக சுதனாய் செனித்த ஒரே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கின்றேன். இவர் யுகங்களுக்கெல்லாம் முன்பே

பிதாவினின்று ஜெனித்தார். கடவுளினின்று கடவுளாக ஒளியினின்று ஒளியாக மெய்யங் கடவுளினின்று மெய்யங்கடவுளாக செனித்தவர். இவர் செனித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர் பிதாவோடு ஒரே பொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன மானிடரான நமக்காகவும் நம் மீட்புக்காகவும் வானகமிருந்து இறங்கினார் பரிசுத்த ஆவியினால் கன்னி மரியிடம் உடல் எடுத்து மனிதன் ஆனார். மேலும் நமக்காக போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையிலே அறையுண்டு பாடுபட்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார். வேதாகமத்தின்படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். வானகத்திற்கு எழுந்தருளி, பிதாவின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார். சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க மாட்சிமையுடன் மீண்டும் வரவிருக்கின்றார். அவரது அரசுக்கு முடிவு இராது. பிதாவினின்றும், சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார் தீர்க்கத்தரிசிகளின் வாயிலாக பேசியவர் இவரே. ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கத் திருச்சபையையும் விசுவசிக்கிறேன். பாவமன்னிப்புக்கான ஒரே ஞானஸ்நானத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். மரித்தோர் உத்தானத்தையும் வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன் - ஆமென்

## பரிசுத்தர்

பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! மூவுலகின் தேவனாகிய ஆண்டவர். வானமும், பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன. உன்னதங்களிலே ஓசன்னா, ஆண்டவர் பெயரால் வருபவர், ஆசிபெற்றவர் உன்னதங்களிலே ஓசன்னா.

## உலகின் பாவம்

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே
- எங்கள் மேல் இரக்கமாயிரும் (2).
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே
- எங்களுக்குச் சமாதானம் தந்தருளும்.

# 1. பாடற்பலி

ஆண்டவரே இரக்கம் வையும் (2)
கிறிஸ்துவே இரக்கம் வையும் (2)
ஆண்டவரே இரக்கம் வையும் (2)

## வானவர் கீதம்

உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக - அதன்
இறைவனை வாழ்த்திடுவோம் - அதன்
இறைவனைப் புகழ்ந்திடுவோம் - உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக.

உமது மேலாம் மாட்சிமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே இணையில்லாத விண்ணரசே
ஆற்றல் அனைத்தும் கொண்டவரே (2)
இறைவனின் செம்மறியே - தூயவரே தேவனே
உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக.

உலகின் பாவத்தை வென்றவரே நீர் எம் மன்றாட்டை ஏற்றருள்வீர்
தந்தையின் வலத்தில் இருப்பவரே நீர் எம் மன்றாட்டை ஏற்றருள்வீர்
நீரே உன்னத தூயவரே (2)
தந்தை தூய ஆவியோடு இருப்பவர் நீரே
உன்னதத்தில் . . . . . . . . உண்டாகுக.

## தூயவர்

தூயவர் தூயவரைப் போற்றிப் புகழ்ந்திடுவோம்
அவர் மகிமையும் மகத்துவமும்
பூவுலகினில் பரந்திடப் புகழ்ந்திடுவோம் - தூயவர்
தூயவரைப் போற்றிப் புகழ்ந்திடுவோம்
உமது மேலாம் மாட்சிமையால்
வானமும் வையமும் நிறைந்துள்ளன
ஆண்டவர் பெயரால் வருபவரே ஆசீர் என்றும் பெற்றவரே
உன்னதங்களிலே ஓசான்னா (2)
ஸநிஸரி நிஸநிப ஸநிதப மகரிஸ
தூயவர் தூயவரைப் போற்றிப் புகழ்ந்திடுவோம்

### உலகின் பாவம்

உலகின் பாவங்களை போக்கிடும் செம்மறியே
எம் பாவங்களை நீக்கியருளும் - எம்மை
புனிதனாய் என்றும் வழிநடத்தும்
உலகின் பாவங்களைப் போக்கிடும் செம்மறியே } 2
உம் அமைதியைத் தந்தருளும் - எம்மைப்
புனிதராய் என்றும் வழிநடத்தும்
உலகின் பாவங்களைப் போக்கிடும் செம்மறியே

## 2. பாடற்பலி

### வானவர்கீதம்

உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக
உலகினிலே நன்மனத்தவர்க்கு அமைதியும் உண்டாகுக
புகழ்கின்றோம் யாம் உம்மையே வாழ்த்துகின்றோம் இறைவனே
உமக்கு ஆராதனை புரிந்து உம்மை
மகிமைப்படுத்துகின்றோம் யாம். உமது மேலாம்
மாட்சிமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே இணையில்லாத விண்ணரசே
ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும்.
தேவ தந்தை இறைவனே
ஏக மகனாக செனித்த ஆண்டவர் இயேசுகிறிஸ்து இறைவனே
ஆண்டவராம் எம் இறைவனே இறைவனின் திருச்செம்மறியே
தந்தையினின்று நித்தியமாகச் செனித்த இறைவன் மகனே நீர்
உலகின் பாவம் போக்குபவரே நீர் எம்மீது இரங்குவீர்
உலகின் பாவம் போக்குபவரே எம் மன்றாட்டை ஏற்றருள்வீர்
தந்தையின் வலத்தில் வீற்றிருப்பவரே நீர் எம்மீது இரங்குவீர்
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே நீர் ஒருவரே தூயவர்
நீர் ஒருவரே ஆண்டவர் நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின்
மாட்சியில் உள்ளவர் நீரே - ஆமென்.

## 3. பாடற்பலி

ஆண்டவரே இரக்கமாயிரும் - 2
கிறிஸ்துவே இரக்கமாயிரும் - 2
ஆண்டவரே இரக்கமாயிரும் - 2
இரக்கமாயிரும் - 3

### உன்னதங்களிலே . . .

உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக
உலகினிலே நல் மனத்தவர்க்கு அமைதியும் உண்டாகுக
புகழுகின்றோம் போற்றுகின்றோம் பாடுகின்றோம் இறைவனே
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம் வழிபடுகின்றோம் தெய்வமே
ஆராதனை - 3 ஆராதனை புரிந்து
மகிமைப்படுத்துகின்றோம் யாம் - 2

உமது மேலாம் மாட்சிமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே இணையில்லாத விண்ணரசே
ஆற்றல் மிகு வல்லவரே தந்தையே இறைவனே
ஆண்டவரே இறைமகனே இயேசுகிறிஸ்து தெய்வமே
செம்மறியே - 3 செம்மறியே இறை
தந்தையினின்று செனித்தவர் நீர் - 2

உலகின் பாவம் போக்குபவரே நீர் எம்மீது இரங்குவீர்
உலகின்பாவம் போக்குபவரே எம்மன்றாட்டை ஏற்றருள்வீர்
தந்தையிடம் வலப்புறத்தில் வீற்றிருக்கும் மீட்பரே
இரங்குமையா எம்மீது இயேசுகிறிஸ்து தெய்வமே
தூயவர் - 3 தூயவர் ஐயா நீர் ஒருவரே ஆண்டவர்
நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின்
மாட்சியில் உள்ளவர் நீரே - ஆமென்.

ஆண்டவரே ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே கிறிஸ்துவே இரக்கமாயிரும்

## உன்னதங்களிலே . . .

உன்னதங்களிலே இறைவா உமக்கு மாட்சிமை உண்டாகுக
உலகிலே நல் மனதுள்ளோர்க்கு அமைதியும் ஆகுக
உம்மைப் புகழ்கின்றோம் உம்மை வாழ்த்துகின்றோம்
உம்மை ஆராதிக்கின்றோம் மகிமைப்படுத்துகின்றோம்
உமது மேலாம் மாட்சிமைக்காக நன்றி கூறுகின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே இணையில்லா விண்ணரசே
ஆற்றல் அனைத்தும் கொண்டவர் தேவதந்தை இறைவனே
ஏக மகனாய் ஜெனித்தவர் இயேசு கிறிஸ்து இறைவனே
ஆண்டவராம் எம் இறைவனே இறைவனின் செம்மறியே
தந்தையினின்று நித்தியமாக ஜெனித்த மகனே நீர்
உலகின் பாவம் போக்குபவரே - நீர் எம்மீது இரங்குவீர்
உலகின் பாவம் போக்குபவரே எம் மன்றாட்டை ஏற்றருள்வீர்
தந்தையின் வலத்தில் வீற்றிருப்பவரே எம்மீது இரங்குவீர்
ஏனெனில் இயேசுகிறிஸ்துவே நீர் ஒருவரே தூயவர்
நீர் ஒருவரே ஆண்டவர் நீர் ஒருவரே உன்னதர்
தூய ஆவியுடன் தந்தை இறைவனின் மாட்சியில் உள்ளவர் நீரே
- ஆமென்.

## தூயவர்

தூயவர் தூயவர் தூயவர் மூவுலகிறைவனாம் ஆண்டவர் -2
வானமும் வையமும் யாவும் நும் மாட்சிமையால் நிறைந்துள்ளன - 2
உன்னதங்களிலே ஓசன்னா - 2 ஓசன்னா ஓசன்னா - 2
ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசிநிரம்பப் பெற்றவரே
உன்னதங்களிலே ஓசன்னா - 2
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

## உலகின் பாவம்

உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே
எம்மேல் இரக்கம் வையும் - 2
எமக்கு அமைதி அருளும் - 4

## வானமும் பூமியும்

வானமும் பூமியும் படைத்தவராம்
கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை சுதன் தூய ஆவியுமாய்
தன்னில் உறவுடன் வாழுகின்றார்

பரிசுத்த ஆவியின் வல்லமையால்
திருமகன் மரியிடம் மனுவானார்
மனிதரைப் புனிதராய் ஆக்கிடவே
புனிதராம் கடவுள் மனிதரானார்

பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
கல்லறை ஒன்றில் அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
மரணத்தின் மீது வெற்றி கொண்டார்

பரலோகம் வாழும் தந்தையிடம்
அரியணை கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்திலே
நடுவராம் திரும்பவும் வந்திடுவார்

பரிசுத்த ஆவியை நம்புகிறோம்
பாரினில் அவர் துணை வேண்டிடுவோம்
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்று
பரிகார வாழ்வில் இணைந்திடுவோம்

திருச்சபை உரைப்பதை நம்புகிறோம்
புனிதர்கள் உறவை நம்புகிறோம்
சரீரத்தின் உயிர்ப்பை மறுவாழ்வை
விசுவாசப் பொருளாய் நம்புகிறோம்

## வானமும் பூமியும்

வானமும் பூமியும் படைத்தாளும் இறைவனை விசுவசிக்கின்றேன்

தந்தையின் ஏக மகனாம் கிறிஸ்துவை "

இவர் தூய ஆவியால் மரியிடம் பிறந்ததை "

பிலாத்துவின் ஆட்சியில் சிலுவையில் மரித்ததை "

பாதாளம் இறங்கி மூன்றாம் நாள் உயிர்த்ததை "

நாற்பதாம் நாளில் விண்ணகம் சென்றதை "

தந்தையின் வலப்பக்கம் அமர்ந்து ஆள்வதை "

வாழ்வோர் இறந்தோரை நடுத்தீர்க்க வருவதை "

உள்ளுயிர் தந்து தேற்றிடும் ஆவியை "

தூய கத்தோலிக்க திருச்சபை தனையும் "

புனிதர் அனைவரின் உன்னத உறவை "

பாவ மன்னிப்பின் ஞானஸ்நானத்தை "

இறுதி நாளில் அனைவரும் உயிர்ப்பதை "

இறைவன் அளிக்கும் முடிவில்லா வாழ்வினை "

தூய நல் ஆவியாம் இறைவன் ஆட்சியை "

தூயவராக்கும் ஒப்புரவு வாழ்வையும் "

- ஆமென்

## அஞ்சலி

முழுமைக்குள் கருவாகி
நிற்கின்ற முதலேபோற்றி!
முடிவொன்றும் இல்லாத
இயக்கத்தின் நிறைவே போற்றி!
அருள் தந்து என்னிலே
நிறைவாய் போற்றி!
நிறைவாழ்வு பயணத்தை
நிறைவேற்ற வருவாய் போற்றி!
போற்றி! போற்றி!! போற்றி!!!

**அஞ்சலி அஞ்சலி தெய்வமே**
அஞ்சலி அஞ்சலி

வாழ்வில் இறைவன் ஒளியானார்
தீபாஞ்சலி தீபாஞ்சலி
வாழ்வில் எனக்கு துணையானார்
மலரஞ்சலி மலரஞ்சலி
வாழ்வில் எனக்கு எல்லாமானார்
தூபாஞ்சலி தூபாஞ்சலி



## வருகையில் ...!

**1**

**அருட்கரம் தேடி உன் ஆலய பீடம்**
அலை அலையாக வருகின்றோம்
அருவியாய் வழியும் உன் அருளினில் நனைய
ஆனந்தமாக வருகின்றோம்

1. ஆயிரம் ஆயிரம் ஆசைகளால்
ஆடிடும் ஓடமாம் எம் வாழ்க்கை
மூழ்கிடும் வேளையில் எம் இறைவா - உன்
கரம் தானே எம்மை கரை சேர்க்கும் - பெரும்
புயலோ எழும் அலையோ - நிதம்
வருமோ ஒளி இருக்க
நாளுமே எம்மை காத்திடும் உந்தன்

2. ஆறுதல் வேண்டும் எம் இதயங்களோ
அன்பினைத் தேடி அலைகின்றதே
தேற்றிட விரையும் எம் தலைவா - உன்
தெய்வீக கரம் தானே எமை தேற்றும் - கொடும்
பிணியோ வரும் பிரிவோ - துயர்
தருமோ துணை இருக்க
நாளுமே அன்பால் ஆறுதல் வழங்கும்

**2**

**அர்ச்சனை மலராக ஆலயத்தில் வருகின்றோம்**
ஆனந்தமாய் புகழ் கீதம் என்றும் பாடுவோம்
அர்ப்பணித்து வாழ்ந்திட அன்பர் உம்மில் வளர்ந்திட
ஆசையோடு அருள் வேண்டி பணிகின்றோம்

1. தாயின் கருவிலே உருவாகும் முன்னரே
அறிந்து எங்களை தேர்ந்த தெய்வமே
பாவியாயினும் பச்சப் பிள்ளையாயினும்
அர்ச்சித்திருக்கின்றீர் கற்பித்திருக்கின்றீர்
மனிதராக புனிதராக வாழப் பணிக்கின்றீர்
பிறரும் வாழ எங்கள் வாழ்வை கொடுக்க அழைக்கின்றீர்
அஞ்சாதீர் என்று எம்மைக் காத்து வருகின்றீர்

2. உமது வார்த்தையை எங்கள் வாயில் ஊட்டினீர்
உமது பாதையை எங்கள் பாதையாக்கினீர்
உமது மாட்சியை எம்மில் துலங்கச் செய்கின்றீர்
உமது சாட்சியாய் நாங்கள் விளங்கச் சொல்கின்றீர்
அழித்து ஒழிக்க கவிழ்த்து வீழ்த்த திட்டம் தீட்டினீர்
கட்டி எழுப்ப நட்டுவைக்க எம்மை அனுப்பினீர்
அஞ்சாதீர் என்று எம்மை காத்து வருகின்றீர்

## 3 அலைகடலென திரண்டு வாரீர் இறைமக்களே

அருள் மழையினைப் பொழிய தேவன் காத்திருக்கின்றார்
ஒரு கொடி கிளை நாமென இனி வாழும் நாளிலே
புது உறவும் புதுயுகமும் காணும் வாழ்விலே

1. வேதம் வாழ வேண்டும் மனிதம் மலர வேண்டும்
நாடு செழிக்க வேண்டும் சத்தியம் நிலைக்க வேண்டும்
இயேசு வாழ வேண்டும் வரங்கள் சேர வேண்டும்
வாழ்வினில் புது வசந்தங்கள் வர
நீதி தேவன் ஆட்சி மலரும்
உண்மை அனபு நீதியே பலியின் வாழ்வுப் பாதைகள்
உலகம் தேடும் அமைதியை உணர்த்தும் உயர்ந்த பலியிதே

2. பொய்மை நீங்க வேண்டும் வாய்மை வளர வேண்டும்
தீமை ஒழிய வேண்டும் தர்மம் ஓங்க வேண்டும்
வாழ்வில் தூய்மை வேண்டும் நெஞ்சில் நேர்மை வேண்டும்
பாரினில் புது அர்த்தங்கள் பிறக்க
பாச தீபம் எங்கும் ஒளிர
உண்மை அன்பு . . .

## 4 அழைக்கும் இறை உன் குரல் கேட்போம்

உம் அழைப்பினை ஏற்றுப் பின் தொடர்வோம்

1. எரியும் புதரில் மோயிசனை
வீசும் காற்றில் எலியாசை
இடியின் ஒலியில் சின்னப்பரை
இறைவன் அழைத்து வா என்றுரைத்தார்

2. அழைப்பை ஏற்று விரைகின்றோம்
அருளால் நிறைத்து வாழ வைப்பாய்
தனக்கென வாழாப் பணி ஏற்றோம்
பிறர்கென வாழும் வரம் நல்கிடுவாய்

3. தகுதியில்லாத எமை ஏனோ
இறைவா விரும்பி அழைத்தாயோ
உனக்கென உள்ளத்தை அளிக்கின்றோம்
உறவென உனையாம் அடையச் செய்திடுவாய்

## 5 அற்புத அன்பனின் அடி தொழவே

அவரின் பாதம் அணி திரள்வோம்
இத்தனை இகம் வாழ் உயிர்களுமே
இயேசுவை வணங்கிடுமே

1. ஆலய மணியின் ஓசையைக் கேட்போம்
ஆயனே நம்மைக் கூப்பிடக் கேட்போம்
ஆவியின் அருளால் அறவழி நடப்போம்
அவரின் வார்த்தையை வாழ்வினில் ஏற்போம்
அன்பினில் இணைவோம் அருளில் நிலைப்போம்
ஆனந்தமாய் வாழ்வோம் - நாம்

2. ஆலயக் கதவு திறந்திடப் பார்த்தோம்
ஆண்டவன் சந்நிதி வணங்கியே நின்றோம்
அன்புக் கரங்கள் கூப்பியே தொழுவோம்
அவரின் அருளால் ஆறுதல் அடைவோம்
அன்பினில் இணைவோம் . . .

## 6 அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே

அன்பினை காத்து அறம் வளர்ப்போமே

1. ஒரு மனத்தோராய் அனைவரும் வாழ்வோம்
அருளொளி வீசும் ஒருவழி போவோம்
பிரிவினை மாய்த்து திருமறைக் காப்போம்
பரிவுள்ள இறைவன் திருவுளம் காண்போம்

2. பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி
பெருமை செய்தாரே புனிதப் பேரன்பை
பிறந்த நம் வாழ்வின் பயன் பெற வேண்டும்
பிறரையும் நமைப்போல் நினைத்திட வேண்டும்

**7** **அழைக்கும் இறைவன் குரலைக்கேட்டு**
எழுந்து வாருங்கள்
அழைக்கும் அவரில் சங்கமமாக விரைந்து வாருங்கள்
பலிசெலுத்திடவே பலன் அடைந்திடவே
படைத்த தேவன் புகழ்பரப்ப பணிந்து வாருங்கள்

1. பாதை காட்டும் ஆயனாக இறைவன் அழைக்கின்றார்
பாவம் நீக்கி பாசம் காட்ட தேவன் அழைக்கின்றார்
அன்பின் ஆட்சியே அவரின் மாட்சியே - 2
பரமதேவன் புகழ்பரப்ப பணிந்து வாருங்கள்

2. வாழ்வு வழங்கும் வார்த்தையாக வாழ அழைக்கின்றார்
வாரி வழங்கும் வள்ளலாக பரமன் அழைக்கின்றார்
நிறைந்த வாழ்விலே நம்மை நிரப்பவே - 2
இனிய தேவன் நம்மை அணைக்க
இணைந்து வாருங்கள்

**8** **அழைக்கின்றார் இயேசு ஆண்டவர்**
ஆவலாய் நாம் செல்லுவோம்
அவர் பலியினில் கலந்திட அவர் ஒளியினில் நடந்திட
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட இந்நாளிலே

1. தேடியே தேவன் வருகிறார்
தன்னையே நாளும் தருகிறார்
தோள்களில் நம்மைத் தாங்குவார்
துயரினில் அவர் தேற்றுவார்
சுமைகளை சுகங்களாக மாற்றுவார்
வளமுடன் வாழும் வழியைக் காட்டுவார்
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

2. அன்பினால் உலகை ஆளுவார்
ஆவியால் நம்மை நிரப்புவார்
அமைதியை என்றும் அருளுவார்
ஆனந்தம் நெஞ்சில் பொழிகுவார்
விடியலின் கீதமாக முழங்குவார்
விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார்
வாருங்கள் . . . .

9

**அலைந்திடும் உள்ளம் அமைதியில் காண்பது**
இயேசுவின் திருவடி சரணாலயம்
அன்பினில் வாழ்ந்து துன்புறும் போதும்
இயேசுவின் திருவடி சரணாலயம்
சரணாலயம்! சரணாலயம்!
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2

1. உள்ளத்தில் ஒன்றி உறைந்திடும் தெய்வம்
இயேசுவின் திருவடி சரணாலயம்
உலகினில் என்றும் நிலையான செல்வம்
இயேசுவின் திருவடி சரணாலயம்
சரணாலயம்! சரணாலயம்!
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2

2. வலிமையும் வாழ்வும் இணைந்திடும் போது
இயேசுவின் திருவடி சரணாலயம்
மகிழ்வினை நிறைவாய் மனங்களில் பொழியும்
இயேசுவின் திருவடி சரணாலயம்
சரணாலயம்! சரணாலயம்!
இயேசுவின் திருவடி சரணாலயம் - 2

10

**ஆலயம் இறை ஆலயம் அருமையான ஓவியம் - 2**
இறைவன் உறையும் காவியம் - 2
இணைவோம் அவரின் இல்லிடம்

1. ஆலயமணியே அவர் குரலாம்
அழைக்கும் இறைவன் தரும் ஒலியாம் } 2
பீடமே அன்பின் பிரசன்னமாம் - 2
பிரசன்னம் பிரசன்னம் பிரசன்னமாம்

2. இறைவனின் வார்த்தை மனுவாகும்
மறையுடல் யேசுவின் உடலாகும் } 2
இறைமக்கள் இறைவனின் தரிசனம் - 2
தரிசனம் தரிசனம் தரிசனம்

**11** **ஆகாய கங்கையின் ஆரம்பமோ - இது**
ஆனந்த விடியலின் சுயவரமோ - இங்கு
உறவுகளின் சங்கமமோ - இது
உரிமைகளின் சங்கீதமோ

1. வேள்விகள் செய்தோம் தேடலில் தொடர்வோம்
வியர்வையில் குரல் கொடுத்தாய்
வேதங்கள் முதுங்கி பேதங்கள் வளர்த்தோம்
இதயங்கள் இணைந்திட வருவாயோ
இறைவா இணைந்திட வருவாயோ

2. வானிசை கேட்டு வசந்தமே ரசித்தோம்
வாழ்வில் உனை புசித்தோம்
பொங்கிடும் மகிழ்வில் பாரினை நிரப்பி
எஙகுமுன் விதையைத் தூவிடுவோம்
உன்னரசின் விதையைத் தூவிடுவோம்

**12** **ஆண்டவரின் திரு சந்நிதியில்**
ஆனந்தமுடனே பாடுவீரே

1. மகிழ்வுடன் அவரை ஆராதிப்பீர்
மங்கள கீதங்கள் முழங்கிடுவீர்
அவரே தேவன் என்றறிவீர்
அவரே நம்மைப் படைத்தாரே

2. நாம் அவர் மேய்ச்சலின் ஆடுகளாம்
நாமே அவரது பெருமக்களாம்
துதிபுகழோடு நுழைந்திடுவோம்
தூய அவரது வாசல்களில்

**13**

**ஆவியிலும் என்றும் உண்மையிலும்**
வழிபட வாருங்கள் - இந்த
அவனியில் இறைவன் அரசினைக்காணும்
ஆனந்தம் பாருங்கள்

1. உலகின் மாந்தர்களே உங்கள்
இதயத்தை திறந்திடுங்கள்
இறைவார்த்தையின் பொருள் காணுங்கள்
இகம் வாழ்ந்திடும் முறை சேருங்கள்

2. உலகின் மாந்தர்களே - உங்கள்
கரங்களை திறந்திடுங்கள்
வறியோருக்கு வழி காட்டுங்கள்
வளம் பொங்கிட வகை கூறுங்கள்

**14**

**ஆனந்த கீதங்கள் முழங்கிட எழுவோம்**
ஆண்டவன் ஆலயம் நுழைந்திடுவோம்
வாருங்கள் வாருங்கள் வாழ்த்திடுவோம்
வான்புகழ் இன்னிசை இசைத்திடுவோம்

1. விடியலின் வேள்விகள் படைத்திடவே
விடுதலை வாழ்வினை பகிர்ந்திடவே
வாழ்ந்திடு இறைகுலமே வணங்கிடு இறைவனையே
புகழ்ந்திடு பலியினிலே வளர்ந்திடு அன்பினிலே

2. இறைவனை தேடிடும் உறவுகளே
இறைவழி வாழ்ந்திட வாருங்களே
சமத்துவ உறவினிலே சங்கமம் ஆகிடவே
உரிமைகள் அடைந்திடவே உறவினில் இணைந்திடவே

**15** **ஆனந்த நாளிதுவே எம் வாழ்வில்**
ஆனந்த நாளிதுவே
ஆண்டவர் இல்லத்தில் ஆலய பீடத்தில்
அர்ப்பணித்தெம்மை அனுதினம் அளித்திடும்

1. ஞானத்தில் ஒளிதரும் பாதையில் நன்றாய்
ஞாலத்தை நடத்திடும் பணிதனில் என்றும்
வானத்தின் வரங்கள் வழங்கிட என்றும்
வாழ்த்தொலி எங்கும் முழங்கி மகிழ்ந்திடும்

2. மண்ணதில் விண்ணகம் மாண்புடன் விளங்கிட
மனிதரின் மனங்களை மாபரன் ஆண்டிட
புனிதனே நாளும் புத்துயிர் அளித்திடும்
புண்ணிய பூவாய் காத்திட வாழ்ந்திடும்

**16** **ஆலயத்தில் நாம் நுழைகையிலே - புது**
நினைவுகள் நுழைகின்றன - அந்த
நினைவுகளின் புது வருகையிலே நம்
நெஞ்சங்கள் நிறைகின்றன ஆ . . . ஆ . . . .

1. அன்பான மகனைப் பலி கொடுத்த
அபிரகாம் இங்கே தெரிகின்றார்
பண்பான ஆட்டினைப் பலியீந்த
ஆபேலும் இங்கே தெரிகின்றார்

2. ஜெருசலேம் ஆலயம் நுழைந்தவுடன்
இயேசுவும் அங்கே மொழிந்தாரே
என்வீடு இது என் ஜெபவீடு
வன் கள்ளர் குகையாக்காதீர்

3. விதவையின் காசும் தெரிகின்றது - பல
விதமான யூதரும் தெரிகின்றனர்
விம்மிடும் பாவியின் குரலொலியின்
விண்ணக எதிரொலி கேட்கின்றது

4. ஆண்டவன் ஆவியாய் வாழ்கின்றார்
ஆதலால் அவரையே தொழுபவர்கள்
ஆவியில் உண்மையில் தொழுங்கள் என்ற
ஆண்டவன் குரலும் கேட்கின்றது

17

**இறையாட்சியின் மனிதர்களே**
மரிமைந்தனின் சீடர்களே
இறை அழைக்கின்றார் அன்பில் இணைக்கின்றார்
புது உலகொன்றை படைத்திட வாருங்களே

1. நாம் வாழும் இந்த பூமி நலமாகிட வேண்டாமா
நலிவுற்றவர் வாழ்வினில் நீதி நின்று நிலைத்திட வேண்டாமா
இயேசுவே காட்டிய வழி உண்டு
இயங்கிட நமக்கு ஒரு நெறியுண்டு } 2
எதிர் நோக்குடன் வாருங்கள்
கதிர் விளைந்திடும் காணுங்கள் } 2

2. இன்று மானிட இதயங்கள் எல்லாம்
ஒன்று சேர்ந்திட வேண்டாமா
இறையாட்சியின் மாற்றங்கள் எங்கும்
நிறைவேறிட வேண்டாமா
மாநிலம் முழுவதும் ஒரு குடும்பம்
மாந்தர்கள் எல்லாம் உடன் பிறப்பே } 2
இந்த உண்மையை வாழ்ந்திடுவோம்
எந்த பகையினும் வென்றிடுவோம் } 2

கடவுளே நாங்கள் வருகின்றோம்
கவினுறு உலகம் படைத்திடவே
கரம் கோர்த்தே சென்றிடுவோம்
கருத்துடன் செயல்படவே

18

**இறைவன் அழைக்கும் குரலைக் கேட்டு**
இன்னிசை முழங்கி இனிதே பாடி
இறையில் கலந்திட - நம்மில்
இறைவன் அரசு மலர்ந்திடவே
இணைவோம் வாருங்கள் - இன்று

1. கல்வாரி பீடம் வந்தால் காலமெல்லாம் பாடம் சொல்வார்
கானமழை பொழிய வாருங்கள்
அன்புக்காக ஏங்கும் மாந்தர் அனைவரையும் அழைக்கிறார்
அவரோடு பலியில் இணைந்திட வாருங்கள்

2. கவின் மிகு நறு மலர்கள் கனிந்திடும் நல்மனங்கள்
கவிதை பாடி வாழ்த்த வாருங்கள்
புதிய வாழ்வில் நுழைந்திடுவோம் புனிதமடைய
விழைந்திடுவோம்
புது உறவில் இணைந்து வாழ்வோம் வாருங்கள்

## 19

**இறை ஆட்சியை அமைத்திடும் மாந்தர்களாய்**
வந்து கூடிடுவோம்
இறைமகன் இயேசுவின் தலைமையை
ஏற்று பணிவிடை புரிந்திடவே
வாருங்கள் நண்பர்களே ஒன்றாய் கூடிடுவோம்
சேருஙகள் அன்பர்களே இணைந்து மகிழ்ந்திடுவோம்

1. இறைவன் என்றும் மானிடனாய்
உன்னில் என்னில் தனைக் கண்டார்
புவி வாழும் மாந்தருக்காய் தன்னைப் பகிர்ந்தளித்தார்
இறைவன் வழி சீடர்களாய்
இன்றும் என்றும் வாழ்ந்திடுவோம் - இறை
ஆட்சி வழி யாகத்தால் நம்மைப் பகிர்ந்தளிப்போம்
வாருங்கள் இணைந்திடுவோம் ஒன்றாய் கூடிடுவோம்
மனிதன் தேடும் இறைமையைக் காண ஒன்றாய் புறப்படுவோம்

2. இறைவன் என்றும் மானுடத்தின்
வாழ்வின் ஒளியில் மாட்சி கண்டார்
வாழ்விழந்த மாந்தருக்காய் தன்னைக் கையளித்தார்
இறைவன் ஒளி தீபங்களாய்
இன்றும் என்றும் வாழ்ந்திடுவோம் - அருள்
ஆட்சிநெறி அர்ப்பணத்தால் நம்மைக் கையளிப்போம்
வாருங்கள் . . . . .

**20**

**இறைமக்கள் அகமகிழ்ந்து வருகின்ற திருப்பவனி - 2**
திருச்சபை இணைந்து கிறிஸ்துவோடு
தருமே தியாகப்பலி
வாராய் இறைத்திருக்குலமே வாழ்வாய் பேறுடனே - 2

1. மலருடன் சேரும் யாவுமே
மணம் பெற்று வாழ்தல் நீதியே - 2
புவி வாழ்வை நாளும் தரவே
இறைமாண்பை இன்றே பெறவே
விரைவாய் வருவோம் தேவன் அருள் பெறுவோம்
இறைவன் நிழலில் வாழ்வின் பொருள் பெறுவோம்
வாராய் . . . . .

2. மகிழ்வுடன் பாடும் வேளையே
மனங்களின் சோர்வை நீக்குமே
திருவாழ்வைத் தேடி பெறுவோம்
மறைவாழ்வின் நன்மை அடைவோம்
பணிவாய் குலமாய் இயேசு பதம் இணைவோம்
மறையின் வழியில் வேதஒளி பெறுவோம்
வாராய் . . . .

**21**

**இதய தீபம் ஏற்றுவோம் இந்த நன்னாளிலே**
இன்னிசை பாடிப் போற்றுவோம் இனிய தேவனை - இந்த
அன்பென்னும் பாதையிலே - வரும்
அர்த்தங்கள் ஆயிரமே - இந்த
சுந்தர சோலையிலே - வந்த
சொந்தங்கள் ஆயிரமே - இவை
அத்தனை அழகும் இறைவன் கரங்கள்
இனிது வரைந்த கவிதையே

1. வந்தவையோ சென்றவையோ சொந்தமென்று ஏதுமில்லை
கண்டவரோ கொண்டவரோ காலம் சொல்லத் தேவையில்லை
கண்ணெதிரில் காணுங்கள் கர்த்தரின் கருணையை
அத்தனையும் அவர் முன்னே எத்துணை மகிமையே - புகழ்
சந்தங்கள் பாடியே நெஞ்சங்கள் மகிழ
வாழ்த்திடு நல் மனமே

2. கற்றவையோ பெற்றவையோ கர்த்தரின்றி ஏதுமில்லை
சத்தியமும் சந்ததியும் சாட்சியமும் தேவையில்லை
கண்ணெதிரில் . . . .

**22** **இயேசு என்னும் பெயரைச் சொல்லி மீட்படைவோமே**
இயேசுவாக மாறி வாழ பலி கொடுப்போமே
விசுவாசத்துடன் ஒன்றாகிடுவோம் - நாம்
நிறைபலியாய் திருப்பலியை நிறைவேற்றுவோம்

1. தன்னுடலை இயேசு கொடுத்து பலியானாரே
தன் இரத்தம் சிந்தி நம்மை மீட்டு விட்டாரே
நினைத்து பாருங்கள்
வான் தெய்வம் பலியாடாய் மாறி விட்டதை
இணைந்து வாருங்கள் அவரோடு
நம்மை சேர்த்து பலியாக்கவே

2. பாவத்திற்காய் மனம் வருந்தி தூய்மை யாகுவோம்
வாழ்வளிக்கும் அருள்வாக்கை கேட்டு மகிழுவோம்
எடுத்து வாருங்கள்
வாழ்வினிலே அனுபவித்த இன்ப துன்பத்தை
கொடுத்து கேளுங்கள் அவர் போல
பிறர்க்காக நாம் வாழவே

**23** **இயேசுவில் இணைந்திட இறைமையில் நனைந்திட**
எழுந்திங்கு வாரீர் இறைமக்களே
அன்பினில் நனைந்திட அருளினில் வளர்ந்திட
நிறைவுடன் வாரீர் மானிடரே
எழுக எழுக இறைமக்களே
வருக வருக மானிடரே

1. புதியதோர் ஆவியும் புதியதோர் இதயமும்
பெறுவது வாழ்வின் கொடையன்றோ
அதை அடைய முயல்வதும் அமைதி காண்பதும்
அகிலம் காணும் வழியன்றோ
எழுக . . . .

2. உறவினில் வளர்ந்திட உண்மையில் நனைந்திட
தன்னையே தந்தவர் இறைவன் அன்றோ
அவர் அரசினைக் காண ஒன்றாய் இணைவது
புதுயுகம் காணும் முறையன்றோ
எழுக . . .

## 24 இயேசுவின் அருளில் திளைத்திடும் உலகே
ஏதில்லா குலமாய் பலியிட வருக
இயேசுவின் அருளில் திளைத்திடும் உலகே

1. தேவனாம் இயேசுவின் திருப்பலியுடனே
நாமெல்லாம் பலியாய் மாறிட வேண்டும்
வாழ்க்கையின் ஏக வளம் தரும் ஊற்றாய்
போற்றி நாம் பலியை தினம் செய்ய வேண்டும்

2. காயினும் ஆபேலும் பலிகளை செலுத்த
ஆபேலின் பலியை ஆண்டவர் ஏற்றார்
ஏனெனில் ஆபேல் புனிதனாய் சென்றான்
காயீனோ கயமை நிறைந்தவன் ஆனான்

## 25 இயேசுவின் சந்நிதியில் மகிழ்வோம் வாருங்கள்
என் தேவனாம் நம் இயேசுவில்
இணைந்து மகிழுங்கள்

1. சந்தங்கள் பல வண்ணங்கள் - உந்தன்
சொந்தங்கள் நிதம் பாடுதே
எண்ணங்கள் சங்கீதங்கள் - என்றும்
என் இன்ப சுப ராகங்கள்
நீ செய்த நன்மைகள் என் வாழ்வின் விடியல்கள்
என்றென்றும் நான் பாடுவேன்

2. காலங்கள் பல நாளுமே - உந்தன்
கனிவான அருள் தாருமே
தாகங்கள் இனி மாறுமே - என்றும்
என் ஆன்ம குறை தீருமே
என் ஆயுள் காலங்கள் உன் அன்பில் நான் வாழ
என் இல்லம் தங்கிடுவாய்

## 26

**இயேசுவின் தலைமையில் புதியதோர் உலகம்**
அமைத்திட எழுந்திடுவோம் - நம்
இதயத்தில் எழுந்திடும் எண்ணங்கள் யாவையும்
இசையுடன் முழங்கிடுவோம்
இறைகுலமே எழுக இறை அரசே வருக

1. ஏழைகள் வாழும் தெருக்களில் இறங்கி
இயேசுவே நடந்து சென்றார் - நம்
இறைவனின் அரசு இவர்களுக்குரியது
என்பதை எடுத்து சொன்னார் - அந்த
இறைமகன் இயேசுவின் பாதங்கள் வழியில்
பயணத்தைத் தொடர்ந்திடுவோம் - வாழ்க்கை
பயணத்தைத் தொடர்ந்திடுவோம்

2. விடுதலை அடைவர் சிறைகளில் வாழ்வோர்
என்று இயேசு சொன்னார் - அவர்
ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமை அற்றோருக்கும்
வழங்குவேன் வாழ்வு என்றார் - நாம்
விழிகளை திறந்து உலகினைப் பார்ப்போம்
ஆவியில் வழி நடப்போம் - தூய
ஆவியில் வழி நடப்போம்

## 27 இயேசுவின் அன்பை கொண்டாடுவோம்

அவர் திருப்பலியில் ஒன்றாகுவோம்
நாம் அழைக்கப் பெற்றோம் பேறுபெற்றோம்
அவரில் மீட்படைந்தோம்
நாம் அழைக்கப்பெற்றோம் பேறுபெற்றோம்
அவரில் வாழ்வடைந்தோம்

1. அனைவரும் வாழ்வுறவே - அவர்
ஆற்றிய திருப்பலியை
அவர் நினைவாய் கொண்டாடியே
அன்பின் பொருளுணர்வோம்
அவர் திருரத்த உறவில் - நாம்
சோதரர் ஆவோம்

2. அப்பத்தை பிட்டுக்கொடுத்து - அவர்
தன்னையே கையளித்தார்
பிறர்வாழ தன்னை இழக்கும்
வாழ்வே பலிஎன்றார்
சுயநலம் உடைத்தெறிந்து - நாம்
இறைமக்கள் ஆவோம்

## 28 இளமை இனிமை புதுமை ராகம் பாடி வருவோம்

வானம் இன்று மண்ணில் வர கூடி தொழுவோம்
உலகம் யாவும் ஒன்று உயிர்கள் யாவும் ஒன்று
இயேசுவில் அனைவரும் சங்கமிப்போம்

1. அன்பு என்னும் ஆடைகளை நாம் அணிவோம்
அண்ணல் இயேசு சுவடுகள் நாம் தொடர்வோம்
தூய ஆவி கொடைகளை நாம் பெறுவோம்
சேவை செய்யும் உள்ளம் கொண்டு நாம் வருவோம்

2. சாதியில்லை பேதமில்லை இறைபலியில்
நீதிவாழும் நேர்மை ஆளும் இறையரசில்
வீதி எங்கும் தேவன் நாமம் கூறிடுவோம்
ஆதிசபை வாழ்க்கை நெறி வாழ்ந்திடுவோம்

## 29 இறைமனித சங்கமம் நிகழும் இடமிது

அன்புறவின் புனிதமும் கமழும் நாளிது
அமைதி இங்கே பிறக்குது
அர்ப்பணம் இங்கே வளருது
நானிலத்தை மகிழ்ச்சியினால் நிரப்புது

1. அன்பர் பணி செய்திடவே இன்பநிலை அடைந்திடவே
அன்புக் குரல் நெஞ்சமதில் ஒலிக்குது
அன்பில் சேவை மலர்ந்திடவே அறங்கள் உலகில் தழைத்திடவே
அருள்மழை உள்ளங்களை நனைக்குது
அன்பு ஊற்று சுரக்கும் இடம் தியாகப் பணியன்றோ
அத்தகு செயலில் நிறைவு காணல் தெய்வச் செயலன்றோ
புனிதமான பணிவாழ்வில் உருவாகும் சங்கமமே
நிறை மனிதம் அதுவே இறை மனிதம்

2. ஓங்கும் கொடுமை ஒழித்திடவே மடியும் உயிர்கள் உயிர்த்திடவே
ஒற்றுமையின் சின்னங்களாய் வாழ்ந்திடுவோம்
வன்முறை நீங்கி வாழ்ந்திடவே மனிதநேயம் காத்திடவே
மதங்கள் கடந்த உறவுக்காக உழைத்திடுவோம்
சாதி சண்டைகள் சமய மோதல்கள் அலகை நிறங்களே
சத்திய நெறியில் உதிக்கும் வீரம் இறைவன் முகங்களே
அருள்வாழ்வின் ஆழத்தில் எழுகின்ற புதுவாழ்வே
நிறை மனிதம் அதுவே இறை மனிதம்

## 30 இறைவனின் பலியில் இணைந்திட வருவோம்

இறைவன் அழைக்கின்றார் இனிதே அழைக்கின்றார்

1. துன்பமில்லை துயரமில்லை இறைவனின் உறவினிலே
வாழ்வுண்டு வழியுண்டு இறைவனின் துணையினிலே

2. அடிமைத்தளையிலிருந்து அன்று முன்னோரை மீட்ட தேவன்
பாவத்தளையிலிருந்து நம்மை மீட்கவே அழைக்கின்றார்
துன்பமில்லை துயரமில்லை . . .

3. அடிமை என்றழைக்கவில்லை நம்மை நண்பர்கள் என்றாரே
உரிமை வாழ்வு வழங்க நம்மை பெயர் சொல்லி அழைக்கின்றார்
துன்பமில்லை துயரமில்லை . . .

## 31

**இறைவனின் புகழ்பாட - இங்கு**
இதயங்கள் பலகோடி
குறையெல்லாம் கடந்தவனே - உன்
துணை ஒன்றே நாம் தேடி

1. மறைபொருள் ஆனவனே - உன்னை
மனங்களில் சிறை வைத்தோம்
குறையுள்ள கோவிலிலே - உன்னை
கொண்டு நாம் குடி வைத்தோம்

2. அன்பு உன் பேர் அறிவோம் - தூய
அறிவென்னும் நாம் தெரிவோம்
இன்பம் நீ எனக்கொள்வோம் - நல்ல
இரக்கம் நீ என மொழிவோம்

## 32

**இறைவா இதோ வருகின்றோம்**
உன் திருவுள்ளம் நிறைவேற்ற

1. கல்லான இதயத்தை எடுத்துவிடு - எமை
கனிவுள்ள நெஞ்சுடனே வாழவிடு
எம்மையே நாங்கள் மறக்க விடு - கொஞ்சம்
ஏனையோர் துன்பம் நினைக்கவிடு

2. பலியென உணவைத் தருகின்றோம் - நிதம்
பசித்தோர்க்குணவிட மறக்கின்றோம்
கடமை முடிந்தென நினைக்கின்றோம் - எங்கள்
கண்களைக் கொஞ்சம் திறந்துவிடு

## 33

**இன்பம் பொங்கும் நாளினிலே**
இனிய நல் வேளையிலே
இதயங்களின் சங்கமமே
இறையரசின் மங்களமே

1. உலகம் கண்ட உதயம் - நம்மில்
உறவு கொண்ட இதயம்
மனங்கள் அன்பில் இணையும் - அருள்
மழையில் மலர்ந்து நனையும்
குறைகள் யாவும் இங்கு கரைந்திடுமே - மன
நிறைவு காண நெஞ்சம் விரைந்திடுமே

2. அகந்தை அனைத்தும் அழியும் - மண்ணில்
அடிமை கோலம் ஒழியும்
அன்பின் தீபம் ஒளிரும் - தேவன்
அருளில் யாவும் மிளிரும்
பயணம் இனிது இங்கு தொடர்ந்திடுமே - அன்பின்
பாதை பாரெங்கும் படர்ந்திடுமே

**34** **இறைகுலமே எழுக இறைபதமே வருக - 2**
புனித நன்னாளில் புகழ்ந்திடவே
புதுவாழ்வில் தினம் திளைத்திடவே
வேற்றுமை நீக்கி வெறுமையை போக்கி
இறைவன் யேசுவில் வாழ்ந்திடவே

1. பாதங்கள் கழுவிய பரமனின் தூய பணியதை தொடர்ந்திடவே
பாரினில் எங்கும் அவரது திருமுகம் படைப்பினில் உணர்ந்திடவே
பகிர்ந்திட வருவோம் நம்மையே தருவோம் - 2
இகமதில் என்றும் சாட்சியாய் வாழ்வோம் - 4

2. சிலுவையின் தியாக பலியினில் கலந்து
சிறுமைகள் போக்கிடவே
சிந்திய யேசுவின் குருதியினாலே அகவொளியாகிடவே
அன்புறவாகும் அகிலத்தைக்காண
அனைவரும் வருவோம் அவரிலே இணைவோம்

**35** **இறைவனின் இல்லத்தில் எனக்கொரு இடம் கேட்டு**
இறைவா நான் வருகின்றேன்
நீ தந்த என்னகத்தில் நீயேதான் வாழ்ந்திட
இறைவா உன்னை அழைக்கின்றேன்
இறைவா (8)

1. வாழ்வில் எண்ணற்ற சோகம் பெரும் சோகம்
சிந்தையை மறைக்கின்ற நேரம் அந்த நேரம்
கலங்கரை விளக்கென வருவாய்
கரைசேர அருளினைப் பொழிவாய்
உறவில்லா மனங்களின் வேகம் பெரும் வேகம்
அமைதியை தொலைக்கின்ற நேரம் அந்த நேரம்
தோழனாய் துணை நிற்க வருவாய்
தனிமையை போக்கி அருள் புரிவாய்
அடைக்கும் தாள் இல்லாத உன் அன்பு இல்லத்தில்
அடைக்கலம் தந்து என்னைக் காப்பாய்
இறைவா (8)

2. கல்லுக்குள் நீ வைத்த ஈரம் நல்ல ஈரம்
மனிதரில் இல்லாதது ஏனோ அது ஏனோ
கருணை மழையினைப் பொழிவாய்
மனங்களை மாண்பினால் நிறைப்பாய்
தேர்களும் காய்கொடுக்கும் காலம் பொற்காலம்
உள்ளங்கள் காய்வது ஏனோ அது ஏனோ
எல்லாமாய் நீ என்னில் எழுவாய்
உயர்நெறி தந்தென்னை ஏற்பாய்
திசை காட்டும் முள்ளாகும் உன் அன்பு இல்லத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்திட செய்வாய்
இறைவா (8)

**36** **இறைவன் தந்த நாளிலெல்லாம் இனிய நாளிது**
இதயம் எங்கும் இசைமழை வெள்ளம்
பொங்கிப் பாயுது ஆ . . . பொங்கிப் பாயுது

1. பூமியின் இருளை விலக்கிடவே
ஆதவன் இயேசுவே எழுந்தருள்வாய்
பூபாள ராகத்தை இசைத்திடவே
ஆனந்த மழையினைப் பொழிந்திடுவாய்
இதயம் உன்னிலே உதயம் காணுதே
இனி எழுந்திடும் பொழுதுகளில் நிறைவுகள் தானே
உந்தன் நினைவுகள் தேனே

2. நீதியின் வழியினில் வாழ்ந்திடவே
நெஞ்சினில் உறுதியைத் தந்திடுவாய்
வீதியில் எங்கணும் விடுதலையின்
பயணங்கள் தொடர்ந்திட துணைபுரிவாய்
புதிய பூமியே புலர வேண்டுமே
புதுயுகம் தன்னில் தோழமையை படைத்திடுவோமே
தடைகள் உடைத்திடுவோமே

## 37

**இறைவன் நம்மை அழைக்கின்றாரே விரைந்து வாருங்கள்**
புதிய உலகம் படைத்திடவே மகிழ்ந்து கூடுங்கள்
இறைவன் அரசு வளர்ந்திடவே
இறைவார்த்தை வழங்கிடவே (2)
இனிதே இணைந்தே சென்றிடுவோம்

1. தாயின் கருவினிலே நம்மைத் தெரிந்தெடுத்தார்
அவரின் கைகளிலே நம்பெயரைப் பொறித்து வைத்தார் (2)
அவரில் நம்மை அர்ப்பணம் செய்ய
மனித மாண்பு மண்ணில் உயர (2)
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

2. அன்புப் பணியினிலே இறைவனைச் சொல்லியே
ஏழை மனிதரில் இயேசுவைக் காணவே
உண்மை நீதி நேர்மை நிலைக்க
பொய்மை சாதி வன்மை அழிக்க
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

## 38

**உந்தன் சந்நிதி வருகின்றோம்**
அன்பின் நாயகனே - தேவா
அன்பிலே நாங்கள் அரசொன்று அமைக்க
ஆதாரம் நீயே அருள் புரிவாயே

1. துன்பங்களும் துயரங்களும் என்றுமே எமைச்சூழ
துணையாகும் உமதன்பு செயல்களில் நாம் வாழ
ஒருவருக்கொருவர் துணைக்கரம் தந்திடும்
பொதுநோக்கு அருள்வாய் புதுநிலை தருவாய்

2. நீதிகளும் நேர்மைகளும் தேடிடும் நேரங்களில்
சாதிகளும் சமயங்களும் தாண்டிடும் காலங்களில்
சுயநலம் மறந்து வரும் நிலை நினைந்து
போராடி வாழ்வோம் உமதன்பில் நனைந்து

**39**

**உயிரைத் தந்து உறவை தேடும்**
தேவன் பலி இதுதான் - இது
உலகம் வாழ உணவாய் வந்த
வானின் அமுதம் தான்
தீபம் ஈந்து உருகும் மெழுகாய் வருவோம்
தாகம் தீர்க்கப் பொழியும் வான்மழையாய் வருவோம்

1. நெஞ்சம் அது கோயில் நேசம் அதன் வாசல்
உறவென்னும் பலி செய்யலாம்
உலகம் கலைக்கூடம் அன்பே அதன் பீடம்
இறையாட்சி நிலை காணலாம்
பகைமை பழிமறந்து கருணைவழி போவோம்
பண்பாலே உலகம் செய்வோம்
இரத்தம் நிறம் ஒன்று நித்தம் இதைக் கொண்டு
புவி எங்கும் வேதம் சொல்வோம்
அடிமை விலங்குமில்லை ஆட்சி முடிவுமில்லை
இறைவனின் தலைமையில் வாழ்ந்திட வந்திடுமே

2. பணமும் தோள் பலமும் வாழ்வின் வழி என்று
பொய்யான கொள்கை கொண்டோம்
எளியோர் அழும் கண்ணீர் உழைப்போர் சிந்தும் வேர்வை
எல்லாமே காசாய்க் கண்டோம்
மனிதம் இறை உருவம் வாழ்ந்தால் இது புரியும்
பாசத்தால் உயிரானதா
முள்ளும் அதன் ஒன்றாய் உறவே அதன் மனம்தான்
விழியாலே வழி காணலாம்
மனதில் மாசுமில்லை வாழ்வில் குறையுமில்லை
நிறைவுடன் பலி செய்ய நித்தம் வந்திடுவீர்

**40** **உழைத்திட வாருங்கள் - இதை**
ஊரெல்லாம் கூறுங்கள்
இறை அரசாகவே இன்ப அரணாகவே
இந்த அவனியை மாற்றுங்கள்

1. அன்பு நீதி இரண்டும் - தரும் அமைதியாகும் மூன்றும்
அரசாளும் காலங்களை - நாம் அழகாக காண வேண்டும்
வரும் தீமை எதிர்ப்போம் வளமெங்கும் காண்போம்
இறைவாழ்வின் மேன்மை இகமெங்கும் அமைப்போம்

2. ஏழ்மை என்னும் பள்ளமும் - பண ஏற்றம் என்னும் மேடும்
சமமாகும் காலங்களே - இறை அரசாகும் நேரங்களே
பசித்தோர்க்கு உணவாம் பாரோர்க்கு உடையாம்
உழைப்போர்க்கு நிலமாம் எல்லோர்க்கும் எல்லாமாம்

**41** **உன் இல்லம் என்னும் ஆலயத்தில்**
நுழைகையிலே இறைவா
இன்பம் தங்கிடும் இன்னல் எல்லாம் தீர்ந்திடும்
அருள்தங்கிடும் இருள் எல்லாம் நீங்கிடும்
எந்தன் உள்ளம் என்னும் மாளிகையில்

1. தேன்சிந்தும் மலர்களாய் வந்தோம்
தேடிவந்துன் பாதம் அமர்ந்திடுவோம்
உம்வழியில் நடந்திடுவோம்
உம்மொழியில் வாழ்ந்திடுவோம்
பொங்கிடும் இன்பங்கள் சங்கங்கள் ஆகிடும்
உன் இல்லம் ....................

2. ஆலயத்தில் ஒலிக்கும் மணிஓசை
ஆனந்தத்தில் எந்தன் குரலோசை
வேதனைகள் மறைந்திடுமே
தேன்துளிகள் நிறைந்திடுமே
பொங்கிடும் உன்னருள் இன்பங்கள் ஆகிடும்
உன் இல்லம் ....................

## 42

**உதயங்கள் தேடும் இதயங்கள் தனிலே**
இறையருள் மலர மனங்கள் பூக்கள் சிந்த
வசந்தம் வாழ்வில் பொங்க வாரும் இறைகுலமே

1. இரவினில் தவித்திட்ட வேளையிலே - முழு
நிலவாய் நிலமிதில் நடந்தவனே
இடர்தனில் துடித்திட்ட பொழுதினிலே - எங்கள்
இதயத்தில் மலர்ந்திடும் சுடரொளியே
பாவம் நம்மிலே மறையாதோ தேவன்
பாதம் நம்மிலே பதியாதோ
சோகங்கள் மறைந்திட அருள்புரிவாய்

2. கவலைகளால் மனம் கலங்கையிலே - உந்தன்
கரங்களால் என்னை தாங்கவந்தாய்
ஆறுதல் தேடி நான் அலைகையிலே - உந்தன்
விழிகளில் கருணை மழை பொழிந்தாய்
புதிய உறவுகள் மலர்ந்திடவே - உந்தன்
அன்பின் பலியினில் கலந்திடவே
ஓர் குலமாய் ஒன்று கூடிவந்தோம்

## 43

**உறவின் கரங்கள் ஒன்றாய் இணையும் நேரம்**
பகிர்வின் பூக்கள் பலியாய் மலரும் நேரம் - நம்
இயேசுவின் பின் அணியாய் வருவோம் - அவர்
வார்த்தைகளை இனி வாழ்வாய் அணிவோம்
வருக அன்பின் இறை அரசே வருக - வருக
எழுக மனித இறை உறவில் எழுக - எழுக

1. நமை வீழ்த்திடும் சுமை யாவையும் பலியாக்கிடு முன்
மத பேதங்கள் இன பிரிவுகள் நம்மில் மாற்றிடுவோம்
மனிதம் மகிழ்ந்திடும் எளியோரின் உறவில்
இறைமை மலர்ந்திடும் அன்பால் எழும் உலகில்

2. இறைவார்த்தையை நிதம் வாழ்வினில் அரங்கேற்றிடுவோம்
பெறும் மகிழ்வினை பிறர் வாழ்விலும் பகிர்வாக்கிடுவோம்
உழைக்கும் உயிர்களில் தெய்வீகம் உறையும்
உறவின் சக்தியில் உரிமைக்கதிர் உதிக்கும்

## 44

**உறவு மலரும் புனித இடம் ஆலயம் - 2**
உள்ளம் ஒன்றுசேருமிடம் ஆலயம் - 2
உணர்வு பெருகிட உயர்வு அடைந்திட
உண்மை வழிச் செல்லும் வாழ்வும் ஆலயம் ஆலயம்-4

1. இயற்கை காத்திடும் மாந்தர் வாழிடம் ஆலயம் - 2
பகிர்ந்து வாழ்ந்திடும் உயிர்கள் உறைவிடம் ஆலயம் - 2
மனிதத்தை உயிரென மதித்திடும் உள்ளங்கள்
மானிடர் வாழ்வுக்காய் தனை தரும் நெஞ்சங்கள்
நம்பிக்கை செய்தி சொல்லும் நண்பர்கள்
அன்புக்காய் உயிரை இழக்கும் ஜீவன்கள்
எல்லோரும் இறைவன் உறையும் ஆலயம் - 2

2. பசுமை சோலைகள் பாடும் பறவைகள் ஆலயம் - 2
காற்றும் வானமும் கடலும் மலைகளும் ஆலயம் - 2
விடியலின் ஒலியென ஒலித்திடும் கலைகளும்
கடவுளே உம் புகழ் பாடிடும் கவிதைகள்
நல்வார்த்தை பேசுகின்ற நாவுகள்
நல்லோரின் பாதை செல்லும் பாதங்கள்
எல்லோரும் இறைவன் உறையும் ஆலயம் - 2

## 45

**உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்**
உலகாளும் தேவன் நெறிவாழும் இதயம் தெய்வம் தரிசனம்
மறைவழியில் வளரும் இல்லங்கள் எல்லாம் தெய்வம் தரிசனம்
நிறைவோடு மலரும் உலகங்கள் உயிர்த்தால் தெய்வம் தரிசனம்
தெய்வம் தரிசனம்

1. அன்பாகி அன்பில் நிலையாகும் நெஞ்சில் தெய்வம் தரிசனம்
மெய்யாகி பொய்மை பழி நீக்கும் நெறியில் தெய்வம் தரிசனம்
ஒளியாகி உலகில் இருள் போக்கும் பணியில் தெய்வம் தரிசனம்
கனலாகி நீதி நெருப்பாகும் செயலில் தெய்வம் தரிசனம்
தெய்வம் தரிசனம்

2. மதம் யாவும் மனித இன பேதம் ஒழித்தால் தெய்வம் தரிசனம்
சமதர்மம் ஓங்க ஓயாது உழைத்தால் தெய்வம் தரிசனம்
உரிமைகள் காக்க உயிர் தியாகம் செய்தால் தெய்வம் தரிசனம்
இறையரசின் கனவு நனவாகி விடிந்தால் தெய்வம் தரிசனம்
தெய்வம் தரிசனம்

## 46 எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக

என் தந்தாய் உம்மிடம் என் செபம் இதுதான்
நல்லோரும் தீயோரும் வல்லோரும் புல்லோரும்
எல்லோரும் இணையட்டும் ஒன்றாக

1. சமயங்களெல்லாம் சத்திய இறைவன்
வழியில் செல்ல வேண்டும்
அமைதி சிறகால் பறந்து இணைந்து
அன்பில் மகிழ வேண்டும்
எல்லாமே உம்மாலே எல்லோரும் உம்மாலே
பாருக்குள் நீராகும் உம்மாலென் பேதங்கள்
ஊருக்குள் விளக்காக விளங்கட்டும் வேதங்கள்

2. மலர்களின் வகை எத்தனை எனினும் சேர்ந்தால் அழகுண்டு
மதத்தால் இனத்தால் சபைகள் பிரிந்தால்அதிலே அழகுண்டோ
எல்லாமே உம்மாலே எல்லோரும் உம்மாலே
சேலைக்கு நூலாக மாறட்டும் எண்ணங்கள்
சோலையாய் உள்ளோரை ஏற்றால் தான் ஏற்றங்கள்

## 47 எழுந்திடுவீர் இறைமக்களே

குழுமிடுவீர் குருகுலமே
பணிந்திடுவீர் இறைபதமே
பரமனுக்குப் பலியிடவே

1. தீபத்தை எரியச் செய்திடுவீர்
தீபத்தின் ஒளிபோல் திகழ்ந்திடுவீர்
தூபத்தைப் புகையச் செய்திடுவீர்
தூபத்தின் மணம்போல் கமழ்ந்திடுவீர்

2. பாவத்தை நினைத்து வருந்திடுவீர்
சாபத்தில் நின்று விலகிடுவீர்
தெய்வத்தின் அன்பை உணர்ந்திடவே
சேவித்து நாளும் வாழ்ந்திடவே

**48** **எங்கெங்கோ தேடித்தேடி**
தேடி அலைந்தேன் தேவை நீ தேவா
என்றென்றும் பாடிப்பாடி
உன்னை அழைத்தேன் பாதை நீ நாதா
கார்கால மேகம் கண்டும் கனலானேன் நானே நாதா
இதயம் திறந்து உதயம் காண
உனதருள் தாரும் இறைவா

1. என்மனம் சோர்ந்து போகும் வேளை
உன்னைக்கூவி அழைத்தேன் - இறைவா - 5
தாய்மடி சேரும் சேய்போல ஓடிவருவேன்
எனை அன்பு செய்யும் நல்ல தெய்வம் நீதான்
எனை என்றும் காக்கும் வல்லதெய்வம் நீதான்
நான் வாழும் நாளில் வணங்கும் தெய்வம் நீதான்
நான் காணும் பொருளில் கவிதை வடிவம் நீதான்
நான்தேடும் இடங்களில் தெய்வதரிசனம் நீதான்

2. என்நிலை பாதை மாறும் வேளை
வாசல் தேடி வருவேன் - இறைவா - 5
தாகம் கொண்டமானைப் போல ஓடிவருவேன்
என்வழித்துணையாய் ஆன தெய்வம் நீதான்
எனை என்றும் தேற்றும் நல்லதெய்வம் நீதான்
நான்பாடும் பொருளில் விளங்கும் தெய்வம் நீதான்
நான்பேசும் மொழியில் அகர னகரமும் நீதான்
நான் வேண்டும் இடங்களில் தெய்வதரிசனம் நீதான்.

## 49

**ஒளியேற்றுவோம் நாமே**
இயேசென்னும் ஒளியேற்றுவோம்

1. இருள்திரை அகற்றும் பெரும் ஒளியே - இறை
தரும் அருள் உலகில் அரும் பொருளே
அன்போடு சென்று அவர் அன்பை இன்று
நம்மோடு வாழும் எல்லோரும் காண

2. நிலையில்லா உலகில் அருள் இல்லையே - இங்கு
அலைந்திடும் உள்ளத்தில் அறம் இல்லையே
நிழலாடும் பாரில் ஒளியான தீபம்
ஒளிகாண என்றும் ஒளியாக வாழ்ந்து

## 50

**ஒன்றுகூடுவோம் ஒன்றாய் பாடுவோம்**
ஆண்டவர் இயேசுவின் பலியில் இணைவோம்
நம் இறைவனைப் போற்றுவோம்
நம் இயேசுவைப் போற்றுவோம்
தூய ஆவியைப் போற்றுவோம்
திருப்பலியில் கலந்திடுவோம்

1. இரக்கத்தை பொழிந்து பாவத்தைப் போக்கும்
மன்னிப்பு வழிபாடு
இறைவனின் குரலை இதயத்தில் ஒலிக்கும்
இறைவார்த்தை வழிபாடு
இயேசுவின் உடலை குருதியை உணவாய்
உட்கொள்ளும் வழிபாடு
வாழ்வில் ஆனந்தம் மலர்ந்திடச் செய்யும்
நன்றியின் வழிபாடு - நம் இறைவனை

2. ஆவியில் உண்மையில் இறைவனைத் தொழுவது
உயிருள்ள வழிபாடு
ஆண்டவர் இயேசுவை மீட்பராய் ஏற்பது
இறைவனின் வெளிப்பாடு
கடவுளை தொழுவதும் மனுக்குலச் சேவையும்
சமநிலைப் பண்பாடு
இயேசுவின் சீடராய் சான்றினைப் பகிர்வது
அழகிய நிலைப்பாடு - நம் இறைவனை

**51** **காலை இளங்கதிரே நீ கடவுளைத் துதிக்க எழு**
சோலைப் புதுமலரே நீ இறைவன் தாளில் விழு
ஆலயத் திருமணியே நீ ஆண்டவன் குரலை இசை
ஞானத் தவக்குலமே நீ அருள்தரும் பலியை செய்

1. திருப்பலி நிறைவேற்றும் குருவுடன் இணைந்து கொண்டு
திரளாய் வருகின்ற கூட்டத்தில் அன்பு கண்டு
பெரும் வரக் கல்வாரி அரும்பலி நினைவாகும்
திருமறைத் தகனப்பலி பீடத்தில் குழுமிவிடு

2. வருங்குருவுடன் சேர்ந்து பரமனை வாழ்த்திநின்று
திருப்பலிப் பீடத்திலே தெய்வீக வாழ்வடைந்து
சிரமே தாள்பணிந்து சிந்தையை இறைக்களித்து
பரமுதல் தருகின்ற அருட்பலி பங்கேற்பாய்

**52** **காலையிலும் மாலையிலும் கூடுவோம்**
கர்த்தர் இயேசு அன்பை சொல்லிப் பாடுவோம்
பேதமில்லையே ஜாதியில்லையே
அன்பினால் நாம் எல்லாம் சேருவோம்

1. கவலை என்ன துயரமென்ன சொல்லுவோம்
அன்பர் இயேசு மாற்றிடுவார் நாடுவோம்

2. உறவுமலர் துணையுமவர் போற்றுவோம்
இரவுபகல் உடனிருந்து தேற்றுவார்

3. வழியுமவர் ஒளியுமவர் காணுவோம்
உண்மைதெய்வம் இயேசுவை வாழ்த்துவோம்

**53** **கீழ்வானம் சிவக்கும் இயேசுவின் வரவால்**
தூள்தூளாய் போகும் தீமையின் வடிவம்
வீழாத உம் தலைமை - எம்
வாழ்நாளில் விளக்கானால்
வாழாத இவ்வுலகம் செங்கதிராய் நிமிர்ந்து நிற்கும்
இயேசு எம் தலைவா நீர் வருக
புது வாழ்வு தரவே வந்திடுக

1. எரிந்திடும் மெழுகாய் தியாகமே செய்தால்
செல்லாத காசாக மதிக்கப் பட்டோம்
புரியாத அன்பை பலியாலே விளக்கி
புரிய வைத்தீரே பணியின் மகிமை
இயேசு எம் தலைவா . . .

2. பொருளினை சேர்க்கும் ஆசைகள் குவிந்து
பொன்னான உறவினை முறிக்கிறது
தலை சாய்க்க இடமே இல்லாமல் வாழ்ந்து
தந்தை அரசில் இல்லம் அமைத்தீர்
இயேசு எம் தலைவா . . .

## 54

**சக்தியானவா ஜீவநாயகா**
அன்பாலே வாழும் தேவா
ஆதி அந்தமாய் அருள் நீதி உண்மையாய்
என்றென்றும் வாழும் தேவா

1. மக்கள் யாவரும் அன்பில் அக்களிக்கவா
அச்சமின்றியே வாழ்வில் ஒத்துழைக்கவா
திக்கனைத்துமே உண்மை எதிரொலிக்கவா
யுத்தம் நீங்கியே அமைதி உதிக்கச் செய்ய வா
பூமி எங்குமே நெஞ்சம் யாவும் தங்கியே
அன்பாலே வாழும் தேவா

2. வறுமை போக்கியே வளமை மகிழ்வளிக்க வா
சமத்துவத்திலே மனித மாண்புயர்த்த வா
ஆணவத்தையே வென்று பணிவை ஆக்க வா
தாழ்ச்சி கொண்டவர் உள்ளம் ஊக்கம் ஊட்டவா
நீதி நேர்மையில் எம்மை நாளும் ஆளவே
அன்பாலே வாழும் தேவா

## 55

**சங்கமம் அன்பின் சங்கமம்**
சங்கமம் அருளின் சங்கமம்
சங்கமம் பங்கின் சங்கமம்
சங்கமம் பகிர்வின் சங்கமம்
ஆனந்தம் புது ஆனந்தம் தரும்
ஆலயம் எங்கள் ஆலயம்

1. விழிகள் திறந்தால் பார்வை தெரியும்
பாதை தெரிந்தால் பயணம் இனிக்குமே
மனங்கள் திறந்தால் உறவு மலரும்
பகைமை உதிர்ந்தால் பகிர்வு மணக்குமே
அன்பினில் இணைந்து அருளினில் நனைந்து
பங்கினில் நிலைத்து பகிர்வில் மகிழுவோம்

2. ஏக்கங்கள் ஒன்றானால் எழுச்சி தோன்றும்
தேக்கங்கள் களைந்தால் மாற்றம் பிறக்குமே
எண்ணங்கள் நன்றானால் நம்பிக்கை பெருகும்
அன்புடன் ஒன்றித்தால் எதிலும் வெற்றியே
ஆர்வமாய் இணைந்து ஆக்கமாய் உழைத்து
ஆதிசபை உணர்வில் வாழ்வை வாழுவோம்

**56**

**தமிழால் உன் புகழ் பாடி**
தேவா நான் தினம் வாழ
வருவாயே திருநாயகா - வரம்
தருவாயே உருவானவா

1. எனை சூழும் துன்பங்கள் கணையாக வரும்போது
துணையாகி எனை ஆள்பவா
மனநோயில் நான் மூழ்கி மடிகின்ற பொழுதங்கு
குணமாக்க வருவாயப்பா - எனை
உனதாக்கி அருள்வாயப்பா

2. உலகெல்லாம் இருளாகி உடனுள்ளோர் சென்றாலும்
வழிகாட்டும் ஒளியானவா
நீதானே எனக்கெல்லாம் நினைவெல்லாம் நீதானே
நாதா உன் புகழ் பாடுவேன் - எனை
நாளெல்லாம் நீ ஆளுவாய்

**57**

**தலைவா உனை வணங்க - என்**
தலைமேல் கரம் குவித்தேன்
வரமே உனைக் கேட்க - நான்
சிரமே தாழ் பணிந்தேன்

1. அகல்போல் எரியும் அன்பு - அது
பகல்போல் மணம் பரவும்
நிலையாய் உனை நினைத்தால் - நான்
மலையாய் உயர்வடைவேன்

2. ஞானத்தில் சிறந்தும் என்ன - உயர்
தானத்தில் இருந்தும் என்ன
தாழ்மையில் மனமில்லையேல் - என்
ஏழ்மையை என் சொல்வேன்

**58** **தியாகப் பலியினிலே இறைவன் எழுகின்றார்**
பகிரும் உள்ளங்கள் நடுவிலே பரமன் வருகின்றார்
வருகின்றார் வருகின்றார்
அருளை நம்மில் பொழிகின்றார் } 2

1. உறவில் நாளும் நிலைத்து வாழ பரமன் வருகின்றார்
உண்மை வழியில் " " "
கண்ணின் மணிபோல் எனைக் காக்கும் " "
கனிவாய் உன்னை நாளும் தேற்றும் " "

2. அன்பில் என்றும் நிலைத்து வாழ " "
அமைதி வழியில் " "
உடனிருந்து உயிரை வழங்கும் " "
தன்னைத் தந்து நம்மை மீட்கும் " "

**59** **திருக்குலமே எழுந்திடுக**
அருள் பொழியும் பலியினிலே
ஒருங்கிணைவோம் கரம் குவிப்போம்
உன்னதரைப் போற்றுவோம்
ஆகா சந்தோஷம் பெருகிடுதே
அவர் சன்னதி காண்கையிலே

1. ஆனந்தமுடனே அவர் திருமுன்னே கூடிடுவோம் (2)
ஆண்டவரே நம் கடவுள் என்று பாடிடுவோம் (2)
அவரே நம்மை படைத்தார் அவருக்கே சொந்தம் நாம்
அவர் படைப்புக்கள் நாம் அவர் பிள்ளைகள் நாம்
அவர் மந்தையின் ஆடுகள் நாம்

2. இன்னிசை முழங்க இறைவன் வாசல் நுழைந்திடுவோம் (2)
பண்ணிசையோடு அவரது பீடம் சூழ்ந்திடுவோம் (2)
அவரை புகழ்ந்திடுவோம் அவர் பெயர் வாழ்த்திடுவோம்
அவர் நல்லவராம் அவர் வல்லவராம்
அவர் அன்பே நம்மை நடத்தும்

**60** **தீபத்தின் ஒளியினில் இணைவோம்**
திருப்பலி செலுத்திட விரைவோம்
மனிதம் மகிழ்ந்திட புனிதம் மலர்ந்திட

1. நல் வாழ்வின் தீபங்களாய் - இங்கு
நாளெல்லாம் ஒளிர வாருங்களே
நம் வாழ்வின் தேவைகளை - தினம்
நல்லோர்க்கு இயேசு தந்திடுவார்
அவரின் இல்லம் தினம் வந்தால் - நம்
உள்ளங்கள் ஒளியால் நிறைந்திடுமே
அன்பு செய்யும் உள்ளங்களே - இறைவனின்
அருள் பெறும் இல்லங்களே

2. இயேசுவோடு நாம் நடந்தால் - என்றும்
நம்வாழ்வில் தோல்விக்கு இடமில்லையே
நன்மை செய்து நீ மகிழ்ந்தால் - இங்கு
உண்மை ஒளி உனக்கு கிடைத்திடுமே
வார்த்தை இங்கு மனுவானார் - நம்
வாழ்வினில் என்றும் குடிகொண்டார்
அன்பு செய்யும் . . .

**61** **தேவன் வாழும் உள்ளங்களே**
வாருங்கள் வாழ்த்துங்கள்
தேடி ஓடும் நெஞ்சங்களே
வாருங்கள் வாழ்த்துங்கள்

1. பாவி எந்தன் வாழ்விலே
பாலை வனமும் சிரிக்குமே
ஆவியை அனுப்பும் ஆண்டவா
அகமகிழ்ந்து நான் சிலிர்க்கவே
என் வாழ்விலே எல்லாம் நீயே
எனவே நான் உனைப் பாடுவேன்

2. உம் தூய ஆலய முற்றங்களில்
நம்பியே நானும் பாடுகிறேன்
எம்பாவ இதயம் அங்கு தான்
ஆனந்த மோகம் காணுமே
உனையன்றி உறவில்லை
எனவே நான் உனைப் பாடுவேன்

## 62

**தோழமை உறவில் புது உலகமைப்போம்**
அனைவரும் வாருங்கள்
தோழர்களாக இணைந்துவாழ புறப்படுவோம் வாருங்கள்
நம் யேசுவின் குடும்பம் ஒன்று
நாம் யாவரும் இணைவது நன்று
ஓர்குலமாக ஓரணியாக ஒன்றி வாழ்ந்திடுவோம் - 2

1. தெய்வம் தந்த பூமிதன்னில் அன்பை விதைப்போம்
வார்த்தை சொல்லும் நெறிதனில் பாதை அமைப்போம் - 2
உண்மை அன்பு நீதி வாழும் இன்ப ஆட்சி - 2
உலகினில் உருபெறவே ஒளிகொடுப்போம் - 2

2. தேவன் தந்த வேதம் தன்னை வாழ்வில் சுவைப்போம்
இறைமனித உறவினில் என்றும் வளர்வோம் - 2
சாதி சமய பேதம் மாறும் புதிய வாழ்வு - 2
மானிடர் பெற்றிடவே உழைத்திடுவோம் - 2

## 63

**நன்மைகள் செய்த இறைவனுக்கு**
நன்றியின் பலியைச் செலுத்திட வாரீர்
நன்மைகள் நாமே அடைவோம் வாரீர்

1. உள்ளத்தை தருவது திருப்பலியாம்
உடைந்த தென்றால் அது பெரும்பலியாம்
கொடைகள் பெறுவது தகும் வழியாம்
குறையினை போக்கும் கோவழியாம்

2. வானத்தை நோக்கும் நறும் புகைபோல்
வாருங்கள் உள்ளத்தை எழுப்பிடுவோம்
அனைத்தையும் அன்புடன் கொண்டு வந்தோம்
ஆண்டவர் திருமுன் படைத்திடுவோம்

**64** **நிறையருள் வாழ்வு பயணத்திலே**
பேரணியாய் நாம் செல்வோம்
இறைவனின் தியாகப் பலியினிலே
கலந்திடவே நாம் இணைவோம்

1. அவனியிலே இறைவனுக்காய்
அர்ப்பணம் செய்பவர் பேறுபெற்றோர் - என்னும்
அருள் சான்று பகர்ந்திடவே
அன்பர்களே ஒன்று கூடிடுவோம்
அன்பு உள்ளங்கள் நாம் இணைவோம்
இன்ப வெள்ளத்தில் நனைந்திடுவோம்

2. அன்பரசை அகிலமெங்கும்
பரவிட செய்பவர் பேறுபெற்றோர்
அந்த அருள் வாழ்வு பரவிடவே
தீபங்களாய் இன்று எரிந்திடுவோம்
உண்மை தெய்வத்தை நாம் தொழுவோம்
விண்ணின் செல்வத்தில் திளைத்திடுவோம்

**65** **பரிசுத்த குலம் நீங்கள்**
பலியிட வாருங்கள்
இறைவனுக் குரியவர்கள் - என்றும்
இறைபுகழ் கூறுங்கள்
அரச குருத்துவமே - தூய ஆவியின் ஆலயமே
இறைவன் அழைத்த இனமே-இதை அறிந்து வாழ்மனமே

1. ஒளியின் மைந்தர் நீங்கள் உலகினில் ஒளிர்ந்திடுங்கள்
முடிவில்லா வாழ்வதையே - நீங்கள் முதன் முதல் தேடிடுங்கள்
மறையுடல் உறுப்புகளாய் - என்றும் ஒன்றித்து வாழ்ந்திடுங்கள்
இறைவாக் குரைப்பவராய் - இந்த இகமதில் திகழ்ந்திடுங்கள்

2. தந்தை இறையவனின் - சிறு மந்தையும் நீங்கள்
ஆயரின் மேய்ச்சலிலே - புது வாழ்வையும் கண்டிடுங்கள்
அக ஒளி ஏற்றிடவே - தெய்வ அருளொளி பெற்றிடுங்கள்
பெற்ற இப்பெருவாழ்வை - இங்கு பிறருடன் பகிர்ந்திடுங்கள்

## 66

**பலிப்பீடம் வரும் குருவோ - புது**
பாடம் தரும் மொழியோ - நல்
நாதம் தரும் இசையோ - நாம்
வாழ்வு பெறும் பலியோ

1. சிறு குழந்தையை வரவிடுங்கள் - பல
இன்னல்கள் நான் தீர்ப்பேன்
உந்தன் ஆசைகள் நான் அறுப்பேன் - புது
உலகம் நான் சமைப்பேன்

2. செந்நீர் சிந்திய இடமிதுவே - சீர்
அருள் பெற்ற இடமிதுவே - அதை
நினைந்தே நாம் கூடிடுவோம் - புது
பலியைப் படைத்திடுவோம்

## 67

**பாரதமே தாயகமே வருவாய்**
பரனேசு இறைவாழ்வைப் பெறுவாய்

1. ஒளிதரும் நிலவு சிலருக்கா - அல்ல
ஒளிநாடும் விழிகள் சிலருக்கா - அல்ல
ஒளியாம் யேசு யாருக்காக - இந்த
உலகினில் வாழும் அனைவரும் காண

2. வழிகாட்டும் பலகை சிலருக்கா - அல்ல
வழிசெல்லும் உரிமை சிலருக்கா - அல்ல
வழியாம் யேசு யாருக்காக - இந்த
வான் வீடு தேடும் அனைவரும் காண

**68** **புதிய வாழ்வு என்னில் காண இயேசு உன்னையே**
விடியலாக உன்னைத்தேடி நாடி வந்தேனே
வரங்கள் யாவும் தந்திடு அருளை நாளும் வழங்கிடு
இதயம் திறந்து தினமும் தொழுவேன்

1. ஏழு ஸ்வரங்களில் மீட்டினேன் - உனை
ஏக்கத்தோடு நாடினேன்
கரங்கள் ஏந்தி அழைத்திடு உந்தன் கருணையாலே மாற்றிடு
உறவின் வரவு உந்தன் யாகமே - எந்தன்
வரவின் சேர்வு உந்தன் யோகமே

2. தேனின் இனிமை உன்னிடம் - அதை
பானமாக பருகுவேன்
காலமாய் நீ மிளிர்ந்திட உந்தன் கொடிகளாய் என்னை மாற்றிடு
உறவின் வரவு உந்தன் யாகமே - எந்தன்
வரவின் சேர்வு உந்தன் யோகமே

**69** **புதிய வானகமும் புதிய வையகமும் மலரும் நாளிது**
புதிய இதயமும் புதிய ஆவியும் அணியும் நேரமிது
அலையென எழுவோம் அணியெனத் திரள்வோம்
ஆண்டவர் இயேசுவை புகழ்வோம்

1. இறைவனின் சொந்த பிள்ளைகள் நாம்
இறையரசின் குருத்துவக் குலமும் நாம்
உரிமை வாழ்விலே நமை அழைத்தார் - இங்கு
உலகம் வாழவே நமைப் பணித்தார்
உறவின் பாலங்கள் நாம் அமைப்போம் - இங்கு
உருகும் விழிகளை நாம் துடைப்போம்

2. தம்மையே இயேசு பலியென தந்து
விடுதலை வாழ்வைத் தந்துள்ளார்
கருணை இறைவனில் நாம் நிலைப்போம் - மன
கதவு நிலைகளை நாம் திறப்போம்
கரங்கள் இறைவனின் பணிக்கானால் - இங்கு
கடவுள் அரசு தான் பிறக்காதோ

## 70

**புதிய பூமியே புதுப்பாட்டு பாடிவா**
புனித நாளிலே இறைமாட்சி காணவா
வானிலே கோலமாய் வானதூதர் பாடவே
பூவிலே நாமுமே தேவன் பீடம் கூடுவோம் (2)

1. விண்ணோரெல்லாம் கொண்டாடவே
இந்நாளையே பொன்னாளென
மண்ணோருமே கொண்டாடுவோம்
நம் பாடலும் விண்ணேறவே
மறை வாழ்வு தேடும் நாமெல்லோரும்
ஜீவ ஊற்று இயேசு பாதம்
நாடி வாழ்வை தியாகமாக்குவோம் (2)

2. சங்காகியே பண்பாடுவோம்
சங்கீதத்தால் ஒன்றாகுவோம்
எந்நாளுமே அன்பானவன்
பொன்மேகத்தில் பங்காகுவோம்
இறைவாக்கு கூறும் வாழ்வுதேடி
மானிடத்தின் ஜீவநாடி
நாதன் இயேசு பாதை செல்லுவோம்

## 71

**புனித நன்னாளிதுவே**
புனிதம் கமழ பூமுகம் மலர
புலர்ந்தது இந்த நாளிதுவே
புனித நன்னாளிதுவே

1. இறைவனின் அன்பினிலே இரண்டற கலந்திருக்க
நிறையருள் வாழ்வினிலே நிதமும் மகிழ்ந்திருக்க

2. வாழ்வது நானல்ல என்னில் வாழ்வது நீ இயேசுவே
வார்த்தையின் வழிதனிலே வாழ்க்கையை நடத்திடவே

## 72

**பூசை பலிபோல் பாக்கிய செல்வம்**
புவியில் இல்லையே
புவி நிரம்ப பொன் தந்தாலும் இப்பலிக்கு ஈடில்லையே
பரமனே இப்பலிப் பொருளாய் எழுந்தருள்வாரே
பக்தி ஆவல் நிரம்ப பலியை ஒப்புக்கொடுப்போமே

1. அள்ள அள்ள குறையாச் சுரக்கும் அமுதம் நிறை சுவையே
அன்பில் சிறந்து உயர்ந்து நின்ற கல்வாரிப் பலியே
எல்லையில்லாப் பலன் நிறைந்து ஓங்கும் அருட்பலியே
எங்கள் பாவநோய்க்கு மருந்தாய் எழுந்திடும் பலியே

2. சோம்பல் அசதி சோர்வனைத்தும் தூரத்தள்ளியே
சீர்நிறை பலி ஆவல் நிரம்ப செலுத்திடுவோமே
ஆண்டவருக்கேற்ற நன்றி ஆராதனையுமே அளித்து
பாவ மன்னிப்பும் அருளும் அடைந்திடுவோமே

**73** **வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்**
குரல் கேட்டு அருளாயோ தலைவா

1. பகை சூழும் இதயத்தின் சுவரை யெல்லாம் - என்
பாசத்தால் தகர்க்கின்ற வரம் கேட்கின்றேன்
புகை சூழ்ந்து இருள் வாழும் மனதில் எல்லாம் - உன்
பெயர் சொல்லி ஒளியேற்ற உனைக் கேட்கின்றேன்

2. நலமெல்லாம் எனக்கென்று தேடும் குணம் - இனி
நாள்தோறும் இறக்கின்ற வரம் கேட்கின்றேன்
பலியாக பிறர்க்கென்னை அளித்திட்ட பின் - என்
பரிசாக உனைக் கேட்கும் வரம் கேட்கின்றேன்

**74** **வருக வருகவே வசந்த மலர்களே**
மலர்ந்திடவே மகிழ்ந்திடவே விரைந்து வாருங்கள்
எழுக எழுகவே இறைவன் காணவே
இனிமை ததும்ப இன்னிசையில் இணைந்து வாருங்கள்

1. சுமை சுமந்து சோர்ந்த வாழ்வை மறந்து வாழ்வோம்
சுகம் நிறைந்து மலர்ந்த வாழ்வில் மகிழ்ந்து வாழ்வோம்
ஆனந்தம் காணவே அவரிலே கூடுவோம்
இருகரங்கள் விரித்தவராய் அழைக்கும் இறைவன் குரலைத்தேடி

2. உலகம் யாவும் இனியவரின் ஆட்சி ஆக்குவோம்
உண்மை விதைத்து உலகை அவரின் மாட்சி ஆக்குவோம்
அமைதியின் தூதராய் அவரிலே வாழுவோம்
ஆதவனாய் ஒளிவீசி அழைக்கும் இறைவன் குரலைத் தேடி

## 75

**வருக வருக மகிழ்வுடனே வருகவே**
வரவு என்றும் இனிதாய் அமைகவே
மங்கள நிலவாய் என்றும் திகழ்ந்திட - 2
மன்னவன் அருளுடன் என்றும் வாழ்ந்திட - இந்த

வானும் நிலவும் காற்றும் கடலும்
யாழும் இசையும் இதமாய் ஒலிக்க வருகவே - 2

1. சுமையின் பழுவால் சோர்ந்திருப்போரே
சுயநலப் பிடியில் சிதைந்திருப்போரே
இறைமகன் இயேசு அழைக்கின்றார்
இதயக் கதவை திறந்து உன்னை அழைக்கின்றார்
பணிவாய் அவர் பாதம் நாம் அடைந்திடவே - இந்த

2. ஆபேல் பலியை விரும்பிய தேவன்
ஆபிரகாம் பலியில் நெகிழ்ந்திட்ட தேவன்
நம்மையே அன்பின் பலியாய் கேட்கின்றார்
நம்பியே அவரின் பாதம் சேர்ந்திடுவோம்
நலன்களாலே நம் வாழ்வில் நிறைந்திடவே - இந்த

## 76

**வருவீர் வருவீர் இறைவன் அழைக்கின்றார்**
திருப்பலி மேன்மை நிறைவேற்ற
இறைவன் அழைக்கின்றார்

1. உன்னரும் தியாகத்தைக் காட்டிவிடு
உன்னதர் சொன்ன மொழி கேட்டுவிடு
நல்லறம் செல்வழி வாழ்ந்துவிடு
நம்பிக்கை மனதாய் வாழ்ந்துவிடு
வருவாய் ஆண்டவர் வழிநடப்பாய்
பெறுவாய் ஆண்டவர் அருள்பெறுவாய்

2. துன்புறும் பகைமையை மறந்துவிடு
தூரத்தில் ஆசையை எறிந்துவிடு
தூய்மையின் இனமாய் மாறிவிடு
தேவனின் திருமுன் சேர்ந்துவிடு
வருவாய் ஆண்டவர் . . .

## 77 வாருங்கள் இறைமக்களே

இறைமகன் காட்டிய முறைதனில் பலியிட
வாருங்கள் இறைமக்களே

1. இறைவனின் வார்த்தையை இதயத்தில் ஏற்று
இனிவரும் வாழ்விலே புது ஒளிபெறவே

2. பகைமையை ஒழித்து புலன்களை ஒறுத்து
நலன்களை நாடியே நன்மைகள் அடைந்திட

## 78 வாருங்கள் அன்பு மாந்தரே

பலி செலுத்த வாருங்கள்
பண் இசைத்து பாடுங்கள்
வாருங்கள் அன்பு மாந்தரே

1. இயேசு என்னும் ஆதவன் கதிர் விரிக்கக் காணுங்கள்
இதயம் என்ற மலர் விரித்து மணம் பரப்ப வாருங்கள்
ஆசை என்ற இருள் மறைந்து அன்பு உதயமாகவே
அருள் வளங்கள் இதயம் சேரும் அன்புருவைக் கேளுங்கள்

2. அன்பு என்றால் என்னவென்று அவரைக் கேட்டுப் பாருங்கள்
அத்தனையும் தருவது தான் அன்பு என்று கூறுவார்
தன்னை ஈந்து அன்பு செய்த தேவன் இங்கு வருகின்றார்
நம்மை முற்றும் தந்து இன்று யாவும் பெற்று திரும்புவோம்

## 79 வாருங்கள் இறைமக்களே - கடல்

அலையெனவே வாரீர் - நாம்
அன்புள்ளம் கொண்டு ஓரினமாக
அவர் புகழ் பாடிடுவோம் - நாளும்
அவர் வழி வாழ்ந்திடுவோம்

1. சிறுதுளி பெருவெள்ளம் ஆகிடவே
எளியவர் நலம் பெற இணைந்திடுவோம்
வறியவர் வாழ்வுகள் உயர்ந்திடுமே
வறுமையின் அவலங்கள் அகற்றிடுவோம்
தேவன் அரசும் மலர்ந்திடுமே

அன்பும் நீதியும் வளர்த்திடுவோம்
வாருங்கள் இறைமக்களே - கடல்
அலையெனவே வாரீர்

2. அருள் ஒளி மனதில் கலந்திடவே
கறைகளை இதயத்தில் களைந்திடுவோம்
மனிதனில் மனிதம் மலர்ந்திடவே
எழுகின்ற தீமைகள் அழித்திடுவோம்
உரிமைகள் உடைமைகள் அடைந்திடவே
இயேசுவின் கொள்கைகள் ஏற்றிடுவோம்
வாருங்கள் . . .

**80** **வாருங்கள் வாருங்கள் இறைமக்கள் ஒருங்கிணைவோம்**
இறைவனின் பலியினில் இதயத்தை இணைத்திடுவோம்
இதைவிட அதிசயம் ஏதுமில்லை - இந்த
திருப்பலிக்கிணையிங்கு எதுவுமில்லை
இணைவோம் பகிர்வோம் நிறைவடைவோம்

1. வார்த்தையின் வடிவினில் பேசிடும் கடவுள்
வாழ்ந்திட வழி சொல்லும் பலியிதுவே
உழைப்பின் கனிகளை காணிக்கையாக
உவப்புடன் ஏற்றிடும் பலியிதுவே
தன்னுடல் தந்து நம்மையே காக்கும்
தியாகத்தின் பகிர்வின் பலியிதுவே
இணைவோம் பகிர்வோம் நிறைவடைவோம்

2. உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேற்றுமை அகற்றி
சமத்துவம் சமைத்திடும் பலியிதுவே
மனதின் சோதனை வேதனை அனைத்தும்
வென்றிட வலுதரும் பலியிதுவே
தோல்விகளாலே துவண்டிடும் வேளை
துணிச்சலை தருகின்ற பலியிதுவே
இணைவோம் பகிர்வோம் நிறைவடைவோம்

## 81

**வானகத் தந்தை நம் இறைவன்**
வாழ்வினை வழங்கிட அழைக்கின்றார்
தேனிசை கீதம் நாவினில் முழங்கிட
தேவனை துதித்திட வாருங்கள்
இறைகுலமே எழுந்திடுக இறையரசை முழங்கிடுக
வரும் நாளெல்லாம் திருநாளென
நம் வாழ்வுகள் மலர்ந்திடவே

1. இறைவனில் அனைவரும் ஓர் குலமாய்
இணைந்திடும் பொழுதினில் இறையரசாம்
சுமைகளின் சுரங்களும் இனியில்லை
சுகம் தரும் உறவினில் பிரிவில்லை
இறைகுலமே எழுந்திடுக . . .

2. பகிர்ந்திடும் மனங்களில் பகைமையில்லை
இரங்கிடும் விழிகளில் இருளுமில்லை
பகைவனை மன்னிக்கும் மனந்தானே
இறைமகன் ஏற்றிடும் பலியாமே
இறைகுலமே எழுந்திடுக . . .

## 82

**விடுதலை ராகங்கள் விடியலின் கீதங்கள் முழங்கிட வாருங்களே**
புது உலகமைத்திட புது வழி படைத்திட அன்புடன் வாருங்களே
வாருங்கள் வாருங்கள் ஆலயம் வாருங்கள்
அனைவரும் வாருங்களே (2)

1. அன்புக்காகவும் அமைதிக்காகவும் இயேசு மனுவானார்
உண்மைக்காகவும் நீதிக்காகவும் அவரே பலியானார்
ஒன்று கூடுவோம் உணர்ந்து வாழுவோம் - 2
சுயநலம்நீக்கி பிறர்நலம் காத்து அன்பினில் நாம் இணைவோம்

2. ஏழை எளியவர் வாழும் இடங்களே இறைவன் வீடாகும்
வறுமைபிடியிலே அலறும் குடில்களே இறைவனின் மொழியாகும்
பகிர்ந்து வாழுவோம் பசியை நீக்குவோம்
இறைவனின் அரசின் இனிமையை காண
இன்றே முயன்றிடுவோம்

## ஆழ்கையில் ...!

**83**

**அமைதி தேடி அலையும் நெஞ்சமே**
அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே
நிலையான சொந்தம் நீங்காத பந்தம்
அவரன்றி வேறில்லையே

1. போற்றுவேன் என் தேவனை - பறை சாற்றுவேன்
என் நாதனை எந்நாளுமே என் வாழ்விலே
காடு மேடு பள்ளம் என்று
கால்கள் சோர்ந்து அலைந்த ஆடு
நாடுதே அது தேடுதே

2. இறைவனே என் இதயமே - இந்த இயற்கையின்
நல் இயக்கமே என் தேவனே என் தலைவனே
பரந்து விரிந்த உலகம் படைத்த
சிறந்த படைப்பாய் என்னைக் கண்ட
தேவனே என் ஜீவனே

**84**

**அமைதியின் தெய்வமே இறைவா - என்**
இதயத் தலைவனே
அருள்வாய் (2) யாம் ஏங்கித் தேடுகின்ற அமைதி
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி

1. நீதிப் பாதையில் நடப்பவர் சுவைப்பது அமைதி அமைதி
தியாகச் சிகரத்தில் நிலைப்பவர் பெறுவது அமைதி அமைதி
அன்பு மொழியை விதைத்திடுவோர்
அருளின் பயிரை அறுத்திடுவார்
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி

2. உறவைப் பேணி உரிமைகள் காத்தால் அமைதி அமைதி
உயிரைமதித்தால் உண்மையில் நிலைத்தால் அமைதி அமைதி
ஓங்கும் வன்முறை ஒழித்திடுவோம்
வீங்கும் ஆயுதம் களைந்திடுவோம்
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி

## 85

**அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே (2)**
அன்பனே இறைவனே என்னிலே வாருமே

1. பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும் (2)
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும்

2. தளர்ச்சி தோன்றும் பொழுது மனத்திடம் தழைக்கவும்
இருள் சூழும்வேளை ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும்

3. ஆறுதல் அன்பை அளித்து புரிதலை வளர்க்கவும்
கொடுப்பதில் நிறைவு கண்டு மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்து புதிய உலகம் படைக்கவும்

## 86

**அன்பென்றால் நீதானே என் தெய்வமே**
அருளென்றால் உன்பாதம் சரணாகிறேன்
நிறைவான வாழ்வுதரும் உன் அருள் வார்த்தை நம்பி
நிஜமான உன்னை நிழலாக தொடர்வேன்

1. அலைமோதும் வாழ்வும் அதில் தேடும் பொருளும்
நிலையல்ல என நான் மனதார உணர்ந்தேன் - உன்
அருள்போதும் என்றெண்ணி திருப்பாதம் வந்தேன் - அது
அன்பின் வடிவில் வாழ்வாக செய்வாய்

2. மனம் போல நானும் தினந்தோறும் மண்ணில்
மகிழ்வொன்றைத் தேடி எனை நான் இழந்தேன் - உன்
நிறம் மாறா அன்புக்குள் உயிர் வாழ வந்தேன் - இனி
நிலையான உன்னில் நிறைவாக வாழ்வேன்

**அஞ்சாதே ஆண்டவர் துணையிருக்க**
நெஞ்சோடு நித்தம் அவர் நினைவிருக்க
உன்தாயின் உதிரத்தில் உனைத்தெரிந்தார்
உன் வாழ்வின் உறவாய் உனில் நிறைந்தார்

1. தீயின் நடுவில் தீமையில்லை
திக்கற்ற நிலையில் துயரமில்லை

தோல்வி நிலையில் துவண்டு வாடும்
துன்பம் இனியும் தொடர்ந்திடாது
காக்கும் தெய்வம் காலமெல்லாம்
கரத்தில் தாங்கிடுவார் - அன்பின் கரத்தில் தாங்கிடுவார்

2. தூரதேசம் வாழ்க்கைப்பயணம்
தேவன் நேசம் உன்னைத் தொடரும்
பாவம் யாவும் பறந்து போகும்
பரமன் அன்பில் பனியைப் போல
வாழும் காலம் முழுதும் உன்னில் வசந்தம் வீசிடுமே
அன்பின் வசந்தம் வீசிடுமே

## 87

**அன்பென்ற நதிமீது படகாகு**
அறியாத பேரின்ப கரை சேர்க்கும்
அன்பென்ற வில்லின் முன் இலக்காகு
அகம் எங்கும் படித்துள்ள குறை நீக்கும் - 2

1. வெயில் காய்ந்து நிழல் ஈயும் மரங்கள் போல்
துன்பங்கள் மறைந்தே இன் முகம் காட்டு
உயிர்காக்கும் காற்றும் கண் மறைதல் போல்
தனை காட்டும் குணம் நீக்கி நலம் நாட்டு
நெருப்புக்கு வலுவூட்டும் காற்றைப்போல்
பணி வேகம் தனில் என்றும் பலம் உண்டு 2
அன்பிற்கு ஈர்க்கின்ற பலம் உண்டு
இழந்தாலும் மகிழ்கின்ற குணம் உண்டு 2

2. மலர் வாசம் தரும் பூவில் இழப்பில்லை
மாண்பில் நீ மறைந்தாலும் குறைவில்லை
தானே தன் கனி உண்ணும் செடி இல்லை
தனக்கென்று வாழ்ந்தால் விண் விடிவில்லை
இளகாத மனம் செய்தல் பணி இல்லை
இரங்காத இதயத்தில் இறை இல்லை
தன் துன்பம் பிறர் வாழும் உரமாகும்
அன்புள்ள இறைதந்த வரமாகும்

**88** **அன்பு செய்து வாழும் போது மனிதனாகிறோம் - முழு மனிதனாகிறோம் - பிறர்**

அன்பில் என்றும் வாழும் போது புனிதராகிறோம்
நாம் புனிதராகிறோம்
அன்பு என்னும் மாலையினைச் சூடிக்கொள்ளுவோம் - இறை
அன்பை என்றும் வாழ்வில் நாளும் பகிர்ந்து வாழுவோம்

1. நிறைவான வாழ்வையே மண்ணகத்தில் பொழிவது - அன்பு (3)
கொடுத்தாலும் குறையாது பொங்கி வழிவது அன்பு (3)
தன்னை முழுவதும் தியாகமாய் தருவது - 2 என்றும்
கடவுள் பிள்ளைகளாய் நம்மை இணைப்பது
அன்பு அன்பு அன்பு அன்பு

2. உலகாளும் இறைவனே மனிதனாக வந்தது - அன்பு (3)
எந்நாளும் உணவாக நம்மில் வருவது - அன்பு (3)
புதிதாய் உறவுகளை சிலுவையில் தருவது - 2
ஒளியின் வடிவில் அகிலமெங்கும் இறையே தவழ்வது
அன்பு அன்பு அன்பு அன்பு

**89** **அன்புதான் இறைவனின் திருவடியே**
அன்புதான் இறைவனின் திருப்பெயரே
அன்பினில் இணைவது இறைசெயலே
இறைவனின் அருட்செயலே

அன்பு என்ற பெயர் கொண்டோனே
அன்பைத் தாராயோ - எம்மை ஒன்று சேராயோ
ஒரே தந்தை ஒரே ஆண்டவர் என்று நாங்கள்
ஒரு குடும்பம் என்றறிவோமே - எனவே ஒன்றி வாழ்வோமே

1. ஏற்றத்தாழ்வு பிளவு கொண்டோம் அன்பை தாராயோ - 3
ஏழை செல்வர் என பிரிந்தோம் ஒன்று சேராயோ - 3
அன்பைத்தாராயோ - எம்மை ஒன்று சேராயோ - 2

2. சாதி என்ற பிளவு கொண்டோம் அன்பைத்தாராயோ - 3
சமதர்மம் நிறைந்துவாழ ஒன்று சேராயோ - 3
அன்பைத்தாராயோ - எம்மை ஒன்று சேராயோ - 2

3. மதங்கள் என்னும் பிரிவு கொண்டோம் அன்பைத் தாராயோ - 3
மனம் ஒன்றி இணைந்து வாழ ஒன்று சேராயோ - 3
அன்பைத்தாராயோ - எம்மை ஒன்று சேராயோ - 2

## 90

**அன்புக்கு அன்பான அன்பு யேசுவே**
அழகுக்கு அழகான அழகு யேசுவே
உம்மிடம் வந்துவிட்டேன் ஏற்றுக் கொள்ளுமே - 2
உந்தன் பாதம் சரணடைந்தேன் சரணம் சரணமே - 2

1. எங்கெங்கோ அன்பை தேடினேன்
எங்கெங்கோ அழகை தேடினேன்
எல்லாமே மாயைதான் என்று உணர்ந்தேன் - 2
அன்புக்கும் அழகுக்கும் ஊற்று நீர்தானே

2. எங்கெங்கோ அமைதி தேடினேன்
எங்கெங்கோ அலைந்து திரிந்தேன்
எங்குமே அமைதியை காணவில்லையே - (2)
அமைதியின் இருப்பிடம் நீர்தான் இயேசுவே - (2)

## 91

**அகழ்ந்திடுவார் தம்மை - என்றும்**
அன்புடன் நிலம் தாங்கும்
என்னதான் குறைகள் செய்தாலும்
உன் இதயம் தாங்கும்
என்றும் எனைத் தாங்கும்

1. அழுதாலும் உன் கரம் தேற்றும்
மகிழ்ந்தாலும் அது உன் நிழலில்
உன்னை நான் மறந்து வாழ்ந்தாலும்
வாழ்வதும் உன்னாலே
வல்லவன் நீயின்றி - என் இதயத்தில் நிறைவில்லை
உந்தன் தாளில் கூடும் பலகோடி பூவிதழுள்
நானும் ஒன்றாவேன்

உன்திரு நாளில் என்னுள்ளம்
மங்களம் பாடும் தன்னில்லம்
உன் நினைவாலே தெய்வீகம் வாழ்வு பெறும்

2. ஆசைகளில் தடுமாறி அதில்
விழுந்தால் எடுப்பதும் உன் உருவே
துன்பம் நான் அடைந்து சோர்ந்தாலும்
வாடுவது நீயே
என்னிடம் வலுவில்லை - உன் பலமின்றிக் கதியில்லை
வரும் காலம் உன்னடியில் வாழ்வு உன் மடியில்
நானும் உன் சந்நிதியில்
உன் திரு உள்ளம் என் எண்ணம்
உன் திரு சொல்லே என் சொந்தம்
உன் உறவொன்றே என் இன்பம் என்றென்றும்

**92** **அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு**
எந்த துன்பம் வந்தாலும் என் அன்பு உன்னோடு

1. குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
என்ன நிலைதான் ஆனாலும் எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன்

2. அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும் உன்னை நானோ மறவேனே
அஞ்சாதே . . . .

**93** **அடைக்கலப் பாறையான இயேசுவே**
அரணும் கோட்டையும் ஆன இயேசுவே
நீரே எனது வலிமை நீரே எனது பெருமை
நீரே எனது வாழ்வு இயேசையா

1. தாயின் வ்யிற்றினில் பாதுகாப்பு
நீரல்லோ ஆண்டவரே
பிறப்பிலும் வாழ்விலும் நீயே எனக்கு
ஆதாரம் நீயல்லவோ - எந்தன்

2. போகும் வழியை விசாலமாக்கி - என்
எல்லையைப் பெரிதாக்கினீர்
உயரமான இடத்திலே என்னை நிறுத்தி
மாண்புறச் செய்கின்றீரே - என்னை

94

**அன்பு என்பது வல்லமை**
ஆக்கம் அளித்திடும் ஆற்றலே
அர்த்தம் ஆகிடும் வாழ்விலே
அன்பு என்றும் வாழுமே

1. நின்று நிலைக்கும் எதுவுமே அன்பு உருவம் கொடுத்ததே
தன்னை வழங்கும் இதயமே அன்பில் நனைந்தே கனிந்ததே
ஆள விடுங்கள் அன்பையே அன்பையே அன்பையே
வாழும் தெய்வம் நம்மிலே நம்மிலே நம்மிலே

2. உயிர்கள் அனைத்தின் இயக்கமாய்
இயங்கும் உலகின் ஏக்கமாய்
ஏங்கும் மனங்களின் இதயமாய்
அனைத்தின் நிறைவும் அன்புதான்
ஆள விடுங்கள் அன்பையே அன்பையே அன்பையே
வாழும் தெய்வம் நம்மிலே நம்மிலே நம்மிலே

95

**அன்பே கடவுள் என்றால்**
அன்புக்கு ஈடேது சொல்
அன்பே இன்பம் என்றால்
அன்புக்கு விலையேது சொல்

1. மண்ணோர்கள் மொழி பேசினும்
அன்புக்கு ஈடாகுமா
விண்ணோர்கள் மொழி பேசினும்
அன்புக்கு ஈடாகுமா

2. இறைவாக்கு சொல்வரமும்
அன்புக்கு ஈடாகுமா
மறைபொருள் உணர் பொருளும்
அன்புக்கு ஈடாகுமா

3. அளவில்லா கலையார்வமும்
அன்புக்கு ஈடாகுமா
மலைபெயர் விசுவாசமும்
அன்புக்கு ஈடாகுமா

**96** **அன்பின் வடிவே உயிரின் உருவே**
என்னைத் தேடும் இதய தெய்வம்
ஆராதனை ஆராதனை - 2

1. உயிரைக் கொடுக்கும் அன்பு உறவில் மலரும் அன்பு
உள்ளம் கவர்ந்த அன்பு உயிரில் கலக்கும் அன்பு
உயர்ந்து நிற்கும் அன்பு உலகம் ஏங்கும் அன்பு
உண்மை பயக்கும் அன்பு அன்பு செய்யும் அன்பு

2. எங்கும் நிறையும் அன்பும் என்னை காணும் அன்பு
எதையும் செய்யும் அன்பு எனக்காய் ஏங்கும் அன்பு
என்னைக் காக்கும் அன்பு என்னில் வாழும் அன்பு
என்றும் வாழும் அன்பு அன்பு செய்யும் அன்பு

**97** **அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்**
மாறும் உலகில்மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் - நான்
மாய்ந்த பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம் (2)

1. தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம் - நான்
சாயும்போது காப்பதும் நீயே நிரந்தரம்
நிரந்தரம் - 2 நீயே நிரந்தரம் (2)

2. செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்றும் நிஜமான நீயே நிரந்தரம் - அதன்
விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம்
நிரந்தரம் - 2 நீயே நிரந்தரம் (2)

## 98

**ஆர்ப்பரிப்போம் ஆண்டவரே - 2**
மீட்பின் பாறை நீரே என்று - எம்மை
காக்கும் பாறை நீரே என்று

1. பூவுலகின் நாட்பகுதி உந்தன் கையிலே - பெரு
மலைகளின் கொடுமுடியும் உமக்கே சொந்தம்
கடலும் உலர்ந்த தரையும் உம் கைவேலைகளே
திடமாக எம்மையே படைத்தவர் நீரே.

2. மேய்ச்சலின் ஆடுகள் வீழ்ச்சியுறாமல் - அதை
காப்பதில் கவனமாக இருப்பதைப் போல
பேணிக்காப்பீர் எம்மையே எந்நாளுமே
வாரி வாரி வழங்குகின்ற வள்ளல் நீரே.

3. மெரிபாவில் எம் முன்னோர் வாடினார்களே
மாசாவில் உம்மக்கள் வருந்தினார்களே
கடினமான இதயம் எமக்கு இல்லவே இல்லை
என்றும் நீரே எங்கள் கடவுள் இதுவே உண்மை.

## 99

**ஆண்டவரை நான் போற்றிடுவேன் - என்றும்**
ஆண்டவரை நான் போற்றிடுவேன்

1. ஆண்டவரை நான் போற்றிடுவேன் - என்றும்
அவர் புகழை நானும் பாடிடுவேன்
என் ஆன்மா அவரில் பெருமை கொள்ளும்
எளியவர் இதைக் கேட்டு மகிழ்வாராக - 2

2. ஆண்டவரை நம்பி வாழ்வோரைச் சுற்றி
ஆண்டவர் தூதர் என்றும் காத்திடுவார்
ஆண்டவர் எவ்வளவோ இனியவரே - என்று
சுவைத்துப் பாருங்கள் சுவைத்துப் பாருங்கள்
ஆண்டவர் எவ்வளவு இனியவரே என்று

## 100

**ஆண்டவர் துணையிருப்பார் ஆபத்து அணுகாது**
மதில்போல் சூழ்ந்திருப்பார் துன்பங்கள் நெருங்காது
கலங்காதே மனமே கலங்காதே மனமே
அன்பான தேவன் அரவணைப்பார் கலங்காதே மனமே

1. உன்னைக் காப்பவர் அயர்வதில்லை
உன்கால் இடற விடுவதில்லை
உன்னைக் கைவிட்டுப் பிரிவதில்லை
உன்னோடு உயிராய் இணைந்திருப்பார்
பகலின் வெயிலோ இரவின் நிலவோ
தீமை செய்யாது அஞ்சாதே
புயலும் மழையும் புவியைச் சூழ்ந்தால்
தீமை செய்யாது திகையாதே
கண்ணான தேவன் எந்நாளும் காப்பார்
கவலையோ கலக்கமோ இனி வேண்டாம் } 2

2. வானத்துப் பறவையைக் காக்கின்றவர்
வறுமையில் உன்னை விடுவாரோ
வயல்வெளி மலரை மகிழ்விப்பவர்
நோயினில் விடுதலை தருவாரே
உலகம் ஆயிரம் பேசினாலும் சோர்ந்து வீழ்ந்து போகாதே
தீங்கு செய்வோர் சூழ்ந்து கொண்டால்
வாடி வதங்கி போகாதே
இஸ்ராயேல் இறைவன் மாறாததேவன்
இன்றும் என்றும் உடனிருப்பார் } 2

**101** **ஆடும் திரைகடலே உன்னை**
ஆடிட சொல்வது யார்
ஓடும் ஆறுகளே நீங்கள்
ஓதும் பெயரது யார்
ஆழமும் அகலமுமே இல்லா
ஆண்டவன் பெயராமே!
அவர்தம் ஆற்றலும் பெரிதாமே

1. சுழலும் காற்றுகளே உங்கள் சீற்றம் யாராலே
வீசும் தென்றல்களே நீங்கள் பேசும் மொழியாதோ?
ஆக்கவும் அழிக்கவுமே - வல்ல
ஆவியின் செயல்தாமே - அதுவும்
ஆண்டவர் இயல்பாமே!

2. ஆடும் பறவைகளே - உங்கள் புகழின் நாயகர் யார்?
கான குயிலினமே - உங்கள் கான தலைவர் யார்?
அன்பிலே இணைந்திடவே அழைக்கும்
ஆண்டவன் குரலாவோம் - அவர்தம்
அமைதியின் தூதராவோம்

3. இடிமின்னல் ஓசைகளே - உங்கள்
முழக்கத்தின் பொருள் என்ன?
அதிர்ந்திடும் பூமிகளே - நீங்கள் அறிவிக்கும் செய்தி என்ன?
புதியதோர் வானகமும் புதிய
பூமியும் வந்திடுமே - இறைவன்
ஆட்சியும் மலர்ந்திடுமே

## 102 ஆண்டவர் எவ்வளவு நல்லவர்
அவரை அணுகி வாருங்கள்
ஆண்டவர் எவ்வளவு இனியவர்
அவரை சுவைத்துப்பாருங்கள்

1. பாவமெதுவும் செய்தவரல்லர் வாயில் வஞ்சகம் வந்ததில்லை
பழித்தவரை பழித்ததில்லை பாடுகளில் மிரட்டவில்லை

2. சிலுவைதனில் தம்முடலில் யேசுநம் பாவங்களை சுமந்தாரே
அவருடைய காயங்களால் நாமெல்லாம் சுகமானோம்

3. ஆடுகள்போல் வழிதவறி அலைந்துதிரிந்தோம் நாமெல்லாம்
ஆயன் யேசு தேடிவந்தார் நம்மையெல்லாம் மீட்டுக்கொண்டார்

4. பாவிகள் நம்மை நேசிக்கின்றார் - நம்
பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கின்றார்
தந்தையாக அணைக்கின்றார் புதுவாழ்வு தருகின்றார்

## 103 ஆண்டவரின் ஆவி என் மேலே
ஏனெனில் அவர் அபிஷேகம் செய்துள்ளார்

1. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என அறிவிக்கவும்
ஆண்டவர் என்னை அனுப்பினார்

உன்னை அன்று அழைத்ததும் நாமே
உரிய பெயரை வைத்ததும் நாமே
உன்னை அன்று மீட்டதும நாமே
உனது துணையாய் இருப்பதும் நாமே

2. நிறை உண்மையை நோக்கி சாட்சி சொல்லவும்
நோயுற்றோரை குணமாக்கவும்
ஆண்டவர் என்னை தேர்ந்தெடுத்தார்

தீ நடுவே நீ நடந்தாலும்
ஆழ்கடலைத் தான் கடந்தாலும்
அருகிலேயே நாம் இருக்கின்றோம்
அணைத்து உன்னை வழி நடத்துகின்றோம்

**104** **ஆண்டவரே உம்மை நான் நம்பியுள்ளேன்**
அடைக்கலம் நீ எனக்குத் தந்திட வேண்டும்
ஆண்டவரே உமதில்லம் நாடி வருகிறேன்
எனது குறை போக்கி நிறை வழி நடத்திடுவாய்

1. ஆயனில்லா மந்தையாய் அலைந்து திரிகிறேன்
அன்பர் உந்தன் அரவணைப்பில் அமைதி காண்கிறேன்
ஏழ்மையால் வறுமையால் சோர்ந்து போகிறேன்
இணைந்து வந்து பகிரும் போது முழுமையாகிறேன்
மகிழ்ச்சியூட்டும் தேவன் உந்தன் பாதை செல்லுவேன்
பகிர்ந்து வாழும் பணியிலே நிறைவு காணுவேன்

2. உரிமையின்றி உடைமையின்றி வலிமை இழக்கிறேன்
உமது நிறை உரிமை வாழ்வில் உறுதி பெறுகிறேன்
மனித நேய உணர்வின்றி வெறுமையாகிறேன்
பிறரை மதிக்கும் நன்னெறியில் மனிதம் காண்கிறேன்
நம்மைக் காக்கும் தேவனின் கரம் பிடித்திடுவேன்
வறுமை போக்கும் பணியிலே வளமை காணுவேன்

## 105 ஆண்டவரே உம்மை நோக்கி - என்
ஆன்மாவை எழுப்பினேன் - என்
ஆன்மாவை எழுப்பினேன்

1. உமது வழியை இறைவா காட்டுவீர்
உமது நெறியைக் கற்றுக் கொடுப்பீர்
உமது உண்மையில் அழைத்துச் செல்வீர்
எனது மீட்பரும் இறைவனும் நீரே

2. கண்கள் உம்மை நோக்குகின்றன
கவலையாலே வாடுகின்றேனே
கண்ணியிலிருந்து மீட்டருள்வீரே
கருணையின் தேவா இரங்கிடுவீரே

3. உம்மையே நம்பி வாழ்கின்றேன் நான்
நம்பினோர் எவரும் நலமுடன் வாழ்ந்தார்
இம்மையில் பகைவர் ஏளனம் செய்ய
என்றுமே விடாமல் காத்திடுவீரே

## 106 ஆண்டவரே எனது ஒளி
ஆண்டவரே என் மீட்பு
யாருக்கு நான் அஞ்ச வேண்டும்
யாருக்கு நான் நடுங்க வேண்டும்

1. ஆண்டவரிடம் நான் வேண்டுவதும்
விரும்புவதும் ஒன்றே
ஆண்டவருடைய இல்லத்தில் நான்
வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்

2. ஆண்டவர் கரத்தைப் பிடித்துக் கொண்டேன்
அவரது அன்பில் மூழ்கிவிட்டேன்
பகைவரை மன்னித்து வாழ்ந்திடுவேன்
பரமனின் அரசில் அமர்ந்து மகிழ்ந்திடுவேன்

## 107 ஆண்டவரே என்னை என்றும் காத்தருளும்
உம்மிடம் அடைக்கலம் நான் புகுந்தேன்
என் இதயம் அகமகிழும் களிகூரும்
என்றென்றும் கவலையின்றி இளைப்பாறும்

1. நீரே என் ஆண்டவர் என்றுரைத்தேன்
உம்மையன்றி எனக்கு வேறு நன்மை இல்லை
ஆண்டவர் தாமே என் உரிமை சொத்து
அவர் தாமே எனது மீட்பின் கிண்ணம்

2. மகிழ்ச்சியூட்டும் இடத்தில் எனக்கு பங்கு கிடைத்தது
என் உரிமைப் பேறு எனக்கு நேர்த்தியாயிற்று
அறிவுரைத்த ஆண்டவரை வாழ்த்திடுவேன்
இரவில் கூட என் இதயம் பாடிடுமே

## 108

**ஆண்டவரே பேசும் - உம்**
அடியவன் நான் கேட்கின்றேன்

1. உள்ளம் மலரெனத் திறந்துள்ளது
உலகின் நினைவுகள் விடுத்துள்ளது
கள்ளமில்லா மனம் அமைந்துள்ளது
கடவுள் உமையே அழைக்கின்றது

2. காவலர் இரவியை நோக்குதல் போல்
கமழும் கமலம் பார்ப்பது போல்
ஆண்டவர் வரவைப் பார்க்கின்றது
அகமகிழ் பெறவே துடிக்கின்றது

3. வாழ்வின் வழிகள் தெரிகின்றது
பயனுறு வார்த்தைகள் கேட்கின்றன
எம்மிடம் ஆற்றல் குறைவாகும்
உம்முடைய பலமே மேலாகும்

## 109

**ஆண்டவரே பேசும்**
அடியவன் நான் கேட்கின்றேன் - **உன்**
அடியவன் நான் கேட்கின்றேன் - **பேசும்**

1. வாழ்வினில் வரும் துன்பச் சூழ்நிலையில் - **உன்**
வார்த்தை வழிகாட்ட வேண்டும்
தாழ்வினில் நான் மூழ்கி தவிக்கின்ற போது - **என்**
நிறைவாழ்வை நீ கேட்க வேண்டும் - **உன்**
அருளொன்றை நான் தேட வேண்டும் - **அது**
என் வாழ்வை வளமாக்க வேண்டும் - **பேசும்**

2. வாழ்ந்திடும் மாந்தர்கள் உறவினிலே - உன்
வார்த்தை விளக்காக வேண்டும்
நாளும் நடக்கின்ற செயல்களிலே - உன்
குரல் ஒன்றை நான் பாட வேண்டும் - என்
இதயத்தில் நீ பேச வேண்டும் - உன்
இறைவார்த்தை வாழ்வாக்க வேண்டும் - பேசும்

## 110 ஆண்டவரைப் பாடுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள்

1. மகத்துவம் மேன்மை மிகுந்தவர் அவரே
மாந்தரை ஆளும் அரசரும் அவரே
இகத்தில் இவர் போல் தெய்வங்கள் இல்லை
எனவே அவரைப் பாடுங்கள்

2. வயல்வெளி மலர்கள் தேன் மழை பொழிய
வானத்துப் பறவைகள் கானங்கள் முழங்க
நயமுடன் கடல்மீன் இறைவனைப் புகழ
நானில மாந்தரே பாடுங்கள்

3. ஆதியாய் அந்தமாய் இருப்பவர் அவரே
ஆருயிர் அனைத்தையும் காப்பவர் அவரே
அன்பும் அருளும் நிறைந்தவர் அவரே
எனவே அவரை வாழ்த்துங்கள்

## 111 ஆண்டவர் என் ஆயன்
எனக்கு குறை இல்லை

1. பசும்புல் மேய்ச்சலில் இளைப்பாறச் செய்தார்
அருவிக்கு கூட்டிச் செல்கின்றார்
எந்தன் களைப்பை ஆற்றுகின்றார்
எனக்கு புத்துயிர் ஊட்டுகின்றார்

2. நேரிய வழியில் எனைநடத்தி செல்கின்றார்
இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில்
நடக்க நேர்ந்தாலும் பயமில்லை
ஏனெனில் என்னோடு இருக்கின்றீர்

3. எண்ணெய் பூசி அபிஷேகம் செய்தார்
என் கிண்ணம் மகிழ்வாய் நிரம்பியதே
உன் அருள் நீதியும் எனைத் தொடரும்
வாழ்நாளெல்லாம் எனைத் தொடரும்

**112** **ஆண்டவர் தம் திருத்தலத்தில்**
அஞ்சாமல் இருப்பவன் யார்
அருள் நிறைந்த அவர் ஆசிகளை
அன்றாடம் பெறுபவன் யார்

1. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
மாண்புறு செயல்களை செய்கிறவன்
அவனை இறைவன் என்றும் அணைத்து ஆசீர்வதித்திடுவார்

2. தீயோர் கூட்டத்தில் சேராதவன்
தீமைகள் எதுவும் செய்யாதவன்
அவனை இறைவன் . . .

3. வாக்குறுதி என்றும் மாறாதவன்
வார்த்தையில் வஞ்சகம் இல்லாதவன்
அவனை இறைவன் . . .

4. எளிமையாய் இனிமையாய் வாழ்கிறவன்
ஏழ்மையாய் தூய்மையாய் இருக்கிறவன்
அவனை இறைவன் . . .

**113** **ஆராத இன்பமுறை தலைவன் தாழை**
வாயார இறைமக்காள் புகழ்வீராக

1. தேவாதி தேவன் பெயர் இசைப்பீராக
நிகரில்லாத் தலைவன் தாழ் பணிவீராக
ஏனெனில் நும் எல்லைகளைக் காவல் செய்தார்
உம்முதரப் பிள்ளைகளைப் பலுகச் செய்தார்

2. பருவமழை தவறாது பொழியச் செய்தார்
வயல்வெளியில் நெற்கதிர்கள் நிறைய செய்தார்
உயிரூட்டும் போதனைகள் எமக்குச் சொன்னார்
அமைதியெனும் வெண்துகிலால் போர்த்திவிட்டார்

3. தெள்ளியநீர் ஓடையிலே பருகச் செய்தார்
கல்மழையை விண்ணிருந்து உதிரச் செய்தார்
வாய்மொழியின் வல்லமையால் உருகச் செய்தார்
வீசிவரும் தென்றலில் நீர் தவழச் செய்தார்

## 114 ஆவலுடன் நான் ஆண்டவர்க்காகக் காத்திருந்தேன்
அவரும் என்னைக் கனிவாக கண்ணோக்கினார்

1. என் குரலுக்கு அவர் செவி கொடுத்தார்
எழுந்திட எனக்கவர் கை கொடுத்தார்
பாறையில் கால்களை ஊன்றச் செய்தார்
பாதையில் துணைவரும் காவல் ஆனார்

2. நாளும் இறைபுகழ் இசைத்திடவே
நாவில் வைத்தார் புதுப்பாடல்
கண்டு கலங்கிய அனைவருமே
கடவுளை நம்பி மகிழ்வுற்றார்

## 115 இசை ஒன்று இசைக்கின்றேன் - இறைவா
எளிய குரல் தனிலே - என்
இதயத் துடிப்புக்களோ - என்
இசையின் குரலுக்குத் தாளங்களே

1. காலத்தின் குரல்தனில் தேவா - உன்
காலடி ஓசை கேட்கின்றது
ஆதியும் அந்தமும் ஆகினாய்
மழலையின் சிரிப்பில் உன்னெழில் வதனம்
மலர்ந்திடும் மண்ணிலே

2. ஏழையின் வியர்வையில் இறைவா - உம்
சிலுவை தியாகம் தொடர்கின்றது
சமத்துவம் எம்மில் வளர்ந்திட
உழைக்கும் கரங்கள் ஒன்றென இணைவது
விடியலின் ஆரம்பம்

## 116 இயேசு எனது தலைவனாய் இருக்கின்றார்

யாருக்கு நான் அஞ்ச வேண்டும்
இயேசு எனது மீட்பராய் இருக்கின்றார்
வேறு எனக்கு என்ன வேண்டும்

1. எனது சின்ன ஆன்மாவுமே ஆண்டவரில் அகமகிழும்
ஆண்டவரின் மகிமை ஒன்றே நிதமும் பாடிடும்
ஆண்டவரின் சந்நிதியில் இளைப்பாறிடும்

2. எனது துன்ப வேளையிலும் என்னோடு இருக்கின்றார்
உலகம் முழுதும் என்னை எதிர்த்து பழித்தாலும்
ஆண்டவரின் அன்பு ஒன்றே எனக்கு போதுமே

## 117 இயேசு என்னும் நாமம் பேசுகின்ற போது

என் உள்ளம் மகிழ்வு கொண்டது - அதை
ஏழிசையில் பாடுகின்றது

1. நான் மீட்பளிக்கும் மகிழ்வு கொண்டேன்
வான் வீட்டவரின் அழைப்பைக் கேட்டேன்
பெற்ற பெரு வாழ்வைப் பகிர்ந்து கொள்க வென்று
பேசி அவர் அனுப்பி வைத்தார் - தம்
ஆவியையும் உயிரும் தந்தார்

2. என் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்டார்
தன் இல்லமதை அங்குக் கண்டார்
இயேசுவும் நானும் மானிடர் யாவரும்
சேர்ந்தங்கே வாழ்ந்திருப்போம் - ஒரே
சோதரராய் வாழ்ந்திருப்போம்

## 118 இயேசு கிறிஸ்து ஆண்டவர்

இன்றும் என்றும் இருப்பவர்
இன்னல் நீக்கி என்னை என்றும் காப்பவர்
ஆனந்தம் அல்லேலூயா (2)
இறைவன் இயேசு என்றும் என்னில் இருப்பதால்

1. பாவக்கறைகள் நிறைந்த எந்தன் உள்ளத்தை (2)
பரமன் இயேசு குருதி சிந்தி கழுவினார் (2)
அமைதியின்றி அலைந்த எந்தன் மனதினை - 2
ஆவி அனுப்பி அன்பு பொழிந்து மாற்றினார்

2. இரவும் பகலும் மகிழ்ச்சியோடு இருக்கின்றேன் (2)
இயேசு அருளால் இனி எனக்கு குறையில்லை (2)
இன்பம் துன்பம் எது வந்தாலும் பயமில்லை - 2
இயேசு எனது இறைவனாக இருப்பதால்

## 119 இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ

மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால்
மறந்திடாதிருக்க நீ சிலுவையிலே - அவர்
மரித்துத் தொங்கிடும் காட்சி மனதில் நில்லாதோ

1. அளவில்லா அன்பு அதிசய அன்பு
ஆழமகலம் நீளம் எல்லை காணா அன்பு
களங்கமில்லா அன்பு கருணைசேர் அன்பு
கல்வாரி மலைக் கண்ணீர் சொல்லிடும் அன்பு

2. அலைகடலை விடப் பரந்த பேரன்பு
அன்னைமார் அன்பையெல்லாம் திரையிடுமன்பு
மலைபோல் வளைந்தெனை வளைத்திடுமன்பு
சிலையெனப் பிரமையில் நிறுத்திடுமன்பு

3. எனக்காக மனுவுரு தரித்த நல்லன்பு
எனக்காக தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காக பாடுகள் ஏற்ற பேரன்பு
எனக்காக உயிரையே தந்த தேவன்பு

## 120 இயேசுவின் திருநாமம் - என்றும்

தூய்மை நிறைநாமம்
வாடும் உள்ளத்தோர்க்கு இன்பம்
கோடி தரும் நாமம்

1. பிறவிக் குருடரின் கண்களைத் திறந்தது இயேசுவின் திருநாமம்
இறந்தோர் மீண்டும் உயிர்பெறச் செய்தது இயேசுவின் திருநாமம்
இருளில் இருப்போர் ஒளியினைத் தருவது இயேசுவின் திருநாமம்
அருளில்லா மாந்தரை வாழ வைப்பதும் இயேசுவின் திருநாமம்

2. பகைமை விரட்டி பாசம் விளைவிக்கும் இயேசுவின் திருநாமம்
கயமை அகற்றி நேர்மை வளர்க்கும் இயேசுவின் திருநாமம்
வன்மை போக்கி அன்பை விதைக்கும் இயேசுவின் திருநாமம்
தூய்மை வாழ்வில் திளைக்க வைப்பதும் இயேசுவின் திருநாமம்

## 121

**இயேசுவின் நாமம் இனிதான நாமம்**
இணையில்லா நாமம் இன்ப நாமம்

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக் களிக்கும்

2. வானிலும் புவியிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

3. நேற்றும் இன்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

4. பரிமளத் தைலமாம் இயேசுவின் நாமம்
பாரெங்கும் வாசனை வீசிடும் நாமம்

5. கவலைகள் அனைத்தும் தீர்த்திடும் நாமம்
நோய்களைப் போக்கி சுகம் தரும் நாமம்

## 122

**இயேசு நாமம் பாடப் பாட**
இனிமை பொங்குதே - அவர்
இல்லம் வாழ எந்தன் இதயம்
ஏங்கித் தவிக்குதே

1. ஓங்கும் குரலை காக்க வேண்டும்
உன் நாமம் பாடவே
என்னுள்ளம் தேறவே என் தாகம் தீரவே
உன் அன்பில் வாழவே என் தேவா தேவா வா

2. தூங்கும் விழியை திறக்க வேண்டும்
வான் தீபம் காணவே
உன் அன்பில் வாழவே உன்னோடு சேரவே
என்னில் நீ வாழ வா என் தேவா தேவா வா

## 123 இயேசுவின் திருநாம கீதம்

என் நெஞ்சிலே எந்நாளுமே
சங்காக முழங்கிட வேண்டும்

1. நான் பாடும் பாடல் நானிலமெங்கும்
எதிரொலித்திட வேண்டும்
உள்ளம் உடைந்தோர் உவகை இழந்தோர்
உணர்வு பெற வேண்டும் உவகை பெற வேண்டும்

2. பலகோடி புதுமைகள் செய்தது இயேசுவின்
இணையில்லா திருநாமம்
வாழ வைப்பதும் வாழ்விக்கப் போவதும்
அருள் தரும் ஒரு நாமம் இயேசுவின் திருநாமம்

3. நல் வானும் மண்ணும் அதில் நிறை யாவும்
ஒரு மொழி பேசிடணும்
வழியாய் வாழ்வோர் இயேசுவின் நாம
மொழிதான் கேட்டிடணும் ஜெகமதில் ஒலித்திடணும்

## 124 இயேசுவே உந்தன் வார்த்தையால்

வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் - என்
உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே - உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் - உன்
வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலன்களும் - இங்கு
வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் நல் நேர்மையும் பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தெய்வமே - உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

2. நன்மையில் இனி நிலை பெரும் - உன்
சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலைவருமே
இன்றெழும் புது விந்தைகள் உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே - உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

## 125 இயேசுவே என்னுடன் நீ பேசு

என் இதயம் கூறுவதைக் கேளு
நான் ஒரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழி நடத்து

1. உன் திருப் பெயர் நான் பாடிடும் கீதம்
உன் திரு இதயம் பேரானந்தம்
உன் திரு வாழ்வெமக்கருளும் இறைவா இறைவா
உன் திரு நிழலில் நான் குடிகொள்ள
என்றும் என்னுடன் இருப்பாய்

2. இயேசுவின் பெயருக்கு மூவுலகெங்கும்
இணையடி பணிந்து தலை வணங்கிடுமே
இயேசுவே உன் பெயர் வாழ்க வாழ்க
இயேசுவே உன் பெயர் வாழ்க
இயேசுவே நீ என் இதயத்தின் வேந்தன்
என்னை தள்ளி விடாதீர்

## 126 இறைவழி செல்வோர் பேறுபெற்றோர்

இறைவழி செல்வோர் பேறுபெற்றோர்
பேறுபெற்றோர் பேறுபெற்றோர்
இறைவழி செல்வோர் பேறுபெற்றோர்

1. தீயோரின் அறிவுரை கேளாதவன்
பாவியின் வழியில் செல்லாதவன்
பழிகாரர் கூட்டத்தில் அமராதவன்
பேறுபெற்றோன் பேறுபெற்றோன்

2. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
நீதி நியாயத்தில் நிலை நிற்பவன்
இதயத்தில் இனியவை தியானிப்பவன்
பேறுபெற்றோன் பேறுபெற்றோன்

3. தீயோரை இழிவாகக் கருதுபவன்
பிறரைப் பழித்து பேசாதவன்
நாவால் பழிச்சொல் கூறாதவன்
பேறுபெற்றோன் பேறுபெற்றோன்

## 127 இறைவனே என்னை காக்கின்றார்

இனியொரு குறையும் எனக்கில்லை
நிறைவழி நோக்கி நடத்திடுவார்
நிம்மதியோடு நான் வாழ்வேன்

1. பகலின் வெம்மையில் பயமில்லை
இரவின் நிலவிலும் தீமையில்லை
நம் இறைவன் காக்கின்றார் என்றும் உதவிடுவார்
உன் கால் இடற விடுவதில்லை
உன்னதர் என்றும் அயர்வதில்லை

2. இன்றும் என்றும் காப்பவராம்
பயணத்தில் துணையும் அவர் கரமாம்
நம் இறைவன் காக்கின்றார் என்றும் உதவிடுவார்
தீமையைக் கண்டு நான் அஞ்சேன்
நலமாய் நிதமும் நான் வாழ்வேன்

128 **இறைவனைத் தேடும் உள்ளம் - புவி**
மனிதருக்காக வாழும்
மனிதரைக் காத்திடும் உள்ளம் - அந்த
இறைவனிலே வாழும்
மனிதரில் வாழும் தெய்வமே
வாழும் உயிர்களைக் காத்திடும்

1. சமத்துவம் மலர்ந்திட உழைத்திடும் உள்ளம் இறைவனில் வாழும்
பொதுநலம் பேணும் தியாக உள்ளம் இறைவனில் வாழும்
விடியலின் சுடரைப் பரப்பிடும் உள்ளம் இறைவனில் வாழும்
மாற்றம் காணத் தனைத்தரும் உள்ளம் இறைவனில் வாழும்

2. வலியவர் கொடுமையை எதிர்த்திடும் உள்ளம் இறைவனில் வாழும்
அநீதியை அழித்திடத் துணிந்திடும் உள்ளம் இறைவனில் வாழும்
மானுட உறவில் ஒன்றிடும் உள்ளம் இறைவனில் வாழும்
மானுட நேயம் நிறைந்த உள்ளம் இறைவனில் வாழும்

129 **இறைவன் இனிமை நிறைந்தவர்**
எனவே அவரைப் பாடுவோம்

1. உள்ளம் உடைந்த மாந்தர்க்கு உடனே
குணமும் அருள்கின்றார்
அன்னோர் அடைந்த காயங்களை
அவரே தாமாய்க் கட்டுகின்றார்

2. விண்மீன்களை வரையறுத்து
நாமம் சூட்டி அழைக்கின்றார்
அவரின் ஞான நிறைவிற்கு
அளவு ஏதும் இல்லையே

## 130

**இறைவன் எனது மீட்பானார்**
அவரே எனக்கு ஒளியானார்
அவரைக் கொண்டு நான் வாழ
எவரைக் கண்டும் பயமில்லை

1. வாழ்வில் இறைவன் துணையானார்
வாடும் எனக்கு உயிரானார்
தீயோர் என்னை வளைத்தாலும்
தீமை அணுக விட மாட்டார்

2. தீயோர் படைபோல் சூழ்ந்தாலும்
தீராப் பகையைக் கொண்டாலும்
தேவன் அவரை திடமாக
தேடும் எனக்கு குறையேது

3. ஒன்றே இறைவா வேண்டுகிறேன்
ஒன்றே அடியேன் தேடுகிறேன்
தேவன் உமது திருமுன்னே
நாளும் வாழ அருள்வாயே

## 131

**இறைவன் நம்மை அன்பு செய்கின்றார்**
எந்த நிலையில் நாம் இருந்த போதிலும்
இறைவன் நம்மை அன்பு செய்கின்றார்

1. மனிதத் தேவைகள் இறைவன் அறிகின்றார்
மற்றும் பெயர் சொல்லி அவனை அழைக்கின்றார்
இனிய அன்பை வாரி வழங்கித் திளைக்கச் செய்கின்றார்
எல்லோருக்கும் அதனைப் பகிர்ந்து அளிக்கச் சொல்கின்றார்

2. மனித மாண்புகள் உணர்ந்து வாழ்ந்திட
மனதில் கவலைகள் நீங்கி மகிழ்ச்சி ஓங்கிட
தனிமை உணர்வை நீக்கி அவர்தம் அன்பு உறவிலே
சாந்தம் நிறைந்த வாழ்வில் என்றும் மனிதர் வாழவே

## 132 இறைவா உமது இரக்கம் வேண்டும்
உமது வரங்கள் பொழிய வேண்டும்

1. புனிதம் அடைய உம்மடி தொழுதேன்
புலன்களை தூய்மைப்படுத்தும்
மனத்திடன் அடைந்து ஒருமனப்பட்டு
செயல்பட உதவிடுவீர்

2. உமது பணிக்காய் என்னையே தந்தேன்
உள்ளத்தை உறுதிப்படுத்தும்
என் செயல் அனைத்தும் உம் செயலாக்கி
செயல்பட உதவிடுவீர்

## 133 இறைவா நீ ஒரு சங்கீதம் - அதில்
இணைந்தே பாடிடும் என் கீதம்
உன் கரம் தவழும் திருயாழிசை - அதில்
என் மனம் மீட்டிடும் தமிழ் ஏழிசை

1. புல்லாங்குழலென தனித்திருந்தேன் - அதில்
இசையாய் என்மனம் புகுந்திடுவாய்
பாவியென் நெஞ்சமும் துயில் கலையும் - புது
பாடலால் என்னகம் இணைந்திடுமே
எரிகின்ற சுடராக விண்மீன்கள் உன் வானில்
எனை இன்று திரியாக ஏற்றாயோ இறைவா
காற்றாகி ஊற்றாகி கார்மேக மழையாகி
வாழ்வாகி வழியாகி வாராயோ இறைவா

2. கல்லிலும் முள்ளிலும் கால் நடந்தாலும் - நீ
தோளினில் சுமந்து தினம் நடந்தாய்
நாதா உன் வார்த்தைகள் வானமுதம் - இனி
நாளெல்லாம் வாழ்விக்கும் தேனமுதம்
ஒரு நாவு போதாது தேவா உன் பெயர் சொல்ல
ஒரு நாளும் வற்றாது உனதன்பு கடலிங்கு
ஒரு வார்த்தை சொன்னாலே என் பார்வை எழிலாகும்
ஒரு நாளும் அழியாத உறவாகும் இறைவா

## 134 இன்பக் கனவொன்று நான் கண்டேன்

இறை ஆட்சி மலரக் கண்டேன்
எங்கும் மனங்கள் மலரக் கண்டேன்
இன்பக் கனவொன்று நான் கண்டேன்

1. இயேசுவின் அருகினில் ஏழைகள் அமரக் கண்டேன் இறை
அன்பினில் அகிலமே ஒன்றென உணர்ந்து நின்றேன்
பிறர்க்கென வாழ்ந்திடும் மனிதர்கள் பலரைக் கண்டேன்
பிறர்நலம் பேணிடும் பணியில் எனை இணைத்தேன்
எந்தன் வாழ்வின் பொருள் அறிந்தேன்

2. அன்பே அனைவர்க்கும் ஆக்கம் என அறிந்தேன் - அகச்
சுதந்திரமே எங்கும் ஒளியெனக் கண்டு கொண்டேன்
நீதியின் பாதையில் யாவரும் நடக்கக் கண்டேன்
நிதமும் புதுமை வாழ்வில் சேரக் கண்டேன்
அன்பின் நிறைவை நான் கண்டேன்

## 135 உம்மோடு நான் வாழும் போது

உலகிலே இன்பம் தருவது எதுவுமில்லை
யேசுராஜா வாரும் ராஜா
யேசுராஜா வாரும் ராஜா

1. உம்மில்லம் அருமை அருமையே
உம்சிறகின் நிழலில் களிகூறுவேன்
நன்றி ராஜா யேசுராஜா - 2

2. முடிவில்லா அன்பை எம்மேல் வைத்தீர்
தொடர்ந்து அன்பு செய்கிறீர்
நன்றி ராஜா யேசுராஜா - 2

3. இரட்சிப்பின் சந்தோஷம் தந்தவரே
இரட்சகர் உமக்கே நான் சொந்தம்
நன்றி ராஜா யேசுராஜா - 2

4. நீர் தந்த விசுவாசம் பெரிது ஐயா
நித்திய வாழ்வை தருவீர் ஐயா
நன்றி ராஜா யேசுராஜா - 2

## 136 உன்னோடு நான் இருக்கின்றேன்

உன்னை நாளும் நான் சுமக்கின்றேன்
மகனே அஞ்சாதே மகனே அஞ்சாதே

1. நிலவாய் உன் இதயத்தில் நான் இருப்பேன்
நிழலாக உலகத்தில் நான் தொடர்வேன் - 2
என்னை விட்டு நீ எங்கு சென்றாலுமே - 2
நினைவெல்லாம் உனை சுற்றி வந்தாகுமே - 2
கலங்காதே நீ கலங்காதே
வரும் சோதனையில் மனம் தளராதே
காத்திடும் தேவன் நான் இருக்க
கைவிடுவேனோ நீ அழிய

2. தனியான உன் வாழ்வு பயணங்களில்
துணையின்றி தள்ளாடும் தருணங்களில் - 2
உறவெல்லாம் அறுந்தோடும் காலங்களில் - 2
உலகங்கள் வெறுத்தோடும் நேரங்களில் - 2
கலங்காதே . . .

3. அசையாத ஆத்மாவின் நம்பிக்கை தான்
விழுதாக உனை தாங்கும் இம்மண்ணிலே - 2
அயலானை மன்னிக்கும் பண்பொன்று தான் - 2
அழியாத வாழ்வுக்கு அணிசேர்க்கும் - 2
கலங்காதே . . .

## 137 உண்மை இறைவா உன்னை காண துடித்தேன்

உந்தன் உறவில் இன்று என்னை இணைத்தேன்
வல்லவன் உந்தன் பாதையில்
நல்லது காணும் ஆசையில்
எல்லையில்லாத தாகம் கொண்டு
வந்தேன் இன்று தந்தேன் என்னை

1. தாயன்பும் தந்தையன்பும் மேலென்று நானிருந்தேன்
நீ தரும் அன்பைக் கண்டால் இதுவே மேலென்பேன்
அத்தனை கோடி மாந்தரும் என்னை விட்டு ஓடினும்
இத்தரையில் எந்நாளும் என்னை நித்தம்
அன்பு செய்யும் நல்ல

2. நான் பெற்ற செல்வம் எல்லாம் ஒரு நாள் ஓடிவிடும்
நீ தரும் அருள் ஒன்றே நிலையாய் கூடிவரும்
பட்டம் பதவி யாவும் என் பயணத்தில் மாறிவிடும்
உற்றார் பெற்றார் சுற்றம் போகும்
உந்தன் அன்பு போகாதையா

**138** **உம் சிறகுகள் நிழலில் எந்நாளும் என்னை**
அரவணைத்திடு இறைவா - எந்த
இருளிலும் ஒளி சுடரும் - வெந்
தணலிலும் மனம் குளிரும் - உந்தன்
கண்களின் இமைபோல் எந்நாளும் என்னைக்
காத்திடு என் இறைவா

1. பாவங்கள் சுமையாய் இருந்தும் - உம்
மன்னிப்பில் பனிபோல் கரையும்
கருணையின் மழையில் நனைந்தால் - உம்
ஆலயம் புனிதம் அருளும்

2. வலையினில் விழுகின்ற பறவை - அன்று
இழந்தது அழகிய சிறகை
வானவன் அருள்மழை பொழிந்தே - நீ
வளர்த்திடு அன்பதன் உறவை

**139** **உன் திருயாழில் என் இறைவா - பல**
பண்தரும் நரம்புண்டு
என்னையும் ஓர்சிறு நரம்பெனவே - அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே

1. யாழினை நீயும் மீட்டுகையில் - இந்த
ஏழையின் இதயம் துயில் கலையும்
யாழிசை கேட்டு தனை மறந்து - உந்தன்
ஏழிசையோடு இணைந்திடுமே

2. விண்ணக சோலையின் மலரெனவே - திகழ்
எண்ணில்லா தாரகை உனக்குண்டு
உன்னருட் பேரொளி நடுவினிலே - நான்
என் சிறு விளக்கையும் ஏற்றிடுவேன்

## 140

**உன் நினைவில் உன் திருமுன் சங்கமிப்பேன் - உன்**
துணையோடு நாளெல்லாம் பண்ணிசைப்பேன்
என் இயேசுவே என் ஜீவனே
துணையாகி எனையாளும் தேவ தேவனே

1. அலைபோல சோகங்கள் தினந்தோறும் வந்தாலும்
அரண்போல எனைக் காக்கும் என் தெய்வம் நீ
மலைபோல பாவங்கள் மனதுக்குள் இருந்தாலும்
மறவாமல் மன்னிக்கும் மாமன்னன் நீ
எந்நாளுமே என் இயேசுவே
என் வாழ்வெல்லாம் உன் தாயன்பிலே

2. செல்கின்ற இடமெல்லாம் சொல்கின்ற மொழிகேட்டு
நல் வாழ்வில் உனைக் காணும் வரமொன்று தா
தாழ்ந்தோர்க்கும் வீழ்ந்தோர்க்கும் நற்செய்தி நானாகி
நல்லோராய் மாற்றுகின்ற வாழ்வொன்று தா
உன் வார்த்தையால் உளம் மாற்றவா
உன் பார்வையால் எனைக் குணமாக்கவா

## 141

**உன் புகழைப் பாடுவது - என்**
வாழ்வின் இன்பமையா
உன்னருளைப் போற்றுவது - என்
வாழ்வின் செல்வமையா

1. துன்பத்திலும் இன்பத்திலும் - நல் தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் - நல் அன்னையாய் அருகிருப்பாய்
அன்பு என்னும் அமுதத்தினை - நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன்னின்று பிரியாமல் - நீ என்றும் அணைத்திருப்பாய்

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய் - நீ என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் - நீ என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்கும் தாழ் - ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன்னின்று பிரியாமல் - நான் என்றும் வாழ்ந்திருப்பேன்

## 142 உன்னத தேவனவர் - நம்மை

படைத்தவர் ஆள்பவர் ஆண்டவர் அவரே

1. காலையும் மாலையும் கடவுளின் மேன்மை
பாடுதல் நல்லதுவே
கனிவுடன் பாடலில் வீணையும் யாழும்
மீட்டிட பாடுதல் நல்லதுவே

2. ஆண்டவர் மாபெரும் செயல்கள் அனைத்தும்
அறிவிலி அறிவதில்லை
பாவிகள் செழிப்புடன் வாழ்ந்திருந்தாலும்
பாவங்கள் அவர்களை விடுவதில்லை

3. மகிழ்வுறும் செய்தியை என்மனம் குளிர
இறைவன் எனக்களித்தார்
மாமரம் கேதுரு போலவே வளர்ந்து
நீதியில் வாழ்ந்திடச் செய்கின்றார்

## 143 உன்னுதவி வேண்டுமையா

நீ இல்லை என்றால் நான் ஒன்றுமில்லை
நீ இல்லை என்றால் நான் ஒன்றுமில்லை

1. நான் வாழும் இடமெல்லாம் உன் அருள் வேண்டுமையா
நான் போகும் இடமெல்லாம் உன் ஒளி வேண்டுமையா

2. நான் தேடும் இடமெல்லாம் உன் அருள் வேண்டுமையா
நான் நாடும் இடமெல்லாம் உன் ஒளி வேண்டுமையா

## 144 உன்னைத் தேடித் தேடி அலைந்தேன்

என் ஜீவன் முழுதும் கரைந்தேன்
இறைவா இறைவா இறைவா - என் இறைவா

1. மழையினில் பள்ளத்தாக்கினில்
அலைந்தலைந்து உன்னைத் தேடினேன்
அலை ஓசையில் இளந் தென்றலில்
மனம் இசைந்து உன்னைத் தேடினேன்
உன் அழகு முகத்தைக் காண வேண்டும்
உன் அருட்கரங்களைத் தொட வேண்டும்
உன்னோடு இணைந்து வர வேண்டும்

2. இதயத்தில் அதன் ஆழத்தில்
எனை மறந்து உன்னைத் தேடினேன்
என் இறைவனை எந்தன் இயேசுவை
எனில் கண்டேன் அன்பில் மூழ்கினேன்
எல்லாமே இங்கு உன் மயம் தான்
எதுவுமே உனது அருள் மயம் தான்
எங்குமே உனது அன்பு மயம் தான்

**145** **உன்னை நம்பி வாழும் போது உறுதி பெறுகிறேன்**
உன் பணியை செய்யும் போது நிறைவு அடைகிறேன்
உன் வழியில் செல்லும் போது அமைதி காண்கிறேன்
இறைவா இறைவா அமைதி காண்கிறேன்
அமைதி காண்கிறேன் நான் அமைதி காண்கிறேன்

1. என்னை மட்டும் நம்பும் போது இடறி விழுகிறேன்
எழும்பி நடக்க முடியாமல் தவழ்ந்து தவிக்கிறேன்
என்னுள் வாழும் உன்னை நம்பி எழுந்தடி வைப்பேன் - இனி
இமயமென தடைவரினும் எளிதாய் கடப்பேன்
எளிதாய் கடப்பேன் நான் எளிதாய் கடப்பேன்

2. இருளின் சக்தி எந்தன் வாழ்வை பணியச் சொல்லுதே
இறைவா உன் நினைவு என்னை துணியச் சொல்லுதே
உன் சொல்லின் உறுதியில் நான் பயணம் செல்லுவேன் - இனி
உண்மை அன்பு நீதியில் நான் என்றும் வாழுவேன்
என்றும் வாழுவேன் நான் என்றும் வாழுவேன்

**146** **உலகில் வாழும் உயிர்களில் இல்லை உன்னதம்**
உயிரில் கலந்து உள்ளம் வாழும் நீயே நிஜம்
உன் குறையாத அன்பு உன் நிறைவான பண்பு
என் வாழ்வில் நிலையாகவே நீயே நிஜம் நீயே நிஜம் - 2
என் இறையே என் உறவே என் வாழ்விலே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2

1. வலுவின்றி நான் இங்கு வாழ்கையிலே
உன் வலிமை என்னுள்ளில் நான் உணர்கின்றேன்

பிறர் காண குறையோடு நான் வீழ்கையில்
மனதார உன்னில் பெருமை கொள்வேன்
இறைவா உன் வல்லமை எனில் வாழுமே
நீ எனக்கு தருகின்ற அருள் போதுமே
என் இறையே என் உறவே என் வாழ்விலே
நீயே நிஜம் நீயே நிஜம் - 2

2. ஆதாயம் என்றெண்ணும் அனைத்தையுமே
உம் பொருட்டு இழப்பென கருதுகின்றேன்
உனைக் குறித்த எந்தன் அக அறிவே
அளவற்ற செல்வம் என உணர்கின்றேன்
உம்மை நான் ஆதாயமாக்கிடவே
உலகெல்லாம் குப்பையென கருதுகின்றேன்
என் இறையே . . .

## 147

**உன்னை ஒருபோதும் பிரியாத நிலை ஒன்று வேண்டும்**
இறைவா இறைவா என் இறைவா
அந்த மகிழ்வோடு எந்நாளும் நான் வாழ வேண்டும்
தலைவா தலைவா என் தலைவா

1. தாயாக நீ மாற வேண்டும் - நாளும்
தயவோடு எனைத்தாங்க வேண்டும்
நலம் காட்டும் தந்தை நீ வேண்டும் - இனி
நாளெல்லாம் எனைத்தாங்க வேண்டும் - 2
உற்ற நண்பனாய் உதவும் தோழனாய் - 2
உயிராக உறவாக நீ எனில் வர வேண்டும்

2. வழிகாட்டும் விண்மீனாக வேண்டும் - போகும்
வழியெல்லாம் எனைக்காக்க வேண்டும்
வாழ்வாங்கு நான் வாழ வேண்டும் - அந்த
வாழ்வெல்லாம் நீயாக வேண்டும் - 2
அன்னை தந்தையாய் அணைக்கும் தெய்வமாய் - 2
அசைபோடும் நினைவாக நீ எனில் வர வேண்டும்

**148** **என் ஆற்றலின் ஆண்டவரை**
நான் எந்நாளும் போற்றிடுவேன் - நல்
அருள்மொழி கேட்க காலமெல்லாம் - அவர்
காலடி அமர்ந்திடுவேன்

1. ஆண்டவர் எனது அரணாவார்
அவரே எனக்கென்றும் துணையாவார்
வலிமையும் வாழ்வும் வழங்கும் நல்தேவன்
என்னுடன் இருக்கின்றார் என்றும் இருக்கின்றார்

2. ஆண்டவர் எனது மீட்பராவார்
அவரே எனக்கென்றும் ஒளியாவார்
வாழ்வாய் வழியாய் விளங்கும் நல்தேவன்
சீர்வழி நடத்திடுவார் அவர் வழி தொடர்ந்திடுவோம்

**149** **என்னை உமது கருவியாய் மாற்றிடு தேவா**
உமது ஆவி ஆற்றலோடு நடத்திடு தேவா

1. உள்ளம் உடைந்தவர் உருக்குலைந்தவர்
உமதாற்றல் பெற்றிட வேண்டும்
உறவை இழந்தவர் ஒதுக்கப்பட்டவர்
உம்துணையில் எழுந்திட வேண்டும்
இருளினை அகற்றவும் விலங்கினை உடைக்கவும்
நீதிநேர்மை உணர்வு ஓங்க நிம்மதியே வாழ்வில் தொடர
என்னை உமது கருவி ஆக்கும்.

2. மனித நேயங்கள் மதிக்கும் பண்புகள்
மனதில் தினம் வளர்த்திடல் வேண்டும்
இறைவன் வார்த்தையில் இனிதோர் ஆட்சியை
இம்மண்ணில் கட்டிடல் வேண்டும்
பிரிவுகள் நீங்கவும் ஒற்றுமை ஓங்கவும்
உண்மை அறிவு எங்கும் ஆள
உரிமை வாழ்வு நிறைவு காண
என்னை உமது கருவி ஆக்கும்.

## 150 என்னுடைய ஆற்றலான அன்பு யேசுவே
உம்மைநான் அன்பு செய்கிறேன்

1. தீயோரின் அறிவுரையில் நடக்க மாட்டேன்
பாவிகளின் வழிகளில் செல்ல மாட்டேன்
பழிகாரர் கூட்டத்தில் அமர மாட்டேன் - 2
இயேசுவே உம்மைநான் அன்பு செய்கிறேன் - 2

2. உம்முடைய வேதத்தில் பிரியம் வைப்பேன்
இரவும் பகலும் வசனங்களை தியானித்திருப்பேன்
அதிகாலை உம்மை நோக்கி விழித்திடுவேன் - 2
இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன் - 2

3. வாய்க்காலின் ஓரத்தில் நிற்கும் மரம் நான்
இலைகளை என்றுமே உதிர்க்க மாட்டேன்
தகுந்த காலத்தில் கனி கொடுப்பேன் - 2
இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன் - 2

4. உம்மை நோக்கிப் பார்ப்பதால் என்னில் பிரகாசம்
உம்மைச் சார்ந்து வாழ்வதால் என்னில் பரிசுத்தம்
செய்வது அனைத்திலும் வெற்றி பெறுவேன் - 2
இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன் - 2

## 151 என் யேசுவே உன் வார்த்தையே
என் பாதை காட்டிடும் ஒளியாகுமே
உன் பாசமே என் தாகத்தை
எந்நாளும் தீர்த்திடும் அமுதாகுமே
நாளும் உனதெழில் நாமம் பாடிப்பாடி
கூவும் சிறுகுயில் நான்

1. உனதருள் மொழி என திருவிழியே
தினமெனக்கது நலந்தரும் ஒளியே
அனுதினமது எனதுயிர் உணவே
மனம்மொழி செயல் அதில் சிறந்திடுமே
இறைவனின் குரலே இதயத்தின் மகிழ்வே
திறனெனக்கருளும் திருமறைப் பொழிவே

2. உலகிது தரும் கவர்ச்சியில் வீழ்ந்தே
உனதுறவினை நான் பிரிந்தாலும்
எழுந்திரு எனும் தயைமிகு வார்த்தை
எனை எழுப்பிடும் நான் பிழைத்திடுவேன்
இறைவனின் குரலே . . .

3. புயலினை அன்று அடக்கிய வார்த்தை
பயம்விடு என்று தேற்றிய வார்த்தை
இருபுறம் நல்ல கருக்குள்ள வாளாய்
எனைவருத்திடும் துயர் தகர்த்திடுமே
இறைவனின் குரலே . . .

152

**என் மனமே இறைவனையே புகழ்ந்திடு - 3**
என்றென்றுமே அவரன்பில் மகிழ்ந்திடு - 3
ஏனென்றால் அவரென்னை
மீட்பவர் காப்பவர் வாழ்விப்பவர்

1. அழிவுதரும் குழியினின்று அவர் என்னை தூக்கினார்
வாழ்வு தரும் அவர் வழியில் நான் நடக்க உறுதி தந்தார்

2. துன்பமெனும் இருளினிலே துவண்டேன் நான் ஓலமிட்டேன்
என் இறைவன் எனை மீட்டார் இருளினிலே ஒளியானார்

3. வெற்றியெனும் இலக்கினிலே முடிவின்றி ஓடிவந்தேன்
வாழ்க்கையெனும் மணி முடியை பரிசாக எனக்குத் தந்தார்.

153

**என் மனம் பாடும் பாடலிது தேவா**
என்னுள்ளே தீரா தாகமிது நாதா
நீ தரும் நேசம் நினைவில் வாழும் - 2
நிலையில்லா பனி போல என் சோகம் மாறும்

1. நினைவெல்லாம் மலராக நீ மலர்ந்தாய்
நிம்மதி நீ கொணர்ந்தாய்
கனவெல்லாம் கானல் நீரோ - நான்
கண்ணீரில் வாழும் மீனோ
உன் திருவடியே என் மனம் சரணம்
உளமதிலே நீ உன் ஒளி தாரணும்

2. வழி மீது விழி வைத்து ஒளி தேடினேன்
இருளினில் நான் விழுந்தேன்
நான் என்ன வாடும் பூவோ - இல்லை
உன் பாதம் சூடும் பூவோ
என் மனம் நீ வா நிம்மதியை தா
என் முகம் தனிலே புன்னகையைத் தா

**154** **என்னோடு நீ பேச வந்தாய்**
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய்
என் தெய்வமே என் தெய்வமே
நீயின்றி நான் இல்லையே - உன்
நினைவின்றி வாழ்வில்லையே

1. இதய தாகம் நீ இருளின் தீபம் நீ
உதய காலம் நீ உறவின் பாலம் நீ
தள்ளாடி நான் தடுமாறினேன்
கண் மூடி நான் வழி மாறினேன்
தீயாகும் துன்பங்களில் - நீ தாயாகி தாலாட்டினாய்

2. உயிரின் கீதம் நீ உலகின் வேதம் நீ
மழையின் மேகம் நீ மலரின் மணமும் நீ
என் பாதையில் முன்போக வா
கண் போலவே என்னைக் காக்கவா
ஆதாரம் நீயாகவே உன் அன்பொன்றே எனதாகவே

**155** **என்னை பெயர் சொல்லி அழைத்த தெய்வமே**
நான் உருவாகுமுன்னே என்னை அறிந்திருந்த
தெய்வமே
நான் வெளிப்படுமுன்பே எனை அர்ச்சித்த தெய்வமே
உள்ளங்கையில் பொறித்து வைத்து காத்த தெய்வமே
போற்றுகிறேன் புகழுகிறேன்
வாழ்த்துகிறேன் வணங்குகிறேன்

1. புதிய வாழ்வொன்றை எனக்கு நீ தந்தாய்
புனித பாதையையும் எனக்கு காட்டித்தந்தாய்
புதிய வாழ்வினில் புனித பாதையில்
புதிதாய் நாம் செல்லும் புனித பயணத்தில்
புலரும் விண்மீனாய் விரைந்து நீ வா
புதிய மனிதனாய் என்னை மாற்றவா - போற்றுகிறேன் ...

2. இரவிலும் பகலிலும் இணைந்தே வாழ்கிறேன்
இன்ப துன்பத்தையும் இனிதே பகிர்கிறேன்
இன்றைக்கு இருந்து நாளைக்கு அழியும்
இந்த உலகத்தின் படைப்புக்கள் யாவையும்
இரக்க உணர்வோடு காத்து வருகின்றீர்
இகமதில் உமைப்புகழ வாய்ப்பளிக்கிறீர் - போற்றுகிறேன் ...

3. எனது அருகினில் ஆயிரம் விழட்டும்
எனது வலப்பக்கம் பத்தாயிரம் விழட்டும்
எதுவும் என்னை அணுகவே அணுகா (2)
எனது புகலிடம் கோட்டை அரணுமே
எனவே உம்மை நான் நம்பியுள்ளேன்
எதற்கும் நான் அஞ்சத் தேவையும் இல்லை - போற்றுகிறேன்...

**156** **என்னை சுமப்பதனால் இறைவா**
உன் சிறகுகள் முறிவதில்லை
அள்ளி அணைப்பதனால் இறைவா
உன் அன்பு குறைவதில்லை
ஆயிரம் மின்னல் இடித்திட்ட போதும்
வானம் கிழிவதில்லை
ஆயிரம் மைல்கள் நடந்திட்ட போதும்
நதிகள் அழுவதில்லை - 2

1. கருவை சுமக்கும் தாய்க்கு என்றும் குழந்தை சுமையில்லை
கருவிழி சுமக்கும் இருவிழி அதற்கு இமைகள் சுமையில்லை
மதுவை சுமக்கும் மலர்களுக்கென்றும்
பனித்துளி சுமையில்லை
வானை சுமக்கும் மேகத்திற்கென்றும்
மழைத்துளி சுமையில்லை

2. அகழும் மனிதரை தாங்கும் பூமிக்கு முட்கள் சுமையில்லை
இகழும் மனிதரில் இரங்கும் மனதிற்கு
சிலுவைகள் சுமையில்லை
உலகின் பாவம் சுமக்கும் தோள்களில்
நானொரு சுமையில்லை
உயிரை ஈயும் உம் சிறகின் நிழலில்
இதயம் சுமையில்லை

## 157

**எத்துணை அழகு உம் படைப்பினிலே**
அத்துணை அழகும் உமதன்றோ

1. நனிசிறந்துயர்ந்த நானிலமும்
நவின்றிட இயலா வான் எழிலும்
நலமெனக் கருதிக் காப்பவனே
மனிதனும் முன்னெம் மாத்திரமோ

2. உன்னுயர் ஞானப் பார்வையிலே
என்னையும் பொருளாய் எண்ணுபவா
உன்னெழிற் கரத்தின் படைப்பினிலே
என்னுள்ளம் இன்பம் பருக வைப்பாய்

3. பாதகக் கடலில் வாழ்பவரும் - இறை
பாத நற்கமலம் தாழ்பவரும்
நாதனாம் இறைவன் முன்னிலையில் - தம்
வாழ்வதன் காணிக்கை அளித்திடுவார்

## 158

**எந்தன் இதய கானம்**
என்றும் உன்னைப் பாடும்
இயேசுவே என் தலைவனென்று
எங்கும் எடுத்துக் கூறும்
எந்தன் இதய கானம்

1. காலையில் பண்பாடும் பறவைக் கூட்டங்கள்
சோலையில் நின்றாடும் மரத்தின் தோட்டங்கள்
மாலையில் எம்மீது வீசும் தென்றல்கள்
மருதம் மகிழ சேரும் மழையின் துளிகள்

நீரினில் நீந்திடும் மீனின் ஓட்டங்கள்
நிலத்தினில் வாழ்ந்திடும் விலங்கின் கூட்டங்கள்
எல்லாம் உன் புகழ் பாடுதே - உன்
சொல்லாலே உயிர் வாழுதே

2. தெய்வமே என்றாகும் மழலை மொழிகளும்
தேயா அன்பென்றாகும் தெய்வ மாந்தரும்
கோவிலில் நின்றோங்கும் புகழ்ச்சிப் பாக்களும்
பூமியில் நற்சேவை ஆற்றும் தொண்டரும்
நீதியும் நேர்மையும் கேட்கும் கூக்குரல்
நியாயமும் தர்மமும் தேடும் ஏக்கங்கள்
எல்லாம் உன் புகழ் பாடுதே - உன்
சொல்லாலே உயிர்வாழுதே

**159**

**எனது செல்வமே இயேசு நாதா**
உன் அன்பில் நனைந்தேன் இதய நாதா
உன்னை அறிந்திடவே யாவும் இழந்துவிட்டேன்
உன்னில் கலந்திடவே உலகை மறந்துவிட்டேன்

1. இயேசுவே உன்னை அடைந்துகொள்ள
ஆவல் கொண்டுள்ளேன்
உன்னிலே நான் இணைந்து வாழ யாவும் இழந்துவிட்டேன்
உன்னில் என்னை இறைவன் ஏற்றார்
என்றும் அகமகிழ்வேன்
உன்னை நம்பி வாழ்வதாலே எனக்கு விடுதலையே
மகிழ்கின்றேன் உன்னைப் புகழ்கின்றேன்
மனதில் என்றும் நினைக்கின்றேன்
உலவும் புவியைக் காணும் மனிதரை
உனது அன்பால் நிறைக்கின்றேன்

2. எனது வாழ்வாம் வானத்தில் என் இயேசு எழவேண்டும்
உனது சாவின் உயிர்ப்பின் மாண்பில் பங்கு பெறல் வேண்டும்
பரிசில் இதனை அடையும் நோக்கில் பாரில் ஓடிகின்றேன்
வந்ததை மறந்து வருவதை நினைந்து
விரும்பித் தொடர்கின்றேன்
மகிழ்கின்றேன் . . .

## 160 என் ஆயனாய் - என்
இறைவன் இருக்கின்ற போது
என் வாழ்விலே குறைகள் என்பது ஏது

1. என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்னே இன்பம் ஆஹா எங்கும் இன்பம் ஆஹா
என்றென்றும் இன்பமல்லவா

2. என்னை அவர் தெளிந்த நீரோடையிலே
அழைத்துச் சென்று நீர் அருந்தச் செய்தார்
என்றும் அன்பு ஆஹா தேவன் அன்பு ஆஹா
என்றென்றும் பாடிடுவேன்

## 161 என் இயேசுவே உன்னை நான் மறவேன்
எந்நாளும் உன்னருளை நான் பாடி மகிழ்ந்திருப்பேன்

1. உன் நாமம் என் வாயில் - நல் தேனாய் இனிக்கின்றது
உன் அன்பை நாளும் எண்ணும்போது
ஆனந்தம் பிறக்கின்றது

2. உன் வாயின் சொல்லமுதாய் - எந்நாளும் வாழ்ந்திடுவேன்
நல் வாழ்வு நல்கும் வார்த்தையெல்லாம்
நானிலம் முழங்கிடுவேன்

## 162 என் தெய்வமே எனை மீட்க வாருமே
உன் திருப் பாதையில் நான் செல்லும் நேரமே
அன்பின் பூக்களே எந்தன் வாழ்வினில்
மலர்ந்திட செய்யுமே

1. கவலையினால் வரும் சோகம் - உன்
பார்வையில் மகிழ்வாய் மாறும்
அலை அலையாய் வரும் ஏக்கம் - உன்
நினைவால் பனியாய் உருகும்
தேவனே உன் வார்த்தையில் நிலைத்திட வரம் தருவாய்
கானமே என் ஜீவனில் கலந்து உன் புகழ் பாடும்
இயேசுவே என் வசந்தமே அணைத்திட வாருமே

2. பாதத்தில் அமர்ந்திடும் நேரம் - என்
ஆன்மா உன்னிடம் பேசும்
உணர்வினால் எழுந்திடும் பாசம் - என்
வாழ்வினில் நிழலாய் தொடரும்
தேவனே உன் பாதையில் நடந்திட கரம் பிடிப்பாய்
இராகமே என் ஜீவனில் கலந்து உன் புகழ் பாடும்
ஏசுவே என் நண்பனே மலர்ந்திட வாருமே

**163** **என் தெய்வம் வாழும் பூமியிது**
எத்துணை அழகு இது
உலகே கண்கள் திறவாயோ
உவகை இன்று காணாயோ

1. பரந்து விரிந்த உலகம் படைத்தவன் அன்பு இதயம்
உயர்ந்து விரிந்த வானம் படர்ந்த அவர் மனம் கூறும்
எங்கெங்கும் வீசிடும் தென்றல் காற்றும்
பொங்கிடும் நீரின் ஊற்றும்
மின்னிடும் மீன்களும் ஒளிதரும் கதிரும்
மின்னலும் தண்ணொளி நிலவும்
என்னென்ன அழகு எங்கெங்கும் மெருகு
இயற்கையை அணுகு இன்பம் அள்ளிப் பருகு

2. நிறைந்த அன்புடை நெஞ்சம் நிலவென ஒளிதரும் அறிவும்
மலர்ந்த முகம்தனில் அழகும் மங்கா கலைகளின் வளமும்
என்றென்றும் உழைக்கும் தன்மான மாந்தர்
எங்கெங்கும் ஒன்றாகும் கரங்கள்
நீதிக்கும் நேர்மைக்கும் போராடும் குரல்கள்
நிம்மதி தேடிடும் மனங்கள்
என்னென்ன அழகு. . .

**164** **என் தேவனே என் இறைவனே - உன்னை**
எந்நாளும் போற்றிடுவேன் - உன்னை
எந்நாளும் பாடிடுவேன்

1. கண்ணிழந்தோர் பார்த்திடக் கண்டேன் - இறை
இயேசுவின் கருணை அதில் கண்டேன்
விண்ணிழந்தோர் அதைப் பெறக் கண்டேன் - இறை
இயேசுவின் தன்மை அதில் கண்டேன்

2. உடலில் ஒளி வீசிடக் கண்டேன் - இறை
இயேசுவின் மகிமை அதில் கண்டேன்
கடல்களிலே பெரும் அமைதி கண்டேன் - இறை
இயேசுவின் மேன்மை அதில் கண்டேன்

**165** **என் பகைவருக்கும் எனக்கும்**
பாலம் ஒன்று அமைப்பீரே இயேசுவே இயேசுவே

1. அந்தப் பாலத்தில் நான் நடக்க பலம் தாருமே இயேசுவே
2. என் பகைவரை நான் மன்னிக்க வரம் தாருமே இயேசுவே
3. என் பகைவரை ஏற்றுகொள்ள மனம் தாருமே இயேசுவே
4. என் பகைவரை அன்பு செய்ய அன்பைத் தாருமே இயேசுவே

**166** **என்னை அன்பு செய்தாய் - இறைவா**
என்னை தேர்ந்து கொண்டாய்
என்னே உன் அன்பு
கண்ணீர் மல்கி நின்றேன் இறைவா

1. தாயினும் சிறந்த தாயும் நீயே
கருவிலும் என்னை நீ அழைத்தனையே
வாழ்வெல்லாம் உனக்கு அடிமை நானே - உன்
தாயென்னை மறந்தாலும் நீயென்னை மறப்பதில்லை
உறவுகள் பிரிந்தாலும் நீ என்றும் பிரிவதில்லை

2. அலைகடல் நடுவிலும் அமைதி நீயே
புயல் எழும் வேளையில் புகலிடம் நீயே
வாழ்வெல்லாம் உன்னையே சுவைத்திட வேண்டும்
தென்றலில் நான் மகிழ்ந்தாலும் புயல்தனில் வீழ்ந்தாலும்
கரங்களில் ஏந்துகின்றாய் கனிவுடன் தாங்குகின்றாய்

## 167

**என்னை நீ நேசிக்க என்னிடம் இருப்பது**
என்னவென்றெனக்கு கூறிடுவாய்
இயேசுவே எனக்கு கூறிடுவாய்

1. சேயிடம் எத்தனை குறையிருந்தாலும்
தாயதை அன்பு செய்வதும் ஏனோ
பேயெனக் கடலில் புயல் வந்தாலும்
தூய ஆறதில் பாய்வதும் ஏனோ
எத்தனை குறைகள் என்னிடம் இயேசுவே
அத்தனை பொறுத்து அன்பு செய்தாயே

2. நீரினில் எத்தனை சேறிருந்தாலும்
தாமரை அங்கு மலர்வதும் ஏனோ
பாரினில் எத்தனை பாவிகள் இருக்க
கார்மழை அங்கு பொழிவதும் ஏனோ
அருளுக்கு அருகதை இல்லை எனினும்
அருளால் எனை நீ ஆட்கொண்டனையே

## 168

**ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க**
வருவாயோ என் இறைவா - அந்த
சிறுபொழுதே ஒரு யுகமாய் மாறும்
அறிவாயோ என் இறைவா

1. விழிகளை மூடி உனை நினைக்கையிலே
விந்தைகள் நிகழ்வதும் ஏன் இறைவா
மொழிகளை தாண்டி மனம் உறவாட
மகிழ்வினில் திளைப்பதும் ஏன் இறைவா
ஏன் இறைவா . . .

2. சோதரர் மானிடர் அழுகுரல் கேட்க
கேள்விகள் நிகழ்வதும் ஏன் இறைவா
வேதனை கண்டும் காட்டிடும் மௌனம்
விளங்கவில்லை அது ஏன் இறைவா
ஏன் இறைவா . . .

**169** **ஒருபோதும் உனைப் பிரியா நிலையான**
உறவொன்று வேண்டும் - என்
உடல் கூட எரிந்தாலும் உன் நாமம்
நான் சொல்ல வேண்டும்
நினைவிலும் நீயே - என் கனவிலும் நீயே
நீங்காத நிழலாக வா இறைவா

1. உன் கையில் என்னை நீ பொறித்தாய்
பெயர் சொல்லி அன்பால் என்னை அழைத்தாய்
ஏன் என்னை நீ தெரிந்தாய்
என் வாழ்வில் ஏன் நுழைந்தாய் - உன்
மாறாத அன்பில் மகிழ்வொன்று கண்டேன் - தாய்
உறவொன்று தேடும் பிள்ளை போல் நின்றேன்
உன்னோடு நான் வாழுவேன்

2. நீர் தேடும் மான்போல தேடி வந்தேன்
நீயின்றி வாழ்வில்லை என்றுணர்ந்தேன்
என்னுள்ளே வாழும் தெய்வம்
என்னை நீ ஆளும் தெய்வம்
என் இயேசு நீயே என்னுள்ளம் நின்றாய் - நிதம்
என்பாதை முன்னே நீதானே சென்றாய்
உன்னோடு நான் வாழுவேன்

**170** **ஒருவரம் நான் கேட்கின்றேன்**
திருப்பதம் நான் பணிகின்றேன்
மனிதனாக முழு மனிதனாக
வாழும் வரம் நான் கேட்கின்றேன்

1. நிறையுண்டு என்னில் குறையுண்டு
நிலவின் ஒளியிலும் இருளுண்டு
புகழுண்டு என்றும் இகழுண்டு
இமய உயர்விலும் தாழ்வுண்டு
மாற்ற இயல்வதை மாற்றவும்
அதற்கு மேல் அதை ஏற்கவும்
உனது அருள் தந்து எனது நிலை நின்று
வாழ வரம் தருவாய்

2. உறவுண்டு அதில் உயர்வுண்டு
இணைந்த தோள்களில் உரமுண்டு
இல்லம் உண்டு சுற்றம் நட்புமுண்டு
இதழ்கள் இணைந்தால் மலருண்டு
மகிழ்வாரோடு நான் மகிழவும்
வருந்துவாரோடு நான் வருந்தவும்
உனது அருள் தந்து . . .

**171** **ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்**
ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என் சகோதரன்

1. வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

2. பிறர்குலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் வாழ்ந்தாலும் சகோதரன்
பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

3. அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன்
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

**172** **ஒருகோடிப் பாடல்கள் நான் பாடுவேன் - அதை**
பாமாலையாக நான் சூடுவேன்
உலகெல்லாம் நற்செய்தி நானாகுவேன் - உந்தன்
புகழ்பாடி புகழ்பாடி நான்வாழுவேன்

1. இளங்காலைப் பொழுதுந்தன் துதிபாடுதே - அங்கு
விரிகின்ற மலருந்தன் புகழ்பாடுதே
அலை ஓயா கடலுந்தன் கருணைமனம் - வந்து
கரைசேரும் நுரை யாவும் கவிதைச்சரம்
ஆதியும் நீயே அந்தமும் நீயே
பாடுகிறேன் உனை இயேசுவே
அன்னையும் நீயே தந்தையும் நீயே
போற்றுகிறேன் உனைஇயேசுவே

2. மனவீணை தனைஇன்று நீமீட்டினாய் - அதில்
மலர்ப்பாக்கள் பலகோடி உருவாக்கினாய்
என்வாழ்வும் ஒருபாடல் இசைவேந்தனே - அதில்
எழும்ராகம் எல்லாமுன் புகழ்பாடுதே - ஆதியும் . . .

**173**

**கலைமான்கள் நீரோடை தேடும் - எந்தன்**
இதயம் இறைவனை நாடும்
உள்ளத் தாகம் உந்தன் மீது
கொண்டபோது எனக்கு வேறென்ன வேண்டும்

1. காலம் தோன்றா பொழுதினிலே
கருணையில் என்னை நீ நினைத்தாய்
உயிரை தந்திடும் கருவினிலே
அருளினை பொழிந்து அரவணைத்தாய்
குயவன் கையாலே மண்பாண்டம் உடைந்திடும்
கதையின் நாயகன் நான் இன்று

2. பாறை அரணாய் இருப்பவனே
நொறுங்கிய இதயம் நான் கொணர்ந்தேன்
காலை மாலை அறியாமல்
கண்ணீர் வடித்திடும் நிலையானேன்
சிதறிய மணிகளைக் கோர்த்து எடுத்து
அழகிய மணி மாலை நானாவேன்

## 174

**கலைமான் நீரோடையை**
ஆர்வமாய் நாடுதல் போல்
இறைவா என் நெஞ்சம் மறவாது உன்னை
ஏங்கியே நாடி வருகின்றது

1. உயிருள்ள இறைவனில் தாகம் கொண்டலைந்தது
இறைவா உன்னை என்று நான் காண்பேன்
கண்ணீரே எந்தன் உணவானது

2. மக்களின் கூட்டத்தோடு விழாவில் கலந்தேனே
அக்களிப்போடு இவற்றை நான் நினைக்க
என் உள்ளம் பாகாய் வடிகின்றது.

## 175

**கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்**
வாழ்வுக்கு நீ என்ன தந்தாய்?
என்ன தந்தாய் நீ என்ன தந்தாய்?
கடவுள் எனக்கு வாழ்வு தந்தார்
வாழ்வுக்கு நான் என்னைத் தந்தேன்
என்னைத் தந்தேன் நான் என்னைத் தந்தேன்

1. பார்த்திட உனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரை பார்த்தாயா
பார்த்தாயா இனி பார்ப்பாயா?

பார்த்திட எனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரை பார்த்தேனே - 2
பார்த்தேனே இனி பார்ப்பேனே

2. மன்னிக்க நல்ல மனதைத் தந்தார்
முழு மனதுடன் நீ மன்னித்தாயா
மன்னித்தாயா இனி மன்னிப்பாயா?

மன்னிக்க நல்ல மனதைத்தந்தார்
முழு மனதுடன் நான் மன்னித்தேனே - 2
மன்னித்தேனே இனி மன்னிப்பேனே

3. உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலைநின்று உழைத்தாயா
உழைத்தாயா இனி உழைப்பாயா?
உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலைநின்று உழைத்தேனே - 2
உழைத்தேனே இனி உழைப்பேனே

**176** **கடல்கடந்து சென்றாலும் தீ நடுவே நடந்தாலும்**
புயல் சூழ்ந்து எழுந்திடும் காரிருளை - நீ
கடந்திட நேர்ந்தாலும் உன்னோடு நானிருப்பேன் - 2
அஞ்சாதே கலங்காதே

1. தேவனின் பார்வையில் நீ மதிப்புள்ளவன்
பொன் விளை நிலம்போலே
பூமியில் வாழ்ந்திடும் யாவிலும் உன்நிலை உயர்ந்தது அவராலே
பால் நினைந்தூட்டிடும் தாய்மறந்தாலும் நீ அவர் மடிமேலே - மனம்
தேற்றுவார் பலம் ஊட்டுவார் வாழ்வினி ஒளிதானே
அஞ்சாதே கலங்காதே

2. பாலையில் பாதையும் பாழ்வெளி ஓடையும்
தோன்றிடும் அவர்கையால்
வான்படை ஆண்டவர் வாய்மொழியால் வரும்
மேன்மையை எவர் சொல்வார்
பார்வையிழந்தவர் வாய் திறவாதோர்
யாவரும் நலமடைவார் - இறை
ஆட்சியில் - அவர் மாட்சியில் மானிடம் ஒன்றாகும்
அஞ்சாதே கலங்காதே

**177** **கலங்காதே என் நெஞ்சமே**
கர்த்தர் இயேசு அன்பு செய்ய
காலமெல்லாம் காத்திருக்க
கலக்கம் ஏன் நெஞ்சமே - நெஞ்சமே

1. இருளும் புயலும் உன்னை என்ன செய்திடும்
அருளும் அன்பு பொழியும் இயேசு அருகிருக்கையில்
வாழ்வில் வீழ்ந்து வருந்தும் போது தோள் கொடுக்கிறார்
தாழ்ந்து வாடும் போது தயவு காட்டுவார்
தயவு காட்டுவார் இயேசு தயவு காட்டுவார்

2. உலகம் வெறுக்கும் போதும் உன்னில் நிலைக்கிறார்
உயிர்ப்பும் உயிரும் ஈந்து நாளும் உடனிருக்கிறார்
துன்ப துயரம் தூரப் போகும் துணிந்து நின்றிடு
தூய தேவன் அருளை என்றும் நம்பிடு
என்றும் நம்பிடு அவரை என்றும் நம்பிடு

## 178

**காலம் போற்றும் கருணை தெய்வமே**
உன் தயவினால்
ஞானம் தாரும் உன்னைப் பாடவே

1. வான்கூறும் வண்ணக் கவிதை
பூமி சிந்தும் புன்னகை கீதம்
அத்தனையும் சொல்வதுன் புகழல்லவா
நீ தந்த வாழ்வைப் பெற்று வாழ்கின்ற உயிரினங்கள்
அனைத்திலும் இருப்பது நீயல்லவா
கண்ணின் மணிபோல் காக்கும் தெய்வமே
உன்புகழ்பாட ஞானம் தாருமே
பணிவாழ்வில் பண்பாடும் திருத்தூதனாய்
எனை ஏற்றிட திருவடிகளில் சரணாகின்றேன்

2. உன் கனவை நெஞ்சில் தாங்கி
என் ஜீவன் வாழும் போது
உலகினர் காண்பதுன் அருளல்லவா
நான் உன்னில் இணைய வேண்டும்
நீ என்னில் நிறைய வேண்டும்
உணர்வோடு கலப்பது அழகல்லவா
தாய் தந்தையாகும் இறைவனே
என் பெயரை உந்தன் கையில் தாங்குமே
நீ தந்த புவி வாழ்வில் திருத்தூதனாய்
எனை ஏற்றிட திருவடிகளில் சரணாகின்றேன்

## 179 காற்றோடு கரையும் தீபங்கள்
கண்ணீரில் நனையும் கோலங்கள்
எந்நாளும் என் நெஞ்சில் உன் எண்ணம்
இந்நேரம் உனக்காக ஒரு பாடல்
என் தேவா கேளாயோ
நான் பாடும் ஜீவ இராகம்

1. உனது ஆலய பீடங்களில்
தினம் தினம் நான் மலர்ந்தேன்
உனது மண்டபத்தின் வாயில்கள் காணாமல்
என் பாடல் ஓயாது
நாளும் உனது நினைவில் நானும்

2. எங்கெங்கு காணினும் உன் முகமே
என் மனமே கண்ணுறங்கு
உனது நினைவென்னும் நதி தன்னில்
நாள்தோறும் வருகின்ற ஓடம்போல்
அன்பே நானும் எந்நாளும் வாழ்வேன்

## 180 கிறிஸ்துவின் அன்பினின்று
நம்மை பிரிப்பவர் யார் - 2

1. வானத்தின் தலைமை தூதர்களோ
வல்லமை வலிமைமிக்கவரோ
வானத்தில் உள்ள வேறெதுவோ
வாக்கினில் வந்த படைப்புகளோ

2. வாட்டிடும் வயிற்றுப் பெரும் பசியோ
வாழ்வினை முடிக்கும் கொடும் வாளோ
ஆட்டிடும் உலகின் இடர்பலவோ
அதிர்ச்சியை அளிக்கும் மரணங்களோ

3. வாழ்வினில் கண்டிடும் வேதனையோ
வறுமையில் வந்திடும் சோதனையோ
தாழ்வினைத் தந்திடும் கலாபனையோ
தருக்கரின் அதிமிகு நெருக்கடியோ

## 181 சம்மதமே இறைவா சம்மதமே தலைவா

உன்மாலையிலே ஒரு மலராகவும்
பாலையிலே சிறு மணலாகவும்
வாழ்ந்திட சம்மதமே இறைவா மாறிட சம்மதமே

1. தயங்கும் மனதுடைய - நான்
உனக்காகவே உன் பணிக்காகவே
வாழ்ந்திட வரம் தருவாய்
கருவாக எனைப் படைத்து - உயர்
கண்மணியாய் என்னை வளர்த்து
கரமதிலே உருபதித்து கருத்துடனே என்னைக் காக்கின்றாய்

2. மலையாய் நான் கணித்த - பெரும்
காரியமும் உயர் காவியமும் மறைந்தே போனது
திருவாக உனை நினைத்து - உயிர்
உறவாகவே நெஞ்சில் பதித்து
உன் பெயரைச் சாற்றிடவே - நலம்
தரவே என்னை அணைக்கின்றாய்

3. உறவாய் நான் வளர்த்த - உயர்
பாசங்களும் உணர் பந்தங்களும்
உடைந்தே போனது
உனக்காகத் தினம் வாழ்ந்து - உண்மை
தியாகத்திலே என்றும் வளர்ந்து
பிறர் சுமைகள் சுமந்திடவே
கரம் பிடித்து என்னை வழிநடத்தும்

## 182 சீயோனில் இறைவா உமக்கு பாடல்

இசைப்பது தகுதியே - அங்கு
பொருத்தனைகள் செலுத்துவதும்
தகுதியே - என்றும் தகுதியே

1. மண்ணுலகை தேடிவந்தீர் - அதற்கு நிறைய மழை கொடுத்தீர்
ஆறுகள் நிரம்பச் செய்தீர் தானியங்கள் விளையச் செய்தீர்
படைசால்கள் எல்லாம் தண்ணீர் ஓடச்செய்தீர்
மண்ணை பரம்படித்து மழையால் மிருதுவாக்கினீர்

2. முளைத்து வரும் விதையை ஆசிர்வதித்து காக்கின்றீர்
ஆண்டு முழுவதையும் கருணையாலே நிரப்புகின்றீர்
நீர் செல்லும் இடத்தில் செழுமை சிந்துதே
தாமே மேய்ச்சல் நிலம் பொறுமை கொண்டு விளங்குதே

## 183 தனிமையில் இனி நான் இல்லை

தலைவன் இருக்கின்றார்
தரணி அழியும் காலம் வரையில்
தலைவன் துணை இருப்பான் - தேவன்
அருகில் துணை இருப்பான்

1. தேடி வைத்த செல்வம் யாவும் தேய்ந்து போய் விடுமே
நாடி நின்ற சுகங்கள் எல்லாம் நலிவு கண்டிடுமே
கூடி வந்த உறவும் கூட கலைந்து சென்றிடுமே
தேவன் நீ என்றும் அருகில் இருப்பாயே
தேடும் எனக்கு வாழ்வில் என்றும்
துணையை அருள்வாயே

2. இம்மை முழுதும் கொஞ்சும் அழகு
என்னை புன்னகைக்கும்
தன்னைக் கருதா நண்பர் உறவு என்னை கரம்பிடிக்கும்
நம்பும் நல்ல கொள்கை என்றும் நெஞ்சில் உரமளிக்கும்
தேவன் நீ என்றும். . . .

## 184 தாய்க்கு அன்பு வற்றி போகுமா

தனது பிள்ளையை அவள் மறப்பாளோ
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயவுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே

1. குன்றுகூட அசைந்து போகலாம்
குகைகள் கூட பெயர்ந்து போகலாம்
அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே
அசைவதில்லை பெயர்வதில்லையே

2. முளைத்து வரும் விதையை ஆசிர்வதித்து காக்கின்றீர்
ஆண்டு முழுவதையும் கருணையாலே நிரப்புகின்றீர்
நீர் செல்லும் இடத்தில் செழுமை சிந்துதே
தாமே மேய்ச்சல் நிலம் பொறுமை கொண்டு விளங்குதே

## 183 தனிமையில் இனி நான் இல்லை

தலைவன் இருக்கின்றார்
தரணி அழியும் காலம் வரையில்
தலைவன் துணை இருப்பான் - தேவன்
அருகில் துணை இருப்பான்

1. தேடி வைத்த செல்வம் யாவும் தேய்ந்து போய் விடுமே
நாடி நின்ற சுகங்கள் எல்லாம் நலிவு கண்டிடுமே
கூடி வந்த உறவும் கூட கலைந்து சென்றிடுமே
தேவன் நீ என்றும் அருகில் இருப்பாயே
தேடும் எனக்கு வாழ்வில் என்றும்
துணையை அருள்வாயே

2. இம்மை முழுதும் கொஞ்சும் அழகு
என்னை புன்னகைக்கும்
தன்னைக் கருதா நண்பர் உறவு என்னை கரம்பிடிக்கும்
நம்பும் நல்ல கொள்கை என்றும் நெஞ்சில் உரமளிக்கும்
தேவன் நீ என்றும். . . .

## 184 தாய்க்கு அன்பு வற்றி போகுமா

தனது பிள்ளையை அவள் மறப்பாளோ
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயவுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே

1. குன்றுகூட அசைந்து போகலாம்
குகைகள் கூட பெயர்ந்து போகலாம்
அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே
அசைவதில்லை பெயர்வதில்லையே

2. தீ நடுவே நீ நடந்தாலும்
ஆழ்கடலை தான் கடந்தாலும்
தீமை ஏதும் நிகழ்வதில்லையே
தீதின்றியே காத்திடுவேன் நான்

**185** **திரு நாம கீர்த்தனம் பாடாத நாவும்**
இருந்தென்ன பயனோ நாதா
இறைவா உன் அன்பிற்கு சாட்சி சொல்லாத
உதடுகள் எனக்கேன் நாதா
நான் வாழ்வதும் எதற்கோ தேவா

1. புலர்ந்திடும் நன்னாளைப் பாடியே அறிவிக்கும்
குயிலுடன் சேர்ந்து நான் உமைப் பாடுவேன்
நதியதன் அலைபாயும் சங்கீதம் மீட்டும்
குளிர்காற்றில் இணைந்தும்மைத் துதிப்பேன்

2. அந்திமத் தீர்ப்பு நாள் விரைவில் வருமென்று
ஆவலாய் யாவரும் நோக்குகின்றோம்
வான மேகங்களில் நீர் வரும் அந்நாளில்
வானோர்களோடும்மைப் புகழ்வேன்

**186** **தெய்வம் நமது தாயும் தந்தையாம்**
வையம் நமது அன்னை இல்லமாம்
வாழும் நாமெல்லாம் ஒரே குடும்பமாம் - 2
ஆளுவோம் உலகையே அன்பின் சக்தியால்
தெய்வ அன்பின் சக்தியால்

1. அழகிய உலகினில் அருமையாய் நாமெல்லாம்
வாழும் நாளில் அன்பு வேத கீதம் இசைப்போம்
ஒருவரை ஒருவர் மதித்திங்கு வாழ்ந்து
ஒருமைப்பாடு நெறியில் நின்று பெருமை பாடுவோம்
உறவு ஒன்றுதான் உலகை இயக்குமே - அந்த
உண்மை உணர்ந்து நாம் உறவில் வளருவோம்

2. மத இன சாதியின் அடிமைகள் நாமில்லை
மாண்புநிறை நேயத்தாலே மனிதம் உயர்த்துவோம்
நீதியும் நேர்மையும் தூய்மையும் வாய்மையும்
வாழ்வுப் பயண வழித் துணையாய் நாளும் கொள்ளுவோம்
உறவு ஒன்றுதான் உலகை இயக்குமே - அந்த
உண்மை உணர்ந்து நாம் உறவில் வளருவோம்

**187** **நான் தேடும் தெய்வம் இன்று என்னில் வாழ்கிறார்**
என் வாழ்வின் வசந்த காலம் தோன்ற செய்கிறார்
வானங்களே மேகங்களே கொஞ்சம் வாங்களே
என்னோடு வாழ்வின் கீதம் பாடுங்களே

1. வாழ்வே சிறு கதையே வாய்மை அதன் நெறியே
வாழும் வழியைக் காட்டி தேவன் உதவி புரிகிறார்
வாக்களித்த நாட்டிற்கென்னை அழைத்துச் செல்கிறார்
தாயாகும் தெய்வம் தாழ்பற்றி நிற்பேன்
தன் தோளில் சுமந்தென்னை கரை சேர்ப்பாரே

2. ஜீவன் தரும் தெய்வம் தாகம் போக்கி காப்பார்
அரணும் துணையுமான தேவன் கருணை காட்டுவார்
வாழ்வும் வழியுமான தலைவன் வழி நடத்துவார்
இனி இல்லை துன்பம் எந்நாளும் இன்பம்
எனை நாளும் காப்பார் என் ஆயன் தெய்வம்

**188** **நான் மீட்டும் இராகம் உனக்காகத்தானே**
உன்னன்பை பாடிடத்தான்
எங்கே நீ என்னன்பே உனைப்பாடத் துடிக்கின்றேன்

1. காற்றினில் அசையும் நாணல்களில் - உன்
அசைவினை நான் காண்கின்றேன்
கடலினில் வீசும் அலைகளிலே - உன்
தரிசனம் பெறுகின்றேன்
பூக்களும் கவிதைகள் கூறுமோ உன் புகழ் சொல்லுமோ
உனக்காய் ஏங்கும் என் மனதை குயில்கள் பாடுமோ
உன்னோடு நான் வாழும் நன்னாளை எதிர்நோக்கி
என்னுயிரே ஆசைதீர பாடுவேன்

2. உனக்கென வாழும் ஒவ்வொரு பொழுதும்
உயிருடன் நான் வாழ்கிறேன்
உறவினை வளர்க்கும் உணர்வினை பெற்றே
உயர்வினை அடைகின்றேன்
என்னுயிர் நீயே எண்ணுகிறேன் எந்தன் ஆருயிரே
தோன்றிடும் நினைவில் உன்னுருவை என்றும் தாங்குவேன்
நிதம் உம் கரம்பற்றி எங்கும் நடந்திடவே
என் ஜீவனே ஆசைதீர பாடுவேன்

**189** **நினைவெல்லாம் நீ தானே என் இயேசுவே**
நிறைவெல்லாம் உனில்தானே என் நாதனே
என் பாட்டில் சுவையுண்டு நீ இணைந்தாலே
என் வீட்டில் மகிழ்வுண்டு நீ வாழ்ந்தாலே

1. வானம் மழை பொழியும் - அது உன் சொல்லாலே
பூமி வளம் காணும் - அது உன் அருளாலே
வாழ்விக்கும் தெய்வம் நீ இருப்பதனாலே
வாழ்ந்திடும் என்னுயிர்க்கு குறையில்லையே
காற்றே கடலே கவிதைகள் புனைந்து
படைத்தவன் அழகைப் புகழ்க
நாற்றே தளிரே அசையும் இனமே
நடனங்கள் ஆடியே மகிழ்க

2. நீ காட்டும் அன்புக்கு - எல்லை அது இல்லை
நீ கொண்ட பாசம் - என் வாழ்வைத் தேற்றும்
நீ இல்லா மனங்களிலே எத்தனையோ தொல்லை
நிலையான வாழ்வுக்கு நீ தானே எல்லை
அன்பே ஆருயிர் செல்வமே உந்தன்
அறிவில் என்னைச் சேர்ப்பாய்
அல்லும் பகலும் உந்தன் நினைவை
அடியேன் நெஞ்சில் தருவாய்

## 190 நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு

நிலையானதொன்றும் இங்கில்லை
நேற்றும் இன்றும் என்றும் மாறாத தெய்வம்
நீ மட்டும் போதும் எப்போதும்
நீ மட்டும் போதும் நீ மட்டும் போதும்
நீ மட்டும் போதும் எப்போதும்

1. ஆசையிலே பிறந்து ஆணவத்தில் தொடர்ந்து
ஆடி இங்கு அடங்குது வாழ்க்கை
வாழ்வு தரும் வார்த்தை வாழ்க்கைதனை வளர்த்தால்
வசந்தம் வந்து நம்மில் என்றும் தங்கும்
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் - 2
நீ மட்டும் போதும் எப்போதும்

2. பொய்மையிலே விழுந்து போலியாக நடந்து
பொழுதிங்கு போகுது கழிந்து
உண்மைதனை உணர்ந்து உறுதியுடன் எழுந்தால்
ஊதியங்கள் தேவையில்லை நமக்கு
நீ மட்டும் போதும் என்வாழ்வு மாறும் - 2
நீ மட்டும் போதும் எப்போதும்

## 191 நீ இல்லாத உள்ளம் ஓர் பாலைவனம்

எந்நாளும் உனக்காக ஏங்கும் மனம்
இறைவா இறைவா இறைவா இறைவா

1. மழையாக வந்தும் மனம் மீது நின்றும்
நனையாத நிலமாகினேன்
ஒளியாக நிறைந்தும் வாழ்வோடு இணைந்தும்
விடிவில்லா இரவாகினேன்
உயிரூட்டும் அருள்மேகம் எனைச் சூளுமோ
வாழ்வேற்றும் ஒளி வெள்ளம் எனை ஆளுமோ
இறைவா . . .

2. கண்ணீரில் மூழ்கி போராடும் நிலை போல்
தவிக்கின்றேன் உனைத் தேடியே

போர் வந்த காலம் துடிக்கின்ற புழுப்போல்
அழுகின்றேன் துணை நாடியே
எதனாலும் நிறையாத வெறுமை இது - உன்
அருளின்றி துயிலாத இதயம் இது
இறைவா . . . .

**192** **நீ எந்தன் பாறை என் அரணான இயேசுவே**
நீ எந்தன் உள்ளத்தின் அணையாத தீபமே
அணையாத தீபமே இயேசுவே இயேசுவே

1. ஒளி கொண்டு தேடினால் இருள் நில்லுமோ
உன் துணையில் வாழ்கையில் துயர் வெல்லுமோ
தடைகோடி வரலாம் உள்ளம் தவித்தோடி விடலாம்
ஆனாலும் உன் வார்த்தை உண்டு - எது
போனாலும் உனில் தஞ்சம் உண்டு
இயேசுவே இயேசுவே

2. இரவுக்கும் எல்லை ஓர் விடியல் அன்றோ
முடிவாக வெல்லுவதும் நன்மை அன்றோ
தளராது வாழ்வோம் அருள் அணையாது காப்போம்
என்றென்றும் உன் ஆசிர் கொண்டு - வரும்
நல்வாழ்வை கண்முன்னே கண்டு
இயேசுவே இயேசுவே

**193** **நீ ஒருவன் மட்டும் இயேசுவே**
என்னை விட்டு நீங்காதிருப்பது ஏனோ
தெய்வீக அன்பால் தானோ

1. என்னைப் பாடி மகிழ்வித்த புள்ளினங்கள் - தங்கள்
கூடுகள் தேடி பறந்த பின்னும் - நான்
வாழ்ந்த காலத்து நண்பர் எல்லாம் - நான்
தாழ்ந்த காலத்து பிரிந்த பின்னும்

2. எந்தன் மேனி தழுவிய இளந்தென்றல் - சொந்த
தாய் கட்லோடு கலந்த பின்னும் - எந்தன்
பாதையின் விளக்காம் பகலவனும் - வந்த
காரிருள் மாயையால் மறந்த பின்னும்

**194** **நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்**
நீ வழியாகும் என் வாழ்வுக்கு துணையாகும்
அரணும் நீயே கோட்டையும் நீயே
அன்பனும் நீயே நண்பனும் நீயே
இறைவனும் நீயே

1. நீ வரும் நாளில் அமைதிவரும் - உன்
நீதியும் அருளும் சுமந்து வரும்
இரவின் இருளிலும் பயம் விலகும் - உன்
கரத்தின் வலிமையில் உயர்வு வரும்
கால்களும் இடறி வீழ்வதில்லை
தோள்களும் சுமையாய் சாய்வதில்லை - என்
ஆற்றலும் வலிமையும் நீயாக

2. விடியலைத் தேடிடும் விழிகளிலே - புது
விளக்கினை ஏற்றிடும் பேரொளி நீ
பால் நினைந்தூட்டும் தாயும் நீ - என்
பாழ்வெளிப் பயணத்தின் பாதையும் நீ
அருவிக்கு நடத்திடும் ஆயனும் நீ
அகமனம் அமர்ந்தென்னை ஆள்பவன் நீ - என்
மீட்பரும் நேசரும் நீயாகும்

**195** **நீதானே என் கீதம் இறைவா - உன்**
நினைவே என் சங்கீதம் தலைவா
நிறைவாழ்வு நான் காண வரம் வேண்டுமே - இனி
நிதம் எந்தன் வாழ்வு உம் பணிக்காகவே

1. ஒரு கோடி மலருண்டு உன் தாளிலே - அதில்
ஒரு பூவாய் இணைந்தாலே மணம் வீசுமே
எழிலான சுரம் கோடி உன் யாழிலே - அதில்
நரம்பாக இணைந்தாலே மனம் பாடுமே

2. அழகான கனவொன்று என் நெஞ்சிலே - அது
அன்பாலே நிறைகின்ற உலகாகுமே
இதற்காகத் தானே நீ மனுவாகினாய் - இன்று
என் வாழ்வை அதற்காகப் பலியாக்கினேன்

## 196 நீயே எமது வழி நீயே எமது ஒளி
நீயே எமது வாழ்வு இயேசையா

1. நான்கு திசையும் பாதைகள் சந்திக்கின்ற வேளைகள்
நன்மையென்ன தீமையென்ன அறியாத கோலங்கள்
நீயே எங்கள் வழியாவாய்
நீதியின் பாதையின் பொருளாவாய்
உமது பாதப் பதிவுகள் எமது வாழ்வின் தெரிவுகள்
அவற்றில் நாம் நடந்தால் வெற்றியின் கனிகள்

2. துன்ப துயர நிகழ்வுகள் இருளின் ஆட்சிக் காலங்கள்
தட்டுத் தடுமாறி விழ தகுமான சூழல்கள்
நீயே எங்கள் ஒளியாவாய் நீதியின் பாதையின் சுடராவாய்
உண்மை நாங்கள் போற்றிட பொய்மை எங்கும் போக்கிட
உண்மையின் இறைவா உமதருள் தாரும்

## 197 இயேசுவே நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் என் வாழ்வின் மையம்
ஆ . . . . . .
நீதானே இறைவா நிலையான சொந்தம்
உனையன்றி உலகில் எனக்கேது பந்தம்
உன்னருள் ஒன்றே எனக்கு தஞ்சம்
உனை என்றும் பிரியாது ஏழை என் நெஞ்சம்
நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் வாழ்வின் மையம்

1. கொடியோடு இணைந்துள்ள கிளை போலவே
உன்னோடு ஒன்றாகும் அருள் வேண்டுமே
கனிதந்து என் வாழ்வு செழிப்பாக்குமே
வருவாயே தலைவா என் உயிர்மூச்சிலே - 2

2. நிலைவாழ்வு தருகின்ற வார்த்தைகளோ
இறைமைந்தன் உன்னிடமே இருக்கின்றன
நானெங்கு போவது உனைப்பிரிந்து
வாழ்வெல்லாம் வருவேன் உனைதொடர்ந்து - 2

## 198 நெஞ்சே நீ போற்றிடு நேசமுள்ள ஆண்டவரை

நெஞ்சே நீ போற்றிடு நேசமுள்ள ஆண்டவரை - 2

1. விண்ணும் மண்ணும் இணைந்தது அவரால்
காற்றும் கடலும் வந்தது அவரால்
வீசும் தென்றலும் பொழிந்திடும் மழையும்
புலர்ந்திடும் யாவும் புகழ்மிகு அவரால்
நம்பிக்கைப் பிறழா ஆண்டவர் அவரே - 2

2. ஒடுக்கப்பட்டோர்கள் உயர்வினைக் காண்பர்
பசித்திருப்போர்கள் வாழ்வினைப் பெறுவர்
சிறையிலிருப்பவர் விடுதலை அடைவர்
பார்வையற்றோர்கள் ஒளி பெறுவர்
வாழ்ந்திடும் இறைவனின் கருணையினால் - 2

## 199 நேசிக்கிறேன் நேசிக்கிறேன்

தேவனே உம்மை நேசிக்கிறேன்
முழு உள்ளத்தோடு முழு ஆன்மாவோடு
முழு மனதோடு முழு பெலத்தோடு

1. தேடுகிறேன் உம்மை தேடுகிறேன்
தேவாதி தேவனை தேடுகிறேன்
பாடுகிறேன் உம்மைப்பாடுகிறேன்
பரவசத்தோடு பாடுகிறேன்

2. துதிக்கின்றேன் உம்மைத் துதிக்கின்றேன்
தூயவர் உம்மைத் துதிக்கின்றேன்
போற்றுகிறேன் உம்மை போற்றுகிறேன்
பரிசுத்த உள்ளத்தோடு போற்றுகிறேன்

3. புகழ்கின்றேன் உம்மைப் புகழ்கின்றேன்
உண்மை உள்ளத்தோடு புகழ்கின்றேன்
வாழ்த்துகிறேன் உம்மை வாழ்த்துகிறேன்
வல்லவர் உம்மை வாழ்த்துகிறேன்

## 200 பயணம் ஒன்றாய் போகின்றோம்
பாதை முழுதும் கீதங்கள்

1. தலைவன் இயேசு வழியிலே தலைநிமிர்ந்து நடக்கின்றோம்
மலைகள்போல் தடைவந்தும் மலைத்திடாமல் கடக்கின்றோம்

2. சுமைசுமந்திடும் தோள்களும் சுகம்மறந்த கால்களும்
உறவில் இணைந்த மனங்களும்
உரிமை கேட்டுப் போகின்றோம்

3. ஒடுக்கப்பட்டோர் தளைகளை
உடைத்தெறியப் போகின்றோம்
விடுதலை என்னும் கனவினை
விடியச் செய்யப் போகின்றோம்

## 201 படைப்புகளே நம் ஆண்டவரை
பாடுங்களே நீங்கள் பாடுங்களே
அருஞ்செயல் எனக்கு அவர் செய்தார்
ஆனந்தமே என்னில் ஆனந்தமே

1. அன்பீந்தார் அருளீந்தார்
பண்பும் பணிவும் அவரளித்தார்
யார் என்னைக் கைவிடினும்
ஆண்டவர் என்னை காக்கின்றார் - ஆஹா
இறைவனின் அன்பினுக்கு - இந்த
உலகினில் உவமையுண்டோ

2. நான் அவரை மறந்தாலும்
அவரே என்னைக் காக்கின்றார்
விசுவாசம் தளர்ந்தாலும்
வேதனை நெஞ்சில் நீக்குகின்றார் - ஆஹா . . .

## 202 பயன்படுத்தும் இறைவா
பதரான என்னைப் பயனுள்ள கருவியாய்
பயன்படுத்தும் இறைவா

1. எனது கரங்கள் உம் பணி புரிய
எனது கால்கள் உம் வழி செல்ல
எனது கண்கள் உம்மைப் போல் பார்க்க
எனது நாவும் உம் புகழ் பாட

2. எனது செவிகள் உம் மொழி கேட்க
எனது மனமும் உம்மையே காட்ட
எனது மனமும் உம்மையே நினைக்க
எனது இதயம் உம்மில் களிக்க

3. எனது இன்பம் பிறர்க்கு நிறைவாய்
எனது வாழ்வு பிறர்க்கு ஒளியாய்
எனது சாவு பிறர்க்கு வாழ்வாய்
எனது சாவு பிறர்க்கு வாழ்வாய்

## 203

**பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர்**
பண்பட்ட நிலம் போல் பலன் கொடுப்பீர்
வழியோரமா நான் கற்பாறையா
முட்புதரா நான் நல்ல நிலமா

1. இறைவனின் வார்த்தை விதையாகும்
அறியா உள்ளம் வழியோரம்
பறவைகள் விரைந்து தின்பதுபோல்
பகைவனாம் தீயோன் பறித்திடுவான்

2. மண்ணில்லா பாறை நிலமாகும்
மனதினில் நிலையற்ற மனிதர்களே
வேரற்ற வாழ்க்கை வாழ்வதனால்
வெயிலில் வார்த்தைகள் கருகிவிடும்

## 204

**பார்வை பெற வேண்டும் - நான்**
பார்வை பெற வேண்டும் - என்
உள்ளம் உன் ஒளி பெற வேண்டும் - புதுப்
பார்வை பெற வேண்டும் - நான்
பார்வை பெற வேண்டும்

1. வாழ்வின் தடைகளை தாண்டி எழும் - புதுப்
பார்வை பெற வேண்டும்
நாளும் பிறக்கும் உன் வழியை
காணும் பார்வை தரவேண்டும்
உன்னாலே எல்லாமுமே
ஆகும் நிலை வேண்டும் - நான்
பார்வை பெற வேண்டும்

2. நீதி நேர்மை உணர்வுகளை - நான்
பார்க்கும் வரம் வேண்டும்
உண்மை அன்பு உயர்ந்திடவே
உழைக்கும் உறுதி தரவேண்டும்
எல்லோரும் ஒன்றாகவே
வாழ வழி வேண்டும் - நான்
பார்வை பெற வேண்டும்

**205**

**பேறுபெற்றோர் பேறுபெற்றோர்**
யேசுவில் வாழ்பவர் பேறுபெற்றோர்
வழியும் ஒளியும் உண்மை யுமாய்
ஒளிரும் கிறிஸ்துவின் **பிள்ளைகளே**

1. ஏழைகளே பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களதே
துயருறுவோர் பேறுபெற்றோர்
ஏனெனில் ஆறுதல் அடைந்திடுவர்
சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர்
மண்ணுலகு அவர்கள் உரிமையாகும்
நீதியின்பால் பசிதாகமுள்ளோர்
பேறுபெற்றோராய் நிறைவடைவர்

2. இரக்கம் உடையவர் பேறுபெற்றோர்
இரக்கம் அவர்களின் அடைக்கலமே
தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்
அவர்கள் காண்பர் கடவுளையே

சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்
ஏனெனில் அவர்கள் இறைமக்களே
நீதியினிமித்தம் துயருறுவோர்
பேறுபெற்றோர் விண்ணும் அவர்களதே

## 206 போற்றுவேன் ஆண்டவர் உம்மை

மனதாரப் போற்றிடுவேன் - நான்
மாட்சிமை நிறைந்த மன்னவன் நீ
ஆட்சியும் அரசும் உள்ளவன் நீ

1. பாலகனின் மழலையிலும் குழந்தைகளின் மொழியினிலும்
உந்தன் வலிமையும் உறுதியும் உண்டு
தீயவரின் தோல்வியிலும் பகைவர்களின் வீழ்ச்சியிலும்
உந்தன் நேர்மையும் நீதியும் உண்டு

2. வானத்திலே வெண்ணிலவை விண்மீன்களை அமைத்தீரே
மனிதனுக்காக அமைத்தீரே
பூமியிலே பறவைகளை விலங்கினத்தை படைத்தீரே
மனிதன் ஆண்டிட அழைத்தீரே

## 207 மகிழ்ச்சியினால் பாடுவாய்

ஏனெனில் ஆண்டவர் உன் நடுவிலே
மேன்மையோடு விளங்குகின்றார்

1. ஆண்டவர் தாமே என் மீட்பராவார்
அவர் மேல் நம்பிக்கை வைக்கின்றேன்
ஆண்டவரே என் வலிமையாவார்
அவரையே நான் என்றும் பாடிடுவேன்
ஏனெனில் ஆண்டவர் எனக்கு என்றும்
மீட்பராய் விளங்குகின்றார்

2. ஆண்டவரை என்றும் போற்றிடுங்கள்
அவர் பெயரை என்றும் புகழ்ந்திடுங்கள்
ஆண்டவர் அவர் என சாற்றிடுங்கள்
அவருக்கு நன்றி கூறிடுங்கள்
ஏனெனில் வியத்தகு செயல் பலவும்
செய்துனை மீட்டவராம்

3. மகிமைக்குரிய பல செயல்களையும்
மாட்சிமையுடனே செய்தவராம்
மக்கள் இஸ்ராயேலின் மன்னவரை
மன மகிழ்வுடனே பாடிடுங்கள்
ஏனெனில் பரிசுத்தர் உன் நடுவில்
மேன்மையோடு விளங்குகின்றார்

**208** **மனிதம் மலர்ந்திட வேண்டும் - மனித**
மாண்புகள் உயர்ந்திட வேண்டும்
இறைமையின் சாயலே மனிதம் - அதன்
நிறைவினில் இறைமை மலருமே

1. உயர்ந்தவன் தாழ்ந்தவன் வேற்றுமை ஒழிந்தால்
மனிதம் நிறைவாகும்
சமத்துவம் மலரும் சரித்திரம் படைத்தால்
இறைமைப் புலனாகும்
ஏழ்மையும் துன்பமும் இங்கு உண்டு
எழுவோம் இணைவோம் அன்பு கொண்டு
துன்பத்தில் துணையாய் இன்பத்தில் இணையாய்
மனிதம் மலர்ந்திட மனம் திறப்போம்

2. வறுமையில் வாழ்வோர் விழிநீர் துடைத்தால்
மனிதம் நிறைவாகும்
இறைமொழி கேட்டு இருப்பதைப் பகிர்ந்தால்
இறைமைப் புலனாகும்
உண்மையும் நீதியும் ஒளிரட்டுமே
பரிவும் பாசமும் மிளிரட்டுமே
வேதங்கள் எல்லாம் வீதியில் வந்து
மனிதம் மலர்ந்திட மாறட்டுமே

**209** **முடிவில்லாதது**
அன்பே அன்பே அன்பே அன்பே
முடிவில்லாதது

1. அன்பு பொறுமை உள்ளது அன்பு பரிவு உள்ளது
அன்பு அழுக்காறு கொள்ளாது அன்பு பெருமை பேசாது

2. அன்பு இறுமாப்பு அடையாது அன்பு இழிவை செய்யாது
அன்பு தன்னலம் தேடாது அன்பு சீற்றம் கொள்ளாது

3. அன்பு நல்லெண்ணம் இழப்பதில்லை
அன்பு நம்பிக்கை தளர்வதில்லை
அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்
அன்பு என்றும் முடிவுறாது

## 210 யாரிடம் செல்வோம் இறைவா

வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உன்னிடம் அன்றோ உள்ளன

1. அலைமோதும் உலகினிலே ஆறுதல் நீ தர வேண்டும்
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ ஆதரித்தே அரவணைப்பாய்

2. மனதினிலே போராட்டம் மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம் குவலயம் தான் இணைவதெப்போ

3. வேரறுந்த மரங்களிலே விளைந்திருக்கு மலர்களைப் போல்
உலகிருக்கும் நிலைகண்டு உனது மனம் இரங்காதோ

## 211 யாக்கோபின் இறைவனைப் புகழ்ந்திடுங்கள்

நம் மீட்பின் கருவியவர்
யாழினால் அவரது புகழ் பாடுங்கள் - எங்கும்
அவரின் பெயர் விளங்க - 2

1. நீதியும் நேர்மையும் என்றும் அவரது விருப்பமாமே
வானமும் பூமியும் எங்கும் அவர் அருளால் நிறைந்துள்ளது
பூவுலகெல்லாமே புவி மாந்தர் அனைவருமே
இறைவனின் கைவண்ணமே - 2

2. தேவனின் திருப்பெயர் என்றும் மகிழ்வு தருகின்றது
இறைவனின் இரக்கம் எங்கும் அரணாய் இருக்கின்றது
அவரில் நம்பிக்கைக் கொள்வோர் யாவரும்
வெற்றியைப் பெறுகின்றனர் - 2

**212** **வான்படைகளின் தேவன் உமக்கு நன்றி கூறிடுவே**
நான் வணங்கும் தேவன் உமக்கு கீதம் பாடிடுவே
உமது இல்லம் என்றும் எத்துணை அருமையானது
எமது செல்வம் நாளும் பொழுதும் உன்னில் வாழ்வ

1. உமது ஆலய முற்றம் தேடி சோர்ந்து வாடும் என் ஆன்ப
எனது உள்ளமும் உடலும் இன்று சோர்ந்து பாடும் என் தே
உமது இல்லம் தங்கி வாழ்வோர் பேறு பெற்றோர் நாளும்
எந்த நாளும் உம்மைப் புகழ்ந்தால் இன்ப வாழ்வு கூடும்

2. உனது பார்வை என்னில் விழுந்திடும்
திருநாள் கண்டிடத் துடிக்கின்றேன்
எனது கேடயம் நீராய் இருந்து
என்னை காத்திட அழைக்கின்றேன்
உமது ஆலய முற்றங்களில் நான்
ஒருநாள் வாழ்ந்திடத் துடிக்கின்றேன்
ஆயிரம் நாள் வேறிடம் நான் வாழ்வதை விட மேலானது

**213** **விடுதலை இன்று விடியாதோ இறைவா - எங்க**
விலங்குகள் இன்று உடையாதோ தலைவா

1. உலகெல்லாம் நீ படைத்தாய்
உடைமையாய் எல்லோர்க்கும் அளித்தாய்
ஒருசிலரே உண்கின்றார் மிகப் பலரோ வாடுகின்றார்
எல்லோர்க்கும் எல்லாமே ஆகிடவே
இல்லாரே இல்லாத நிலைவேண்டும்

2. உனது சாயலிலே உனைப்போல் பெரும் மாண்பு தந்தாய்
உயர்ந்ததென்று ஜாதியுண்டோ
தாழ்ந்ததென்று குலமுண்டோ - எல்லோரும்
ஒன்றாகும் நிலை வேண்டும்
பொல்லாத ஜாதிகள் ஒழிய வேண்டும்

3. ஆண் பெண் இணையாக வாழும் அழகொன்று தந்தா
பெண்ணடிமை கொடுமையன்றோ
பேய் தனத்தின் செயலுமன்றோ
ஆணோடு பெண்ணுக்கு சம நிலையே
அதனாலே உண்டாகும் உயர் நிலையே

## 214 அர்ப்பண மலராய் வந்தேன்
அர்ச்சனை ஆக்கினேன் என்னை - 2
மணமில்லாத மலரானாலும் இதழ்வாடியே போனாலும்- 2
வேள்வியில் சேர்த்துக்கொள்வாய் - அந்த
ஜோதியில் நிறைவு கொள்வேன் - 2
ஆ . . . ஆ . . . ஆ . . .

1. கோதுமை மணியாய் மடிந்து என்னை வெண்ணிற அப்பமாய் தந்தேன்
என்னுடல் உன்னுடலாகிடவே உன்னுடலாய் நான் மாறிடவே
மகிழ்வுடன் தந்தேனே - என்னை கனிவுடன் ஏற்பாயே
ஆ . . . ஆ . . . ஆ . . .

2. விதியென்னும் சகதியில் சாய்ந்தேன் - புவி
அதிபதி உன் திட்டம் மறந்தேன் (2)
மதியில்லாதவன் ஆனாலும் விதியிழந்தே நான் போனாலும்
சுதியுடன் சேர்த்துக்கொள்வாய் - நான் ஜதியுடன் பாட்டிசைப்பேன் (2)
ஆ . . ஆ . . . ஆ . . .

## 215 அர்ப்பணம் அர்ப்பணம் அர்ப்பணமே
நிதமும் நிதமும் அர்ப்பணமே
இயேசுவே எம்மையே முழுதும்
உமக்கே அர்ப்பணமே

1. பணி வாழ்வு பயணத் தடைகளை
பணிவோடு உன் பாதம் படைக்கின்றோம் } 2
திக்கற்றோர் வாழ்வில் திசையாய் நின்றிட
தினமும் தருகின்றோம் - எம்மை உமக்கே தருகின்றோம் - 2

2. உயர்வு தாழ்வு நீங்கிட உன்னத பணிக்காய் தருகின்றோம்
உமது வாழ்வின் சாட்சியாய் வாழ்ந்திட
உவந்து தருகின்றோம் - எம்மை உமக்கே தருகின்றோம்

**216** **அர்ப்பண வாழ்வுக்காய் - நான்**
என்னையே முழுவதும்
அர்ச்சனையாக்குகின்றேன் என் இறைவா
ஏற்றுக்கொள்ளுமே உம் பலிப்பொருளாய் எனை முழுது
கையளித்தேன் உன்பதமே

1. கல்லென்ன முள்ளென்ன காடென்ன
மேடென்ன எல்லாம் கடந்திட
பொன்னென்ன பொருளென்ன என்னென்ன
இடரென்ன எல்லாம் பறந்திட
உம்பாதச் சுவடுகளில் நான் என்றும் நடந்துவர
உன் ஜீவ ஒளி தந்து உன்னோடு ஒன்றாக்குமே

2. ஊரென்ன உலகென்ன உறவென்ன
பகையென்ன எல்லாம் ஒன்றாகிட
இரவென்ன பகலென்ன இனமென்ன
மொழியென்ன எல்லாம் நன்றாகிட
உம்பாதச் சுவடுகளில் . . . . . .

**217** **அணையாத சுடராய் உனக்காக எரிய**
அழியாத அன்போடு வந்தேன் - புது
பலியாக நானாகிப் பணிவாழ்வு புரிய
அகலாக என்நெஞ்சம் தந்தேன் - நான்
அகலாக என்நெஞ்சம் தந்தேன்

1. அழகான இதயம் நீ தந்தது அதில்
வழிந்தோடும் மொழியும் உன் அன்பானது - ஆ ஆ
அன்பாகும் அன்பே என் வாழ்வாகிட
இனி எனதான எல்லாமே உன் சொந்தமே

2. எழிலான உலகம் நீ படைத்தது - அதில்
அசைந்தாடும் தென்றல் உன் புகழ் பாடுது - ஆ... ஆ...
தேவா உன் நிலையன்பு எனில் தங்கிட
இனி திசையெங்கும் உன்பாடல் நானாகுவேன்

**218** **அடியோர் யாம் தரும் காணிக்கையை**
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே

1. பாவியென்றெம்மை பாராமல்
பாவத்தின் தீர்வையை அடையாமல்
பரிகாரம் என ஏற்றிடுவாய்
பலியாய் எமை நீ மாற்றிடுவாய்

2. மேலொரு வாழ்வு உண்டு என்று - எம்
மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம்
மேலும் துன்பங்கள் அடைந்தாலும்
மேன்மையின் பலியாய் தருகின்றோம்

**219** **அர்ப்பணப்பூ நானாக உன்னிடம் வந்தேன் - என்னை**
அர்ச்சனையாய் கையளிக்க உன்கரம் தந்தேன்
வாழ்க்கையெனும் நெடியதொரு பயணம் யாவுமே - உந்தன்
வாழ்வு தரும் வார்த்தைகளால் வழி நடத்தவே
பலி தருகின்றேன்

1. கவலைகளால் உருக்குலைந்த உலகம் யாவுமே - உந்தன்
கருணையினால் உருகொடுக்கும் கருவியாக்குமே
காரிருளின் நடுவினிலும் கலங்கரை விளக்காய் - உந்தன்
பேரருளின் பெருந்துணையில் கையளிக்க நான்
பலி தருகின்றேன்

2. நாயகனே உன்னை நம்பி நானிலத்தில் நான் - இன்று
அடியெடுத்து வைக்கின்றேன் வழி நடத்துமே
இலட்சியத்தின் பாதைகளில் இடர்கள் தாண்டி நான் - உந்தன்
இறையரசை பரப்புகின்ற உறுதி வேண்டி நான்
பலி தருகின்றேன்

**220** **அன்புக்கு ஈடாகும் ஏழையென் காணிக்கை எதுவோ -இங்கே**
பலர்வாழ பலியான தேவனுக்கு ஏற்ற பொருள் எதுவோ
பிறர்க்கென தமை தரும் இதயங்களே

வளர்பிறையென எழும் மனிதர்களே
நிஜமான காணிக்கை இது தானே திருவடிதனில்

1. ஆபேலின் காணிக்கை பெரிது அல்ல
உயர்ந்திட்ட உள்ளம் தான் சிறப்பாகும்
காயீனின் காணிக்கை சிறிது அல்ல
தாழ்ந்திட்ட சிறுமனமே இழிவாகும்
விளைந்திட்ட நிறைபலனை எடுத்து வந்தோம்
இறைவா இறைவா இறைவா
தளர்ந்திட்ட வாழ்வினையே தழைத்தோங்க வரமருள்வாய்

2. உடைந்திட்ட உறவுகளை உருப்பெறச் செய்ய
உவப்புடனே தருகின்றோம் எம்சிறு வாழ்வை
சாய்ந்திட்ட மனிதத்தை நிமிர்ந்திடச் செய்ய
சரிநிகர் உலகிற்காய் எமை பயன்படுத்தும்
காண்கின்ற சமுதாயம் வாழ்வை வழங்க
இறைவா இறைவா இறைவா
அர்ப்பணிக்கும் உள்ளமதை அன்போடு ஏற்றருள்வாய்

**221** **அன்போடு வந்தோம் காணிக்கை தந்தோம்**
கனிவோடு ஏற்பாய் ஆண்டவனே - உம்
பலியோடு சேர்ப்பாய் தூயவனே

1. பொன்னான வாழ்வை புடமிட்டு வைத்தோம்
பூவாக மணம் வீச வைத்தோம்
புதிரான வாழ்வே எதிரானதாலே
பொலிவாகச் செய்வாய் ஆண்டவனே - உன்
அருளோடு அணைப்பாய் மாபரனே

2. அருளான வாழ்வு இருளானதாலே
திரியாக எமை ஏற்றி வைத்தோம்
திரியாக கருகி மெழுகாக உருகி
பலியாக வைத்தோம் ஆண்டவனே - புது
ஒளியாக மாற்றும் தூயவனே

## 222

**அன்பிற்கே எம்மை அர்ப்பணித்தோம்**
அனைத்தும் பகிர்ந்தே வாழுவோம்
இதுவே எம் காணிக்கை - 2

1. எமது காணிக்கை உமது ஆவியால் புனிதம் ஆகவேண்டும்
இதனால் அகிலமே மீட்பின் பாதையை
இன்றே காண வேண்டும் (2) - எங்கள்
உழைப்பின் பயன்களும் நிலத்தின் கொடைகளும்
உமக்குப் புகழ் தர உலகம் உயர்ந்திட
எம்மையே பலி தந்தோம்

2. அன்பு புரட்சியே வாழ்வு மலர்ச்சியாய்
மாற்றும் பலியில் இணைந்தோம்
நீதி அமைதியும் மனித நேயமும்
பலியின் பொருளாய் ஏற்றோம் (2) - இந்த
ஆழ்ந்த உணர்வினில் நாளும் இணைந்திட
தாழ்வு நீங்கிட வாழ்வு ஓங்கிட எம்மையே பலி தந்தோம்

## 223

**ஆகட்டும் இறைவா ஆகட்டுமே**
உம் சித்தம் என் வாழ்வில் ஆகட்டுமே
தருகின்றேன் தருகின்றேன்
என்னையே பலியாய்த் தருகின்றேன்

1. கருவில் என்னை அறிந்தவா - உன்
கையில் என் பெயர் வரைந்தவா
உருவில் என்னை உன் சாயலிலே
உண்டாக்கிய என் இறையவா
அறிவும் திறனும் நிறைந்தவா - உம்மைப்
பணிந்த வாழ்வில் தாழ்வுண்டோ

2. உரிமை வாழ்வை நான் பெற
அருமை மகனை பலிதந்தீர்
உவமை இல்லா உம் பேரன்பை
அப்பா அடியேன் பணிகின்றேன்
கருணையே என் இறைவனே - உன்னைச்
சரணடைந்தேன் ஆட்கொள்ளும்

## 224 இதய காணிக்கை இறவாத காணிக்கை

இறை மனித உறவின் சின்னமாம்
அன்பின் காணிக்கை
இறையே இதை ஏற்றிடுவாய்
உனதாய் எனை மாற்றிடுவாய்

1. மேகங்கள் கூடிடவே வான் மழை அருவியாகுமே
உன் அருளுக்கு சான்றாகுமே
இறைவா உனைப்போல் வார்த்தையை வாழ்வாக்கி
வழிகாட்டி சென்றிட வரம் ஒன்று தா

2. எண்ணங்கள் உயர்ந்திடவே உள்ளங்கள் கோயிலாகுமே
நல் வாழ்வு அதன் பரிசாகுமே
கருணா உனைப்போல் மாறாத அன்பினால்
அயலாரை நேசிக்கும் நல் உள்ளம் தா

## 225 இதய நன்றி காணிக்கை

இரக்கம் தந்த பலியிலே
இயேசுவோடு இணைந்து தருகின்றேன்
தந்தையே ஏற்று உந்தன் ஆசீர் அருளுமே

1. தந்தை உன்னை பிரிந்து
தாழ்ந்து நொந்து போனேன்
கன்றை பிரிந்த மான் போல்
தவிதவித்தாயே - என்னைத்
தேடிவந்து சிறுமையுற்று
சிறை மீட்ட கருணையே
இதய நன்றி காணிக்கை இறைவா

2. என்னை கொள்ளை கொண்ட
உந்தன் அன்பில் வாழ்வேன்
எண்ணி எண்ணி உருகி
எல்லோர்க்கும் சொல்வேன் - உந்தன்
தியாகத்தினால் நெஞ்சங்களை
ஈர்த்துக்கொண்ட கருணையே
இதய நன்றி காணிக்கை இறைவா

## 226 இதயம் பாடும் இனிய பாடல்

இறைவா உமக்காக
இகத்தில் வாழும் படைப்பு யாவும்
இறைவா எனக்காக
நினைத்து நினைத்து நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை - என்

1. பூத்துக் குலுங்கும் மலர்களும் - இங்கு
காய்த்துக் கனிந்த கனிகளும்
ஓங்கி வளர்ந்த மரங்களும் - அங்கு
சூழ்ந்து வளர்ந்த செடிகளும்
இயற்கை கூறும் கவிதைகள் - யாவும்
இறைவன் தந்த கொடைகளே
நினைத்தேன் நினைத்தேன் நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை

2. பறந்து திரியும் பறவைகள் - அலை
பாயும் கடல்வாழ் விலங்குகள்
காற்றும் கடலும் கார்முகில் - வான
வில்லும் நிலவும் விண்மீன்களும் - இயற்கை கூறும் . . .

## 227 இதயம் மகிழ்ந்து அளிக்கும் பலியை

இறைவா ஏற்றிடுவாய் - நான்
பலியின் பொருளை உணர்ந்து வாழ
எனையே மாற்றிடுவாய்

1. பொன்னையோ பொருளையோ இறைவா நீ கேட்கவில்லை - தினம்
என்னையே பிறர்க்கென அளிக்க வேண்டுகின்றாய்
என்நலம் தவிர்த்து நான் பணிகள் செய்திடுவேன்
என்னை ஏற்று பலியாக மாற்று

2. ஏழைகள் வாழ்விலே தினம் தினம் துயரமே - என்றும்
அழுதிடும் விழிகளில் நிறைந்த சோகமே
துயரம் போக்க என்னையே பலியாய் தந்திடுவேன்
என்னை ஏற்று பலியாக மாற்று

## 228

**இதோ இதோ என்னைத் தந்தேன் இறைவா**
இதோ இதோ எல்லாம் தந்தேன் தலைவா
பொன்னை தரவா பொருள் தரவா
என்னை தரவா எல்லாம் தருவேன்

1. வான் தரும் உயர் காணிக்கை
மழையாகும் வண்ண மலராகும்
நான் தரும் உயர் காணிக்கை
வாழ்வாகும் அன்பின் மகிழ்வாகும்

2. மண்தரும் உயர் காணிக்கை
வளமாகும் வண்ண பயிராகும்
யாம் தரும் சிறு காணிக்கை
உமை புகழும் எந்தன் உளமாகும்

## 229

**இதோ உமது அடிமை**
இறைவா ஏற்பாய் என்னை

1. எரியா விளக்கு எனை நான் உனக்கு
தந்தேன் ஏற்றிடுவாய்
உன்னொளி துலங்க தன்னையே வழங்கும்
சுடராய் மாற்றிடுவாய்

2. மலராக் கொத்து வாழ்வினைக் கொய்து
தாள்களில் படைக்கின்றேன்
புனிதம் சிந்தும் பூவாய் என்றும்
வாழ்ந்திடும் வரம் கேட்பேன்

## 230

**இயேசுவோடு இணைந்திடு இன்பமுடன் வாழ்ந்திடு**
என்றும் அவரை சுவைத்திடு

1. என்னையே உனக்குத் தருகின்றேனே
எல்லாம் உனதாய் நினைக்கின்றேனே
நிலையாய் வருவாய் நிம்மதி தருவாய்
அருளே வேண்டும் அளித்திடுவாயே
அன்பே வேண்டும் பொழிந்திடுவாயே

2. அனைத்தும் உமக்கே தருகின்றேனே
அன்பாய் நாளும் ஏற்றிடுவாயே
கனிகளும் தந்தேன் கனிவாய் ஏற்பாய்
அன்பாய் நாளும் உணர்ந்திடவே தான்
அடியேன் எம்மில் எழுந்திடுவாயே

## 231 இருப்பதெல்லாம் கொடுத்துவிட்டேன்

என்னிடம் எதுவுமில்லை
எனைமுழுதும் அர்ப்பணித்தேன்
இழப்பதில் கவலையில்லை
அழைப்பவர் அவர்பின்னே - என்
சிலுவையை சுமந்திடுவேன்
கல்வாரி மேடையிலே - பலிப்
பொருளாய் மாறிடுவேன்

1. தலைவனின் நிலைமையை இழந்து யேசு
கடைநிலை அடிமையாய் வாழவந்தார்
பாதங்கள் கழுவும் நிகழ்வினிலே
தலைவனின் கடமையை எடுத்துச் சொன்னார்
வாழ்நாள் முழுவதும் பணிகள் செய்தே
மெழுகாய் தன்னையே உருக்கி நின்றார்
நண்பனுக்காகத் தன்னுயிரைத்
தருவதே மேலான அன்பு என்றார்.

2. தன்னல வழிகளை மறந்து இன்று
அடிமையாய் வாழ்ந்திட முடிவு செய்தேன்
பிறர் நலம் ஒன்றே கருத்தில் கொண்டு
பணிகளைப் புரிந்திட மனமுவந்தேன்
வாழ்நாள் முழுவதும் உம்சிலுவை
கலங்கரை தீபமாய் தெரிகின்றது
உலகம் வாழ என்னுயிரைத்
தருவதே மேலான அன்பு என்பேன்

**232** **உந்தன் பாதம் பணிந்து நான்**
வாழ வேண்டும் இயேசுவே
பலியிலே கலந்திட வேண்டி நின்றேன் தெய்வமே

1. அன்பில் நிலைக்கும் இதயமே ஆற்றல் மிகுந்ததே
பண்பில் உயர்ந்து வாழுமே புதிய உறவிலே
பிறரின் நலனில் மகிழ்ந்திட
தந்தேன் என்னை உந்தன் பாதம் என்னை நீ ஏற்றிடுவாய்

2. மனித நேயம் மலரவே என்னைத் தருகின்றேன்
உண்மை அன்பு உயர்ந்திட உறுதி கொடுக்கின்றேன்
உந்தன் ஆட்சி மலர்ந்திட
தந்தேன் என்னை உந்தன் பாதம் என்னை நீ ஏற்றிடுவாய்

**233** **உள்ளதை தந்தேன் இறைவா**
உண்மையை உரைத்தேன் தலைவா
உள்ளத்தை தந்தேன் தேவா
உயர்பலி ஆக்குவாய் நாதா

1. ஆலயம் திறந்தது பலி செய்ய நுழைந்தேன்
அதிலொரு பெருந்துடிப்பு
கலசம் ஒளிர்ந்தது கனிமொழி ஒலித்தது
அது ஒரு நல் விதைப்பு
தாபத்தை ஏற்றேன் தவறினை களைந்தேன்
அதிலொரு பலன் அளிப்பு
உள்ளத்தை அளித்தேன் இடரையும் இணைத்தேன்
அது ஒரு உளப் பிணைப்பு

2. படைத்த உன் பொருளை உனக்கே அளித்தேன்
அதிலொரு புது மகிழ்ச்சி
அளித்த மண்பொருளை பலியாய் மாற்று;வாய்
அது ஒரு விண் நிகழ்ச்சி
மகனின் பலியாய் மானிடப் பொருளாய்
அதிலொரு தனிச்சிறப்பு
இறைவின் நிகழ்ச்சியில் மானிடன் பங்காம்
அது ஒரு புதுப்பிறப்பு

## 234 உறவின் மகிழ்வினில் உள்ளங்கள் இணைந்திங்கு
உவந்திடும் பலியிது உனதென ஏற்பாயே இறைவா

1. உனக்கென பலியிதை வழங்கிடும் முன்பே
உள்ளத்தில் பகைமை கூடாது - 2
தனக்கென வாழும் சுயநல வேட்கை
தன்னிலே தங்கிடக்கூடாது
உன்பாதையில் தினம் வாழ்கையில்
பலி அப்பமும் ரசமாகிறோம்
எனை ஏற்று வழிநடத்து உயிர்தெய்வமே

2. ஆண்பெண் சமத்துவ சமநிலை வருமுன்
அளிக்கும் காணிக்கை வீணாகும்
உழைப்போர் வியர்வையை சுரண்டியே சேர்த்து
வழங்கும் விளம்பரம் வீணாகும்
என் ஏக்கங்கள் உன் கொள்கையே
அதை ஏந்தியே பலியாகிறோம்
எனை ஏற்று வழிநடத்து உயிர்தெய்வமே

## 235 எடுத்து வந்தோம் காணிக்கையை
இறையமுதே உம்மை சூழ வந்தோம்
இனிதாகவே எமையாளவே
இதை ஏற்பாய் என்றே வேண்டுகின்றோம்

1. வாழ்வும் உமதே தாழ்வும் உமதே
வையத்தில் படைத்ததெல்லாம் உமதே
என்சிறு வாழ்வில் நிகழ்வதெல்லாம்
உம் திருப்பலியாய் மாற்றிடுமே

2. கடைநிலை வாழ்வோர் கடமையை மறந்தோர்
கடவுளே உன்னிடம் வந்துள்ளோம்
கருணையின் சுனையே இறையவனே
கடமையின் நிறைவை எமக்கருளே

## 236 எடுத்து வந்தோம் எம் இதயத்தையே

இறைவா ஏற்றிடுவாய்
இதயம் மாற்றிடுவாய் - எங்கள்
இதயம் மாற்றிடுவாய்

1. கோதுமை மணிகள் தம்முயிர் அழித்து
உணவாய் மாறுதல் போல் - பிறர்வாழ
தம்மையேத் தருவதுபோல்
தன்னலம் மறந்து பிறர்நலம் நாட
எம்மையே ஏற்றிடுவாய்
இதயம் மாற்றிடுவாய் - எங்கள்
இதயம் மாற்றிடுவாய்

2. உழைப்பின் பலனாய் கிடைத்த பொருளை
மகிழ்வுடன் கொண்டுவந்தோம் - உமக்கே
காணிக்கை ஆக்குகின்றோம்
ஏழைகள் எளியவர் துயர்தனை துடைத்திட
எம்மையே ஏற்றிடுவாய்
இதயம் மாற்றிடுவாய் - எங்கள்
இதயம் மாற்றிடுவாய்

## 237 எதை நான் தருவேன் இறைவா - உன்

இதயத்தின் அன்பிற்கீடாக
எதை நான் தருவேன் இறைவா

1. குறை நான் செய்தேன் இறைவா - பாவக்
குழியில் விழுந்தேன் இறைவா
கறையாம் பாவத்தை நீக்கிடவே - நீ
கல்வாரி மலையில் இறந்தாயோ

2. பாவம் என்றொரு விஷத்தால் - நான்
பாதகம் செய்தேன் இறைவா
தேவனே உன் திருப்பாடுகளால் - என்னைத்
தேற்றிடவோ நீ இறந்தாயோ

3. அகிலமே அறிவால் அளந்தேன் - உன்
அன்பையும் அறிந்து மறந்தேன்
மகிமை நிறைந்த என் இறைவா - நீ
மனிதன் எனக்காய் இறந்தாயோ

**238** **எம்மை உம்மிடம் தருகின்றேன்**
என்றும் உனதாய் ஏற்றிடுவாய்
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்

1. பலிபொருள் ஆயிரம் கொடுக்கின்றோம்
பலியிட எம்மையே கொடுப்பதில்லை
பாவி என் உள்ளம் கேட்பவனே
பரிவுடன் எம்மையே ஏற்றிடுவாய்

2. அலைமோதும் ஆசைகள் ஆயிரம் எம்மில்
ஆண்டவா உன் ஆசை துளியுமில்லை
அழகிய உள்ளம் தந்தவனே - உன்
ஆசையில் வளர்ந்திட அருள் புரிவாய்

**239** **எல்லாம் கொணர்ந்தோம் திருவடி வைத்தோம்**
ஏற்றிடுவாய் இறைவா - பலியாய்
மாற்றிடுவாய் தலைவா

1. அன்பும் அருளும் பண்பும் பாசமும்
எல்லாம் நீ தந்தது
வாழ்வும் வளமும் வளர்ச்சியும் தளர்ச்சியும்
மகிழ்வுடன் நீ தந்தது

2. சிந்தனை சொல் செயல் எந்தன் திறமைகள்
எல்லாம் நீ தந்தது
உடல்பொருள் ஆவி உணர்வுகள் எல்லாம்
உவப்புடன் நீ தந்தது

**240** **எல்லாம் தருகின்றேன் - தந்தாய்**
என்னையும் தருகின்றேன்

1. இயற்கை ஈந்த மலர்கள் பறித்து
தருவேன் உமக்கு காணிக்கை
உழைப்பின் பயனாய் கிடைத்தப் பொருளை
என்னோடு இணைத்தே தருகின்றேன்

2. பிறருக்காக வாழ்வதில் நானும்
என்னையே உம்மிடம் தருகின்றேன்
பிறரின் சுமையை விரும்பி சுமக்க
என்னையும் தகுதியாக்குவாய்

**241** **என் இயேசு என்னை கேட்கிறார் - நீ**
என்ன தருவாயோ என்று
என் கரங்களை ஏந்திச் செல்வேன்
என் வாழ்வினை அவரில் தந்தேன்

1. பொன் பொருளும் எனக்கு இல்லை
உன் அருள் பாதம் பணிந்து வணங்க
என் ஆன்மக் கதவை திறந்தேன்
என் வாழ்வை முழுதும் தந்தேன்
நிலையாக என்னைத் தந்தேன்

2. மணம் கமழும் மலர்கள் ஆனேன்
உன் திருக் கோயில் தீபம் ஆனேன்
அன்பு என்னும் பாதை அறிந்தேன்
அருள் வாழ்வின் மகிழ்வை உணர்ந்தேன்
திரு வாழ்வில் என்றும் மகிழ்வேன்

**242** **என் நெஞ்ச நாயகா - இறைவா என்றும்**
என் அன்பை பலியாக ஏற்பாய்
ஏழை என் பலிதன்னை நீ ஏற்கும் வேளை
என் வாழ்வுன் அருளன்பில் நிலைபெறுமே

1. காற்றினில் ஆடுகின்ற தீபம் நான் - உந்தன்
கோவிலில் ஏற்றி வைத்தாய்
சேற்றினில் வாழுகின்ற சிறுமலர் நான் - உந்தன்
பூஜையில் சேர்த்து விட்டாய்
என்னை உன் நெஞ்சோடு இணைக்கின்றபோது
என் இயேசுவே என்னை தருகின்றேன்

2. பலிப்பொருள் உன்னிடம் தருமுன்னே எந்தன்
பகைவரை ஏற்கச் சொன்னாய்
விழியினை இழந்திட்ட மானிடர்க்கு என்னை
ஒளியாய் மாறச் சொன்னாய்
தினந்தோறும் நானுந்தன் பூமுகம் காண
எளியோருக்கே என்னை அளிக்கின்றேன்

## 243 **என்னையே முழுவதும் உன்னிடம் தருகின்றேன்**
என் மனம் அறிந்து நீ உன் கையில் ஏற்றிடுவாய்

1. உண்மைக்காக வாழ்ந்திடும்
நெஞ்சம் என்னில் உண்டு
உயிர் கொடுக்கவும் துணிந்திடும்
உந்தன் பாதை சென்று
என் நெஞ்சில் வாழ்பவன் நீ தானே
இனி அச்சம் கொள்வதும் வீண்தானே
எந்தன் பணியினில் ஆயிரம் தடைகள்
வந்திடுமாயினும் இயேசுவே
உனது வழியில் பயணம் தொடரும்

2. எந்தன் வாழ்வின் பொருளினை
உந்தன் வாழ்வில் கண்டேன்
சுயநலத்தின் திரைகளை
களைந்து என்னைத் தந்தேன்
ஒரு ஜீவன் என்னாலே உயிர் வாழ்ந்தால்
அதுதானே உன்முன்னால் பெரிதாகும்
மகிழ்வைத் தேடும் மானிடர் மகிழ்ந்திட
தந்திடும் என்னை இயேசுவே
உனது கரத்தில் ஏற்க வேண்டும்

## 244 எது வேண்டும் உனக்கு இறைவா

எது தந்த போதும் உனக்கது ஈடாகுமா
எது வேண்டும் எது வேண்டும்

1. மலர் யாவும் தந்தேன் திருப்பாதம் வைத்தேன்
உனக்கது மணமில்லையோ
கனியாவும் தந்தேன் திருப்பீடம் வைத்தேன்
உனக்கது சுவையில்லையோ
எதை நான் தருவேன் தலைவா
நீ விரும்புவதென்னவோ இறைவா
எளிய என் இதயம் தந்தேன் - 2
அது ஏற்றதாய் இருக்குமோ இறைவா
எது வேண்டும் எது வேண்டும்

2. பொருள் கோடி தந்தேன் பொன்னோடு வந்தேன்
உனக்கது ஈடில்லையே
உள்ளதைத் தந்தேன் கடன் வாங்கித் தந்தேன்
உனக்கது இணையில்லையே
எதை நான் தருவேன் தலைவா
நீ விரும்புவதென்னவோ இறைவா
சின்ன என் இதயம் தந்தேன் - 2
அது சிறப்பாய் இருக்குமோ இறைவா
எது வேண்டும் எது வேண்டும்

## 245 எடுத்துக்கொள்ளும் ஆண்டவரே

உடல்பொருள் ஆவியையும்
எடுத்துக்கொள்ளும் ஆண்டவரே

1. சிந்தனை சொல்செயல் அனைத்தையும் தந்தோம்
நிந்தனை யாவையும் ஏற்கவும் துணிந்தோம்

2. அனைத்தும் உம் அதிமிக மகிமைக்கே என்று
ஆர்வமாய் வாழ்ந்திட துணைபுரிவாயே

3. உன்னருள் ஒன்றே எனக்கிங்கு போதும்
உம்கரம் நாங்கள் சரணடைந்தோமே

## 246 என்னத்தருவேன் என்னைபடைத்தவனே

உனக்கென்ன தருவேன்
என்னைத்தருவேன் என்னை அழைத்தவனே
உனக்கென்னை தந்திடுவேன் - 2

1. உடலும் உயிரும் உம்கொடையன்றோ
உழைப்பும் உயர்வும் உம்அருளன்றோ
மகிழ்வும் மணமும் உம்செயலன்றோ
வாழ்வும் வளமும் உம்அருளன்றோ
வழியும் ஒளியும் நீதானய்யா
உயிர்ப்பும் உயிரும் நீதானய்யா
எந்தன் வாழ்வே எந்தன் வழியே
எல்லாமே நீதானய்யா இயேசைய்யா

2. பலியை விரும்பாத இறைவன் நீரே
இரக்கத்தை விரும்பும் தெய்வம் நீரே
உறவில் ஒன்றாய் இணைந்திடவேண்டி
உன்னருள்தேடி உவந்தே வந்தோம்
அருளை தருவது நீதானய்யா
ஆவியை பொழிவது நீதானய்யா
எந்தன் அன்பே எந்தன் அருளே
நீயின்றி வாழ்வேதய்யா - யேசைய்யா

## 247 என்ன நான் கொடுப்பது என்னையே கொடுப்பதா

சொல்ல நான் நினைப்பதை காணிக்கை ஆக்கவா
கர்த்தரின் கரங்களில் காணிக்கை ஆகினேன்
உத்தமனின் கரங்களில் சுத்தமாய் இருக்கவா

1. திறந்த இதயம் உனக்காய் நான் தந்திடுவேன்
உதிர்ந்த வாழ்வை உனதாய் இன்று மாற்றிடுமே
மறைந்தகாலம் மறந்துபோகும் பிறக்கும் காலம் உதயமாக
நானளிக்கும் காணிக்கை உனதாய் மாற்றுமே
உன்னில் இணைந்தால் உருகும் பனிபோல்
தூய்மையாகும் துளியில் சேர்ப்பாய்
பெருகும் அருளால் பெருமை அடைவேன்

2. எந்தன் நிலை என்னவென்று சொல்லிடுவேன்
ஏழ்மைவாழ்வில் தவறும்போது தேற்றிடுமே
வீழ்ந்தகாலம் விழலாய்போக
உயர்ந்த வாழ்வு உதயமாக
தேடும் எந்தன் வாழ்வுதனை என்தாய் மாற்றுமே
விண்ணில் உலவும் நிலவுபோல
மண்ணில் சேரும் மழைதுளியாய்
உன்னில் நானும் வளமை பெறுவேன்

**248** **எந்தன் மனம் ஏந்தி வந்தேன்**
உந்தன் பதம் வாழ்வை தந்தேன்
ஏற்பாய் இறைவா பரம் பொருளே
தந்திடு உன் தரிசனம் கண்டிடவே வந்தேன்
தவித்திடும் மனதையே உன்னிடம் தரவந்தேன்

1. உறவின் நிறைவே உண்மையின் திருவே
உம் பலியில் எனைச்சேர்க்க இதயம் தருகின்றேன்
நல்லுறவை தேடித்தேடி உலகெங்கும் நான் திரிந்தேன்
உள்ளிருக்கும் உனை உணர நானும் மறந்திட்டேன்
எதை நான் தருவேன் என் அன்பு தெய்வமே
இருப்பதையே பகிரவந்தேன் அன்பு தெய்வமே
உன்னில் நானும் என்னில் நீயும்
இணைந்திடவே வந்தேன்

2. பற்பல முறைகளிலே பல்வேறு வகைகளிலே
முன்னோர்கள் வாழ்வினிலே இறைவா பேசினீர்
இவ்விறுதி நாட்களிலே இறைமகன் வழியாக
நிறைவாக என்னோடு பேசும் கடவுளே
நிலை வாழ்வை தேடுகின்றேன் அன்பு தெய்வமே
திரு மகனை பலியாக தந்த தெய்வமே
உந்தன் அன்பில் என்னை நீயும்
இணைத்திடவே தந்தேன்

**249** **ஏந்தியே வந்தோம் எம் சிறு உள்ளத்தை**
எம்மிடம் உள்ளது இதுதானே

1. நண்பனைப் பழித்து பலியினை தருவது
பயனற்ற காணிக்கை ஆகிடுமே
இருவரும் இணைந்து பலிதர வந்தோம்
ஒரு கணம் இரங்கி ஏற்றிடுவாயே

2. உழைப்பால் உதிர்ந்த வியர்வை துளிகள்
உயர்வின் பலியாய் ஆகிடுமே
உறவில் மலரும் உலகம் படைக்கவே
உயரும் கரங்கள் பலியானதே

**250** **ஏழை என்னை காணிக்கையாக**
தருகின்றேன் தெய்வமே
ஏற்றுக்கொள்ளுமே

1. என் உயிரும் உடலும் உள்ளமும் சிந்தனையும் செயலும்
என் உணர்வுகள் உறவுகள் என்னில் உள்ள திறமைகள்
யாவும் உந்தன் கருணையின் கொடைகள்
தந்தாய் ஏற்றுக்கொள்

2. என் கடந்த கால வாழ்க்கையும் நிகழும் வாழ்க்கையும்
நான் எதிர்கொள்ளும் வாழ்க்கையும்
அதன் வளர்ச்சி தளர்ச்சியும்
யாவும் உந்தன் கருணையின் கொடைகள்
தந்தாய் ஏற்றுக்கொள்

**251** **காணிக்கை தர நான் வருகின்றேன்**
கனிவுடன் என்னையும் ஏற்றிடுவாய்
இறைவா இறைவா ஏற்றிடுவாய் - 2
பலிப்பொருளாய் எனை மாற்றிடுவாய்

1. உள்ளதெல்லாம் ம்ம் தர வந்தோம் ம்ம்
உவப்புடன் ஏற்றிடுவாய் - ஆ ஆ

உணவையெல்லாம் ம்ம் உடைமையெல்லாம் ம்ம்
உம் பலிப்பொருளாய் ஆக்கிடுவாய்
இறைவா இறைவா ஏற்றிடுவாய் - 2
பலிப்பொருளாய் எனை மாற்றிடுவாய்

2. உழைப்பையெல்லாம் ம்ம் உயர்வையெல்லாம் - ம்ம்
உணர்ந்து தருகின்றோம் - ஆ ஆ
உலகையெல்லாம் ம்ம் உறவையெல்லாம் ம்ம்
உருவாக்க வேண்டி படைக்கின்றோம்
இறைவா இறைவா ஏற்றிடுவாய் - 2
பலிப்பொருளாய் எனை மாற்றிடுவாய்

**252** **கானங்கள் பாடும் காலை ஆனந்தமே என் ராகம்**
அர்ப்பணித்தேன் என் ஆருயிரை
வாழ்வை உன் கரங்களில் கையளித்தேன்

1. உன்மடி அமர்ந்து உன்னையே பழித்தல் உறவென்றாகுமா
உன்மொழி கேட்டும் என் வழி வாழ்தல்
உன்னிடம் சேர்க்குமா
உன் பணி தொடர வருகின்றேன்
உள்ளத்தை தருகின்றேன் - எந்தன் உள்ளத்தை தருகின்றேன்

2. உழைக்கும் மனிதர் உயரும் நிலையும் உலகில் மலரணும்
உழைப்பின் மாண்பை வளர்க்கும் செயல்கள்
உண்மையில் நிலைக்கணும்
உரிமைகள் உணர்ந்து வருகின்றேன்
உன்னிடம் தருகின்றேன் - என்னை உன்னிடம் தருகின்றேன்

**253** **காணிக்கைகளை சுமந்து கொண்டு**
கர்த்தரை நோக்கி வருகின்றோம்
கணக்கில்லாத குறைகளை உம்
சந்நிதியில் வைக்கின்றோம்
கருணையுடன் கண்ணோக்கி - எம்
காணிக்கைகளை ஏற்றிடுவீர்

1. தூய்மையான உள்ளம் கொண்டு
துதிக்க அழைக்கின்றீர் - எம்மை
பாசத்தோடும் நேசத்தோடும் வாழச் சொல்கிறீர்
தாங்கல் நிறைந்த மனதுடனே தந்தைக்குப் பலி ஏனோ - உன்
உறவை வளர்த்து திரும்பி வந்து பலியை செலுத்திடு

2. குறைகள் நீக்கி என்றும் எம்மை அரவணைக்கின்றீர் - உம்
நிறைவில் தினமும் நாங்கள் வாழ அருள் தருகின்றீர்
கொடுக்கல் வாங்கல் மனதினையே களைந்தெறிந்திடுமே - உம்
சந்நிதியில் சரணடைந்து வாழத்துடிக்கிறோம்

## 254

**காணிக்கை தந்தோம் கர்த்தாவே**
ஏற்றுக்கொள் என்னையே இப்போது
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர் தானே

1. நாங்கள் தந்த காணிக்கை எல்லாம் இரட்சகன் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த் துளி எல்லாம் பூமி கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாது

2. ஆலயத்தின் வாசல் வந்தால் அழுகை வருகுதே
ஆனமட்டும் அழுதுவிட்டால் அமைதி பெருகுதே
கண்ணீரைப்போல காணிக்கை இல்லை
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
கண்ணீரின் அர்த்தங்கள் நீ தானே

## 255

**காணிக்கை தரவந்தோம் - உம் மலரடி**
பாதங்கள் வணங்க வந்தோம்
வரங்களைப் பொழியும் நாயகனே - எம்
கரங்களைக் குவித்து வணங்க வந்தோம் - உன்
மலரடி பணிந்து வாழ்வினை தருவோம்

1. இயற்கையின் எழிலினிலே உனக்கு - எம்
சந்தன மலர்களை எடுத்து வந்தோம்
தீபங்கள் ஏந்தி திருமுன் ஏற்ற கூடி வருகின்றோம்
உனக்கென ஆயிரம் கீதங்கள் பாடி
எம்மையே தருகின்றோம்

2. கோதுமை கதிர்மணி போல் இணைந்து - எம்
வாழ்வினை காணிக்கையாக்க வந்தோம்
நாவினால் உந்தன் புகழினைப் பாட பீடம் வருகின்றோம்
வாழ்வினில் ஆயிரம் சேவைகள் ஆற்ற
எம்மையே தருகின்றோம்

**256** **காணிக்கைப் பொருட்களை இறைவா - எம்**
கரங்களில் ஏந்தி உம் பீடம் வந்தோம்

1. எங்களின் இதயத் தோட்டத்திலே
எழில் மலர் காய்கனி நிறைந்ததய்யா
பொங்கிடும் மகிழ்வுடன் பறித்து வந்து - உம்
பொன்னொளிப் பீடத்தில் குவித்து வைத்தோம்

2. கோதுமை மாவுடன் என் மனதில்
கொண்டுள்ள ஆசையைப் பிசைந்தெடுத்து
அன்பென்னும் தீயினில் வேக வைத்து - நல்
வெண்ணிற அப்பமாய் கொண்டு வந்தோம்

**257** **காணிக்கையாக வந்தேன் கனிவோடு ஏற்றிடுவா**
படைத்தவா பணிகின்றேன் பரமனேப் புகழ்கின்றேன்
குயவன் நீயே களிமண் நானல்லவா
குன்றாத உனது மகிமை நான் சொல்லவா
இறைவனே ஆகட்டும் உன் உள்ளமே

1. அழகான உலகம் அதில் ஒரு மனிதன் அன்பாக நீ படைத்தா
அனைவரும் மகிழ்ந்து ஆனந்தம் பகிர்ந்து
அமைந்திட நீ பணித்தாய்
எல்லாமே உனதன்றோ என்றே யாம் உணர்ந்தோம்
வல்லவா உம் கையில் யாம் கொணர்ந்தோம்

உம் சித்தமே நிறைவேறுக
உம் திட்டமே என்றும் நிறைவாகுக

2. சூடாத மலரும் சுவைக்காத உணவும்
கையிலே கனிந்தென்ன
காய்க்காத மரமும் கனியில்லாக் கொடியும்
காய்ந்தும் இழப்பென்ன
எம் வாழ்வின் பொருளாக உம்மீட்பு அருளாக
உம்கையில் என்றுமே யாம் கொடுத்தோம்
உம் சித்தமே நிறைவேறுக
உம் திட்டமே என்றும் நிறைவாகுக

**258** **காணிக்கை வேளையிலே என்னையே அளிக்கவந்தேன்**
கனிவோடு என்னையும் தலைவா நீ ஏற்று
பயன்படுத்தும் என்னை பயன்படுத்தும்

1. காணிக்கை என்று நான் கொணர்கையிலே - நீர்
கனிவோடு அதை பெற்று மகிழ்கையிலே
வெறும் தூசி நான் என்று உணர்கையிலே - என்னை
விலையுள்ள பொருளாய் மாற்றுகின்றீர்

2. கோதுமை அப்ப நல் வடிவினிலே - நான்
என்னுடலை உமக்கு அளிக்கையிலே
வெறும் அப்பம் நான் என்று உணர்கையிலே - அதை
உம் மகன் உடலாக மாற்றுகின்றீர்

**259** **சொல்லால் எல்லாம் செய்தவனே**
எல்லாம் தந்தோமே
வாழ்வால் எல்லாம் சொன்னவனே
தாழ்வாய் தந்தோமே
போற்றுவோம் இறைவா வாழ்த்துவோம் தலைவா

1. முன்னாள் சோதனை பின்னாள் வேதனை
இன்னாள் கொண்டு வந்தோம்
உன்னால் சாதனை உன்மொழி போதனை
பொன்னாற் பாதம் வைத்தோம்

கலக்கம் தயக்கம் கண்டோமே
களிப்பு செழிப்பு தந்தோமே
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
மலரவைப்பாய் கனிகொடுப்பாய்

2. செய்வினை பாவங்கள் சொல்வினை காயங்கள்
சேர்த்துக் கொண்டு வந்தோம்
காய்ந்திட்ட உள்ளங்கள் தேய்ந்திட்ட உறவுகள்
கனிவாயும் பாதம் வைத்தோம்
தாழ்வும் உயர்வும் கண்டோமே
தலைவன் உன் கரம் தந்தோமே
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
மலர வைப்பாய் கனி கொடுப்பாய்

**260** **தந்தேன் தந்தேன் இறைவா - என்னைத்**
தந்தேன் தந்தேன் தலைவா
உள்ளது எல்லாம் உமக்காக
உயிர்ப்பலி ஆனாய் எமக்காக
அதில் என்னையும் இணைத்திடவா

1. இயற்கை அழகு உந்தன் எழில்வண்ணம் - அங்கு
இருக்கும் வளங்கள் உந்தன் அருள் கூறும்
கண்டேன் கண்டேன் உந்தன் கருணை உள்ளம்
தினம் வந்தேன் வந்தேன் உந்தன் மலர்ப் பாதம்
தயவுடன் என்னையும் ஏற்றிடுவாய் - உன்
பலியாய் என்னையும் மாற்றிடுவாய்

2. இதழ்கள் விரிக்கும் நல் மலர் கூட்டம் - எங்கும்
இறைவன் இருப்பதைப் பறை சாற்றும்
என்றும் என்றும் என் இயேசு தேவா
நீ தங்கும் உள்ளம் என்றும் இறைவன் இல்லம்
காணிக்கைப் பொருளாய் நான் மாறி - உன்
காலடி வந்தே சரணடைந்தேன்

## 261 தரணியர் இணைந்து தரும் பலிப்பொருளை
தந்தாய் நீ ஏற்பாய்

1. நிதமும் உழைத்த பயனாக
நிலத்தில் விளைந்த பலன் யாவும்
நிறைவுடன் திருமுன் படைக்கையிலே
அனுதின உழைப்பையும் அளிக்கின்றோம்

2. உறவை உணர்த்தும் பலியினிலே
ஒருங்கே உன்னில் இணைந்திடவே
வேற்றுமை தவிர்த்தெம் வாழ்வினிலே
ஒற்றுமை வளர்ந்திட அருள் புரிவாய்

## 262 தன்னையே தந்த தெய்வத்திற்கு
நம்மையே தருவோம் அன்புடனே

1. மலரினை நான் தந்தேன் - அவர்
மனதினைக் கேட்டு நின்றார்
உள்ளதை நான் தந்தேன் - அவர்
உள்ளத்தைக் கேட்டு நின்றார்
எல்லாம் தந்தேன் அவர் பதமே
மெய்யாய்க் கொண்டேன் அருள் வரமே

2. பொன்பொருள் நான் தந்தேன் - அவர்
என்னையே கேட்டு நின்றார்
என்னையே நான் தந்தேன் - அவர்
விண்ணகம் எனக்களித்தார்
எல்லாம் தந்தேன் . . .

## 263 திருவுளம் ஏற்றேன் இறைவா - என்னை
அர்ப்பணிக்கின்றேன் தலைவா
திருவடிவைத்தேன் இறைவா - எந்தன்
வாழ்வினை முழுதும் தலைவா
ஏற்றிடு என்னையே ஏற்றிடுவாய்
மாற்றிடு உம் திரு பலிப்பொருளாய்

1. கருவினில் என்னை காத்தவனே
உருவினில் உன்முகம் தந்தவனே
திருவருள் உன்பதம் நான்வாழ
அருள்தனை பொழிந்தே நடத்திடுவாய்
அன்பில் அர்ப்பணம் நற்செய்தி நாட்டலில்
அருளில் சங்கமம் உன்வழி தேடலில்
ஆயிரம் இடர்வரும் ஆயினும் கலங்கிடேன்
ஆனந்த பாக்களை இசைத்திடுவேன்

2. கோதுமை மணியாய் மடிந்திடுவேன்
திராட்சை ரசமாய் வடிந்திடுவேன்
பாதத்தில் மணம்தரும் மலராவேன் - உன்
பீடத்தில் தினம்தினம் பலியாவேன்
அன்பில் . . .

3. எரிந்திடும் தீபமாய் ஒளிர்ந்திடுவேன்
உருகிடும் மெழுகாய் கரைந்திடுவேன்
உலகினில் மனிதம் மலர்ந்திடவே - என்
உயிரையும் தருவேன் உயர்ந்திடுவேன்
அன்பில் . . .

**264** **தேவா உந்தன் பலியாக என்னை தந்தேன் - என்றும்**
எந்தன் பணிவாழ்வை ஏற்றிடுவாய்

1. அன்பொன்றே தினம் தேடி
அலைகின்ற நெஞ்சங்கள் வீதியில் ஆயிரமே
அரவணைக்கும் கரம் தேடி
ஆர்வமுடன் காத்திருக்கும் மனிதர்கள்
கூட்டம் இங்கே
அன்போடு நான் வாழுவேன் சிந்தும்
கண்ணீரை நான் மாற்றுவேன்
நல்லன்பை தேடும் புவி மாந்தர் வாழ
என் வாழ்வை பலியாக்குவேன்

2. விடியாத பொழுதென்று
வீங்கிடும் விழி ஓரம் ஏங்கிடும் மாந்தர் இங்கே
முடியாது என்றெண்ணி முகம் சோர்ந்து போகும்
பரிதாப வாழ்க்கை இங்கே
தேவா நான் சுடராகுவேன் - எங்கும்
நம்பிக்கை ஒளி ஏற்றுவேன்
போராடும் நெஞ்சில் போராட்டம் நீங்க
என் வாழ்வை பலியாக்குவேன்

**265** **நாங்கள் தருகின்ற காணிக்கை - இதை**
ஏற்றருள் தெய்வமே
நாங்கள் தருகின்ற காணிக்கை

1. நிலையற்ற உலகம் நிலையென நினைத்து
நிம்மதியின்றி வாழ்ந்திருந்தோம்
கண்ணீர் பூக்களை உந்தன் பாதத்தில்
காணிக்கை யாக்கவே - இன்று உம்மை நாடினோம்

2. வளமற்ற வாழ்வில் வசந்தத்தை தேடி
பாவத்தை நாங்கள் அணிந்திருந்தோம்
அன்பின் பாதத்தில் எந்தன் வாழ்வினை
காணிக்கையாக்கவே - இன்று உம்மை நாடினோம்

**266** **படைப்பு எல்லாம் உமக்கே சொந்தம்**
நானும் உந்தன் கை வண்ணம்
குயில்கள் பாடும் கிளிகள் பேசும்
என் வாழ்வு இசைக்கும் உன் ராகமே

1. இயற்கை உனது ஓவியம் இணையில்லாத காவியம்
அகிலம் என்னும் ஆலயம் நானும் அதில் ஓர் ஆகமம்
உள்ளம் எந்தன் உள்ளம் - அது எந்நாளும் உன் இல்லமே

2. இதயம் என்னும் வீணையில் அன்பை மீட்டும் வேளையில்
வசந்த ராகம் கேட்கவே ஏழை என்னில் வாருமே
தந்தேன் என்னை தந்தேன் - என்றும் என் வாழ்வு உன்னோடு தான்

## 267

**பரலோகத் தந்தைக்கு பலியை அளித்தோம்**
குருவுடன் சேர்ந்து நம்மையே அளித்தோம்

1. உடல் உயிர் அனைத்தையும் உமக்களிக்கின்றோம்
உரிமைகள் யாவையும் உடனளிக்கின்றோம்
உலகினில் வாழும் உயிர் பொருள் யாவும்
உம் திருமகனோடு சேர்ந்தளிக்கின்றோம்

2. கிறிஸ்துவில் நாமும் என்றென்றும் வாழ்வோம்
கிறிஸ்துவில் நாமும் என்றென்றும் மகிழ்வோம்
கிறிஸ்துவின் வாழ்வை நாமும் பின் தொடர்ந்து
கிறிஸ்தவனாய் இவ்வுலகினில் வாழ்வோம்

## 268

**பலிப்பீடத்தில் வைத்தேன் என்னை**
பாவி என்னை ஏற்றுக்கொள்ளும்

1. நிலையில்லா இந்த பூவுலகில் நித்தம் உம் பாதையிலே
நின் சித்தம் போல் உம் கரத்தால் நித்தம் வழி நடத்தும்

2. பரிசுத்தமில்லா இவ்வுலகில் பரிசுத்தமாய் ஜீவிக்க
பரிசுத்தமான உம் இரத்தத்தால் பரிசுத்தமாக்கிவிடும்

## 269

**பெறுவதில் தருவதே இன்பம் என்பதால்**
என்னையே உமக்கேத் தரவந்தேன்
ஏற்றிடுவாய் தயவாக மாற்றிடுவாய் உம் பலியாக

1. குறைவான இதயத்தை தருகின்றேன்
நிறைவாக அதை நீ மாற்றிடுவாய்
பொன்னுமில்லை பொருளுமில்லை
என்னிடத்தில் ஏதுமில்லை
என்னையே உமக்காய் தருகின்றேன்

2. நிலையில்லா வாழ்வினை தருகின்றேன்
நிலைத்திடவே உம்மை வேண்டுகின்றேன்
மண்ணுலகில் வாழும் வாழ்வு
நிலையில்லை என்பதாலே
என்னையே உமக்காய் தருகின்றேன்

**270** **பொன்னும் பொருளுமில்லை**
என்னிடத்தில் ஒன்றுமில்லை
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

சொந்தம் பந்தமும் எல்லாம்
நீயே என சொல்லி வந்தேன்
எந்தையும் என் தாயும் நீயன்றோ - நீயே
என்னை ஆளும் மன்னவனன்றோ

1. நிலையில்லா உலகினில் நிலைத்து நான் வாழ என்
நிம்மதி இழந்து நின்றேன்
வளமில்லா வாழ்வினில் வசந்தங்கள் தேடினும்
அளவில்லா பாவம் செய்தேன்
தனது இன்னுயிரை பலியெனத் தந்தவரே
உனக்கு நான் எதை அளிப்பேன் - இன்று
உனக்கு நான் என்னை அளிப்பேன்

2. வறுமையும் ஏழ்மையும் பசியும் பிணியும்
ஒழிந்திட உழைத்திடுவேன்
அமைதியும் நீதியும் அன்பும் அறமும்
நிலைத்திட பணி செய்வேன்
உன்னத தேவனே உனதருட் கருவியாய்
உலகினிலே வாழ்ந்திடுவேன் என்றும்
உன்னிலே வாழ்ந்திடுவேன்

**271** **பீடத்தில் எழுந்திடும் யேசுவே உன் பலி**
எண்ணரும் தியாகப்பலி - அதில்
ஏழை நான் தரும் காணிக்கை என்பது
கலந்திடும் நீர்த்துளி

1. ஆபேல் தந்தார் ஆட்டைப்பலி - தந்தை
ஆபிரகாம் தந்தார் மகனைப் பலி
அண்ணலே தந்தார் உன்னைப் பலி
அடியேன் தருவேன் என்னைப் பலி

2. முன்னோர் தந்ததோ தகனப் பலி - என்றும்
முழுமையாம் உம்பலி தகுதிப் பலி
எங்கள் காணிக்கை சிறிய பலி
ஏற்று இறைவா வாழ்வையளி

**272** **மணம் தரும் மலரில் மகிழ்ந்திடும் இறைவா**
என் மனம் ஏற்க தயக்கமோ - நான்
காகிதப்பூ என்ற வருத்தமோ

1. வசந்தம் மறுத்தால் காற்றிலும் வாழ்வேன்
வான் மழை நின்றால் ஊற்றிலும் உய்வேன்
செல்வங்கள் மறுத்தால் ஏழ்மையில் வாழ்வேன்
இயேசுவே நீ இன்றி நான் எங்கு செல்வேன்

2. கனிகளைக் கொடுக்கும் கொடிகளின் முதல்வா
கனிவுடன் படைத்திடும் காணிக்கை ஏற்பீர்
ஒலிவேத் மலைக்கு உம்முடன் வருவேன்
உயிராய் உடலாய் உம்முடன் வாழ்வேன்

**273** **முழு முதல்வனே தலைவனே**
தருகின்றேன் தருகின்றேன்
கனிவான கண்மணியே - உன்
திருவடிகளில் சரணடைந்திட மனமகிழ்ந்திட
மறைவளர்ந்திட தருகின்றேன்

1. என்னுள்ளம் உனதாகும் பொன்னான நேரத்தில்
பீடத்தின் தீபங்களே துதி சொல்லும் தூபங்களே
காணிக்கையாகுங்கள் கடவுள் கரமே
எனையெந்த கணமும் காத்திடும் நல் இறைவா - என்
நிறை குறை அனைத்துடன்
சரணடைந்திட மனமகிழ்ந்திட தருகின்றேன்

2. நிலையில்லா இவ்வாழ்வில் நாம் செல்லும் பயணமதில்
வாழ்வென்னும் பீடமதில் பலி என்னும் பலிப்பொருளை

காணிக்கை ஆக்குங்கள் மனிதர்கள் மகிழ
நமை எந்த கணமும் காத்திடும் நல் இறைவன்
மறை தினம் வளர்ந்திட
சரணடைந்திட மனமகிழ்ந்திட தருகின்றேன்

**274** **வந்தோம் தந்திடவே**
தந்தாய் ஏற்றிடுவாய்
எம் வாழ்வை உமக்கே பலியாய் தந்தோம்
அன்பாய் ஏற்றிடுவாய்

1. இறைவா உன்னில் இணையா வாழ்வு
இருந்தும் பயனென்ன
இகத்தில் நீ தந்த வாழ்வை தந்தால்
எனக்கு இழப்பென்ன
இனி வாழும் காலம் இனிதாக வேண்டும்
இறைவா உன்னோடு இணைந்தாக வேண்டும்

2. இறைவா எந்தன் உள்ளம் என்றும் உன்னை நாடுதே
உன்னில் இணைந்து உயர்வு பெறவே விரைந்து நாடுதே
உன் நாமம் ஓங்க எந்நாளும் வாழ்ந்து
இறைவா உன்னோடு இணைந்தாக வேண்டும்

**275** **வாழ்வை பலியாய் மாற்ற வந்தேன்**
என்னையே ஏற்றிடுவாய்
முழுமனதுடனே கையளிக்கின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய்

1. கோதுமை மணியும் திராட்சைக் கனியும்
புது உரு பெருவது போல்
அன்பும் அமைதியும் நீதியுமே
மனிதனில் மலர்ந்திட உயிர் தருவோம்

2. நான் வாழ பிறரும் பிறர் வாழ நானும்
தேவை என்றுணர்ந்தேன்
சமத்துவ சோதர நோக்குடனே
புது யுகம் காண்போம் அகத்தினிலே

**276** **அக விருந்தாக என் இறைவா வா - மனம்**
மகிழ்ந்திட வாழ்க்கையின் நிறைவே வா

1. ஆறுதல் அளித்திடும் அருள் மொழியே - திரு
ஆகமம் முழங்கிடும் உயிர் மொழியே
உடலோடு உலகோர் நடுவெழுந்தாய் - உன
துடலென எமை நீ மாறவைத்தாய்

2. தேன் மொழி மொழிந்த உன் திரு இதழால் - எம்
ஆன்மா நற்குணம் பெற மொழிந்திடுவாய்
உமையடைந்திட யாம் தகுதியற்றோம் - இனி
உமதருள் கிடைத்தால் வாழ்ந்திடுவோம்

3. நேரிய மனத்தவர் குறை தணிப்பாய் - எமை
நீடிய மகிழ்வினில் நிலைக்க வைப்பாய்
நலமிகு உணவால் நிறைத்திடுவாய் - இனி
உலகினை உனிலே வாழ வைப்பாய்

**277** **அருட்கனியே என் அக நிலவே - என்**
இருளினை நீக்கிட வா
அருள் மழையே என் உளமதில்
வறட்சியை நீக்கிட வா

1. ஆயிரம் வாழ்த்தொலிகள் - உனை
ஆராதனை செய்யும் தீபங்களோ
ஆனந்தம் பொழிந்திட வா - இன்ப
ஆறுதல் அளித்திட வா - இறைவா

2. நல்லறம் காப்பவனே - நீ
இல்லாமல் என் வாழ்வு நன்றாகுமோ
ஆலயம் வாழ்பவனே - உள்ள
ஆலயம் எழுந்திடவா - இறைவா

## 278 அருள் மழைப் பொழியும் அன்புருவே

அகத்தினில் உறைந்திட எழுந்தருளே
இருள் திரை அகற்றும் ஒளிச் சுடரே
எம் உள்ளம் வந்து தங்கிடுவாய்

1. துன்ப துயரங்கள் வாட்டுகையில்
தளர்ந்திடா மனமும் நீ அருள்வாய்
புயல்கள் வாழ்வில் வீசுகையில்
அமைதியும் அளித்திட நீ வருவாய்
நண்பர்கள் எமை விட்டு விலகுகையில்
ஆறுதல் அளிக்க நீ இருப்பாய்

2. பகைமை பிணக்குகள் பிரிவினைகள்
ஒழிந்திட உன்னுயிர் நீ கொடுத்தாய்
ஏழ்மை வறுமை வளமின்மை
அகன்றிட வழியும் நீ ஆனாய்
இருள் நிறை உலகில் நடக்குகையில்
எம் வழித் துணையாய் நீ இருப்பாய்

## 279 அழியாத அன்பின் காவியம்

ஒளியாக தோன்றும் நேரம்
என் வாழ்வின் பேரின்பம்
தொடரும் வாழ்வில் படரும் சோகம்
துடைக்கும் தேவன் இயேசு

1. நினைவுகள் தந்த கனவுகள் எந்தன்
நெஞ்சில் குடி கொள்ளுதே
உறவுகள் தந்த பிரிவுகள் எந்தன்
உணர்வை உருமாற்றுதே
உன் உறவொன்று எனக்குப் போதும்
என் வாழ்வு மாறும்
உந்தன் சுவடு தொடர்ந்து வர
நல் உள்ளம் தா இறைவா

2. ஆசையாய் போட்ட வேஷங்கள் எல்லாம்
அழியும் காலம் வரும்
பாசமாய் சேர்த்த பணமும் புகழும்
பறந்தோடிப் போகும் நிலைவரும்
உன் நிழலிலே நான் வாழ்ந்தால்
என் வாழ்வில் துன்பம் இல்லை
எந்தன் வாழ்வில் தூய்மையில்லை
வழியாக வா இறைவா

**280** **அன்பில் விளைந்த அமுதமே**
என்னில் மலர்ந்த தெய்வமே
உயிரில் கலந்த ராகமே
உறவில் எரியும் தீபமே
தேவனே இறைவனே தேடி வந்த தெய்வமே

1. தனித்துச் செல்லும் வழிகள் எல்லாம்
தலைவன் நீயே தோன்றினாய்
அணைத்துச் செல்லும் அன்னையாகி
அழைத்துச் சென்றாய் தெய்வமே
அன்பனே நண்பனே என்னை ஆளும் செல்வமே

2. கல்லும் முள்ளும் காடும் மலையும்
கடந்து செல்லும் வேளையில்
சின்ன எனது இதயம் தனை நீ
சிறகில் அமர்த்தி விரைகிறாய்
அன்பனே நண்பனே என்னை ஆளும் செல்வமே

**281** **அன்பு எந்தன் இதய வாசல் தேடி வந்தது**
இன்பப் பகிர்வில் நாளும் என்னை
அழைத்துச் சேதி சொன்னது
துன்பச் சூழல் எது வந்தாலும்
துயரம் என்னை அழுத்தினாலும்
அரணாக எனைக் காக்க வருகின்றது

1. மனித வாழ்வின் துயர் துடைக்கும் உயர் நோக்கமே - எம்
இறை வாழ்வின் நிலை சாரம் என்றுணர்த்தியது
வளமெல்லாம் ஒருவர் கையில் குவிந்திருப்பது
பசித்தோர் நலனுக்காகப் பகிர்ந்தளிக்க ஊக்கம் தந்தது
ஏழை வாழ்வு உயர ஏற்றத்தாழ்வு மறைய
திரு உணவுப் பந்தியிலே காத்திடுவீரே

2. உண்மை உறவுக்காய் நம்மை இழக்க அழைப்பு விடுத்தது
உலகில் அனைவருமே ஒரு குடும்பம் என்றுணர்த்தியது
இறப்பினால் உயர்வு தாழ்வு வேண்டாம் என்ற
பேதமை களைந்து மகிழ்வில் நிலைக்கச் சொன்னது
அமைதி மண்ணில் ஓங்க அகிலம் நிறைவு காண
அன்பன் இயேசு தேடி வருகிறார்

## 282

**அன்பே அமுதே ஆராதனை**
அருளே நிறைவே ஆராதனை
ஆலயத் தலைவா ஆராதனை
அழகுள்ள தேவனே ஆராதனை

1. நான் தேடிடும் அருமருந்தாய்
என்னை வாழ்விக்கும் திருவிருந்தாய்
என்னை உணர்விக்கும் உயிர்ப் பொருளாய்
என்னில் உறைந்திடும் இறை உணவே

2. மனக் கவலையில் ஆறுதலாய்
உள்ளம் தளர்கையில் தேறுதலாய்
என் வாழ்க்கையின் மாறுதலாய்
என்னில் வாழ்ந்திடும் மறைபொருளாய்

## 283

**அன்பே என் நெஞ்சத்தில் வருவாயே**
உயிரே என் உணர்வோடு இணைவாயே
உன் அருள் பார்வை என்மீது கதிர்வீசும் போது
இறையே என் கண்கள் பன்னீர் சிந்தும்

1. அழியாத இராகத்தில் அனலாகும் உன் வார்த்தை
அன்போடு என் மனதில் தங்கும்
அலை பாயும் கடல் தன்னில் அலை மோதும் என் வாழ்வு
உன் பார்வை அருள் பெற்றால் தேறும்
இயேசுவே துயர் நீக்கும் மன்னன் நீயே
இருள் போக்கும் பகலவன் நீ
நலம் காக்கும் நாயகன் நீ
தேவனே வரம் நல்கும் நல்லவன் நீயே
துணையாகும் நண்பன் நீ
பார்போற்றும் நல்லவன் நீ
வழியும் நீ உண்மையும் நீ உயிரும் நீயே

2. உனைப் பாடும் உயிர்களுக்குத் தரிசனம் நீ தருவாயே
உனைத் தேடும் நல்ல நெஞ்சம் தாராய்
விடியலுக்காய்க் காத்திருக்கும் என் தாகம் தணிப்பாயே
வற்றாத ஜீவ நதியாவாய்
இயேசுவே எனை யாளும் ஆயன் நீயே
வழி நடத்தும் ஆயன் நீ வாழ்வளிக்கும் வள்ளல் நீ
தேவனே உயிர் காக்கும் தெய்வம் நீயே
உடனிருக்கும் தோழன் நீ எனில் வாழும் என்னவன் நீ
வழியும் நீ உண்மையும் நீ உயிரும் நீயே

**284** **அன்பே என்றானவா**
என் எண்ண நிறைவானவா
உன் மேன்மை வானம் என்றா கினாலும்
என் ஏழ்மை குறை தீர்த்தவா

1. வளம் காய்ந்து நிழல் தேடும் நேரங்களில்
வளமோடு எனை சூழும் நதியாகிறாய்
பிரிந்தோடி மனம் வாடும் வேளைகளில்
எனைத் தேற்றும் புதுவாழ்வு மழையாகிறாய்
மலை போன்ற உன் அன்பு முன்னாலே தான்
என் தாழ்வை உன் மாண்பை நான் காண்கின்றேன்

2. உன் பாத நிழல் போதும் என ஏங்கினேன்
உன் நெஞ்ச மலராலே எனை மூடினாய்
கண்பார்வை அருள் போதும் என நாடினேன்
என் பாதை வழி செல்லும் துணையாகினாய்
மண்மீது கால் ஊன்றும் தொடு வானமாய்
என் மீது நீ வந்து நானாகிறாய்

## 285 அருள் வடிவே ஆனந்தமே வரம் ஒன்று தருவாயா

திருவிருந்தே அருமருந்தே அருகினில் வருவாயா
ஒருகணம் உனை அழைத்தேன் - நீ என்மனம் அமர்வாயா
என்மனம் நீ அமர்ந்து நீ ஒளிதனைப் பொழிவாயா
வழியாக வாழ்வாக வா

1. ஆகாயம் போன்ற உள்ளம் உன்னிடம் பார்க்கிறேன்
மடைதிறந்த வெள்ளம் போல் உன் உறவைப் பார்க்கிறேன்
மலைபோன்ற உந்தன் உள்ளம் மன்னிக்க கேட்கிறேன்
தாய்மைக்கு மேலாம் உந்தன் அன்பிதயம் கேட்கிறேன்
எனக்கினி ஏதுமில்லை நீதானே என் எல்லை
அடைவேனே உன்னை

2. ஊதாரிமைந்தன் என்னை மன்னித்து ஏற்கிறாய்
வழிமாறிபோன என்னை கரமேந்தி காக்கிறாய் - 2
புகழ்வந்தசுடராம் என்னைமலை மீது ஏற்றினாய்
புறந்தள்ளி ஒதுக்கிய என்னை மூலைக்கல் ஆக்கினாய்
இனி உனக்காக வாழ்வேன் இகமதை நானும் வெல்வேன்
உயிர்ப்பேனே உன்னில்

## 286 அருள்தேவன் எழுகின்ற நேரம் ஆனந்த ராகங்கள் பாடும்

இறையாற்றல் அருளாலே உருவாகும் புதுவாழ்வு
உளமெல்லாம் நிறைவாகுமே - தேவா
உலகெல்லாம் மகிழ்வாகுமே

அமுதூட்டி உயிர்காக்கும் தாயன்பு குறைந்தாலும்
உயிரூட்டும் உமதன்பு குறையாதைய்யா
மகிழ்வூட்டும் விருந்தாக - ஆ - 2 எழுந்திங்கு நீ வந்தாய்

நிறைவூட்டும் உமதன்பில் நான் என்றும் உயிர்வாழ்வேன்-2
நானிலமெங்கிலும் அன்பெனும் தீபங்கள் ஒளிசிந்தும்
உளமதின் மகிழ்வினில் உறவெனும் ராகங்கள் உருவாகும்
உயிரினில் உணர்வினில் கலந்திடும் நாதா
காலங்கள் தோறும் பாடிடுவேன் பாடிடுவேன் நான் பாடிடுவேன்

2. அலையாக துன்பங்கள் சூழ்கின்ற பொழுதெல்லாம்
தேவாநின் திருப்பாதம் சரணடைந்தேன்
அரணாக நீ நின்று - ஆ - 2 கனிவாக எனைக் காத்தாய்
பிரியாத உறவாகி உளமெல்லாம் மகிழ்வானாய் - 2
மனதினில் உறுதியாய் மாபரன் உன்வழி சென்றிடுவேன்
நீதியின் தீபங்கள் பாரினில் ஏற்றியே மகிழந்திடுவேன்
விடுதலை கீதங்கள் ஊரெங்கும் முழங்கியே
நாளெல்லாம் மகிழ்வுடன் வாழ்ந்திடுவேன்
வாழ்ந்திடுவேன் நான் வாழ்ந்திடுவேன்

287 **அன்பென்னும் வீணையிலே - நல்**
ஆனந்தக் குரலினிலே
ஆலய மேடையிலே - உன்
அருளினைப் பாடிடுவேன்

1. அகமென்னும் கோவிலிலே - என்
தெய்வமாய் நீ இருப்பாய்
அன்பென்னும் விளக்கேற்றி - உன்
அடியினை வணங்கிடுவேன்

2. வாழ்வென்னும் சோலையிலே - நல்
தென்றலாய் நீ இருப்பாய்
தூய்மையெனும் மலரை - நான்
தாள்மலர் படைத்திடுவேன்

3. தென்றலே கமழ்ந்திடுமே - என்
தெய்வமே நீ இருக்க
இன்பமே மலர்ந்திடுமே - நான்
உன்னில் வாழ்ந்திருக்க

**288** **அப்பத்தில் வாழும் தேவனே - என்**
உள்ளத்தில் எழுந்து வாருமே } 2
அனுதினம் உம்மைப் போற்றிட
அகமகிழ்ந்து வாழ்ந்திட
ஆன்ம உணவாய் வா - ஆ

1. மாசுமறுவற்ற இயேசுவின் உடலை
உண்டு மகிழ வாருங்கள்
பாசம் பொழியும் கருணை தேவனின்
நேசக் கரத்தில் சேருங்கள்
மனதின் சுமைகள் நீங்கிட
மகிழ்ச்சியில் நான் நிலைத்திட
வறுமை பிணிகள் அகன்றிட
வாழ்வில் வளங்கள் சேர்ந்திட
விண்ணகம் போற்றும் உன்னத தேவனே
என்னகம் எழுந்து நீவா - ஆ

2. மழலை செல்வமே மரியின் மைந்தனே
மகிமை தேவனே என்னில் வா
மண்ணவர் போற்றும் மாபரன் இயேசுவே
மாண்புடன் என்னை அணைக்கவா
உலகின் படைப்புகள் யாவுமே
உந்தன் திருப்புகழ் பாடுமே
உண்மை தேவன் நீயன்றோ - என்
உறவின் இருப்பிடம் நீயன்றோ
மாறும் உலகில் மாறா அன்பை
என்னில் விதைத்திட வா - ஆ

**289** **அன்பும் அமைதியும் நீரே**
இன்ப நற்கருணை நாதா
நன்றியும் துதியும் புகழும்
நாளும் உமக்கே இறைவா - 2
இயேசுவே இறைவா போற்றி
உந்தன் நேச நற்கருணை போற்றி

1. எந்நிதி இருந்தும் யார் இருந்தும் - உம்
சந்நிதி போலெது பூமியிலே
கண்ணெதிரே நின்று கரம் நீட்டும்
கருணையே உம்மில் சரணடைந்தோம்
இயேசுவே . . . . போற்றி - 2
அன்பும் . . . . நாதா

2. ஆசையில் உழன்றோம் சுகமிழந்தோம் - எம்
அறிவியல் உலகில் நெறியிழந்தோம்
பாசமுடன் நீர் பரிமாறும்
கருணையில் நலம் யாம் கண்டோம்
இயேசுவே . . . . போற்றி - 2
அன்பும் . . . . நாதா

**290** அன்பு தெய்வமே அன்னை வடிவமே
தந்தையே என் தோழனே
சொந்தம் நீர்தானே

1. உலகை படைத்து காத்தவா - என்
உள்ளத்தில் ஒளியை ஏற்றவா ஆ ஆ ஆ ஆ
உறவும் நீ என் உயிரும் நீ - 2
உண்மை வழியை குறித்தவா

2. அன்பினால் என்னை படைத்தவா - உன்
ஆவியை என்னில் அளித்தவா - ஆ ஆ ஆ ஆ
அருள்வரம் தினம் தினம் - 2
அகத்தில் ஞானம் ஈந்தவா

**291** அன்புக் களஞ்சியமே - எந்தன்
இதயத்தின் உறைவிடமே
இன்பத் தேன்மொழியே - எங்கள்
நெஞ்சத்தின் நாயகனே
மாந்தர்களின் நிலை உயர
மண்ணகம் வந்தவனே
எங்கள் நண்பன் ஆனவனே

1. பாதைகள் புரியா ஏழைகள் வாழ்வில்
கலங்கரை சுடரொளியே
பாதைகள் தேடும் விழிகள் நோக்கும்
கனியாய் வந்தவனே
அருள் ஒளியே ஆனந்தமே
விடியலின் கதிரொளியே
உண்மையான வாழ்வு தந்து
மேன்மையான வாழ்வு ஈந்து
மறைபொருளே முழு நிலவே
வருவாய் எந்தன் இயேசுவே

2. தனிமை வாழ்வின் இருளை நீக்க
துணையாய் வந்தவனே
தணியா எங்கள் உள்ளம் திறந்து
கோயில் கொண்டவனே
மறைகடலே ஆனந்தமே
மறையாக் கதிரொளியே
நன்மையான வாழ்வு தந்து
தின்மையான வாழ்வுக்கும்
திருவருளே வழிமுதலே
வருவாய் எந்தன் சுகம் நீயே

**292** **அன்பு தேவன் சொன்ன வாக்கு**
அழிவு காண்பதில்லை என்று
வாழும் மாந்தர் காணும் பாதை
புதிய உலகம் சேருமே
தன்னைத் தந்த தலைவன் அவரை
உறவு வாழ்வில் சுவைத்து மகிழ்தல்
நெஞ்ச நிறைவு தந்து தேற்றும்
இனிய அமைதி தோன்றுமே
கண்டுகொண்டோம் இயேசுவே உம்மையே
காலமெல்லாம் காக்கும் உந்தன் அருளையே

1. திராட்சைக் கொடி நானே என்று தன்னை அளித்தார்
நீங்கள் அதன் கிளைகள் என்று நம்மை அழைத்தார்
நல்ல மேய்ப்பன் நானே என்று தன்னையேத் தந்தார்
நீங்கள் என் மந்தை என்று நம்மை இணைத்தார்
நண்பனுக்காய் உயிர் தருதல் மேலான அன்பு
அன்புக்கு இலக்கணமே இயேசுவே லாலா லலலா . . .
உறவின் பாலம் இயேசுவே உதயகீதம் இயேசுவே
எல்லார்க்கும் எல்லாமே இயேசுவே

2. வானின் உணவு நானே என்று தன்னைத் தந்தாரே
என் நினைவில் வாழ்க என்று நம்மை அணைத்தார்
உலகின் ஒளி நானே என்று தீபம் ஆனாரே
தீப அருளை நாடு என்று நம்மைப் பணித்தார்
உலகத்தின் இறுதிவரை உன்னோடு வாழ்வேன்
வாழ்வுக்கு ஆதாயம் இயேசுவே
தியாக தீபம் இயேசுவே வாழ்வின் உணவு இயேசுவே
எல்லார்க்கும் எல்லாமே இயேசுவே

## 293 ஆட்கொள்ள வருவாய் அன்பிறைவா - உன்
ஆலய விருந்தில் இடந்தருவாய்

1. வாழ்வது எனக்குள் நானல்ல - என்னில்
வாழ்வது நீயே வானுயிரே
வாழ்க்கையின் வளமாய் வாழ்பவனே - உன்னில்
வாழ்ந்திடும் சேயைக் காத்திடுவாய்

2. தாழ்மையில் துவைத்த ஆன்மாவை - உன்
தாள்களில் வைத்தேன் தூய்மை பெற
வானக மழையே விண்புனலே - மகிழ்
வான உன் புனலில் ஆடுவேனோ

3. பாவியின் ஏகக் காவலனே - உன்
ஆவியை அனுப்ப வேண்டுகிறேன்
பூவினைப் புரக்கும் வாலறிவா - எம்
ஆவியை உனதாய் மாற்றிடவா

## 294

**ஆனந்த மழையில் நானிலம் மகிழ**
மன்னவன் எழுகின்றார்
ஆயிரம் நிலவொளியோ - என்னை
ஆண்டிடும் இறையரசோ
அவனியை மாற்றிடும் அருட்கடலோ

1. மன்னவனே என்னிதயம் பொன்னடி பதிக்கின்றாய்
விண்ணகமே என் இதயம் அன்புடன் அமைக்கின்றாய்
இனி என் வாழ்விலே ஒரு பொன்னாளிது
பண்பாடவோ என்றும் கொண்டாடவோ
மலர்கின்ற புது வாழ்விலே - இனி
சுகமான புது ராகமே
என்றென்றும் உண்டாகும் பேரின்பமே
பேரின்பமே பேரின்பமே

2. சேற்றினிலே தாமரையாய் தேர்ந்தென்னை எடுத்தாயோ
காற்றினிலே நறுமணமாய் கலந்தென்னில் நிறைந்தாயோ
எனில் ஒன்றாகினாய் நான் நன்றாகினேன்
பணிவாழ்வுக்காய் என்னைப் பரிசாக்கினேன்
மலர்கின்ற புது வாழ்விலே . . .

## 295

**இதய வானில் பறக்கின்றேன்**
இனிய உலகம் காண்கின்றேன்
எங்கு நோக்கிலும் உமதன்பு
எதிலும் உமது இறையன்பு
என்றும் மாறா பேரன்பு

1. வானெங்கும் பறந்து திரியும் பறவை இனங்கள்
ஊரெங்கும் ஊர்ந்து தவழும் உயிரினங்கள்
கடலெங்கும் காணக் கிடக்கும் காட்சிகள்
காற்றினில் கலந்து நிற்கும் சாட்சிகள்
எங்கும் இறைவா உந்தன் இயக்கமே

2. காடெங்கும் வனப்பு மிகுந்த பசுமை இனங்கள்
நாடெங்கும் வியப்பு நிறைந்த விந்தைப் பொருட்கள்
நிலமெங்கும் நிதமும் காணும் நிகழ்வுகள்
நெஞ்சங்கள் நாளும் பாடும் நாதங்கள்
எங்கும் இறைவா உந்தன் இயக்கமே

**296** **இதயமே எங்கள் இன்பமே எழுந்து வாருமே**
என்றும் நீர் எங்கள் உயிரினில் உறவாடவாருமே
உள்ளம் உமக்குத் தானே எந்தன்
தேவன் உமக்குத் தானே

1. தேடி வந்து உயிரைத் தந்து வாழும் வழியாகினாய்
வாடி நின்ற அவலம் நீங்க கரங்கள் நீட்டினாய்
வறுமை நோயை மாற்றவே வாரும் தேவனே
வாழவா எம்மை ஆள வா வாழ்வின் தேவனே
வாரும் இயேசு தேவனே

2. அன்புப் பணியில் அமுத மொழியில் அமைதி அரசாகினாய்
நலிந்த மனமும் விடியல் காண திடத்தை நீ தந்தாய்
குறைகள் உள்ள வாழ்விலே நிறைவைத் தாருமே
வாழவா எம்மை ஆள வா . . . .

**297** **இதயம் இணையும் நேரம் இன்பத் திருவிழா**
இறைவன் உறையும் நேரம் அன்புப் பெருவிழா
ஆடுவோம் பாடுவோம் ஆனந்தமாய் வாழுவோம்
அன்பினில் பண்பினில் அவனியை மாற்றுவோம்

1. இனிய ராகத்தில் இன்ப ஓசையில்
இதய ராகம் எங்கும் ஒலிக்குது
அன்புப் பாதையில் அருள் வடிவினில்
அறங்கள் யாவும் ஆடிப் பாடுது
இறைவன் வாழும் இல்லம் கட்டி எழுப்பவும்
இறைவன் ஆட்சி செய்யும் குடும்பம் அமைக்கவும்
அன்பனாய் நண்பனாய் என்னில் வருகின்றார்

2. புதிய பாதையில் புதிய பார்வையில்
புதிய வாழ்க்கைப் பயணம் தொடங்குது
புரட்சி நெறிகளில் புகழ்ச்சிப் பாக்களில்
புதிய பூமி மலரப் போகுது
அமைதி வாழும் இல்லம் கட்டி எழுப்பவும்
அன்பு தெய்வம் வாழும் உறவு மலரவும்
அன்பனாய் நண்பனாய் என்னில் வருகின்றார்

**298** **இதயம் எழுந்து வந்தவனே - என்**
இருளைப் போக்க வந்தவனே
அமுதம் சுமந்து நின்றவனே - என்
ஆன்மா மீட்க வந்தவனே

1. இதுவரை வாழ்வில் இலக்கணம் இல்லை
இறைவா கரையாவாய்
இளமையின் துடிப்பில் உன் பதம் மறந்தேன்
எனக்குள் விதையாவாய்
என் விரல் கொண்டே விழிகளை சிதைத்தேன்
பார்வைக்கு ஒளியாவாய்
என் பரனே உன்னிடம் வந்தேன்
எனக்குள் நீயாவாய் - என்றும் எனக்குள் நீயாவாய்

2. ஓவியப் பிழையாய் என் முகம் இழந்தேன்
இறைவா எனை வரைவாய்
ஓடிய மட்டும் ஓடி நான் நின்றேன்
இறைவா முடிவாய் வா
உன்னுடல் தாங்கி பாவி நான் நிற்பேன்
இறைவா எனில் வருவாய்
எனக்கொரு வாழ்க்கை இருட்டினில் கிடக்க
ஜோதியை ஏற்றிட வா - அருள் ஜோதியை ஏற்றிடவா

**299** **இதை என் நினைவாய் செய்யமாட்டாயா**
என் உடலை உண்டு உயர மாட்டாயா
குருதி அருந்தி திருந்த மாட்டாயா
என்னைப் போல வாழ மாட்டாயா - நீ

1. கன்னத்தில் அறைந்தால்
கன்னத்தைக் காட்டச் சொன்னேன்
தீமை செய்தால் நன்மை செய்யச் சொன்னேன்
இதற்கு மேல் நான் என்ன கேட்கின்றேன் - வெறும்
வார்த்தையல்ல வாழ்ந்தும் காட்டிவிட்டேன்

2. பணிவிடை பெற அன்று
பணியை செய்யச் சொன்னேன்
தாழ்ச்சி கொண்டால் உயர்வு உறுதியென்றேன்
இதற்கு மேல் நான் என்ன கேட்கின்றேன்
உனை வாழச் செய்ய
வாழ்ந்தும் காட்டிவிட்டேன்

**300** **இதயமே இதயமே என்னில் எழுந்து வா**
உதயமாய் மனதினில் ஒளியை ஏற்றவா
வாழ்வினில் வலிமையாக வா
வசந்தமாய் என்னில் வாழவா
இதயமே . . . . . . . ஏற்றவா

1. என்றும் எனதுள்ளம் நீயாக வேண்டும்
தாங்கிடும் உனது கரம் எனைக் காக்க வேண்டும்
நன்மை வடிவாக நாதா நீ வேண்டும்
நாளும் புதுவாழ்வு நான் வாழ வேண்டும்
துயரும் பிணியும் என்னை இங்கு சூழ்கின்ற போது
துணையாக மருந்தாக நீ என்னில் வர வேண்டும்

2. வாழும் வாழ்வெல்லாம் நீயாக வேண்டும்
வசந்தம் என் வாழ்வில் நிலையாக வேண்டும்
எல்லா துன்பங்கள் எனை நீங்க வேண்டும்
தெய்வம் உன்பாதம் நான் சேர வேண்டும்
தாயும் தந்தை யாவுமே நீயாக வேண்டும்
தயவோடு எனை நாளும் எனை நடத்திட வேண்டும்

**301** **இமைப்பொழுதேனும் எனைப்பிரியாமல்**
காக்கும் நல்தேவனாக
எல்லாமும் தந்து என்னோடு இருக்கும்
இயேசுவே வாழ்க வாழ்க - 3

1. இயேசுவே உமது பெயரைச் சொன்னாலே
இதயத்தில் கவலைகள் மறையுதய்யா
நெஞ்சினில் உமையே நினைக்கின்றபோது

உள்ளத்தில் அமைதி பிறக்கின்றது
நலம் தரும் மன்னவனே எழுந்திங்கு வாருமையா
உலகில் நல் புதுவாழ்வு தருபவர் நீரல்லவா
ஆயிரம் ஆயிரம் பாடல்கள் பாடி
ஆண்டவா உம்மை துதிக்க வந்தேன்

2. தாளத்தை இழந்த பாடலைப்போல
உனைநான் பிரிந்தேன் வாழ்க்கையிலே
உன்திரு வார்த்தையை தியானிக்கும் போது
பலன்தரும் நல்ல நிலமானேன்
ஆகாயகங்கையைப்போல் அருள்மழைபொழிபவரே
பூமழைதூவி உந்தன் பொற்பாதம் பணிகின்றேன்
கண்மணிபோலெனை காக்கும் ராஜா
கானங்கள் இசைத்து துதிக்க வந்தேன்.

**302** **இயேசுவே என் இறைவனே**
இணையில்லாத தலைவனே
உயிராய் என்னில் எழுந்துவா
உறவாய் என்னில் கலந்து மகிழவா
நீயாக நான் மாறவா

1. உனது உடலை உண்ணும் நானும்
வளம்பெறுவேன் வாழ்வடைவேன்
உன்னில் இணைந்து நான் மகிழுவேன்
உடைந்திடும் என்வாழ்வினில் உயிரூட்டும் உணவே வா - 2
உறவின் பாலம் நான் அமைக்கவா - இயேசுவே - 2

2. உனது உதிரம் பருகும் நானும்
பலம்பெறுவேன் பலனடைவேன்
என்னை இழந்து நான் மகிழுவேன்
உனக்காக நான் வாழ்ந்து உன்னோடு நான் சேரும் - 2
புனிதநாளை நான்காணுவேன் - இயேசுவே - 2

## 303

**இதோ இறைவனின் செம்மறியே**
இவரே நம் பாவம் போக்குகின்றார்
அவனியில் அமைதியை ஆக்குகின்றார்

1. கடவுள் நம்மோடு இருக்கின்றார் - நற்
கருணையின் வடிவில் திகழ்கின்றார்
உடலும் உள்ளமும் நலம் பெறவே - இவர்
உணவின் வடிவில் வருகின்றார்
இதயத்தின் கதவுகள் திறக்கட்டுமே - இறை
இயேசுவே அரசராய் அமரட்டுமே

2. இன்பமும் துன்பமும் நமக்கு ஒன்றே - இவர்
அன்பில் ஒன்றாய் இணைந்து விட்டால்
வன்மமும் பகையும் மறைந்துவிடும் - இறை
வல்லமை நம்மிடம் நிறைந்துவிடும்
இதயத்தின் கதவுகள் திறக்கட்டுமே - இறை
இயேசுவே அரசராய் அமரட்டுமே

## 304

**இயற்கையில் உறைந்திடும் இணையற்ற இறைவா - என்**
இதயத்தில் எழுந்திட வா
என்றும் இங்கு என்னோடு நின்று என்னை அன்போடு
காத்திடு என் இறைவா

1. உந்தன் அன்பு உறவின்றி எனக்கு இங்கு
சொந்தம் சுற்றம் சூழ்ந்திட பயன் என்னவோ
மெழுகாகினேன் ஆ . . . திரியாக வா ஆ . . .
மலராகினேன் ஆ . . . மணமாக வா

2. உருவில்லா இறைவன் உன் உதவியின்றி
உலகத்தில் எதுவும் நடந்திடுமோ
குயிலாகினேன் ஆ . . . குரலாக வா ஆ . . .
மயிலாகினேன் ஆ . . . மழையாக வா

**305** **இரக்கம் நிறைந்த தெய்வமே**
இதயம் திறந்து அழைக்கின்றேன்
உன்னைப் பாட வருகின்றேன்
உன்னை அன்பு செய்கின்றேன்

1. பொன்னும் பொருளும் எனக்கு இருந்தாலும்
பெயரும் புகழும் என்னைச் சூழ்ந்தாலும்
உதயம் தேடும் மலரைப் போலவே
உயிரின் உயிரே உன்னைத் தேடினேன்
நிலவில்லா வானம் போலவே
நீயில்லா வாழ்வும் வாழ்வில்லை
நம்பிக்கையின் நாயகா நலன்களின் தேவா வா
வார்த்தை ஒன்று பேசுமே வளங்கள் எல்லாம் கூடுமே

2. தேடும் உலக செல்வம் நிறைந்தாலும்
பதவி பட்டங்கள் உயர்வைத் தந்தாலும்
அலைகள் ஓயா கடலைப் போலவே
அன்பே உனது அருளை வேண்டினேன்
தாயில்லா குழந்தை போலவே
தவிக்கின்றேன் ஏக்கம் போக்குமே
முழுமுதல் இறைவனே மூவொரு வேந்தனே
காலம் கடந்த தேவனே - உன்
கருணை ஒன்றே போதுமே

**306** **இராஜாதி இராஜனே தேவாதி தேவனே**
விண்ணோர் வணங்கிடும் விமல இராஜனே

1. வானின்று இறங்கிய உணவு நானென்றீர்
ஆவலாய் உண்பவர் ஆன்ம வாழ்வைக் கண்டிடுவர்
தேவாதி தேவனே இராஜாதி இராஜனே
போற்றித் துதித்துப் பாடிடுவோம்

2. அன்பினால் உம்மையே உணவாகத் தந்தீர்
அன்புடன் உலகினில் வாழ்வும் வழியும் காட்டினீர்
தேவாதி தேவனே . . .

3. என்னில் நீர் நிலைத்தாலே வாழ்வு உண்டென்றீர்
உம்மில் நான் நிலைக்கவே விரைந்து எம்மில் வந்திடுவீர்
தேவாதி தேவனே . . .

**307** **இறையவனே என் வழித்துணை நீயே**
இறைஞ்சிடும் ஏழையில் வாழ்க

1. திசை தெரியாத மரக்கலம் போல
திரிந்திடும் வாழ்வு உனதொளி காண
கலங்கரை தீபம் எனக்கு நீ ஆவாய்
நலம் தரும் வானின் உணவென வாராய்

2. இகவழியாகி அகவொளியாவாய்
பகைமையை நீக்கிப் புது உறவாவாய்
தகுதியில்லாத எளியேனைத் தேடி
எழுந்துள்ளம் வாழ இறைவனே வாராய்

3. பழம் பெரும் பாவப் பழியினை நீக்க
வளம் தரும் தேவ மகனுனை ஏற்று
புது மனுவாகப் புனிதத்தில் உயர்ந்த
புண்ணியனே என் இறைவனே வாராய்

**308** **இறைவனின் உடலிது அவரது இரத்தமிது**
அவர் நினைவாய் நாம் செய்யும்
மீட்பின் சின்னமிது - நம்
வாழ்வின் உணவிது

1. அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும்
வேளைகள் எல்லாம் விசுவாசமே
ஆண்டவர் வருகின்ற நாள் வரை நாமும்
மரணத்தை அறிக்கை செய்வோமே
ஆதலினால் தகுதியில் அப்பத்தை உண்டிடுவோம் - நாம்
கிண்ணத்தில் பருகிடுவோம்

2. பிளவுகள் அகற்றி பிரிவினை மறந்து
விருந்தினில் ஒன்றாய் கூடிடுவோம்

உறவினை வளர்க்க உள்ளத்தைப் பகிர்ந்து
விருந்தினை உலகினில் படைத்திடுவோம்
தினந்தோறும் திருவிருந்தில் இறைவனில் கலந்திடுவோம்
- இறை
உயிராய் வாழ்ந்திடுவோம்

## 309

**இறைவனே வானக விருந்து தந்தார்**
இதயங்கள் மகிழ்ந்திட எழுந்து வந்தார்
இறைவனின் படியேறி
என்னைத் தந்தேன் விருந்துண்டேன்
உன்னிடத்தில் எந்நாளுமே சரணடைந்தேன்

1. எந்தன் நாவில் தினம் வந்திடுவார்
எந்தன் நெஞ்சில் என்றும் தங்கிடுவார்
உந்தன் அன்பில் தினம் வளர்ந்திடுவேன்
என்னில் இன்பம் என்றும் நிலைத்திடுமே
திருவிருந்தே தேனமுதே திருவடி பணிகின்றேன்
மலராக மலர்ந்து வந்தேன் மனதினிலே பூஜை செய்வேன்

2. விண்ணின் அருள் என்னில் பொழிந்திடுவார்
கண்ணின் மணி எனக் காத்திடுவார்
அன்பின் பாடல் என்றும் இசைத்திடுவேன்
என்னில் தேவன் என்றும் மகிழ்ந்திடுவார்
தினம் தினம் நான் வருகின்றேன்
விருந்தினில் மகிழ்கின்றேன்
மலரோடு மகிழ்ந்து வந்தேன் மனதினிலே பூஜை செய்வேன்

## 310

**இனிய அன்பு தேவனே - எம்**
இதயம் எழுந்து வாரும் - இனி
எந்தன் வாழ்வு உமதே

1. துன்பங்கள் ஆயிரம் அலைகளாய்
என்னிடம் வருகின்றன - அதில்
துவண்டு நான் போயினும் - உந்தன்
திருமுகம் காண்கின்றேன் - என்றும்

நீ இருக்க எனக்கேன் குறையோ - உயர்
இறைவன் அன்பு என்றும் போதுமே - துயர்
யாவுமே என்றும் தீருமே

2. தீபம் போல் வாழ்வு உன்முன்
என்றும் ஒளிரட்டும் - அதில்
சுடர்போல் நானும் - என்றும்
உன்னால் ஒளிரணும் - என்றும்
நீ இருக்க குறையே இல்லையே - இந்த
இறைவன் கருணை என்றும் போதுமே - எல்லை
இன்றியே கடலாகுமே

**311**

**இனிய தேவன் எழுந்து வரும் நேரமிது**
இதயங்களை திறந்து அவரை வரவேற்போம்
எளிய மாந்தர் மகிழ்ந்து வாழ உடன் வருகின்றார்
எழுச்சி பொங்க இன்று அவரைப் பாடுவோம்
அன்பு தேவனைப் புகழ்ந்து நாளும் பாடுவோம்
அன்பு ஆண்டவரைப் போற்றி நாளும் பாடுவோம்

1. இதயம் அன்பைத் தேடும்போது
தெய்வம் நம்மில் வருகின்றார்
இணைந்து மாந்தர் வாழும்போது
தேவன் மகிழ்ச்சி கொள்கின்றார்
அன்பு பாதையில் ஆக்கம் பெறுகின்றோம்
உறவுத் தோழமையில் அர்த்தம் காண்கின்றோம்
இயேசுவே தெய்வமே வாருமே இதய வேந்தனே
அன்பு தேவனை . . .

2. உழைக்கும் மக்கள் சிரிப்பினிலே
தெய்வம் நமக்குத் தெரிகின்றார்
நீதி நெறியில் அகிலம் வளர
தேவன் இன்று எழுகின்றார்
வாழ்வைத் தரும் உனையே உண்டு உயிர் பெறுவோம்
வளமை சேர்த்திடவே உம்மில் இணைந்திருப்போம்
அன்பனே நண்பனே வாருமே புதுமை வேந்தனே
அன்பு தேவனை . . .

**312** **இன்றும் என்றும் திருநாளாம் - நம்**
இயேசுவின் பாதத்திலே
அடியவர்கெல்லாம் பெருவிருந்தாம் - அவர்
ஆலய பீடத்திலே

1. மன்னவர் தந்த விருந்தாகும் - அவர்
மகனுக்கு திருமணமாம்
மாநிலம் எல்லாம் அழைக்கின்றார் - அது
மாறாத பேரின்பமாம்

2. கொடியில் கிளைகள் சேர்ந்திருந்தால் - அவை
கோடியாய் பலன் தருமாம்
இயேசுவில் நானும் இணைந்திருந்தால் - என்றும்
இல்லாத பேரின்பமாம்

3. உயர்வுகள் தாழ்வுகள் மறைந்திடுமே - இந்த
விருந்தினில் நாம் அமர்ந்தால்
உயர்ந்த நல்வாழ்வு விடிந்திடுமே - அதில்
உண்டாகும் பேரின்பமே

**313** **இஸ்ராயேலின் நாதனாக வாழும் ஏகதெய்வம்**
சத்ய ஜீவ வழியான தெய்வம்
நடுத்தீர்க்க பூமியில் பிறந்த ஸ்நேக தெய்வம்
நித்ய ஜீவனாக வாழும் தெய்வம்
அப்பா பிதாவே தெய்வமே உமது ராஜ்யம் வருகவே
உம் திருசித்தம் பூமியில்
என்றென்றும் நிறைவேறட்டுமே - 2

1. செங்கடலில் அன்று நீர் பாதை திறந்தீர்
பாலையில் மக்களுக்கு மன்னா பொழிந்தீர்
பகலில் மேகத் தூணானீர்
இரவில் நெருப்புத் தணலானீர்
சீனாய் மாமலை முகட்டினிலே
நீதிக் கட்டளைகள் பகர்ந்தீரே - அப்பா பிதாவே

2. மனிதனாய் மண்ணில் அவதரித்தீர்
மனிதர்க்காய் உயிரை பலி தந்தீர்
உணவும் பானமும் ஆகி நின்றீர்
உலகம் வாழ்ந்திட உயிரானீர்
உண்மையும் வழியும் ஆனவர் நீர்
உம்திருநாமத்தை வாழ்த்துகின்றோம் - **இஸ்ராயேலின்**

**314** **உணவாக எழும் தெய்வமே**
உறவாட எமில் வாருமே
தனைத் தந்த தெய்வம் எமை ஆள வந்தால்
தனிமைகள் பறந்தோடுமே
தனி இன்பம் எமை சூழுமே

1. பிரிந்ததால் வீழ்ந்திட்ட மானுடத்தை
இணைத்திடத் தோன்றிய தேனமுதே
பகைமையால் வளர்ந்திட்ட பிளவுகளை
போக்கிட மலர்ந்திட்ட வான் கவியே
திருவுணவும் திருப்பானமும்
உனதுறவை எடுத்துச் சொல்லும்
ஒருபந்தி சமபந்தி எந்நாளும் மலரச் செய்யும்

2. காலமெல்லாம் திருவுணவில் தனை வழங்கும்
கரையில்லா உனதன்பை நான் மறவேன்
கலங்கிடும் வேளையில் கைவிடாமல்
கரம்பிடிக்கும் என் தேவா உனைப் பிரியேன்
காத்திருக்கும் கண்களுக்கு காட்சியாக நீ வருவாய்
கனிவுடனே தங்கிடுவாய் ஏழை என் நெஞ்சினிலே

**315** **உணவான யேசுவே உயிரான தெய்வமே**
உறவாக வாழ்ந்திட அருள்தாருமே
அன்பான யேசுவே அருமையான தெய்வமே
உம்மோடு வாழ்ந்திட துணை தாருமே

1. உணவைத்தேடி அலைந்தோம் - எங்கள்
ஆன்ம பசி தீர்ந்திடச் செய்தாய்

உறவைத்தேடி அலைந்தோம் - எம்மில்
உயிரைத் தந்து காத்தாய் - 2
இனி வாழ்வது நானல்ல
என்னில் வாழ்வது உம் உயிர்தானே - 2
உணவே உயிரே வா - 2 என்

2. அமைதி தேடி அலைந்தோம் - எம்மில்
அமைதி தந்து காத்தீர் இறைவா
அருளைத்தேடி அலைந்தோம் - உந்தன்
அருளைத்தந்து நிறைத்தாய்
இனி வாழ்வது நானல்ல
என்னில் வாழ்வது உம் உயிர்தானே
உணவே உயிரே வா - என்

**316** **உயிரான உணவு வடிவில் இயேசு வருகிறார் - நம்**
உடன் வாழும் ஆவலோடு தேடி வருகிறார்
உண்ணும் உணவு நம்மில் இணைந்து ஒன்றாகும் போல்
உள்ளம் ஏற்கும் நம் வாழ்வு இயேசுவாகவே

1. நீதி தேடும் நெஞ்சம் வாழ இயேசு துடிக்கிறார்
அநீதிபுரியும் நெஞ்சம் செல்ல இயேசு மறுக்கிறார்
ஒருவர் ஒருவர் புரிந்துவாழும் கூட்டுவாழ்விலே - 2
ஒன்றிநின்று உறவை வளர்த்து மகிழ்வு காண்கிறார்

2. உழைத்துக் காய்ந்த கரத்தில் தவழ இயேசு சிரிக்கிறார்
உழைக்காதுண்போர் அருகில் வரவே இயேசு அழுகிறார்
இறைமைக் கனவை இகத்தில் மலர்த்தும் மாந்தர் மனதிலே
இறவா உணவாய் தன்னை இணைத்து உறுதி கொடுக்கிறார்

**317** **உலகொன்று தந்து நலமென்று**
கண்ட தெய்வம் வாழ்கவே
உயிர் மூச்சில் நின்று நடமாடுகின்ற தெய்வம் வாழ்கவே
தெய்வம் வாழ்கவே தெய்வம் வாழ்கவே
தெய்வம் வாழ்கவே

1. புவியோடு வானம் மழையாக கண்ட தெய்வம் வாழ்கவே!
அதிகாலை ஒளியில் மலர் காணும் புதிய சொந்தம் வாழ்கவே!
நிலமென்னும் அன்னை உயிர்வாழ தந்த கனிகள் வாழ்கவே!
உறவாடி வாழ உயிர் நாடியான வார்த்தை வாழ்கவே!
எது இங்கு இல்லை உன் அன்பை சொல்ல யாவும்
வாழ்கவே! - 2

2. எது வந்த போதும் எனைத்தாங்குகின்ற தாய்மை வாழ்கவே!
தடுமாறும் போதும் தன் பிள்ளை என்ற தந்தை வாழ்கவே!
சுமைதாங்கி வாழ்வில் சுவை கூட செய்த நண்பர் வாழ்கவே!
இதயங்கள் இரண்டு ஒன்றாகி கண்ட இன்பம் வாழ்கவே!
எது இங்கு இல்லை உன் அன்பை சொல்ல யாவும்
வாழ்கவே! - 2

**318** **உறவாக அலையாக எழுகின்ற இறைவா**
உன் அன்பில் மலரும் இறைபிரசன்னம்
உன் இன்ப இராகம் உலகெங்கும் ஒலிக்க
உணர்வாகவா உடன் வாழவா
உறவாகவா அலையாகவா

1. உறவில் மனங்கள் சங்கமித்தால் இறைபிரசன்னம்
உலகில் உள்ளதைப் பகிர்ந்தளித்தால் இறைபிரசன்னம்
உண்மை நெறியை வளர்த்தெடுத்தால் இறைபிரசன்னம்
உழைப்பின் மாண்பை உணர்ந்துவிட்டால் இறைபிரசன்னம்
அன்பே நீ வா அருளே நீ வா
அகலாக நீ வந்து அகமாள வா
பிரசன்னம் பிரசன்னம் இறைபிரசன்னம்
பிரசன்னம் பிரசன்னம் தெய்வப் பிரசன்னம்

2. நீதி நெறிகள் உயிர்த்துவிட்டால் இறைபிரசன்னம்
நீங்கா வறுமை மறைந்துவிட்டால் இறைபிரசன்னம்
நியாய பூமி மலர்ந்துவிட்டால் இறைபிரசன்னம்
நிம்மதி வாழ்வில் தொடர்ந்துவிட்டால் இறைபிரசன்னம்
நிதியே நீ வா கதியே நீ வா
நீங்காமல் எனைத் தொடரும் நிலவாக வா
பிரசன்னம் பிரசன்னம் இறைபிரசன்னம்

**319** **உறவு ஒன்று உலகில் தேடி**
அலைந்து நான் திரிந்தேன்
உறவே நீ என்றாய் அன்பு தெய்வமே
உறவே வா உயிரே வா எழுந்து வா மகிழ்ந்து வா - 2

1. உள்ளமெனும் கோவிலில் உறவென்னும் தீபமே
வாழ்வெனும் சோலையில் வந்திடும் வசந்தமே
அன்பனே நண்பனே உன்னை அழைத்தேன் வா
ஆன்ம உணவே அருளின் வடிவே அடியேன் இல்லம் வா
உறவின் தெய்வமே என்னில் உறைந்திடவா
அன்பின் சங்கமமே என்னில் தங்கிடவா

2. துன்பமெனும் வேளையில் அன்புடன் அணைக்கவே
துணையென வாழ்வினில் என்னுடன் தொடரவே
இறைவனே இயேசுவே இதயம் எழுந்து வா
நாதனே நேசனே பாசமாய் நீ வா
உறவின் தெய்வமே என்னில் உறைந்திட வா
அன்பின் சங்கமமே என்னில் தங்கிட வா

**320** **உறவைத் தேடும் அன்பனே வா**
உள்ளம் நிறை மனிதமே வா
வாழ்வை வழங்கும் வள்ளலே வா
வழிகள் சொல்லும் மன்னனே வா
வரங்கள் நல்கும் அமுதமே வா

1. பாசம் பகிர்வு கொள்ளும் வாழ்வில்
பரமன் நெஞ்சம் எம்மை நனைத்தது
படைப்பின் பொருளை பகிர மறந்தால்
பகைமை இருள் எம்மை ஒடுக்குது
தன்னை ஈந்த தெய்வமே வாழ்வில் வளமும் தாருமே
மனிதம் தேடி புனிதம் காண உணவில் வாருமே

2. இறைவன் அரசு வாழ்வில் மலர
தன்னை உடைத்த இயேசு வாகுவோம்
இறைமை தேடும் மனித வாழ்வில்
வறுமை நீங்கும் வளமை ஆக்குவோம்
அடிமை அமைப்பு மறையவே ஏழ்மை வறுமை நீங்குமே
அன்புக் கனிவு அர்த்தமென்றால் உறவு வளருமே

## 321 உன்னில் நான் ஒன்றாக உயிரே நீ என்றாக
எந்ன்னில் வா என் மன்னவா

1. நினைவாக சொல்லாக செயலாக எனில் வாழும்
துணையாளன் நீயல்லவா
எனை நாளும் பிரியாமல் உயிரோடு உயிராக
இணைகின்ற என் மன்னவா

2. முதலாகி முடிவாகி முழுதான அன்பாகி
மூன்றாகி ஒன்றானவா
இனிதாக கனிவாக அருள் வாழ்வின் நிறை காண
எனைத் தேர்ந்த என் மன்னவா

3. என் நெஞ்சம் திருக்கோயில் இதிலென்றும் வாழ்கின்ற
என் தெய்வம் நீயல்லவா - உன்
திருமுன்னே எந்நாளும் சுடராக எரிகின்ற
மணி தீபம் நானல்லவா

## 322 உன்னை எண்ணி உன்னை எண்ணி
என்னை இழந்தேன்
உன்னில் வாழ்ந்திடவே என் நேசரே
அஞ்சாதே என்று சொல்லி ஆட்கொண்டாய்
உந்தன் அரவணைப்பில் அடைக்கலமாவேன்
என்னை மாற்ற வந்தேன் உமக்கேற்றவராய் - 2
என்னில் தங்கும் என்னுயிரே என் வாழ்வின் செல்வ

1. பாடும் பறவைகள் கூட்டத்திலே - நான்
பாடாத இனமாய் வாழ்ந்து வந்தேன்
மலர்ந்து மணம் தரும் மலர்களிலே - நான்
மணமில்லா மலராய் வாழ்ந்து வந்தேன்
நீதான் வேண்டுமென்றேன் என்னில் என்றுமே வா நீ
நிம்மதி வாழ்வினையே வாழ நீ கொடுப்பாயே
உந்தன் அன்பை உணர்ந்தே வாழ வந்தேன்
என்னை என்றும் பிரியாத மன்னவனே யேசுவே

2. வார்த்தையாய் பல கோட்டைகளை - நான்
வான்முட்டும் உயரமாய் எழுப்புகின்றேன்
வல்ல செயல் இல்லா சிந்தனைகள் - பிறர்
வாழ்வுக்கு பயனின்றி போகின்றதே
நான் மாற வேண்டும் நல்ல கனிதரும் மரமாய்
விடுதலை வாழ்வினையே வழங்கியே வாழ வேண்டும்
இறைவனின் அரசினை இந்த உலகில்
அமைத்திட அர்ப்பணித்த அன்பான யேசுவே

**323 உன்னருகில் நானிருந்தால்**
துன்பமெல்லாம் இன்பமாகும் இயேசுவே
உன் நிறைவில் நான் வாழ்ந்தால்
என் வாழ்வு ஒளியாகும் யேசுவே

யேசுவே யேசுவே
யேசுவே யேசுவே

1. உன் விழியே என் விழியானால்
இரவெல்லாம் பகலாகும் இருளெல்லாம் ஒளியாகும்
உன் அன்பில் நான் வாழ்ந்தால்
உறவெல்லாம் உயிராகும் உணர்வெல்லாம் அருளாகும்
உன் விழியின் பார்வையிலே உன் அன்பின் மகிழ்வினிலே
கரம்பிடித்து வழிநடத்தும் யேசுவே - 2
யேசுவே யேசுவே யேசுவே யேசுவே

2. உன் வார்த்தை எனதாகினால்
நற்செய்தி அறிவாகும் விடுதலையே வழியாகும்
உன் மகிழ்வில் நான் வாழ்ந்தால்
நம்பிக்கை நனவாகும் என் வாழ்வு பகிர்வாகும்
உன் வார்த்தை ஒளியினிலே உன் மகிழ்வின் அருளினிலே
காலமெல்லாம் வழிநடத்தும் யேசுவே - 2
யேசுவே யேசுவே யேசுவே யேசுவே

**324** **உதயத்தில் எழுந்திடும் எம்இறைவா - எம்**
இதயத்தில் நிறைந்திட வாவா
எம் சொந்தம் நீயாகும் என் வாழ்வினிலே
உன்னோடு உறவாடும் பொன்னான நேரம்

1. உள்ளமெல்லாம் உன்னன்பில் இணைந்திடும்
இனிய நல் நேரமே
வானகமும் வையகமும் வாழ்த்தியே
வணங்கிடும் நாளுமே
உணவளித்து உயிர்கொடுத்து
வாழ்வளிக்கும் என்தேவனே
எழுந்திடுவாய் எனில் கலந்திடுவாய்
உன்னோடு உறவாடும் பொன்னான நேரம்

2. நினைப்பதெல்லாம் நிலைப்பதில்லை
நிலைப்பதை யாரும் நினைப்பதில்லை
உலகமிங்கு மறைந்திடலாம்
உறவுகளும் எனை மறந்திடலாம்
யாரென்னை மறந்தாலும்
எனைமறவா என் யேசுவே
உனைநினைத்து நான் எனை இழந்தேன்
உனதன்பில் நான் ஒன்றிணைந்தேன்
உன்னோடு உறவாடும் பொன்னான நேரம்

**325** **எந்தன் இதய இனிய வேந்தன்**
என்னில் வந்து தங்கும் நேரம்
வந்ததும் வசந்தம் வீசுமே
வசந்தத்தில் வாழ்வுண்டு வாழ்வில் அவனுண்டு
என்னில் அவனும் அவனில் நானும்
என்றும் ஒன்று தானே

1. வாழ்க்கையின் மூச்சே நின்று விடும் அன்பே
வீசிடும் காற்று நீ எனில் இல்லை என்றால்
ஓடோடி வந்தேன் உனை என்னில் ஏற்ற

ஒன்றாகும் நேரம் நான் உன்னை பாட
அன்பு தெய்வமே அருள் தாருமே
நீ மீட்டும் வீணையும் நான் பாடும் பாடலும்
திரை கடலில் சங்கமிக்கும் இதய வேந்தனே

2. நிம்மதி நீயாய் இருக்கின்றபோது
நிதமும் நீ என்னில் தங்கிட வேண்டும்
சிந்தனைகள் யாவும் நீர் சீர்படுத்த வேண்டும்
சொல் செயல் யாவும் உரிமையாக வேண்டும்
அன்பு தெய்வமே அருள் தாருமே
என் வறுமை எனும் இருள் உன் வளமை ஒளியிலே
அகன்றிட வேண்டும் என் அன்பு தெய்வமே

**326** **எந்தன் சொந்தமே இயேசுவே**
எந்தன் நெஞ்சிலே வாருமே
உன்னில் மகிழ்ந்து வாழ
உன்னை எனக்குத் தாராய்
எந்தன் சொல்லும் செயலும்
உந்தன் உணர்வில் ஓங்குமே

1. சுமைகளால் வாழ்வை நான் வெறுத்திடும் போது
சுகமாய் வாழ எழுந்தென்னில் வா
எனக்காய் நின் வாழ்வை வெறுமையாக்கினீர்
என்னையும் பிறர் அன்பில் வாழச் செய்குவாய்
2. சிங்கார வாழ்வின் சிகரத்தில் இருந்தாலும்
என் நெஞ்சிலே நீ இல்லையேல்
சரிந்தே வீழும் வாழ்வின் செல்வங்கள்
இதனையே உணர்ந்தே நான் வாழ விழைகிறேன்

**327** **எனில் வாரும் என் இயேசுவே - என்றும்**
என்னோடு உறவாடவே
நீயின்றி ஒன்றில்லையே - இங்கு
நீர் தாமே என் எல்லையே

1. என் நெஞ்ச வீட்டினில் என் இன்பப் பாட்டினிலே
உன் நாமம் நான் பாட என்னுள்ளம் நீர் வாழ்கவே
என் அன்பு தாயாக எந்நாளும் எனைக் காக்கவே
என் சொந்தம் நீயாக என் வாழ்வும் நீயாகவே
தேவா எழுந்து வா தேடும் அமைதி தா
உனையழைத்தேன் உயிர் கொடுத்தேன் உறவை தேடியே

2. பயணம் தான் நான் செல்ல பாதையும் நீயாகவே
வழியெல்லாம் துணையாக வாழ்வெல்லாம் இனிதாகவே
சுமையெல்லாம் சுகமாக பகையெல்லாம் பரிவாகவே
நினைவெல்லாம் நிறைவாக நெஞ்சோடு நீ வாழவே
தேவா எழுந்துவா . . .

**328** **என் ஆயன் இயேசு என்னுள்ளம் தேடி**
வருகின்ற நேரமிது
என் ஆன்மா அவரை ஏற்றிப் போற்றி
மகிழும் வேளையிது
என் தவம் நான் செய்தேன்
என்னென்று நான் சொல்வேன்

1. பசியால் வாடும் ஏழையின் நிலையில்
பாவி நான் நின்றிருந்தேன்
பரமன் இயேசு என் பாவத்தை அகற்றி
அருளமுதை ஈந்தார்

2. கருணையின் அமுதே பவித்திர அழகே
காலமெல்லாம் வருவாய்
பெருமையின் வேந்தே பேரருட்சுடரே
பாசத்தினை பொழிவாய்

3. அகிலமும் உமதே ஆற்றலும் உமதே
ஆண்டவனே எழுவாய்
இகமதில் இனிமை பொழிந்திடும் இறைவா
இன்புறவே எழுவாய்

**329** **என் ஆன்ம உணவே வா**
என் உள்ள உயிரே வா
நீயின்றி போனால் நான் வீழ்ந்து போவேன்
நான் வாழ என்னகம் வா

1. முன்னோர் உண்டனர் மன்னா
மடிந்து போயினர் - உன்னை
தகுதியாய் உண்டால் வாழ்வோம்
சாவை வெல்லுவோம்
ஆவலாய் அழைத்தேன் வா இறைவா - இந்த
ஏழைக்கு உன்னருள் தா இறைவா
உன்னில் நான் என்னில் நீ வாழ்ந்திட வரம் தா

2. இனி நான் மெல்ல தேய்வேன்
மறைந்து போவேன் - இனி
நீரே என்னில் வாழ்வீர் வாழ செய்குவீர்
எனவே அழைத்தேன் வா இறைவா - என்றும்
என்னகம் குளிர வா இறைவா
உன்னில் நான் என்னில் நீ வாழ்ந்திட வரம் தா

**330** **என் இதய தெய்வமே என்னில் எழுந்து வா**
**உன் உறவை எண்ணியே உள்ளம் ஏங்குதே**
**உயிரே எழுந்து வா - 2**

1. அணைத்து காக்கும் தாயின் அன்பும்
ஒருநாள் அழியலாம்
அறவழியில் நடத்தும் தந்தை அன்பும் அழியலாம்
ஆனால் இயேசுவே உன் அன்பிற் கழிவுண்டோ - என்
இனிய அன்பே எழுந்து வா

2. வஞ்சம் கூறும் நண்பர் கூட்டம் இங்கு பல உண்டு
தன்னலமே உருவெடுத்து உலவும் நட்புண்டு
ஆனால் இயேசுவே நல் நண்பர் நீரன்றோ - என்
இனிய நண்பா எழுந்து வா

3. பொய்மை மலிந்து மெய்மை மெலியும் நிலையை காண்கிறேன்
தீமை நிறைந்த உலகில் இன்று அழிந்து மடிகின்றேன்
எந்தன் தெய்வமே உன் அன்பால் ஆளவா - என்
உள்ளம் நிறைந்து வாழ வா

**331** **என் இறைவா உனக்காகத் தானே**
என் ஜீவன் நாளும் காத்திருக்குது
நீ வரவேண்டும் அருள்தர வேண்டும்
நாளும் உன் நினைவினில் நான்
வாழ்ந்திட வேண்டும்

1. மலர் போல மடிகின்ற என் வாழ்விலே - உன்
மலர்ப் பாதம் அமர்ந்தே நான் பணி செய்யவே
விழி பொங்கும் மாந்தர்க்கு வழி காட்டும் நண்பனாய்
வாழ்வாங்கு வாழ்ந்திடவே அருள் புரிவாய் இயேசுவே

2. அலை போல துன்பங்கள் நெருக்கிடினும் - உன்
அன்பான வார்த்தைகளே ஆறுதலே
அருளே உன் தோள்மீது கண்ணயரும் நேரமே
அடியேனின் கண்ணீரும் கவலையுமே தீருமே

**332** **என் இறைவன் என்னில் வருகின்றார்**
இதயம் மகிழ்கின்றது
உணவாய்த் தன்னை தருகின்றார்
உள்ளம் நிறைகின்றது

1. உயர்ந்தவர் தாழ்ந்தவர் பேதமின்றி
உள்ளங்கள் மகிழ்ந்திட வருகின்றார்
உயிருடன் உணவென வருகின்றார்
உண்மையிலே அவர் வருகின்றார்
உவந்தே பணிந்தே ஏற்றிடுவோம்

2. பிளவுகள் பிணக்குகள் ஏதுமின்றி
நிறைவுடன் வாழ்ந்திட வருகின்றார்
நிழலாய் நம்மில் வருகின்றார்
நிம்மதி வாழ்வில் தருகின்றார்
நினைந்தே பணிந்தே பாடிடுவோம்

**333** **என் தெய்வமே எனை மீட்க வாருமே**
உன் திருப் பாதையில் நான் செல்லும் நேரமே
அன்பின் பூக்களே எந்தன் வாழ்வினில்
மலர்ந்திட செய்யுமே

1. கவலையினால் வரும் சோகம் - உன்
பார்வையில் மகிழ்வாய் மாறும்
அலை அலையாய் வரும் ஏக்கம் - உன்
நினைவால் பனியாய் உருகும்
தேவனே உன் வார்த்தையில் நிலைத்திட வரம் தருவாய்
கானமே என் ஜீவனில் கலந்து உன் புகழ் பாடும்
இயேசுவே என் வசந்தமே அணைத்திட வாருமே

2. பாதத்தில் அமர்ந்திடும் நேரம் - என்
ஆன்மா உன்னிடம் பேசும்
உணர்வினால் எழுந்திடும் பாசம் - என்
வாழ்வினில் நிழலாய் தொடரும்
தேவனே உன் பாதையில் நடந்திட கரம் பிடிப்பாய்
இயேசுவே என் ஜீவனில் கலந்து உன்புகழ் பாடும்
இயேசுவே என் நண்பனே மலர்ந்திட வாருமே

**334** **என் தேவனே என் இறைவனே - என்**
இனிய நேசனே - என்
அன்பனே நண்பனே இதயம் வாருமே
வா வா விரைந்து வா என்னில் வா எழுந்து வா

1. தண்ணீர் கண்ட மானைப் போல்
தாவி நானும் வருகின்றேன்
ஆன்ம தாகம் தீரவே
அள்ளிப் பருக விழைகின்றேன் வா . . . வா

2. வருக தேவா வருகவே
வாழ்வை எமக்குத் தருகவே
உம்மில் என்றும் வாழவே
உமது அருளை பொழிகவே வா. . . வா

**335** **என் வாழ்வின் ராகம் நீ இயேசுவே**
என் வாழ்வின் பாடல் நீ இயேசுவே
என் ஜீவ தாளம் உன் கோயில் சேர
உன் பாத நிழலில் சரணாகின்றேன்

1. சோகங்கள் வந்து சொந்தங்கள் போனால்
நீ மட்டும் எனைவிட்டுப் பிரிவதில்லை
போராட்டம் என்னை சூதாடும் வேளை
உன் பார்வை எனை விட்டு அயர்வதில்லை
நீ மட்டும் போதும் என் ஆயுள் காலம்
உன் வானில் என் பாடல் நிலவாகுமே

2. காலங்கள் தேய போராடும் வேளை - உன்
பாதம் நிழலாக தொடர்கின்றது
என் வாழ்வும் தாழ்வும் உனதாகும் போது
எனை ஏற்கும் நம்பிக்கை வளர்கின்றது
என் ஜீவராகம் பூபாளமாகும்
உன் வார்த்தை என் வாழ்வில் அரங்கேறுமே

**336** **என் ஜீவன் பாடுது**
உன் வரவை நாடுது
அன்பே அருட்செல்வமே

1. காலம் கடந்தாலும் கோலம் அழிந்தாலும்
உன் வாக்கு மாறாது இறைவா
புதுமை பிறந்தது பாவம் அழிந்தது
புனிதம் சேர்த்திட வா

2. இராகம் ஓய்ந்தாலும் தாளம் மாய்ந்தாலும்
என் பாடல் மாறாது இறைவா
நாளும் மலர்ந்தது தீபம் எரிந்தது
வாழ்வை வளமாக்க வா

**337** **என்னில் ஒன்றாக எந்தன் நல் தேவன்**
எழுந்து வருகின்றார்
எண்ணில்லா அருளை அன்புடனே
தலைவன் தருகின்றார்

1. உதயம் காண விழையுமோர் மலரைப் போலவே
இதயம் இறைவன் வரவையே நிதமும் தேடுதே
பகலை மறைக்கும் முகிலாய் பல பழிகள் சூழ்ந்ததே
அந்த முகிலும் இருளும் குறையும் தீர முழுமை தோன்றுமே

2. என்னில் இணையும் கிளைகளோ வாழ்வைத் தாங்குமே
என்னைப் பிரியும் உள்ளத்தை நாளும் தேடுவேன்
என்று பகர்ந்த இறைவா எம்மை இணைக்கவாருமே-உந்தன்
அன்பு விருந்தை நாளும் அருந்தி அமைதி காணுவேன்

**338** **என்னை ஆள அன்பு இறைவன்**
எழுந்து வருகின்றார்
எந்தன் இதய இருளை அகற்ற
தேவன் வருகின்றார்

1. இதயம் வாழும் உனது குரலும் என்னைத் தடுத்தது
பாவம் பரமன் உறவை மறைக்கும் என்றும் சொன்னது
கல்லானது என் இதயம் முள்ளானது என் வழியும்
இதய தீபம் அணைந்தது திரியை ஏற்ற இறைவா நீ வருவாய்

2. நீரும் நிலமும் வானும் காற்றும் உன்னைத் தாங்கிட
பாவி எந்தன் இதயம் மட்டும் தனியாய் ஏங்கிட
பாவத்தின் பயனிது சோகத்தின் நிலையிது
இதய தீபம் அணைந்தது திரியை ஏற்ற இறைவா நீ வருவாய்

3. உலகின் செல்வம் எனக்கு இருந்தும் அமைதி இல்லையே
உலக வழியில் அலைந்தேன் இதய சாந்தி இல்லையே
ஆணிகள் அடித்தேனே சிலுவையில் அறைந்தேனே
இதய தீபம் . . . .

**339** **என் சுவாசக் காற்றே என் வாழ்வின் ஊற்றே**
இறைவா என் உள்ளம் வருவாய்
என் உயிரின் உணவே என் வாழ்வின் வழியே
தலைவா நீ உன்னைத் தருவாய்
என் வாழ்வும் என் வளமும் எல்லாமும் நீதானே
இறைவா தலைவா அன்பினைப் பொழிவாய்

1. என் சொந்தம் யாவும் என் தேவை யாவும்
நீதானே நீதானே இறைவா
என் நெஞ்சின் நேசம் மாறாத வாசம்
தருவாயே தருவாயே தலைவா
வாழ்நாளெல்லாம் நீ வேண்டுமே
வளர்ந்திட நாளும் வரம் வேண்டுமே
வாழ்வாய் வழியாய் நிறைந்திட வருவாய்

2. எழில் வானம் போல நிலைக்கும் உன் அன்பை
அறிவேனே அறிவேனே இறைவா
உனைப்போல நானும் பிறரன்பில் வளர
அருள்வாயே அருள்வாயே தலைவா
மகிழ்ந்திட நாளும் அருள் வேண்டுமே
ஒளிர்ந்திட நாளும் துணை வேண்டுமே
நிழலாய் நினைவாய் வாழ்வினில் வருவாய்

**340** **என் தேடல் நீ என் தெய்வமே**
நீயின்றி என் வாழ்வு நிறம் மாறுதே
உனை மனம் தேடுதே நீ வழிகாட்டுமே
இறைவா இறைவா வருவாய் இங்கே
இதயம் அருகில் அமர்வாய் இன்றே

1. ஒருகோடி விண்மீன்கள் தினம் தோன்றினும்
நீயின்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்
பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில்
உன் அன்பு உயிர்தந்து வாழ்வாகிடும்
இறைவார்த்தையில் நிறைவாகுவேன்
மறைவாழ்விலே நிலையாகுவேன்
வழிதேடும் எனைக் காக்க நீ வேண்டுமே
இறைவா இறைவா வருவாய் இங்கே
இதயம் அருகில் அமர்வாய் இன்றே

2. உன்னோடு நான் காணும் உறவானது
உள்ளத்தை உருமாற்றி உனதாக்கிடும்

பலியான உனை நானும் தினம் ஏற்கையில்
எளியேனில் உன் வாழ்வு ஒளியாகிடும்
உன் மீட்டலால் எனில் மாற்றங்கள்
உன் தேடலால் எனில் ஆற்றல்கள்
வழிதேடும் எனைக் காக்க நீ வேண்டுமே
இறைவா . . . .

**341** **என்றும் வாழும் சொந்தம் ஒன்று**
எந்தன் வாழ்வில் வேண்டும் என்று
ஆசையோடு அங்கும் இங்கும் தேடினேன்
என்னை நீயும் தேர்ந்து கொண்ட
நேசம் கண்டு மயங்கினேன்
இன்றும் என்றும் நான் உனக்கு சொந்தமே

1. தனித்து செல்லும் பயணம் எந்தன் வாழ்க்கையில்
தாயைப்போல் அருகிருந்து தாங்கிடு
தவறுகின்ற தருணம் வரும் பொழுதினில்
காவல் தெய்வமாக நின்று காத்திடு
நீ நடந்த பாதையை மறந்திடேன்
தியாக வேள்வியாகவும் தயங்கிடேன்
இன்று நாளை என்றும் இன்றும் இந்த சொந்தம் மாறிடாது
எந்நாளும் நான் உனக்கு சொந்தமே

2. பணம் பதவி மோகம் என்ற போதையில்
விழுந்திடாது விழிப்பு தந்து பார்த்திடு
பயணம் தன்னில் சோர்வு மூடும் வேளையில்
உறுதி ஊட்டும் தோழமை விரித்திடு
எங்கும் இருள் சூழ நேர்ந்த போதிலும்
அகல் விளக்கு அணைந்திடாமல் காத்திடு
இன்று நாளை . . . . .

## 342 என் இயேசு தேவா எனை ஆளும் நாதா

ஒரு வார்த்தை போதும் என் வாழ்வு மாறும்

1. அழகான நீர்ச்சுனை நீ தானைய்யா ஆறுதல் அருந்துகின்றேன்
அலை மோதும் வாழ்வில் உன் அருள் நாடித் தேடும்
கலை ஒன்று பயில உன்னாசி வேண்டும்
ஐயா நின் அளவில்லா அருளன்பு கண்டேன்
கலைமானைப் போல் நானும் களிப்புறுகின்றேன்

2. இதயத்தில் ஏராளம் பாரங்களே என் சுமைதாங்கி சுகமாகினாய்
இருள் சூழும் வாழ்வை உன் ஒளி வெள்ளம் நாளும்
ஆட் கொள்ளக் காணும் அருளொன்று வேண்டும்
உனை நானும் தேடாமல் வெகுதூரம் போயினும்
என்னைப் பின்தொடர்கின்ற என் நண்பனே

## 343 எந்தன் அன்பு தேவன் - என்னில்

வந்து சேர்ந்து உறவாடும் நேரம் இது
திரு விருந்தில் தினம் வருவீர்
வாழும் தெய்வமே
தினம் வாரும் தெய்வமே - (2)
என்னை என்றும் ஆளும் தெய்வமே
விண்ணின் அருள் வருக நிறையருள் தருக
உந்தன் அன்பு எம்மை என்றும் ஆளவே
விதவிதமாய் புதுவிதமாய் தினம் தினம்
மலர்ந்திட வரம் தருவாய் (2)

1. செங்கடலில் நீரே பாதையாக
பாலையிலே ஜீவனுக்கு உணவாக
எரியும் வெயிலிலே நிழலாக
சத்திய தேவனாய் வழியானீர் - 2
பகலில் மேகத் தூணாக எரியும் புதரில் ஒளியாக
இஸ்ராயேல் என்றும் உயிர் வாழவே நிரந்தரமாக நீர் வந்தீர்
எம்மில் நிரந்தரமாக நீர் வந்தீர்

2. நற்கருணைப் பேழையில் மறை பொருளாய்
நலன்களை அருளும் நாதனாக
அமைதியைத் தேடி வருகையிலே
உன்னதக் கடவுளே வருகின்றீர்
தினமுன் விருந்தில் உணவாக அன்பைப் பகிரும் தெய்வமாக
என் ஜீவன் என்றும் உயிர் வாழவே நிரந்தரமாக நீர் வந்தீர்
எம்மில் நிரந்தரமாக நீர் வந்தீர்

**344** **என்னில் எழுகவே இதய வேந்தனே**
என்று எந்தன் உள்ளம் பாடுதே
உன்னில் இணையவே அன்பு இறைவனே
இன்று எந்தன் இதயம் ஏங்குதே (2)

1. இனிய உந்தன் விருந்தில் அமர்ந்தால் புனிதம் வளருதே
கனிந்த அன்பில் பணியை செய்தால் மனிதம் மலருதே
தனிமை கூட இனிமை யாகுதே
தன்னலம் மறந்து போகுதே - 2

2. ஒடுக்கப்பட்ட மனிதர் தம்மை ஒருங்கிணைக்கவும்
விடுதலைக்கு ஏங்குவோரின் வேட்கை தணிக்கவும்
உன் விருந்து உதவி செய்யுதே
என்னையும் இணைத்துச் செல்லுதே - 2

3. வறுமைக்கோட்டை வெறுமையாக்க உழைக்கத் தூண்டுதே
சிறுமை கண்டு சீறிப் பொங்க என்னை அழைக்குதே
சாதிவெறியை தணிக்கச் சொல்லுதே
நீதி நியாயம் கேட்கச் செய்யுதே - 2

**345** **ஏழிசை நாதனே எழுவாய் - இறை**
அருளை என்னில் நீ பொழிவாய் - பல
வரங்கள் தந்து எனைக் காப்பாய்
வழிகாட்ட எழுந்து வருவாய்

1. வாழ்வும் வழியும் நீ எனக்கு
வளங்கள் சேர்க்கும் அருமருந்து

உறவை வளர்க்கும் விருந்து
என்னில் நிறைவை அளிக்கும் அருளமுது
பாடுவேன் பாடுவேன் பல சிந்து
பாரினில் வாழுவேன் உனில் இணைந்து

2. விழியும் ஒளியும் நீ எனக்கு விடியல் காட்டும் ஒளி விளக்கு
மனிதம் வாழும் தெய்வம்
என்னில் புனிதம் வளர்க்கும் நல் இதயம்
பாடுவேன் பாடுவேன் பல சிந்து
பாரினில் வாழுவேன் உனில் இணைந்து

**346** **ஏழை எந்தன் இதய வீட்டில்**
வாரும் தேவனே - என்
பிழைபொறுத்து உமது அருளை
தாரும் தேவனே
அலகை வலையில் அடிமையாகி
அமைதியின்றி அலைகிறேன்
வருவீர் எனது கவலை தீர்க்கும்
கருணை தெய்வமே

1. குழந்தையாய் நான் இருக்கையில் - என்
சின்ன இதயமே - நீர் குடியிருக்கும் கோவிலாகத்
திகழ வில்லையோ
பாவமதிலே விழுந்தெழுந்த எந்தன் பருவ இதயமே - தேவா
தேவா உனது இல்லமாகத் தகுதி இல்லையோ

2. புலன்கள் தம்மை புனிதமாக்கி
துதிகள் பாடினேன் - உன்
மலர்ப் பதத்தை கழுவித் துடைக்க கண்ணீர் வடிக்கிறேன்
சிலுவை மரத்தில் உமக்கு வந்த
தாகமதையே தணிக்கவே
உடலை ஒறுத்து உதிரம் சிந்தக் காத்திருக்கின்றேன்

## 347 ஏழை மனம் அழைக்கின்றது

இயேசுவே நீ வர வேண்டும்
நான் கலங்கும் வேளையிலும்
நீ துணையாக வேண்டும்
இயேசுவே உன்கரம் தாங்க வேண்டும்

1. உன் வழி தொடரும் என் கால்கள்
உறுதியாய் நடந்திட ஒளி தாராய்
உணர்வினில் கலந்திடுவாய்
மனமென்னும் கோவிலில் எரிந்திடும் தீபங்கள்
இயேசுவே நீயாவாய்
நீ என்னில் எழுந்திடும் நேரமது
நான் எனை மறந்திடும் காலமது

2. நீயின்றி எனக்கோர் உறுதியில்லை - உன்
துணையின்றி எனக்கோர் கதியில்லை
உயிராய் எழுந்திடுவாய்
அன்பிலும் நட்பிலும் நான் தினம் வளர
அகமதில் நிறைந்திடுவாய்
அமைதியின் பாதையில் நடந்திடவே
அடைக்கலமாகும் ஆண்டவரே

## 348 ஒளியாம் இறையே வாராய்

எளியோர் நெஞ்சம் தனிலே

1. விண்ணில் வாழும் விமலா மண்ணில் வாடும் மாந்தர்
உன்னில் என்றும் வாழ என்னில் எழுமே இறைவா
ஒளியே எழிலே வருக

2. அருளைப் பொழியும் அமலா இருளே நீக்கிட வாராய்
குறையைப் போக்கும் நிமலா நிறைவை வளர்க்க வாராய்
ஒளியே எழிலே வருக

**349** **ஒவ்வொரு பகிர்வும் புனித வியாழனாம்**
ஒவ்வொரு பலியும் புனித வெள்ளியாம்
ஒவ்வொரு பணியும் உயிர்ப்பின் ஞாயிறாம்
ஒவ்வொரு மனிதரும் இன்னொரு யேசுவாம்
அந்த இயேசுவை உணவாய் உண்போம்
இந்த பாரினில் அவராய் வாழ்வோம் 2

1. இருப்பதைப் பகிர்வதில் பெறுகின்ற இன்பம் எதிலுமில்லையே
இழப்பதை வாழ்வென ஏற்றிடும் இலட்சியம்
இறுதியில் வெல்லுமே
வீதியில் வாடும் நேரிய மனங்கள் நீதியில் நிலைத்திடுமே
நம்மை இழப்போம் பின்பு உயிர்ப்போம் - 2
நாளைய உலகின் விடியலாகவே

2. பாதங்கள் கழுவிய பணிவிடை செயலே வேதமாய் ஆனதே
புரட்சியை ஒடுக்கிய சிலுவைக் கொலையே
புனிதமாய் நிலைத்ததே
இயேசுவின் பலியின் இறப்பும் உயிர்ப்பும்
இறையன்பின் சாட்சிகளே - 2
இதை உணர்வோம் நம்மைப் பகிர்வோம் - 2
இயேசுவின் கொள்கைகள் நம்மில் வாழவே

**350** **ஒரு கணம் உனது திருவடி அமர்ந்து**
இருவிழி மூடினேன் இறைவா
ஒருமுறை உனது திருமுக தரிசனம்
உள்மனம் தேடினேன் இறைவா
நிலவினை எடுத்து என் மனவானில்
இருளினை துடைத்திடு இறைவா
அருள் மழை பொழிந்து அகமன அழுக்கை
கழுவிட அமைதியே இறைவா
இறைவா இறைவா இறைவா இறைவா - 2

1. உதயம் விதையே பூவாகும் - அன்பில்
சிதையும் மனிதமே உயிர்ப்பாகும்
தோழமை என்பது கிழக்காகும் - அதில்
தொழுகைகள் ஒளியதன் தொகுப்பாகும்

நானே எனக்கொரு தவமாகும் - தினம்
வீழ்வதும் எழுவதும் இயல்பாகும்
நன்மைகள் செய்வதில் நதியாக - நான்
அன்புக்காய் எரிவதில் திரியாக
இறுதியில் இது என் செபமாகும் - உன்
திருவுளம் கனிந்தால் சுகமாகும் - 2

2 இடர்களில் விழுந்த இருவிழிகள் - தினம்
பெருநதி ஆகும் ஒருவேளை
தியாகத்தில் உதிரும் குருதிகள்யாவும்
விருதுகள் ஆகும் - ஒருநாளில்
கண்களை மூடிடும் வேளையிலே - நான்
களிப்பது தேவனின் சோலையிலே
காலடி அமர்ந்திடும் ஒருகணமே - நான்
தாய்மடி அமர்ந்திடும் புது சுகமே
பூவாய் உதிர்ந்திடும் நிலவாழ்வு - உன்
பூவடி விழுந்தால் நிறைவாழ்வு

**351** **கருணை தேவனே கனிவாய் என்னில் வா**
வானின் அமுதமே வாழ்வில் கலந்து வா
உந்தன் விருந்திலே உள்ளம் மகிழுதே
உணவாய் எழுந்து வா

1 அன்பே உன் வரவின்றி அருளே உன் துணையின்றி
இருளில் நான் தள்ளாடுவேன்
உயிரே உன் உறவின்றி உலகில் உன் நிழலின்றி
துயரில் நான் கண் மூடுவேன்
உயிரூட்டும் உணவாக வா வழிகாட்டும் விளக்காக வா
ஆன்மாவின் ஆனந்தமே ஆறாகும் பேரின்பமே

2 ஊர் தூங்கும் வேளை ஒளி தூவும் நிலவாய்
என் வாழ்வில் ஒளியாகினாய்
வழி பார்த்து கண்கள் நீர் கோர்த்து நிற்க
என் பாதை வழியாகினாய்
என்தேவன் நீயில்லையேல் என்னுள்ளம் தடுமாறுமே
உன் பாதை நானில்லையேல் என் வாழ்வு வீணாகுமே

## 352 கருணையின் உருவே இறைவா

கரையில்லா அருள் நிறை தலைவா
கனிமொழி பேசிடும் முதல்வா - எம்
கனவுகள் மெய்ப்பட வருவாய்
கருணையின் உருவே இறைவா

1. பகைமையும் வெறுப்பும் அழிந்திடணும்
பகிர்வதில் மனங்கள் மகிழ்ந்திடணும்
நீதியும் நேர்மையும் நிலைத்திடணும்
நிம்மதி வாழ்வில் நிறைந்திடணும்
இதயங்களில் இரக்கம் வேண்டும்
இன்னல்களில் உதவ வேண்டும்
உறவுகளில் உண்மை வேண்டும்
வேற்றுமைகள் மறையணும்
இந்த உலகில் உந்தன் ஆட்சி உருவானால் பேரின்பம்

2. வறுமையும் பிணிகளும் ஒழிந்திடணும்
வளமையும் வாழ்வும் பெருகிடணும்
தீமையின் வேர்கள் அழிந்திடணும்
நன்மையின் பாதைகள் தெரிந்திடணும்
போர்கள் இல்லா பூமி வேண்டும்
புவியினிலே அமைதி வேண்டும்
ஆயுதங்கள் அழிய வேண்டும்
அன்புலகம் மலரணும் - இந்த உலகில் ........................

## 353 காலமெல்லாம் உடனிருக்கும் கருணை தெய்வமே

இயேசுவே இயேசுவே போற்றி போற்றி
கலங்கரையாய் கரம் நீட்டி காக்கும் தெய்வமே
இயேசுவே இயேசுவே போற்றி போற்றி
ஞாலமெல்லாம் படைத்தளித்த ஆற்றல் தெய்வமே
இயேசுவே இயேசுவே போற்றி போற்றி
நலன்களுக்கு ஊற்றாகும் நல்ல தெய்வமே
இயேசுவே இயேசுவே போற்றி போற்றி
இயேசுவே தெய்வமே போற்றி போற்றி - எம்மை
நேசிக்கும் நற்கருணையே போற்றி போற்றி

1. அனைத்துயிர்க்கும் உணவளிக்கும் அம்மையப்பனே
அனைவரையும் ஒருங்கிணைக்கும் தேவ மைந்தனே
இழந்தவற்றை மீட்டருளும் நல்ல ஆயனே
இதயங்கள் மேல் தாகம் கொண்ட இனிய நேசனே
இயேசுவே தெய்வமே போற்றி போற்றி
இயேசுவே தெய்வமே ..............

2. பாவங்களை மன்னிக்கின்ற கருணைக் கடவுளே
பாரங்களை தாங்கிக்கொள்ளும் பரிவு நெஞ்சமே
பாதைகளைத் தெளிவாக்கும் ஞான வெளிச்சமே
பயணங்களை நிறைவு செய்யும் பாசத் துணைவனே
இயேசுவே தெய்வமே போற்றி போற்றி
இயேசுவே தெய்வமே ..............

**354** **கல்மனம் கரைய கண்களும் பணிக்க**
கைகளைக் குவித்தேன் இறைவா
என் மனம் வருவாய் இறைவா

1. என்னகம் புகுந்து இதயத்தில் அமர்ந்து
பொன்னகம் புனைவாய் இறைவா - அங்கு
வன்மைகள் மறைந்து நன்மைகள் நிறைய
இன்னருள் தருவாய் இறைவா

2. பாசத்தை வளர்த்து பாவத்தை விலக்க
பாதத்தைப் பிடித்தேன் இறைவா - துயர்
வீசிடும் புயலும் வெகுண்டெழும் அலையும்
அமைந்திட பணிப்பாய் இறைவா - 2 இறைவா இறைவா

3. நான் என்னும் அகந்தை நரகத்தை அழித்து
நல்லுலகமைப்போம் இறைவா - அங்கு
பூவென்னும் இதய பீடத்தில் எனையே
பலியாய் அளிப்பேன் இறைவா - 2 இறைவா இறைவா

**355** **கல்வாரித் தென்றலே வா**
கனிவாகத் தேற்றிட வா ஆ . . . ஆ.
கல்வாரி தென்றலே வா
தங்கும் பாவக் கனல் போக்க
எங்கும் தேவ அருள்வீச

1. பெரும் யோர்தான் ஆற்றினிலே திருமுழுக்கானீரே
சிறுகல்வாரி மலைதன்னிலே திருப்பலி ஆனீரே
திருமறையின் உயிரே வா
அருட்கொடையின் தென்றலே வா

2. செங்கடல் கடந்திட சீர்பாதை ஆனீரே
பாவக்கடல் கடந்திட பலிப்பொருள் ஆனீரே
செங்கடல் தென்றல் காற்றதுவே
கல்வாரித் தென்றல் ஆனதுவே

3. கடும்கோடை காலத்திலே கல்வாரி சென்றீரே
கோடையிலே வாடையாகக் குளிர்ந்திட வந்தீரே
பாவம் என்னும் கோடை போக்கப்
பாடி வரும் தென்றலே வா

**356** **காலங்கள் வாழ்த்தும் அழியாக் காவியமே - எந்தன்**
இதயத்தின் தீபமே
வாழ்வின் சோகங்கள் வசந்த பூக்களாய்
மலர்ந்திட வருவாயே
நினைவின் ஏக்கங்கள் கனிந்த பாக்களாய்
மாறிட வருவாயே

1. ஜீவப் போராட்டம் நாளும் புயலாக
என் ஜீவன் அழுகின்றதே
பாச தீபங்கள் வேஷக் கதையாக
என் நெஞ்சம் அலைகின்றதே
அருள் நாதங்கள் இசையாகிட
இறை வேதங்கள் வாழ்வாகிட
உள்ளத்தின் அமுதாக வா - இறைவா அமுதாக வா

2. பாவ நாட்டங்கள் வாழ்வின் நினைவாக
என் உள்ளம் தேய்கின்றதே
தேய்ந்த நேசங்கள் ஓய்ந்த நிலையாக
என் சொந்தம் சாய்கின்றதே
இறை தீபங்கள் சுடராகிட மறை பாடங்கள் வழியாகிட
இதயத்தின் உயிராக வா - இறைவா உயிராக வா

**357** **கள்ளமில்லா ஒரு வெள்ளி நிலா - என்**
உள்ளமெல்லாம் வரும் தெள்ளமுதா
தீராத பாசமே - நறுந் தேனான இயேசுவே
அன்பே பாரினில் நீயும் நானும்
ஒன்றாய் வாழ்வது வாழ்க்கையே
வாரும் தேவா வாருமே

1. எங்கே நோக்கினும் தனிமையே - உனை
என் மனம் மறந்ததென் தீமையே
கண்களும் நீரினில் ஆடுதே - இறை
கர்த்தருன் பூமுகம் தேடுதே
தேவ தேவா சிலுவை நாதா திரும்ப நாவினில் வாருமே
தாகம் யாவும் தீருமே தூய வாழ்வை தாருமே
தாயும் நீயாய் சேயும் நானாய் வாழ வேண்டும் நாளுமே

2. எல்லாம் தேவனின் மகிமையே - அதை
எங்ஙனம் புகழ்வது ஏழையே
என் மனம் நீ வரும் போதிலே - பெரும்
நிம்மதி ஆயிரம் வாழ்விலே
வாழ்வும் நீயே வழியும் நீயே உயிரும் நீ இனி தேவனே
வாரும் நாவில் இயேசுவே நீயும் நானும் பேசவே
ஆயன் நீயாய் தோளில் நானாய் வாழ வேண்டும் நாளுமே

**358** **குறையாத அன்பு கடல் போல வந்து**
நிறைவாக என்னில் அலைமோதுதே - அந்த
அலைமீது இயேசு அசைந்தாடி வரவே
பலகோடி கீதம் உருவாகுதே

1. கண்மூடி இரவில் நான் தூங்கும் போது
கண்ணாக இயேசு எனைக் காக்கின்றார் - உன்னை
எண்ணாத என்னை எந்நாளும் எண்ணி
மண்மீது வாழ வழி செய்கின்றார் ஆ—ஆ—ஆ— - நாம்
மண்மீது வாழ வழி செய்கின்றார்

2. இருள் வந்து சூழ பயமேவும் காலை
அருள் தந்து என்னை அணைத்தாழுவாய் - தீமை
சிறை கொண்ட எந்தன் உளமென்னும் பறவை
சிறை மீண்டு வாழ வழிகாட்டினாய் ஆ—ஆ—ஆ— - நா
சிறை மீண்டு வாழ வழி காட்டினாய்

3. அடிவானம் தோன்றும் விடிவெள்ளி என்றும்
தொடர்கின்ற இரவின் முடிவாகுமே - மண்ணில்
துடிக்கின்ற ஏழை வடிக்கின்ற கண்ணீர்
துடைக்கின்ற இயேசு அரசாகுமே ஆ—ஆ—ஆ— - கண்ணீ
துடைக்கின்ற இயேசு அரசாகுமே

**359** **சிறகை இழந்த பறவை பாடும்**
பாடல் கேட்கிறதா - உன்
உறவை தேடி உருகும் விழியின்
தேடல் புரிகிறதா
இறைவனே இறைவனே - என்
இதய கோவில் எழுந்து வா
வாசல் திறந்தேன்
வாசல் திறந்தேன் உதய தீபம் ஏற்ற வா

1. உன்னை பிரிந்து வாழும் நாட்கள்
யுகமாய் மாறி விடும் - நான்
உந்தன் நினைவில் வாழும் நிமிடம்
சுகமாய் ஆகி விடும்
கண்கள் மூடி உன்னை நினைத்தால்
கவலை மாறி விடும் - உன்
கரங்கள் தழுவி நடக்கும்போது களைப்பு மாறிவிடும்
கண்ணின் மணி போல் காக்கும் தேவா

அருகில் இருந்திடுவாய் - நான்
காலம் தோறும் உனது நிழலில்
வாழும் வரம் அருள்வாய் - 3

2. கடலைத் தேடி பாயும் நதியாய்
உன்னைத் தேடி வந்தேன் - நீ
ஒளியைத் தேடி சாயும் மலராய்
என்னைத் தேடி வந்தாய்
தாயைப் பிரிந்த சேயைப் போல
தனித்து வாடி நின்றேன் - நீ
தாவி அணைத்து அன்பில் நனைத்து
நண்பன் ஆகுகின்றாய்
சோர்ந்து வாழும் பொழுதில் எல்லாம்
சொந்தம் தந்திடுவாய் - நான்
சாய்ந்து கொள்ள ஏழை எனக்கு
தோள்கள் ஆகிடுவாய் - 3

**360** **சுமை சுமந்து சோர்ந்திருப்போரே**
**என்னிடம் எல்லோரும் வாருங்கள் - 2**

1. உங்களை நான் இளைப்பாற்றுவேன்
உங்களை நான் காப்பாற்றுவேன்
உங்களை நான் தேற்றிடுவேன்
உங்களை நான் ஏற்றிடுவேன்

2. உங்களை நான் நடத்திச் செல்வேன்
உங்களை நான் அன்பு செய்வேன்
உங்களை நான் அரவணைப்பேன்
உங்களை நான் வாழச் செய்வேன்

3. உங்களை நான் வளரச் செய்வேன்
உங்களை நான் ஒளிரச் செய்வேன்
உங்களை நான் மலரச் செய்வேன்
உங்களை நான் மிளிரச் செய்வேன்

**361** **சுமை சுமந்து சோர்ந்திருப்போரே**
வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றி கொடுக்கின்றார்

1. இருகரம் விரித்தவராய் இதயத்தை திறந்தவராய்
இறைவன் இருக்கின்றார் இனியும் தாமதமேன்

2. பசியால் வாடுவோரே பரமனைத் தேடிடுவீர்
மன்னா பொழிந்த அவர் நம்மை வாழ வைப்பார்

3. வரும் வழி பார்த்தவராய் வரங்களைப் பொழிந்தவராய்
வந்தவர் இருக்கின்றார் விரைந்திடத் தாமதமேன்

4. துயரினில் ஆறுதலாய் நோயினில் மருத்துவராய்
அடிமையின் விடுதலையாய் ஆண்டவர் இருக்கின்றார்

**362** **செந்தமிழில் உந்தன் புகழ் எழுதி - நான்**
பாடிடுவேன் இறைவா - என்
சிந்தனையில் நீ இருந்து வாழ
எழுந்தருள்வாய் தலைவா - என்னில்

1. உன்னுடல் உயிர்த்ததுன் வல்லமையால்
உலகினர் உயிர்ப்பதுன் வல்லமையால்
என்னுடல் உயிருடன் வாழ்ந்திடவே
இறைமகனே இன்று எழுந்தருள்வாய்

2. உன்னுயிர் தியாகம் புரிந்ததனால்
மன்னுயிர் தினமும் மகிழ்கின்றது
என்னுயிர் மெழுகாய்க் கரைவதனால்
இன்னுயிர் தந்திட எழுந்தருள்வாய்

3. பாலையில் மன்னா வழங்கி நின்றாய்
பலியினில் உன்னை வழங்குகின்றாய்
காலையில் உணவின்றி தவிக்கின்றேன்
கனியமுதாய் என்னில் எழுந்தருள்வாய்

## 363

**செந்தமிழ் நாதனே தேன்சிந்தும் நாதமே**
என்னில் எழுந்துவா என்னை ஆளவா
முகிலாக மழையாக மழைதந்த வளமாக
மனமெங்கும் மலர்ந்துவா - என்
உயிரோடு கலந்து வா

1. இளங்காலை வானம் குயில்பாடும் கானம்
இவைகாணும் நெஞ்சம் உன்பாதம் தஞ்சம்
இமை மூடினும் உனைத்தேடிடும் விழியொன்று தா - 2

2. வாழ்வில் நீ தந்த வசந்தங்கள் கோடி
வாழ்வேனே என்றும் உன்னன்பைப் பாடி
உயிர் நீங்கினும் உனை நாடிடும் உறவொன்று தா - 2

## 364

**செம்மறியின் விருந்துக்கு**
அழைக்கப் பெற்றோர் பேறு பெற்றோர்
அவ்விருந்தை உண்டிட
சென்றிடுவோம் இன்பம் பொங்க

1. இறைவன் தரும் விருந்திது - அதை உண்ணத் தடையென்ன
உறைய வரும் இறைவனை - நாம் ஏற்கத் தடையென்ன
உள்ளக் கதவு திறந்தது - அதன் உள்ளே வாழுவாய்
உவகை என்னும் ஒளி கொணர்ந்து என்னை ஆளுவாய்

2. வானம் பொழிய பூமி விளையும் வளமும் பொங்குமே
வலமே வரும் ஒளியால் சோலை மலரும் எங்குமே
எந்தன் உணவாய் நீ வந்தாலே இன்பம் தங்குமே
உந்தன் அருளை விதைத்தால் இந்த உலகம் உய்யுமே

## 365

**தாகமாய் இருப்போரே என்னிடம் வாருங்கள்**
தயவினில் நான் கொடுக்கும் ஊற்றினில் பருகுங்கள்
ஜீவனாய் இருக்கின்றேன் என்னிடம் வாருங்கள்
பாவங்களை கழுவி விடும் அருவியில் நனைந்திடுங்கள்

1. எதை உண்போம் எதை குடிப்போம்
என்ற கவலை இனி வேண்டாம்
உயிருள்ள உணவிதுவே உண்டிட வாருங்கள்

2. பாவங்களால் வறண்டு விட்ட
இதயங்கள் எல்லாம் வாருங்கள்
பருகிடவே ஜீவ ஜலம் அருகினில் வாருங்கள்

**366** **தாய்போல எனைக்காக்கும் என் தெய்வமே - உன்**
துணையின்றி என் வாழ்வு வீணாகுமே
நீயில்லையேல் நானில்லையே - **2 - உன்**
உறவில்லையே வாழ்வில்லையே

1. தாய் என்னை மறந்தாலும் நீ என்னை பிரியாமல்
உறவாலே என் வாழ்வை மகிழ்வாக்கினாய்
அன்பானவா அருளானவா - **2**
துயர் நீக்கி துணையாக நீர் வாருமே - **2**

2. உறவெல்லாம் வெறுத்தாலும்
பரிதவித்து தவித்தாலும்
உன் கண்ணில் எனை வைத்து
நீ காக்கின்றாய்
ஒளியானவா, உயிரானவா - **2**
உன் அன்பு நிலையாக என்னில் வேண்டுமே - **2**

**367** **தியாக தீபம் இயேசுவின் திரு உடல் இதுவே**
தேடும் நெஞ்சம் தேற்ற வரும் திரு உணவிதுவே
அன்பு நெஞ்சம் கொண்டவரை உண்ண வாருங்கள்-2
உணவை உண்டு தனை அளித்து தரணி மாற்றுங்கள்

1. கோதுமை மணியின் பலியினிலே - இந்த
வெண்மை அப்பம் பிறக்கின்றது
என்றும் ஏங்கிடும் மாந்தர் வாழ்ந்திட
தன்னை தியாகமாய் தருகின்றது - இதை
உண்ணும் யாவரும் தன்னை பிறர்க்கென

அளித்திட கேட்கின்றது - 2
நம்மையும் உணவென நாம் கொடுப்போம் - பிறர்
நலமுடன் வாழ்ந்திட உயிர் கொடுப்போம்

2. விருந்தினில் கலந்திடும் பொழுதினிலே - நெஞ்சில்
பேத உணர்வுகள் மறைகின்றது
ஏழை அடிமைகள் உயர்வு தாழ்நிலை
என்ற பிரிவுகள் இறக்கின்றன - பிறர்
பணிகள் செய்வதே தலைவன் பண்பென்ற
படிப்பினை தருகின்றது - 2
விருந்தினில் கலந்திடும் பொருள் உணர்வோம் - பிறர்
பணி செய்து வாழ்வதில் நிறைவடைவோம்

## 368 திருவிருந்து திருவிருந்து
தேவனின் திருவிருந்து - நம்
வாழ்வின் அருமருந்து

1. அன்பினைப் பொழியும் திருவிருந்து
அமைதியைத் தந்திடும் திருவிருந்து
நலன் தரும் விருந்து பலம் தரும் விருந்து
யேசுவின் இனிய திருவிருந்து
ஆவியில் நிறைந்து ஆற்றலைப் பொழிந்து
தேற்றிடும் தேவ திருவிருந்து

2. வாழ்வினை வழங்கும் திருவிருந்து
வள்ளல் யேசுவின் திருவிருந்து
இன்னல்கள் குறைந்து இன்பங்கள் நிறைந்து
இனித்திடும் வாழ்வை தரும்விருந்து
சுவையினில் நிறைந்து சுகம்தரும் விருந்து
வானக வாழ்வை தரும் விருந்து

## 369 தியாகப் பலியினிலே இறைவன் எழுகின்றார்
பகிரும் உள்ளங்கள் நடுவிலே பரமன் வருகிறார்
வருகின்றார் வருகின்றார் அருளை
நம்மில் பொழிகின்றார்

1. உறவில் நாளும் நிலைத்து வாழ பரமன் வருகின்றார்
உண்மை வழியில் நிலைத்து வாழ பரமன் வருகின்றார்
கண்ணின் மணிபோல் என்னை காக்கும்
பரமன் வருகின்றார்
கனிவாய் உன்னை நாளும் தேற்றும் பரமன் வருகின்றார்
வருகின்றார் வருகின்றார் அருளை நம்மில் பொழிகின்றார்-2

2. அன்பில் என்றும் நிலைத்து வாழ பரமன் வருகின்றார்
அமைதி வழியில் நிலைத்து வாழ பரமன் வருகின்றார்
உடனிருந்து உயிரை வழங்கும் பரமன் வருகின்றார்
தன்னை தந்து நம்மை மீட்கும் பரமன் வருகின்றார்
வருகின்றார் வருகின்றார்
அருளை நம்மில் பொழிகின்றார்

**370** **தெய்வம் உன்னை தேடி நெஞ்சில் ராகம் கோடி**
நீயே என் வாழ்வின் தெய்வம் நீயின்றி வேறேது சொந்தம்
தங்கும் எந்தன் உள்ளம் பொங்கும் அன்பின் வெள்ளம்

1. வானில் உலவும் நிலவும் - இங்கு தேய்ந்து போகலாம்
தேனில் கலந்த மலரும் - இங்கு காய்ந்து வீழலாம்
உயிரில் கலந்த உறவும் - இங்கு உடைந்து போகலாம்
விழியில் விழுந்த நினைவும் - இங்கு வழிகள் மாறலாம்
காலம் தேயலாம் - உந்தன் கருணை தேயுமோ
வாசம் போகலாம் - உன் பாசம் போகுமோ - யேசுவே

2. சாய்ந்து கொள்ள தோள்கள் - தினம் தந்த தெய்வமே
சோர்ந்து போகும் கால்கள் - பலம் தந்த தெய்வமே
முள்ளில் விழுந்து அழுதேன் - நீ உறவில் தேடினாய்
அள்ளி அன்னையாய் எடுத்தாய் - உன் சிறகில் மூடினாய்
நதிகள் காயலாம் - உன் நட்பு காயுமோ
நண்பர் பிரியலாம் - உன் அன்பு மாறுமோ - யேசுவே

**371** **தேடும் அன்பு தெய்வம் - எனை**
தேடி வந்த நேரம்
கோடி நன்மை கூடும் - புவி
வாடும் நிலைகள் மாறும்
இந்த வான தேவன் தந்த
வாழ்வு பாதை எந்தன் வாழும் காலம் போதும்

1. வார்த்தையாகி நின்ற இறைவன் - இந்த
வாழ்வை தேர்ந்த தலைவன்
பாரில் எங்கும் புதுப்பார்வை தந்து - அந்த
பாதையில் அழைத்த அறிஞன்
காலம் கடந்த கலைஞன் என் தலைவன்
இந்த வான தேவன். . .

2. அடிமை அமைப்பு இங்கு ஒழிய - எங்கும்
மனித மாண்பு நிறைய
புரட்சி குரல் கொடுத்து புதிய வழி வகுத்து
புதுமை செய்த பெரும் புனிதன்
வாழ்வைக் கடந்த இறைவன் என் தலைவன்
இந்த வான தேவன். . .

3. உறவு பாலம் இன்று வளர - இங்கு
இறைவன் அரசு மலர
உதயமாக வந்து இதயம் யாவும் தந்து
உலகம் வாழ வைத்த இறைவன்
ஞாலம் காத்த கலைஞன் என் தலைவன்
இந்த வான தேவன் . . . .

**372** **நம்மையெல்லாம் ஒருடலாகவே மாற்றும்**
கிறிஸ்துவின் உடலிது
நம்மையெல்லாம் ஒரு இரத்தமாகவே மாற்றும்
கிறிஸ்துவின் இரத்தமிது
கிறிஸ்துவின்உடலிது ஆமென் கிறிஸ்துவின் இரத்தமிது
ஆமென்

1. ஒருடலாம் நாம் அங்கங்கள் பலவானோம் - அதிலே
உயிருள் ஒன்றானோம் - இந்த
ஒருமை வாழ்கவே - இனி பிரிவுகள் வீழ்கவே

2. அங்கங்கள் பலவும் பலப்பல பணியாற்றும் - அதிலே
அழகாய் உடல் வளரும் - அன்பின்
ஆற்றல் வாழ்கவே - அதில் ஆக்கம் ஓங்கவே

3. இன்பமும் துன்பமும் எல்லோர்க்கும் பொதுவாகும் - அதுவே
வான்வீட்டின் சுவையாகும் - இங்கு
ஏழ்மை நீங்கிடும் - எங்கும் சமத்துவம் ஓடி வரும்

## 373 நானே வானினின்று இறங்கி வந்த

உயிருள்ள உணவு - இதை
யாராவது உண்டால் - அவன்
என்றுமே வாழ்வான்

1. எனது உணவை உண்ணும் எவரும்
பசியை அறிந்திடார் ஆ...ஆ...ஆ - என்றும்
எனது குருதி பருகும் எவரும் தாகம் தெரிந்திடார்

2. அழிந்து போகும் உணவிற்காக
உழைத்திட வேண்டாம் ஆ.....ஆ.....ஆ.... - என்றும்
அழிந்திடாத வாழ்வு கொடுக்கும் உணவிற்கே உழைப்பீர்

3. மன்னா உண்ட முன்னோர் எல்லாம்
மடிந்து போயினர் ஆ....ஆ....ஆ.... - உங்கள்
மன்னன் என்னை உண்ணும் எவரும் மடிவதே இல்லை

## 374 நீயே எந்தன் தெய்வம்

நீயின்றி வேறேது சொந்தம்

1. ஆயிரம் மனிதரில் என்னை தேடினாய்
அன்பெனும் சிறகினுள் என்னை மூடினாய் ஆ.....ஆ.....ஆ
கண்ணென காத்திட எந்தன் நெஞ்சில் வா வா
கவலையின்றி நான் வாழ என்னில் எழுந்து நீ வா

2. விடியுமோ பொழுதென விழிகள் கலங்கலாம்
வீணென என் மனம் சோர்ந்து போகலாம் ஆ.....ஆ.....ஆ.....
துணைவரும் அருளினால் என்னைத் தாங்க வா வா
துயரினின்றி என் விழி மெல்ல மூட நீ வா

## 375 நீங்களே உயிருள்ள இறைவனின் ஆலயங்கள்
நீங்களே இயேசுவை மூலைக்கல் ஆக்கியவர்
நீங்களே இயேசுவின் நற்செய்தி சொல்லும் சாட்சிகள்

1. உறவினில் உயிர் பெறும் ஆன்மீகம்
இயேசுவின் தலைமையில் மலர்ந்திடட்டும்
பிரிவினைகள் அறுந்து விட்டால்
பேதமைகள் அழிந்து விட்டால்

2. கனிதரும் திராட்சைக்கொடி அவரே
கிளைகளாய் இணைந்து கனிதருவோம்
களைகள் எல்லாம் களைந்து விட்டால்
கனிதரவே கொஞ்சம் கழித்து விட்டால்

3. இயேசுவைத் தலையாய் தாங்கிடுவோம்
உயிருள்ள உறுப்புகள் ஆகிடுவோம்
ஜாதிகளை ஒழித்து விட்டால்
சமத்துவத்தை சமைத்து விட்டால்

## 376 நெஞ்சமெல்லாம் கோவில் செய்தேன்
உனை அழைத்தேன் நீ வா வா
சிந்தையெல்லாம் நொந்தழுதேன்
சொந்தமெல்லாம் நீ தானே

1. அன்பு மொழி பேசும் இன்பமுகில் இயேசு
எந்நாளும் நண்பன் நீயே
கண்ணின் மணிபோல காத்திடுவோனே
உன் அன்பு ஒன்றே நான் வேண்டினேன்

2. வானின் முழு நிலவே வாழும் உயிர்ச்சுடரே
நீயின்றி வாழ்வேதய்யா
பாடி வரும் தென்றலில் ஆடிடும் மலராய்
உன் ஆசீர் கண்டால் மகிழ்வேனய்யா

3. சோகம் வந்து தாக்கும் போது என்னை காக்கும்
என் ஆயன் நீயேயன்றோ
மாசு கொண்ட உள்ளம் பேசும் உந்தன் நாமம்
இயேசு எந்தன் வாழ்வின் செல்வம் நீயே

**377** **நெஞ்சமெனும் ஆலயத்தில்**
வரவேண்டும் இறைவா - உனை
தஞ்சமெனத் தேடுமெனில்
வர வேண்டும் இறைவா

1. என்னகம் எழுந்து இருள் ஒழித்து
விண்ணகம் சேர்க்க வர வேண்டும்
மண்ணக இன்ப நினைவழித்து
உன்னதம் காண வர வேண்டும்

2. அன்பின் சின்னம் எனில் வளர
அன்பனே நீயும் வர வேண்டும்
உன்னத வாழ்வில் உனையடைய
என்னகம் நீயும் வர வேண்டும்

3. பணிவும் பண்பும் பிறரன்பும்
என்னில் நிறைய வர வேண்டும்
பிணியும் துயரும் அகன்றிடவே
பேரரசே நீ வர வேண்டும்

**378** **பாட்டு நான் பாட கேட்டு**
என் பாடல் நாயகா விருந்தாக வா
உன் அன்பில் நான் என்றும் ஒன்றாக வேண்டும்
உன்னாலே என் வாழ்வு நன்றாக வேண்டும்

1. இராகங்கள் இல்லாத வாழ்வெனும் வீணையில்
கானங்கள் அரங்கேறும் உன் வரவால் - இறைவா
சோகங்கள் மறைந்தோடும் உன் உறவால்
இருளோடும் துயரோடும் போராடும் என் வாழ்வில்
அருளாலே விளக்கொன்று நீ ஏற்ற வா
அதை நாளும் அணையாமல் நான் காக்க வா

2. மாதங்கள் பனிரண்டும் தேவா உன் திருவாசல்
மானிடரின் வரவுக்காய் காத்திருக்கும் - தினமுன்
மாறாத அன்பிற்காய் பூத்திருக்கும்
நீ வாழும் கோயில் தான் ஏழை என் உள்ளம்
உனை எண்ணி வாழ்ந்தாலே அழிவில்லையே
உனைவிட்டுப் பிரிந்தாலே அருளில்லையே

**379**

**பொன்மாலை நேரம் பூந்தென்றல் காற்றில்**
என் ஜீவ ராகம் கலைந்தோடுதே
என் இயேசு உன்னில் உறவாடும் நேரம்
என் துன்ப மேகம் கலைந்தோடுதே
உன் வாழ்வு ஒன்றே என் தேடலாகும்
உன் அன்பு ஒன்றே என் பாடலாகும்

1. நீயில்லாத நாளெல்லாம் நிலவில்லாத வானம் நான் - உன்
நினைவில்லாத வாழ்வெல்லாம் மழையில்லாத மேகம் நான்
காலம் தோறும் கண்ணின் மணிபோல் காக்கும் தெய்வமே
சுமை சுமந்து சோர்ந்த வாழ்வைத் தேற்றும் இறைவனே
என் இயேசுவே அபயம் நீ தர வேண்டுமே
என் தெய்வமே அருகில் நீ வர வேண்டுமே
காற்றில் ஆடும் தீபம் என்னை சிறகில் மூடுமே
ஆ.....ஆ.....ஆ....

2. ஒரு கணம் என்னருகினில் நீ அமரும் போது ஒரு யுகம்
உனை தினம் நான் புகழ்கையில் எனக்குள் தோன்றும் புதுயுகம்
முள்ளில் பூக்கும் ரோஜா என்னை அள்ளிப் பறிப்பதேன்
சொல்ல முடியா அன்பில் என்னை சூடி மகிழ்வதேன்

என் இயேசுவே என் அன்புக்கு வானம் எல்லை
என் தெய்வமே உன் அன்புக்கு எல்லை இல்லை
அன்பின் நிழலில் எந்தன் இதயம் உன் அன்பைப் பாடுதே
ஆ.....ஆ.....ஆ....

**380** **மலரென மனதினை திறந்து வைத்தேன் - அதில்**
மணமென இணைந்திட உனையழைத்தேன்
உளமெனும் அகலினில் உனை வளர்த்தேன் - அங்கு
உயர்ந்திடும் சுடரினில் உனையறிவேன்

1. பால் நிறம் படைத்த வெண் மழலை உள்ளம் - வீணே
கார் நிழல் கொண்டது காலத்தினால்
காவலா கள்ளமெல்லாம் கழித்து - இன்று
கோலமிடும் உந்தன் திருவுருவை

2. அகத்தினில் ஆலயம் அமைத்திடுவேன் - அங்கு
அரியதோர் பலியினை நடத்திடுவாய்
தலைவனே உள்ளமெல்லாம் நிறையும் - உந்தன்
பலியுடன் கலந்து யான் உயர்ந்திடுவேன்

3. அலைந்திடும் மனதினுக்கமைதியையே - என்றும்
விழைந்து யான் விரைந்தேன் உனதகமே
அண்ணலே வெள்ளமெனப் பெருகும் - அருள்
புண்ணிய சுனையினில் பருகிடுவேன்

**381** **மழலை இதயம் நாடி வருவோர்**
என விழைவீரோ - இசை
குழலின் ஒலியில் மயங்குவோரே
பேச வருவீரோ
மானைப் போல் தவித்து நிற்கும் இதயம் பாரீரோ
தேனைப் போல அருள் சுரந்து தேற்ற வாரீரோ

1. குழந்தை போல பேச எனக்கு இதயமில்லையே
மழலை சொல்லும் நாட்களாக மறந்து போனதே
இளமைப் பொலிவில் இதயம் தானும் இறுகிப் போனதோ
வளமை சேர்க்கும் உனை மறந்து மயங்கிப் போனேனே

பாவி என்னை பார்த்து பார்த்து பரிதவிக்கின்றீர்
மேவி மேவி அழைத்து அழைத்து அன்பு செய்கின்றீர்
தவழ்ந்து தவழ்ந்து தேடி தேவா உன்னை அடைந்துள்ளேன்
மகிழ்ந்து என்னை எற்றுப் பாவப் பொறுத்தல் அளிப்பீரோ

பாவ சேற்றில் வாழ்ந்த நாட்கள் போதும் போதுமே
நோகச் செய்த வினைகள் யாவும் தீரும் தீருமே
தேவா உன்னை இறுக அணைத்து அன்பில் மகிழ்கின்றேன்
நாவால் உன்னை வாழ்த்திப் பாடி மகிழ்ந்து வருகின்றேன்

382 **வசந்த காலமே என்னில் வந்து தங்குமே**
வாழும் இறைவனே என்னில் வாழ வாருமே
அருளின் வடிவமே என்னை ஆளும் தெய்வமே
கருணை வெள்ளமே என்னை கதியில் சேருமே

என்னை உந்தன் பிள்ளையாய் ஏற்று உணவு வழங்கவே
மன்னவா வாருமே - எந்தன் மனதில் வாழுமே
விண்ணக இன்பமே - என்னில் பொழிய வாருமே

மார்த்தாள் மரியாள் வீட்டிலே நேர்த்தியாக பேசியே
வார்த்தையே உணவையே - அன்று வழங்கிட வந்தாயே
தசையும் குருதியும் - இன்று தந்திட வாருமே

383 **வரவேற்பேன் இறைவா - நீ**
வரவேண்டும் என்று அழைக்கின்றேன்

தாளத்தில் அதிர்ந்த ரூபகனை - எக்
காளத்தில் வளர்ந்த கார்மழையை
இராகத்தில் மலர்ந்த மோகனனை - எந்தன்
நேசத்தில் இணைப்பேன் இசையமுதாய்

அன்னை பாடிய தாலாட்டில் - என்
தந்தை அருளிய அறிவுரையில்
பொன்மொழி போதகர் அறிவுரையில் - இறை
நாதத்தின் கீதத் தொனி கேட்பேன்

3. மாணிக்கக் கோபுர வாசலிலே - என்
மன்னவா உனக்காய்க் காத்திருப்பேன்
மனமென்னும் வீட்டினில் வாழ்ந்திடவே - என்
மனமகிழ் விருந்தாய் நீ வருக

**384**

**வைகறைப் பொழுதின் வசந்தமே நீ வா**
விடியலைத் தேடும் விழிகளில் ஒளி தா
வாழ்வு மலர்ந்திட வான் மழையென வா
வழியிருளினிலே வளர் மதியென வா
இங்கு பாடுமிந்த ஜீவனிலே பரமனே நீ வா

1. அலைகளில்லாக் கடல் நடுவே பயணமென என் வாழ்வு
அமைதி எங்கும் அமைதியென பயணமதை நான் தொடர
இறைவா என் இறைவா இதயம் எழுவாய்
நிறைவாய் எனிலே நிதமும் உறைவாய் - எந்தன்
வாழ்வு ஒளிர வாசல் திறந்து எனை அழைத்திட வா

2. இடர்வரினும் துயர்வரினும் இன்னுயிர்தான் பிரிந்திடினும்
எனைப் பிரியா நிலையெனவே
இணை பிரியா துணையெனவே இறைவா என் இறைவா...

**385**

**வாழ்வின் இனிமை வழங்கும் கனியே**
வளமாய் எம்மில் தவழ்க

1. இயற்கை சுமந்த கனிசெய் வினையாம்
இருளின் துயரம் விலக
இறைவன் உவந்து வழங்கும் கனியாய்
அருளைப் பொழிந்தே வருக

2. தூய்மை அமுதம் துளிர்க்கும் மலராய்
துலங்கும் இறைவா வருக
தேய்வு தொடரா புதுமை நிலவாய்
திகழும் வாழ்வைத் தருக

3. தனிமை நலிந்து இனிமைப் பொழிந்து
புனித இதயம் பெறவே
புனிதர் சுவைக்கும் இனிய விருந்தாய்
கனிவாய் எழுந்தே வருக

**386** **வாழ்வை அளிக்கும் வல்லவா**
தாழ்ந்த என்னுள்ளமே
வாழ்வின் ஒளியை ஏற்றவே
எழுந்து வாருமே

1. ஏனோ இந்த பாசமே ஏழை என்னிடமே
எண்ணில்லாத பாவமே புரிந்த பாவிமேல்

2. உலகம் யாவும் வெறுமையே உன்னையான் பெறும்போது
உறவு என்று இல்லையே உன் உறவு வந்ததால்

3. எந்த மன்னர் உன்னைப்போல் பொங்கும் அன்பினால்
வந்து எமது நடுவிலே தங்கி மகிழுவார்

4. தனிமை என்றே ஏங்கினேன் துணையாய் நீ வந்தாய்
அமைதி யின்றி ஏங்கினேன் அதுவும் நீ என்றாய்

5. அன்பு ஒன்றே கேட்கின்றேன் அதையே தருகின்றேன்
இதயத் தன்பு யாவுமே இனிதே தருகின்றேன்

**387** **வானவர் வாழ்த்தும் தூயநல் அமுதே**
வாழ்வின் வழித்துணையே - அமுதே
வாழ்வின் வழித்துணையே

1. தெய்வீகம் மறைத்து மனுவுருவெடுத்தீர்
தெய்வமாய் மாற்றிடவோ - எம்மை
தெய்வமாய் மாற்றிடவோ
மன்னுயிர் மறைத்து உணவினில் வந்தீர்
விண்ணகம் சேர்த்திடவோ - எம்மை
விண்ணகம் சேர்த்திடவோ

2. அன்பு என்னும் அகல் விளக்கேற்றி
ஆவலாய் சுடரானோம் - உமக்காய்
ஆவலாய் சுடரானோம்
ஆவல் என்னும் வேட்கையைத் தணிக்கும்
அருட்கடல் நீராவாய் - எமக்காய்
அருட்கடல் நீராவாய்

**388** **வானின் அமுதம் நீ ஜீவ அமுதம் நீ**
அமுதே உயிரே ஜீவ உணவே
எந்தன் இதயம் வா
எந்தன் நாவில் எழுந்திடும் ஜீவ உணவே
எனில் வருவாய் அமுதாய்

1. பறவை இனங்களே பாடுங்கள் - நம்
தேவனின் பெருமை கூறுங்கள்
நல்மனம் பொய்கை தென்றலிலே
மகிழ்ந்து நீ இறைபுகழ் பாடாயோ

2. குயில்கள் கூவிடும் இனிமையிலே - நம்
இயேசுவின் புகழினை பாடுங்கள்
என் மனக் கோவிலின் வாசலிலே
என்னில் நீ என்றும் வாராயோ

**389** **வானின்றிறங்கிய இறைமகனே**
வாழ்வில் நிறைந்திடும் திருமகனே
வாழ்வின் பொருளே வாழ் நிதமே
நானுனில் வளர்ந்திட வருவாயே

1. கானப் பொய்கையில் பூக்கும் மலரினில்
பாடும் வண்டினம் அமராதோ
நானும் மலரென இன்றலர்ந்தேன் - இனி
வாழத் தாமதமேன்
இறைவா வருவாய் - 2

2. பாலை நிலத்தினில் தாகம் தீர்த்திட
பாறை பிளந்திட சுரந்தவனே

பாரில் வாடினேன் வாழ்விழந்தேன் - நிறை
வாழ்வை அளித்திட வா
இறைவா வருவாய் - 2

3. வானம் பொய்ப்பினும் காலம் மாறினும்
தாயின் தனியன்பு மறைந்திடினும்
நாளும் நிலைத்திடும் நிலையன்பே - உன்னில்
வாழ வரமருள்வாய்
இறைவா வருவாய் - 2

## 390 வழிகாட்டும் என் தெய்வமே

துணையாக எனில் வாருமே
நதிமீது அலைந்தாடும் அகல் போலவே
கதியேதும் தெரியாமலே - நான்
தடுமாறும் நிலை பாருமே
அன்பாகி அருளாகி என்னோடு ஒன்றாகி
துயரோடு போராடும் என் வாழ்வின் நலமாகி
எனைத் தாங்கும் என் தெய்வமே
என் நிழலாக எழும் தெய்வமே

1. எந்நாளும் உனைத் தேடும் வரம் கேட்கிறேன்
உன் பாத நிழல் நாடும் மனம் கேட்கிறேன்
நீரின்றியே மண்ணில் வளம் இல்லையே
நிலமின்றியே உயிர் வாழ்வில்லையே
எனைத் தாங்கும் என் தெய்வமே
என் நிழலாக எழும் தெய்வமே
நிலவெங்கும் ஒளிர்ந்தாலும் விழி மூடி பயனேது
துயர் மூடும் மனம் உந்தன் அருள் காணும் வகையேது
பலனாக கைமீது வா - இன்று புலனாகும் இறையாக வா

2. என் பாதை முடிவாகும் உன் தாளிலே
என் வாழ்வு விடிவாகும் அந்நாளிலே
உன் வார்த்தைகள் என் வாழ்வாகுமோ
உன் பார்வைகள் என் வழியாகுமோ
இருள் நீக்கும் விளக்காக வே - நான்
சுடர் வீச எனை ஏற்ற வா

*ஆல் போல வளர்ந்தாலும் ஆரம்பம் முளை தானே*
*விண் வாழ்வின் உயர்வெல்லாம் இவ்வாழ்வின் பயன் தானே*
*நிறை வாழ்வின் விதையாகவே - எங்கள்*
*நில வாழ்வு பயன்காண வா*

**391** **வா மன்னவா இதயம் எழுந்துவா**
என் உள்ளம் மலரவா
அன்புப் பாதையில் நாங்கள் நடந்திட
என்வாழ்வில் தீபம் ஏற்றிட

1. வாழ்வில் இன்னல்கள் எத்துணை வந்தாலும்
உன் அன்பு என்றும் மாறாதைய்யா
ஒளிவெள்ளமாய் என்னில் நீ உதித்தாய்
என் யேசுவே எழுந்துவா

2. சொந்தங்கள் பந்தங்கள் விலகிடும் நேரம்
உன்துணை என்றும் மாறாதைய்யா
உன்கையில் என்பெயர் பொறித்து வைத்தாய்
என்தெய்வமே எழுந்துவா

**392** **ஜீவன் தேடும் தேவன் நீ**
நான் பாடும் இராகம் நீ
நாவின் கீதம் உன் நாமம் சொல்லும்
நாளும் உன் தாளில் மலர்ந்திடும் உன் எண்ணம்

1. ஜீவ ராகங்கள் தேவ வார்த்தையில் ஒலிக்கும்
தேவ வார்த்தைகள் தேடும் வாழ்வினைக் கொடுக்கும்
காலம் புலராதோ கனவு கலையாதோ
வாழும் ஜீவன்கள் பாடும் இராகங்கள் உலகில் கேட்காதோ

2. இதய சோகங்கள் இறையுன் அருளில் மறையும்
உதய நெஞ்சங்கள் உலகில் எங்கும் பிறக்கும்
புதுமை நிகழாதோ பழமை மறையாதோ
நேச உணர்வுகள் பாச மனதுகள் கண்டு மகிழாதோ

# நன்றியில் ...!

**393** **அழகிய கவிதையில் பாடிடுவேன்**
அவனியில் அவர் புகழ் சாற்றிடுவேன்

1. அறிவிலி எனையே அவர் நினைத்தார்
ஆற்றல் மிகவே எனக்களித்தார்
எதிரியினின்று விடுவித்தார்
எனவே அவர் என் ஆண்டவரே

2. துன்பச் சூழல்கள் சூழ்கையிலே
துயரக் கறைகள் படர்கையிலே
அன்பின் கரத்தால் அரவணைத்தார்
ஆகவே அவர் என் ஆண்டவரே

**394** **அன்புக்கு பாடல் பாடுவேன்**
நெஞ்சத்தில் மன்னனை நாடுவேன்
இன்பத்தின் ஊற்று இயேசுவே - உன்
இன்புகழ் பாடி மகிழ்ந்திருப்பேன்

1. வேதனை ஆயிரம் நானடைந்தேன் - அந்த
வேளையில் ஊன்றுகோல் நீ தெரிந்தாய்
உயிரின் வார்த்தையே - எந்தன் உள்ளத்தில் வாருமே
உன் நாமம் பாடுகையில் என் நாவும் இனித்திடுமே

2. கல்வாரி மலையில் உன் உயிர் தந்ததும்
எல்லோர்க்கும் வாழ்வாய் எழுந்ததுவும்
அன்பின் வார்த்தையே - எந்தன் உள்ளத்தில் வாருமே
சொல்லில்லை கூறிடவே இசையில்லை பாடிடவே

**395** **ஆயிரம் துதிப்பாடல் - எந்தன்**
நாவினில் அசைந்தாடும்
ஆனந்தம் ஆனந்தம் என் மனதில்
ஆண்டவா உனைப்பாட

1. வான் முகிலும் உயர்மலையும் உந்தன் புகழ்பாட
தேன் பொழியும் நறுமலர்கள் உன்பெயர் சுவைபாட
வான் பொழியும் நீர்த்துளிகள் உந்தன் அருள்பாட
யான் உனது திருப்புகழை கவியால் நிதம் பாட
ஆண்டவா உனைப் பாட
ஆனந்தம் ஆனந்தம் என் மனதில்
ஆண்டவா உனைப் பாட

2. பகல் ஒளியும் பால் நிலவும் ஒளியாம் உனைப் பாட
அலைகடலும் அதன் சிறப்பும் கருணையின் விதம் பாட
மழலைகளின் தேன் மொழிகள் தூய்மையின் நிறம்பாட
யான் உனது திருப்புகழை கவியால் நிதம் பாட
ஆண்டவா உனைப்பாட . . .

**396** **ஆயிரம் நன்றி சொல்வேன் - உனக்கு**
பாயிரம் பாடிடுவேன்
நேரிலே வந்தென்னை ஆண்டு கொண்டானே
பாரெல்லாம் போற்றிடுவேன் - உன்நாமம்
ஊரெல்லாம் ஒதிடுவேன்
இயேசு இயேசு இயேசு இயேசு இயேசு இயேசுவே

1. பாவியாய் இருந்தேன் பாருலகில் நானே
கேலி என்றெண்ணாமல் ஏற்றுக்கொண்டாயே
வேலியாய் நின்றென்னை காத்திடுவோனே
மாலையாய் என் வாழ்வை சூடுவேன் உனக்கு
காலை மாலையில் கர்த்தர் இயேசுவின் காலடி அமர்ந்திடுவேன்
வேலை ஒய்விலும் வேந்தன் பெயர் சொல்லி வேதனை தவிர்த்திடுவேன்
வேறில்லை தஞ்சம் ஆறுதல் உன் நெஞ்சம்

2. தெருவழி செல்வதில் தேடினேன் இன்பமே
தேன்மொழி உன்குரல் கேட்டயர்ந்தேனே
தெவிட்டா இன்பத்தில் திளைக்க வைத்தாயே
தேவனே உன்னில் நான் மகிழ்ந்திடுவேனே
காலை மாலையில் . . .

**397** **இசை பல இசைத்தே இனிய பண் தொடுத்தே**
இகமதில் எழுந்த நல் இறைவனைப் புகழ்வேன்
இறைவனைப் புகழ்வேன்

1. ஆத்மாவின் கீதத்தை அருளுரை தாளத்தில்
அவனியில் பாடியே **அமலனைப் புகழ்வேன்** - 3

2. இதயத்தின் வீணையை இனிதாய் மீட்டியே
உதயத்தில் பாடிடுவேன் **உயர்வாக புகழ்வேன்** - 3

3. மௌனத்தின் ராகத்தில் மாநிலம் மீதினில்
மாண்புறப் பாடியே **மாநிலம் மீட்டார்** - 3

**398** **இதய தாளத்தில் என் வாழ்க்கைப் பாடலை**
இயேசு ராகத்தில் நான் என்றும் பாடுவேன்
மீட்படைந்தேன் நான் மீட்படைந்தேன்
கிறிஸ்துவுக்குள் மீட்படைந்தேன்
ஆகையினாலே ஆனந்தம் கொள்வேன் - என்
ஆத்துமத்தின் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்

உடைந்துபோன யாழாய் நான் வீணிலிருந்தேன் - என்
கடைநிலையைக் கண்ட இயேசு கருணை கொண்டார்
வாழ்வு கொடுத்தார் என்னில் சுருதி மீட்டினார்
வானகத்தின் தேனிசையை என்னில் பொழிந்தார்

பாவமென்ற சேற்றுக்குள்ளே வாழ்ந்திருந்தேன் - தன்
பாடுகளின் குருதியினால் கழுவி எடுத்தார்
அவர் புகழ்பாடும் சிறுகவிக்குயிலாகக்
கூவிடச் செய்தார் எனக்குக் குரலினைக் கொடுத்தார்

**399** **இதுவரை செய்த செயல்களுக்காக**
இறைவா உமக்கு நன்றி

உவர் நிலமாக இருந்த என்னை
விளை நிலமாக மாற்றிய உம்மை
அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில்
நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி

2. தனிமரமாக வளர்ந்த என்னை
பழு மரமாக சிறப்பித்த உம்மை
திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில்
இன்னிசை முழங்கி பாடுவேன் நன்றி

**400** **இந்நாள் வரை என்னைக்காத்த அன்பின் தெய்வமே - உன்**
உயிரான அருட்துணையை வியந்து பாடுவேன்
நன்றி நன்றி நன்றி நெஞ்சம் சொல்லும் நன்றி
நன்றி நன்றி நன்றி நன்றி என்றும் நன்றி

1. உளம் சோர்ந்து போனபோது அருகில் இருந்து நடந்தாய்
உடல் சோர்ந்து தவித்தபோது வார்த்தை தந்து வளர்த்தாய்
புனிதன் பாதையில் நான் தினமும் நடப்பேன்
புரட்சிப் பாதையில் நான் நல்வழி காண்பேன்
அன்னையானவா நல் தந்தையானவா நன்றி
வாழ்வுக்கும் நன்றி வளங்களுக்கும் நன்றி

2. உறவு தேடித் தவித்தபோது நண்பனாக வந்தாய்
அமைதி தேடி அலைந்தபோது இறை அமைதி தந்தாய்
இயேசு பாதையில் நான் வலிமை பெறுவேன்
இறையாட்சித் தேடலில் நான் புதுயுகம் படைப்பேன்
அன்னையானவா . . . .

**401** **இருகரம் குவிப்பேன் இனிதே உரைப்பேன்**
நன்றி நன்றி நன்றி என்றும் - என்
நண்பர் யேசுவுக்கு
ஆஹா நன்றி நன்றி நன்றி
என் அன்பர் யேசுவுக்கு
ஆஹா ஹா நன்றி நன்றி நன்றி
என் அன்பர் யேசுவுக்கு

1. பசுமைவெளியில் எனை நடத்தி
கண்ணின் இமைப்போல காத்து
தம்கரத்தில் இறுகஅணைத்தே
காத்திடும் யேசுவுக்கு

எனைமுழுதும் கையளித்தே என்றுமே பாடிடுவேன்
ஆஹா நன்றி நன்றி நன்றி - என்
அன்பர் யேசுவுக்கு
ஆஹா ஹா ....................
அன்பர் யேசுவுக்கு

2. கண்ணயர்ந்து உறங்கும்போது
கண்விழித்து அருகில் அமர்ந்து
நாள்முழுதும் கரம்பிடித்து
வழிகாட்டும் தேவனுக்கு
அவர் புகழைப் பறைசாற்றி என்றுமே பாடிடுவேன்
ஆஹா ஹா ........................

**402 இறைவன் படைத்த நாளிதே**
நன்றி நன்றி பாடுவோம்
இதயம் மகிழும் நாளிதே
நன்றி நன்றி பாடுவோம்
நன்றி இறைவா நன்றி இறைவா

1 வானம் பூமி யாவுமே நன்றி கூறட்டும்
வாழும் உயிர்கள் இயேசுவை வணங்கி மகிழட்டும்
இதயம் இன்று இனிய கீதம் பாடட்டும்
இறைவன் இயேசு என்றும் நம்மை காப்பதால்
நன்றி இறைவா நன்றி இறைவா

கவலை யாவும் மறைந்தது கலக்கம் இல்லையே
காலம் எல்லாம் கர்த்தர் இயேசு நம்மோடு உள்ளார்
புதிய வானம் புதிய பூமி பூத்திட
புனித பயணம் புவியில் இன்று தொடருவோம்
நன்றி இறைவா நன்றி இறைவா

**403 உம்மைப் போற்றுகின்றோம்**
உம்மைப் புகழுகின்றோம்
நன்றி கூறுகின்றோம்

1. இறைவா உம் மாட்சிமை மேலானது
இறைவா உம் மகத்துவம் மேலானது

2. இறைவா உம் வல்லமை மேலானது
இறைவா உம் வார்த்தைகள் மேலானது

3. இறைவா உம் அன்புள்ளம் மேலானது
இறைவா உம் அருட்கரம் மேலானது

4. இறைவா உம் திருவடி மேலானது
இறைவா உம் திருவாழ்வு மேலானது

## 404

**உலகிற்கு ஒளியாய் உயிருக்கு வழியாய்**
துலங்கிடும் உமக்கே இறைவா
நன்றி நன்றி இறைவா நன்றி
நன்றி கூறுகின்றோம்

1. இயேசுவின் குரலை இதயத்தில் கொண்டு
இணையில்லா பலியில் இறைவனை உண்டு
சென்றிடும் வழியில் சொல்லிடும் மொழியில்
நின்றிட அழைத்தாய் நிலைப்போம் தினமும்

2. உண்மை வழியை உலகுக்குக் காட்ட
உலகத்தை அன்பால் ஒன்றாய் திரட்ட
அகயிருள் அகற்றி இறையருள் புகுத்த
அன்புடன் அளித்தோம் எம்மையே உமக்கு

## 405

**உன் நாமம் சொல்லச் சொல்ல**
என் நெஞ்சம் மகிழுதய்யா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உன் இன்பம் பெருகுதய்யா

1. மாணிக்கத் தேரோடு காணிக்கை வந்தாலும்
உனக்கது ஈடாகுமா
உலகமே வந்தாலும் உறவுகள் நின்றாலும்
உனக்கது ஈடாகுமா

2\. தேனென்பேன் பாகென்பேன் தெவிட்டாத சுவையென்பேன்
உன் நாமம் என்னென்பேன்
நிறை என்பேன் இறையென்பேன்
நீங்காத நினைவென்பேன் உன் நாமம் என்னென்பேன்

3\. ஊரெல்லாம் உலகெல்லாம் உயிர் கொண்ட பேரெல்லாம்
உன் நாமம் சொல்லாதோ
பாரெல்லாம் வாழ்கின்ற படைப்புகளெல்லாமே
உன் நாமம் புகழாதோ

**406 உயிரோடு கலந்து உறவான உனக்கு நன்றி நன்றி**
உலகினில் உறவுகள் அளித்திட்ட நிலைக்கு நன்றி
மனிதமும் புனிதமும் உறவென்ற மொழிக்கு நன்றி
உறவாலே வாழ்விக்கும் அமுதான கொடைக்கு நன்றி
நன்றியின் பாடல் உறவின் பாடல்
நன்மையைக் கூறல் வாழ்வின் தேடல்

1\. கவிபாடும் உலகை படைத்திட்ட இறைக்கு நன்றி நன்றி
கட்டவும் நடவும் நீ தந்த பணிக்கு நன்றி
கருத்தையும் செயலையும் புதுப்பிக்கும் நெறிக்கு நன்றி
காலமும் உடன்வந்து உயிரூட்டும் தயைக்கு நன்றி

2\. வறியோரின் கண்ணீர் துடைக்கின்ற பணிக்கு நன்றி நன்றி
வளங்களும் நலன்களும் நீதானே எமக்கு நன்றி
அம்மையும் அப்பனும் ஆனாயே புவிக்கு நன்றி
அன்பினில் அர்ப்பணம் வளர்த்தாயே அதற்கு நன்றி

**407 எத்துணை நன்று எத்துணை நன்று**
அத்தனை பேரும் ஒன்றி வாழ்வது
எத்துணை நன்று எத்துணை நன்று

1\. ஒரு கொடி கிளையாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - அந்த
ஒரே திருச்சபையில் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று

ஒரே குடும்பமாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று - இன்று
ஒரேவித அழைப்பை நாம் பெற்றுக்கொண்டோம்
எத்துணை நன்று

2. ஒரே விருந்தினிலே சேர்ந்து கொண்டோமே
எத்துணை நன்று - இன்று
ஒரே அப்பத்தினிலே நாமுணவுண்டோம்
எத்துணை நன்று
ஒரே கிண்ணத்திலே பருகுகின்றோமே
எத்துணை நன்று - இன்று
ஒரே உடலாக மாறிவிட்டோமே
எத்துணை நன்று

**408** **எனது மனதில் புதிய புதிய**
கனவு வளரும் காலம் காண்கிறேன்
இதய வீணை இதழில் நிறையும் காட்சி காண்கிறேன்
நான் இங்கு பாடுவேன் நாதம் முழங்குவேன்
தேவன் நம்மை தேர்ந்து கொண்டார் நன்றி கூறுவேன்

1. எளிய நிலையில் வாழுகின்ற இதயங்களை
எனது தேவன் உயர்நிலையில் அழகு செய்கிறார்
மனிதனே மனிதனே புதிய தேசம் வளர்த்திடு
இனியும் நமது பூமியில் மனித சோகம் நிகழும்போது
வான் அருளில் நாம் நனைய
விழியில் புதிய வழிகள் தெரிய
புதிய புதிய கனவு வளரும் காலம் காண்கிறேன்

2. இதய மாளிகை அங்கே அன்பு வாழவும்
அருளின் ஊற்றுகள் பொங்கும் காட்சி நிறையவும்
இனி வரும் நாட்களில் இருளின் ஆட்சி நீங்கவும்
இறைவன் வழியை மறந்து நாமும் சுயநலன்கள் நாடும்போது
வான் அருளில் நாம் . . .

409

**என் உள்ளம் பண்பாடுதே**
உன் தாளினை நாடுதே
இன்பம் பொங்க நன்றி வெள்ளமே
பாய்ந்தோடிக் கொண்டாடுதே

அன்போடு உன்னைத் தந்தாயே
எம்மோடு என்றும் வாழவே
கண்போலக் காத்த உன்னையே
எண்ண எண்ண நன்றி ஊறுமே
மண்வாழும் காலம் யாவுமே உன் நாமம் என்கீதமே
எந்நன்றி சொல்லுவேன் எந்நாளும் போற்றுவேன்
என் இயேசு என் தெய்வமே

அன்போடு என்னைப் படைத்தாய்
அன்போடு காத்து வருகின்றாய்
பாசத்தோடு பரிபாலித்தாய்
பாரில் வாழும் வரம் அளித்தாய்
உன்னில் என்றும் நான் வாழுவேன்
உன்னை என்றும் நான் மறவேன்
எந்நன்றி சொல்லுவேன் . . .

410

**என்னிடம் எழுந்த இயேசுவே உமக்கு**
அன்பு ஆராதனை நன்றியுமென்றும்

பரலோக வாசிகள் அருமையாய் உம்மை
புகழ்ந்து கொண்டாடிட புவியிலே இந்த
நீசனாம் என்னிடம் எழுந்ததும் ஏனோ
நேசமும் அதிசய இரக்கமுமன்றோ

மாசில்லா அப்ப குணங்களில் மறைந்து
நேசமாய் என்னுள் எழுந்து வந்தீரென
ஆசையாய் இயேசுவே விசுவசித்துமக்கு
பாசமாய் நன்றி செலுத்துகின்றேனே

ஆசிரரூளுமென் தாய் தந்தை சோதரர்
சோதரி நண்பர் சுற்றமெல்லோர்க்கும்
பெருதவி செய்வோர் பகைமையில் உழல்வோர்
பாவிகள் மரித்தோர் திருச்சபையோர்க்கும்

**411** **என்னிறை தேவன் ஏற்றிய தீபமே பாமரன் பாடல்**
தன்னிறை அன்பால் தான் கண்ட ஜீவனாம்
பரமனின் பாதம்
என்னாதமே என் இதய பண்ணாகுமே
எந்நாளுமே அவரன்பு என் மீதிலே

1. என் ஆயனே உன் பாதையில்
எந்நாளும் நான் பாடும் சங்கீதமே
உன்னோடு நான் ஒன்றாகிட
உயிரோடு உயிர் சேர்ந்து உறவாடிட
நெஞ்சமும் பாடுது கண்களும் தேடுது
தஞ்சமென்றவரையே என்னுள்ளம் நாடுது

2. உறவானவா என் உயிரானவா
உலகெங்கும் அரசாளும் என் மன்னவா
நிலையானவா என் கலையானவா
அலைபாயும் கடலாக எனை காக்கவா
என்னன்பு தேவனே என்னகம் வாருமே
என்னிலே எழுந்து நீ என்னிலை மாற்றுமே

**412** **என்னுள்ளம் கவி ஒன்று பாடும் - உந்தன்**
அன்பொன்றே அது என்றும் நாடும்
இன்பங்கள் நதியான வெள்ளம்
இதயத்தை சூழ்ந்தோடி கொள்ளும்
ஆனந்த கவிபாடி துள்ளும் - 2

1. உன்னோடு ஒன்றாகும் நேரம்
உலகங்கள் சிறிதாகிப் போகும்
நானென்பதெல்லாம் மாறும்
பிறர் சேவை உனதாக ஆகும்
எல்லாமே சமமாய் எல்லோரும் நலமாய்
அன்பொன்றே ஆதாரம் ஆகும்
விண்ணின்று மண்மீது தோன்றும்

பிறர் காணும் துன்பங்கள் - எங்கள்
இதயத்தை இசை மீட்டிச் செல்லும்
வரம் ஒன்று உமைக் கேட்பதெல்லாம்
உறவெம்மில் உயிர் வாழத்தானே
என்சாயல் இன்று உன் சாயல் அன்று
உம்முன்னே யாம் எல்லாம் ஒன்று
என்றாகும் நன்நாளும் தோன்றும்

413 **என்ன சொல்லிப் பாடுவேன்**
என்ன சொல்லிப் போற்றுவேன்
எனக்கு செய்த நன்மை எண்ணியே - 2
என்ன சொல்லிப்பாடியும் என்ன சொல்லி போற்றியும்
ஈடு இணை உமக்கு இல்லையே - ஐயா
ஈடு இணை உமக்கு இல்லையே
நன்றி தந்தையே நன்றி யேசுவே
வழி நடத்தும் தூய ஆவியே

கண்ணீர் துடைத்ததை சொல்லிப்பாடவா
கவலையில் அணைத்ததை சொல்லிப்பாடவா
விழுந்தேன் தூக்கியதை சொல்லிப்பாடவா
சாய்ந்தேன் தாங்கியதை சொல்லிப்பாடவா
நன்றி தந்தையே . . . .

வாழ்வு தந்ததைச் சொல்லிப்பாடவா
வளமை நிறைந்ததை சொல்லிப்பாடவா
ஊக்கம் தந்ததை சொல்லிப்பாடவா
உறுதி செய்ததை நான் சொல்லிப்பாடவா
நன்றி தந்தையே . . . .

414 **என்னில் வந்த நாதனுக்கு**
என்னைக் காக்கும் தேவனுக்கு
நெஞ்சார என்றும் நன்றி சொல்வேன்
வாழ்வளித்த வள்ளலுக்கு வாழ்வளிக்கும் யேசுவுக்கு
வானெங்கும் முழங்க நன்றி சொல்வேன்
நன்றி நன்றி என்றும் நன்றி சொல்வேன் - 2
நன்றி நன்றி நன்றி என்றும் நன்றி சொல்வேன் - 2

1. பாவங்களைப் போக்கினார் நன்றி சொல்வேன்
பயமதையே நீக்கினார் நன்றி சொல்வேன்
பணிவுடனே நோக்கினார் நன்றி சொல்வேன்
பாதைதனைக் காட்டினார் நன்றி சொல்வேன்
உண்மை அன்பு நீதியை உணரச் செய்த யேசுவை
உளமாரப் பாடியே நன்றி சொல்வேன்
நன்றி நன்றி நன்றி என்றும் நன்றி சொல்வேன் - 2

2. எளியவரை நோக்கினார் நன்றி சொல்வேன்
ஏழைகளை நேசித்தார் நன்றி சொல்வேன்
அடிமைகளின் விலங்கொடித்தார் நன்றி சொல்வேன்
அடியவரின் குரல் கேட்டார் நன்றி சொல்வேன்
உரிமைதரும் வேள்வியை உணரச் செய்த யேசுவை
ஆடியே பாடியே நன்றி சொல்வேன்
நன்றி நன்றி நன்றி என்றும் நன்றி சொல்வேன் - 2

**415** **ஒரு கோடி பாடல்கள் நான் பாடுவேன் - அதை**
பாமாலையாக நான் சூடுவேன்
உலகெல்லாம் நற்செய்தி நானாகுவேன் - உந்தன்
புகழ்பாடி புகழ்பாடி நான் வாழுவேன்

1. மனவீணை தனை இன்று நீ மீட்டினாய் - அதில்
மலர் பாக்கள் பல கோடி உருவாக்கினாய்
என் வாழ்வும் ஒரு பாடல் இசை வேந்தனே - அதில்
எழும் ராகம் எல்லாம் உன் புகழ்பாடுதே
ஆதியும் நீயே அந்தமும் நீயே பாடுகிறேன் உனை இயேசுவே
அன்னையும் நீயே தந்தையும் நீயே
போற்றுகிறேன் உனை இயேசுவே

2. இளங்காலை பொழுதுந்தன் துதி பாடுதே - அங்கு
விரிகின்ற மலர் உந்தன் புகழ் பாடுதே
அலை ஓயா கடல் உந்தன் கருணை மனம் - வந்து
கரை சேரும் நுரை யாவும் கவிதைச் சரம்
ஆதியும் நீயே . . .

## 416

**கவிதைச் சூழலில் இதயம் கலந்து**
எழுதும் கவிகள் ஆயிரம் - அவை
இராகம் சேர்த்து தாளம் போட்டு
இறைவன் புகழைப் பாடிடும்

1. ஆடு மயில் பாடும் குயில்
ஓடி வந்து சொல்லுமாம் நன்றி தேவா நன்றி
ஆதவனே உன் படைப்பின் அழகுதனில் அகமகிழ்ந்து
மயிலாகி குயிலாகி கோடி நன்றி யானுரைப்பேன்

2. சோலை மலர் அகவிதழில் தென்றலாடி
சொல்லுமாம் நன்றி தேவா நன்றி
உன் வரவில் யானுணரும் மகிழ்வுக்கு நன்றி கூற
சோலைவன தென்றலாகி சுகந்த மணம் யான் தருவேன்

## 417

**காற்றே கடலே மேகங்களே**
கடவுளின் புகழ் பாடுங்கள்
கார்கால மேகம் கருக்கொண்ட மழையே
கடவுளின் புகழ் பாடுங்கள்

1. வெம்மையின் சூரியனே தண்மையின் நிலவே
கடவுளின் புகழ்பாடுங்கள்
வானத்து மேலுள்ள விண்மீனே முகிலே
கடவுளின் புகழ்பாடுங்கள்
நெருப்பே கல் மழையே திகிலூட்டும் புயலே
கடவுளின் புகழ் பாடுங்கள்
பனியே அனலே புகழ் பாடுங்கள்

2. உயர்வான மலையே தாழ்வான குன்றே
இறைவனின் புகழ் பாடுங்கள்
ஓடி வரும் நதியே வளமாக்கும் நிலமே
இறைவனின் புகழ் பாடுங்கள்
வயலோர மரமே வரப்போர செடியே
இறைவனின் புகழ்பாடுங்கள்
கடலில் மீனே புகழ் பாடுங்கள்

**418** **நன்றி என்று சொல்லி**
எந்தன் நெஞ்சம் உன்னில் வாழும்
எந்த நாளும் உந்தன் அன்பைத் தேடும் - அது
துள்ளிவரும் தென்றலிலே புத்தம் புது கவிஞாறு
மன்னவனின் புகழினைப்பாடும்

1. விழியினில் தொடர்ந்திடும் ஏக்கம் - அது
கதிர் கண்ட பனிபோல மாறும்
இதயத்தில் இனிய ராகங்கள் உதயம் ஆகுமே
உள்ளங்களில் நீ வாழ உறவுகள் தான் கூட
உன் வாசல் தேடி வருவேன் என் மன்னவனே

2. உருவத்தில் தெரிகின்ற தெய்வம் - நம்
இதயத்தில் வாழ்ந்திட வேண்டும்
மனிதமே தெய்வம் வாழ்ந்திடும் கோயில் ஆகுமே
புத்தம் புது பூமி ஒன்று நீயும் வந்து வாழ இங்கு
உன் வாசல் தேடி வருவேன் என் மன்னவனே

**419** **நன்றிகள் பல கூறி நாம் பாடுவோம்**
நாளும் நமை காக்கும் இறையேசுவை
அல்லும் பகலிலும் செல்லும் இடமெங்கும்
அன்னையாய் தந்தையாய்
அருகிலிருந்து அணைக்கும் தேவனை

1. கோடி துன்பம் வந்தபோதும்
கொடிய நோயில் வீழ்ந்த போதும்
தேடி வந்து நம்மை காத்திட்டார்
வாடிய மலரைப் போல் வதங்கியே வீழ்ந்தாலும்
அன்னையாய் தந்தையாய் . . . .

2. உலகம் நம்மை வெறுத்த போதும்
கலகம் நம்மை சூழ்ந்தபோதும்
விலக்கவில்லை அன்பர் இயேசுவே
நிலைகள் குலைந்ததும் அலையாய் எழுகின்றார்
அன்னையாய் தந்தையாய் . . . .

## 420 நன்றி கீதம் பாடுவேன்

நன்றியோடு பாடுவேன்
நாதனே நீ செய்த நன்மை சொல்லி பாடுவேன்
நன்றி நன்றி யேசுவே

1. என் நெஞ்சம் கவலையினால் சோர்ந்து போகையில்
நீ தஞ்சம் தந்தெனக்கு நம்பிக்கையானாய்
விழி நீரால் என் விழிகள் நனைந்திடும் போது
கலங்காதே என்று சொல்லி கவலை மாற்றினாய்
அன்பாலே எனை ஈந்தாய் அன்னையாக அரவணைத்தாய்
உன்பாதம் வந்து நான் நன்றி நன்றி சொல்லுவேன்
நன்றி சொல்லுவேன் நான் நன்றி சொல்லுவேன்

2. நண்பரென்று சொன்ன பலர் பிரிந்து போயினர்
நம்பியவர் பலரும் என்னை கைநெகிழ்ந்தனர்
தனிமையிலே என்னுள்ளம் வாடி போகையில்
துயர் போக்கும் துணையாக நீயே மாறினாய்
அன்பாலே எனை . . .

## 421 நன்றி நன்றி இயேசுவே

நலம் தந்த உமக்கு
நன்றி இயேசுவே

பிரிந்தோடி நானலைந்தேன்
விரைந்தோடி அணைத்துக் கொண்டாய் - நன்றி நன்றி
பேதையாக நானிருந்தேன்
மேதையாக்கி அருள் புரிந்தாய் - நன்றி நன்றி
தாயன்பால் எனை ஏற்று
பாசமழை நீ பொழிந்தாய் - நன்றி நன்றி
திருவிருந்தில் எனைச் சேர்த்து
நிறை மகிழ்வை எனக்களித்தாய் - நன்றி நன்றி

எனக்காக வாழ்ந்து வந்தேன்
பிறர் வாழ எனை அழைத்தாய் - நன்றி நன்றி
தடை கண்டு தயங்கி நின்றேன்

கரம் தந்து கடக்கச் செய்தாய் - நன்றி நன்றி
துவண்டு போகும் வேளையிலும்
துணை நின்று உறுதி தந்தாய் - நன்றி நன்றி
முடங்கி விட்டால் வாழ்வில்லை
என்றுணர்த்தி துணிவு தந்தாய் - நன்றி நன்றி

3. நம்பிக்கையில் தளர்ச்சியுற்றேன்
அருட் கரத்தால் வலிமை தந்தாய் - நன்றி நன்றி
இறை வழியை மறந்து நின்றேன்
நற்செய்தி எனக்களித்தாய் - நன்றி நன்றி
எங்கெங்கோ பிரிந்து சென்றேன்
எனைத் தேடி நீ வந்தாய் - நன்றி நன்றி
எதிலும் உந்தன் தரிசனத்தை
காணும் அறிவை நீ தந்தாய் - நன்றி நன்றி

**422** **நன்றி பாடி நன்றி பாடி நாதனைப் போற்றிடுவேன்**
நாளும் அவரின் வல்ல செயலுக்கு நன்றிப்பண் பாடிடுவோம்
நன்றி நன்றி எம் இயேசுவே உமக்கு நன்றி
நன்றி நன்றி எம் தேவனே உமக்கு நன்றி

1. அன்னை தந்தை அன்பினைத் தந்தாய்
அளவில்லாத ஆற்றல் தந்தாய்
இனிய உறவுகள் இகமதில் தந்தாய்
இதயத்தில் அமைதி தந்தாய் - நன்றி நன்றி

2. இருளின் பாதையில் ஒளியாய் வந்தாய்
இனிய நண்பனாய்த் துணையாய் நின்றாய்
புதிய உலகம் படைக்கச் சொன்னாய்
புதிய மனிதனாய் மாறச் செய்தாய் - நன்றி நன்றி

**423** **நன்றியால் துதி பாடு - நம் இயேசுவை**
நாவாலே என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மை உள்ளவர்

எரிக்கோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்துவிழும்

செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழல் உண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும்

கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

424

**நன்றியின் கீதங்கள் நாளெல்லாம் பாடிடுவேன்**
நன்மையின் தேவனை வாழ்வெல்லாம் புகழ்ந்திடுவேன்
என் இருளை அழித்திடும் ஒளியானார் எனை
அருளால் நடத்திடும் வழியானார்

வாழ்வின் வாசலைத் திறந்துவைத்தேன் - நீ
வானகக்கொடையால் நிரப்புகின்றாய்
வாடிடும் மனதினைத் தேற்றுகின்றாய் - நான்
தேடிடும் அமைதியை அருளுகின்றாய்
என் இயேசுவே என் இயேசுவே - என்
உயிருள்ள வரையில் உனை மறவேன்

நீதியின் வழியில் நடத்துகின்றாய் - எனை
நிறைதரும் வாழ்வில் அணைத்து நின்றாய்
உறுதியில் என்மனம் நிலைபெறவே - நீ
உயிர்தரும் உறவால் கலந்துநின்றாய்
என் இயேசுவே . . .

## 425

**நன்றி கூறி பாடுவோம்**
நல்ல தேவன் இயேசுவை
அரிய செயல்கள் ஆற்றினார் போற்றுவோம்
மகிழ்ச்சியில் இதயங்கள் பொங்கி பொங்கி பாய்ந்திட
ஒரு மனதாய் உறவுடனே பாடிடுவோமே

1. இயேசு கூறும் நல்லுலகு நனவாகும் நாள் வரைக்கும்
உலகினிலே நமக்கென்றும் ஓய்வில்லையே - 2
அன்பினில் நீதியும் நீதியில் அன்பையும்
சமத்துவத்தில் வாழ்வையும் வாழ்வினிலே வளமையும்
இறையரசில் நாம் காண்போமே - 2

2. மனித மாண்பு எல்லோருக்கும் மலரும் நல்லநாள் வரைக்கும்
சமுதாயம் விழிப்போடு வாழ வேண்டுமே - 2
உழைப்பினில் உயர்வையும் பகிர்வினில் உறவையும்
மனிதத்தில் புனிதமும் புனிதத்தில் மனிதமும்
இறையரசில் நாம் காண்போமே - 2

## 426

**நன்றி சொல்லி பாடிடுவோம்**
நன்மை செய்த தேவனையே
நாளெல்லாம் காத்து நடத்தும் இறைவனை
நலமெல்லாம் ஈந்து மகிழும் நாதனை
நன்றி சொல்லி பாடிடுவோம்
நன்மை செய்த தேவனையே

1. கரத்தில் நமது பெயரைப் பொறித்து
கண்ணின் மணியாய் காக்கின்றார்
கல்லில் நம் கால்கள் மோதாத படியே
கரம்பிடித்து நம்மை நடத்துகின்றார் - 2
வலப்புறம் ஆயிரம் இழந்தாலும்
இடப்புறம் ஆயிரம் இழந்தாலும்
தீமைகள் அணுகாது காத்திடுவார்

2. கருணையும் இரக்கமும் பொழிந்தே நாளும்
தயவுடன் நம்மை நடத்துகின்றார்

நன்மைகளால் நம்வாழ்வை நிரப்பி
நலமுடன் நம்மை நடத்துகின்றார் - 2
அவரே அரணாய் இருக்கின்றார்
அவரே புகலிடமாய் உள்ளார்
அவரை எந்நாளும் போற்றிடுவோம்

427 **நன்றி நன்றி நன்றி என்று நாம் பாடுவோம்**
நல்லவராம் யேசுவையே நாம் போற்றுவோம்
எண்ணில்லாத நன்மைகளை நம்மில் செய்கின்றார்
எந்தன் நல்ல தேவனை நாளும் போற்றுவோம்

1. வாழவைக்கும் தெய்வமாய் நம்மில் வருகின்றார்
வாரி வழங்கும் வள்ளலாய் என்றும் அருள்கின்றார்
மண்ணில் உள்ள மாந்தர்களே - லல்லாலா
மன்னவனைப் பாடுங்களே - லல்லாலா
நாளும் பொழுதும் நன்மைகளோடு நடத்தும் தேவனவர்
நன்றியோடு நாமும் நாளும் நாதனைப் பாடிடுவோம்

2. நோய்கள் பேய்கள் நீக்கி நம்மை நாளும் காக்கின்றார்
நொடியும் நம்மைப் பிரியாமலே வாழ்ந்து வருகின்றார்
கேளுங்கள் கொடுக்கப்படும் - லல்லாலா
தட்டுங்கள் திறக்கப்படும் - லல்லாலா
என்று சொன்ன தெய்வத்தை வாழ்த்திட வாருங்களே
வாழவைக்கும் தேவனை வணங்கிட வாருங்களே

428 **நன்றி நன்றி நல்ல தேவனே**
நன்மை புரியும் வல்ல தெய்வமே
ஏழு ஸ்வரங்களில் இனிய ராகத்தால்
ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடுவேன்

உந்தன் கைகளில் எனது பெயரையே
உரிமையாக பொறித்து வைத்தீரே
முன்னும் பின்னுமே எங்கும் சூழ்ந்துமே
என்றும் என்னை பாதுகாத்தீரே
நன்றி நன்றி நல்ல தேவனே

2. உந்தன் சிறகினில் என்னை சுமத்துமே
இறுக பற்றி அரவணைத்தீரே
எந்தன் திறமைகள் ஆற்றல் அனைத்துமே
உந்தன் அன்பில் உணர செய்தீரே
நன்றி நன்றி நல்ல தேவனே

## 429

**நன்றி நன்றி நன்றி இறைவா**
நன்றியின் பாடல் பாடுகிறோம் - 2

1. தாயின் கருவில் என்னைத்தேர்ந்தாய் நன்றி இறைவா - 2
சிறகுக்குள் வைத்து என்னைக்காத்தாய் நன்றி இறைவா - 2
எந்தையின் அன்னை தந்தையுமானாய் நன்றி இறைவா - 2
நண்பா என்று என்னை அழைத்தாய் நன்றி இறைவா - 2

2. ஆவியில் நிறைவை என்னில் பொழிந்தாய் நன்றி இறைவா - 2
ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கச் செய்தாய் நன்றி இறைவா - 2
ஆவியின் வரங்கள் ஏழும் தந்தாய் நன்றி இறைவா - 2
பலமொழி பேசும் திறனைத் தந்தாய் நன்றி இறைவா - 2

3. போக்கிலும் வரத்திலும் அரணாய் நின்றாய் நன்றி இறைவா - 2
மேகத்தூணாய் என்னைத் தொடர்ந்தாய் நன்றி இறைவா - 2
நெருப்புத்தூணாய் பாதையில் வந்தாய் நன்றி இறைவா - 2
எதிரிகள் நாண என்னைக் காத்தாய் நன்றி இறைவா - 2

## 430

**நன்றி என்று சொல்லு நெஞ்சே**
நல்ல தேவன் தந்த அன்பை
என்றும் என்றும் சொல்லு நெஞ்சே
என்ன விந்தை எந்தன் வாழ்வில்
நன்றி நன்றி தேவா நன்றி நன்றி நாதா - 2

1. சொல்லவோ மெல்லவோ முடியாது விழைக்கும் செயல்கள்
சொந்த வாழ்வில் செய்ததேவா
நன்றி நன்றி நன்றி
குறையாத அன்பால் உருமாற்றி என்னை
உனதாக்கும் நாதா நன்றி

2. துன்பமோ துயரமோ இல்லாத இன்ப நிலைதான்
எந்தன் வாழ்வில் தந்ததேவா நன்றி நன்றி நன்றி
தவறான வாழ்வை நிறைவாகமாற்றி
எனைத்தாங்கும் நாதா நன்றி

**431** **நன்றி (2) முதல்வா நன்றி (2) இறைவா**
**நன்றி (2) தலைவா நன்றி (2) இறைவா**

1. நலன்களை தந்தாய் நன்றி
பலன்களை ஈந்தாய் நன்றி
இதுவரை காத்தாய் நன்றி
இனியும் காப்பாய் நன்றி

2. காலத்தை தந்தாய் நன்றி - நல்
சூழலை தந்தாய் நன்றி
நலமுடன் நடத்தினாய் நன்றி
இனியும் நடத்துவாய் நன்றி

3. தாழ்ந்தேன் தாங்கினாய் நன்றி
வீழ்ந்தேன் தூக்கினாய் நன்றி
ஆற்றலைத் தந்தாய் நன்றி - நல்
மாற்றத்தை தருவாய் நன்றி

**432** **நன்றி நன்றி என்று நாதனைப்புகழ்வோம்**
நாதமுடன் இசை பாடிடுவோம்
இதய வாசலில் நிற்கின்றார்
இன்னும் என்றும் நம்மைக்காக்கின்றார்
அவரின் தாளினைப் போற்றிடவே
இணைந்தே பாடிடுவோம்

தீம்தன திரனன திரனன திரனான
தீம்தன திரனா திரனன திரனா
என்னையும் படைத்தாய் உயர்ந்திடச் செய்தாய்
என்னில் உறைந்திட உன்னைத் தந்தாய்
உலகமும் கொடுத்தாய் உறவுகள் வளர்த்தாய்
உள்ளம் மகிழ்வுற ஒளிதந்தாய்

மலரும் மலரினும் சிறந்தவரே
கனியும் கனியினும் இனியவரே
நீரும் நீரினும் தூயவரே
முகிலும் முகிலினும் உயர்ந்தவரே
அன்பினில் வளர அருளினில் நிலைக்க
ஆவியின் கொடைகள் தந்தவரே

2. துன்பமும் துயரமும் தொடர்ந்து வந்தாலும்
வறுமையும் நோயும் வருந்தச் செய்தாலும் -
அஞ்சியே ஓடி அயரச்செய்தாலும்
உன்கரம் என்னைத் தாங்கிடுமே
மலரும் ..................

**433** **நன்றிப்பாடுவேன் இனியயேசுவே**
வாழும் நாளெல்லாம் போற்றிப் பாடுவேன்
என்னைத் தேடியே வந்த தெய்வமே
என்றும் உன்னையே வாழ்த்திப் பாடுவேன்
நன்றி நன்றி நன்றி யேசுவே - 4

1. உயிரைத் தந்ததால் உருவம் தந்ததால்
உறவைத் தருவதால் நன்றி யேசுவே
வாழ்வைத் தந்ததால் வளமும் தந்ததால்
வாழ வைப்பதால் நன்றி யேசுவே
உந்தன் அன்பை என்றும் பெறுவதால்
உன்னில் என்னை நிறையச் செய்வதால்
உந்தன் பாதையில் எந்தன் பாதங்கள்
வழிநடக்க ஆசிதந்ததால்
நன்றி நன்றி நன்றி யேசுவே

2. தாயும் ஆனதால் தந்தை ஆனதால்
நண்பன் ஆனதால் நன்றி யேசுவே
எந்த நாளிலும் என்னில் வாழ்ந்திடும்
சொந்தமானதால் நன்றி யேசுவே
மன்னிக்கின்ற மனதைத் தந்ததால்

மனிதநேய சிந்தை தந்ததால்
விடியல் நோக்கியே எந்தன் வாழ்வையே
அர்ப்பணிக்க ஆசிதந்ததால்
நன்றி நன்றி நன்றி யேசுவே

434 **நாமணக்குது யேசு என்னும் நாமம் சொன்னாலே**
நெஞ்சினிக்குது யேசுவுக்கு நன்றி சொன்னாலே
தந்தானே தந்தானே தந்தன தந்தா - 2
தந்தானே ஓ ஓ ஓ ஓ ஓய்யா

1. ஆழ்கடலில் அலைநடுவில் என்துணை நீரே
ஆதரவாய் வந்து கரை சேர்ப்பதும் நீரே
என்னை என்றும் வழி நடத்தும் ஆயனும் நீரே
புல்வெளிக்கு கூட்டி சேர்க்கும் மேய்ப்பனும் நீரே
உன்னைவிட்டு பிரிந்து ஏங்கி தவிக்கும் வேளையில்
தேடிவந்து நீர் என்னை சொந்தமாக்கினீர்
நன்மையாவும் தந்த எந்தன் அன்பு தெய்வமே
நன்றி நன்றி என்று கோடி சிந்து பாடுவேன்

2. துன்பம் என்னை சூழ்ந்தபோது துணையென நின்றாய்
அன்னைபோல அருகிருந்து அடைக்கலம் தந்தாய்
அன்பு செய்து வாழ எனக்கு அறிவுரை தந்தாய்
பண்பில் என்றும் வாழ பத்து கட்டளை தந்தாய்
அன்பினாலே உன்னை எனக்கு உணவென தந்தாய்
என்றும் உந்தன் கண்மணிபோல் காத்திருக்கின்றாய்
வான்கொடை ஏழும் தந்த ஏசுதேவனே
வாழி உந்தன் நாமம் என்று நன்றி சொல்லுவேன்

435 **நாவசைந்தால் உன் புகழ்பாடும்**
நானசைந்தால் உன்பணி செய்வேன் - இறைவா

தேவன் தந்த வார்த்தை என்னில் செயலாற்றிட
ஆற்றலாகவே வந்திடுவாயே (2)
நேசக்கரம் நீட்டியே அரவணைக்கும் இயேசுவே - 2
உன் வார்த்தை எனக்கு வாழ்வாகுமே - 2

2. வேதம் சொல்லும் உறவு வாழ்வில் தழைத்திடவே
நண்பன் இயேசுவே உதவிடுவாயே - (2)
புதிய வானம் காணவே புதிய பூமி படைக்கவே - 2
மனித மாண்பை வளர்த்திடுவேனே - 2

**436** **நெஞ்சினில் மலர்ந்திடும் ராகங்களே எங்கள்**
நேசரைப் பாடுங்களே
அன்பினில் கனிந்திடும் நினைவுகளே எங்கள்
இயேசுவைப் புகழுங்களே - 2

1. வானத்தின் மேகத்தின் ஊர்வலங்கள் - புவி
தாகத்தை தணித்திடவோ
வாழ்க்கைக்கு வார்த்தைகள் கார்முகில்கள்
மனப்பாரத்தைக் குறைத்திடுமே
சோகத்தின் மேகத்தின் சுமை தாங்கி - அவன்
சொந்தங்கள் நிலைத்திடவே - 2

2. தீபத்தின் ஒளியது உன் அழகோ - வழி
பாதைக்கு அது நிலவோ
தூபத்தின் புகையது உன் அருளோ - என்னைத்
தாங்கிடும் தளிர்க் கொடியோ
வாழ்வது எனக்குள் நானல்லவே - என்னில்
வாழ்வது நீயல்லவோ - 2

**437** **நெஞ்சில் சுரக்கும் நன்றி ஸ்வரங்கள்**
நானிலமெங்கும் நான்பாட
நந்தவனத்தில் உண்டு களிக்கும்
வண்டுகள் பாடும் பண்போல
விண்ணில் முளைத்திடும் மின்மினியாய்
நெஞ்சில் முளைத்திடும் நல்விதைகள்
மின்னிப் பெருக்கிடும் மின்னல்களாய்
கண்ணில் தெரிந்திடும் நம்பிக்கைகள்
நன்மையைக் கண்டேன் நல்லெண்ணம் கொண்டேன்
நானிலமெங்கும் உன் புகழ் சொல்வேன்

தோள் அழுத்தும் நுகத்தடியின் விலங்குகளை உடைக்க
தோழமையில் பூமியிலே புது உலகம் படைக்க
நெஞ்சுக்குள்ளே புரட்சிக் கனலை யார் விதைத்தது
கண்ணுக்குள்ளே நெருப்புதணலை யார் வைத்தது
அஞ்சாத நெஞ்சமும் அணையாத எண்ணமும்
எல்லாமே நீ தந்தது

எல்லையில்லா உலகினிலே எனக்கு உயிர் தந்தாய்
எத்தனையோ மனிதர்களை உறவெனவே தந்தாய்
ஈரமுள்ள உறவுகளை யார் தந்தது
இறையரசின் நினைவுகளும் யார் தந்தது
புதுயுகத்தின் கனவுகள் புன்னகைக்கும் உறவுகள்
எல்லாமே நீ தந்தது

**438** **பாடச்சொல்லி தந்தவர் யேசுவல்லவா**
பாடல் வரிகளும் அவரல்லவா
பல்லவி சரணம் அவரல்லவா
பாடுவதே என் சுகமல்லவா

இராகம் தாளம் அவரென்றால் - நான்
பாடும் குயிலாவேன்
வேதம் முழுவதும் அவரென்றால் - புதுப்
பாடல் நானாவேன் - 2

நெஞ்சில் வந்த துன்பங்கள் - அவர்
வரவால் மாறியதே
பெயரைச் சொன்னதும் ஆகுமே - நம்
வாழ்க்கை ஒளிபெறுமே - 2

**439** **பாடிடுவேன் போற்றிடுவேன்**
பாதத்தில் பணிந்து நான் வணங்கிடுவேன்
பாவி எந்தன் பெயர் சொல்லி
அன்புடனே நீ அழைத்து
ஆதரவாய் என்னை நடத்திடும் உன் புகழ்

1. நெஞ்சத்திலே நிறைந்ததெல்லாம் நீங்காத உன் நினைவே
ஆண்டவரே என் இயேசுவே
ஆளுகின்றாய் என் இதயத்தையே
அச்சமில்லை . . . . ஆ . . . . அதிர்ச்சியில்லை . . . ஆ
அச்சமில்லை அதிர்ச்சியில்லை
அலைந்திடும் கடலலை ஓய்ந்திடும் வரையில் நான்

2. இலையுதிர்ந்த மரமதைப் போல் நான் தனியே வாடினாலும்
நிலைகுலைய விட மாட்டீர் எனதருகில் இருக்கின்றீர்
அச்சமில்லை . . . ஆ . . .

**440** **சரணம் சரணம் சரணமைய்யா சரணம் சரணம் யேசைய்யா**
சரணம் சரணம் சரணமைய்யா

1. மனுவுருவான திருக்குமரா மனிதரை மீட்ட மறைமுதல்வா
2. ஆயிரம் ஆயிரம் ஏழைகட்கு அற்புத உணவை அளித்தவரே
3. மாண்டவர்க்குயிரை தந்தவரே மரித்தபின் உயிர்த்து எழுந்தவரே
4. பாவங்கள் பிணிகளை குணமாக்கி மனதினில் அமைதியைப் பொழிபவரே

**441** **தேவா எந்தன் நாவிலாடும் பாடலாக வா**
தேவா உந்தன் வான்புகழைப் பாட வரம் தா
உன்னருள் மேன்மையால் பூமி எங்கும் புன்னகை
உன் புகழ் பாடவே பொங்கி வரும் வல்லமை
மனமார வாழ்த்த எழும் இறையரசின் வைகறை

1. நான் எந்தன் வேலியாக எந்நலம் கொண்டேன்
நீ பூமி எங்கும் ஆடும் தென்றலாகினாய்
உன் ஒளி காண காண உள்ளம் மலர வேண்டுமே
உன் வழி போக போக உறவு பெருக வேண்டுமே
இறையே திருவே வாழ்வு உந்தன் கீதமாகவே

நான் சிறு கணமெரியும் ஒளித்துகளானேன்
நீ அதை ஏற்றி வைத்த ஒளிக் கனலானாய்
உன் பணி செய்வதிலே எந்தன் ஆசை தீரவே
தன் தலை தியாக மேற்கும் தீப வாழ்க்கை போலவே
இறையே திருவே வாழ்வு உந்தன் கீதமாகவே

442 **வெள்ளிச் சுரங்களின் அலைகளிலே**
துள்ளி வருகின்ற சந்தங்களே
உள்ளங்கனிந்த என் நன்றியினைச்
சொல்லிப் பாடுங்களே எந்தன் தேவனுக்கே

கருவினில் என்னை அறிந்தவன்
கண்மணிபோல வளர்த்தவன்
அறுவடை மிகுந்த பணியிலே
அடியேன் என்னை அழைத்தவன்
அருகில் இருந்து ஆற்றல் பொழிந்து
நிறையானந்தம் தருபவன்
அந்த நல்ல தேவனுக்கே - என்
நன்றியைக் கூறுங்களேன்

கொடுப்பதில் இன்பம் வைத்தவன்
தன்னையே உண்ணக் கொடுத்தவன்
படிப்பினைகள் சொல்லியவன்
சொன்னபடியே வாழ்ந்தவன்
இடுக்கண்ணுற்று வீழும் போது
எனக்காய் உயிர் கொடுப்பவன் - அந்த . . .

443 **நிறைவாழ்வை நோக்கித் திருப்பயணம்**
பாருலகில் செல்லுவோம்
அருள்வாழ்வு தரும் வார்த்தைகளால்
நன்மைகளை நாம் செய்வோம்
செல்வோம் விரைந்து செல்வோம்
நிறைவாழ்வை நோக்கியே செல்வோம்
செய்வோம் விரைந்து செய்வோம்
இனி புதியதோர் உலகினை நாம் செய்வோம்

1. சுமை சுமக்கும் தோள்களுக்கு வலிமையினை ஊட்டுவோம்
சுகம் மறந்த மாந்தருக்கு வளமையினைக் காட்டுவோம்
இருகரங்கள் விரித்து இங்கு வாடுவோரைத் தேற்றுவோம்
இறையரசின் கனவுகளை நாடு தோறும் சாற்றுவோம்

2. பரிவிரக்கம் சாந்தம் அன்பு பொறுமை கொள்ளுவோம்
மகிழ்ச்சியிலும் அமைதியாக அடக்கமுடன் வாழுவோம்
விசுவாசம் நன்னயமும் கேடயமாய் தாங்கியே
புதுஇனமாய் புதுயுகமாய் வாழ்வு நோக்கிச் செல்லுவோம்

## 444

**நீ செஞ்ச நன்மை யெல்லாம்**
உலகோர்க்கு சொல்லிடுவேன்
நீ கண்ட கனவெல்லாம்
நனவாக நான் உழைப்பேன் இயேசுவே - **உன்**
நினைவாக நான் என்றும் வாழுவேன்

1. ஏழையின்னு வெறுக்கவில்ல
பாவியிண்ணு ஒதுக்கவில்ல
பெண்ணுண்ணு மிதிக்கவில்ல
தாழ்ந்தவண்ணு பழிக்கவில்ல
உன் மனசா என் மனசு ஆகணும்
உன் வாழ்வா என் வாழ்வு மாறணும்
இயேசுவே இயேசுவே
அதனால உன் கனவு பலிக்கணும்

2. துன்பங்கண்டு துடிதுடிச்சேன்
இன்பங்கண்டு மகிழ்ந்து நின்னேன்
பசி கண்டு பரிதவிச்சேன்
தாகங்கண்டு தவிச்சி நின்னேன்
ஒன்னப் போல நானும் இங்கு ஆகணும்
அதனாலே பிறர் துன்பம் ஏற்கணும்
இயேசுவே இயேசுவே
அதனால உன் கனவு பலிக்கணும்

**445** **நீ செய்த நன்மை நினைக்கின்றேன் - என்**
நெஞ்சுருக நன்றி சொல்லுகின்றேன்
இறைவா இறைவா இறைவா இறைவா

1. உண்டிட உணவும் உடையுமே கொடுத்து
ஒரு குறையின்றி காத்து வந்தாய் - ஒரு
அன்னையைப் போலவே அன்பினைப் பொழிந்து
அல்லல்கள் யாவையும் தீர்த்து வைத்தாய்

2. மலருக்குப் பதிலாய் களை யெங்கும் தோன்றி
மனதினை நிரப்புதல் பார்த்திருந்தாய் - உடன்
உலரட்டும் என்றே ஒதுக்கி விடாமல்
களைகளை அகற்றி காத்து வந்தாய்

**446** **பயணம் ஒன்றாய் போகின்றோம்**
பாதை முழுதும் கீதங்கள்

1. தலைவன் இயேசு வழியிலே
தலை நிமிர்ந்தே நடக்கின்றோம்
மலைகள் போல தடை வந்தாலும்
மலைத்திடாமல் கடக்கின்றோம்

2. சுமை சுமந்திடும் தோள்களும்
சுகம் மறந்த கால்களும்
உறவில் இணைந்த மனங்களும்
உரிமை கேட்டு போகின்றோம்

**447** **மதி வேண்டும் இறைவா - நின்**
கருணை நிதி வேண்டும்
இறையே நின் நிறை வாழ்வில்
நிறை ஞானம் நான் பெறவே

1. காலமெல்லாம் உனை நினைக்க
கவலையெல்லாம் நான் மறக்க
காரிருளே சூழ்ந்திடினும் கரம் தழுவி உனைத் தொடர
அருட்கடலே என்னிறைவா அறக்கடலே வாருமையா

2. வாய்மையிலே தினம் நடக்க நீதியிலே நான் வளர
மனிதமிங்கு மலர்ந்திடவே மாண்புகளில் வளர்ந்திடவே
திருக்கடலே திருநாதா திறக்கடலே வாருமையா

## 448

**மீட்புக்காக நன்றி கூறிடுவேன்**
ஆண்டவரின் திருப்பெயரைக் கூப்பிடுவேன்

1. ஆண்டவர் எனக்கு நன்மைகள் செய்தார்
நான் என்ன கைம்மாறு செய்வேனோ
நான் போற்றிடுவேன் பாடிடுவேன் புகழ்ந்திடுவேன்

2. என்மீது அவரது அருளன்பு நிலைத்தது
புகழ்ச்சி பலியினைச் செலுத்திடுவேன் - நான்.....

3. அவரே என் வலிமையும் திடமுமாய் இருக்கிறார்
அவரே எனக்கு மீட்பானார் - நான்.....

## 449

**வெண் முடி சூடிய வேந்தனாம் இமயமும்**
விந்திய மலையனும் வாழ்த்துங்கள்
தண்ணிய கீழ்மேல் மலைகளும் பழனி
நீலமா மலையும் வாழ்த்துங்கள்

1. வானிடமிருந்து நீரினை வழங்கும்
கங்கையும் யமுனையும் வாழ்த்துங்கள்
தேனுறு நீரினைத் தென்னவர்க்களிக்கும்
பொன்னியும் பொருநையும் வாழ்த்துங்கள்

2. இந்திய அன்னையின் எழிலுறு உடையாம்
வங்கமும் அரபியும் வாழ்த்துங்கள்
இந்திய அன்னையின் எழிலடி வருடும்
இந்துமாக் கடலே வாழ்த்தாயோ

3. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும்
பாலையும் இறைவனை வாழ்த்துங்கள்
அறிதமிழ் நிலமெல்லாம் நெறியோடு வாழ்ந்திடும்
அன்பர் அனைவரும் வாழ்த்துங்கள்

## அன்னைக்கு ...!

**450** **அழகின் முழுமையே தாயே**
அலகையின் தலைமிதித்தாயே
உலகினில் ஒளியேற்றிடவே
அமலனை எமக்களித்தாயே

1. இருளே சூழ்ந்திடும் போதே
உதயத் தாரகை போல
அருளே நிறைந்த மாமரியே
அருள்வழி காட்டிடுவாயே

2. அன்பும் அறனும் செய்வோம்
அன்னை உனைப்பின் செல்வோம்
உன்னைத் துணையாய்க் கொள்வோம்
என்றும் பாவத்தை வெல்வோம்

**451** **அம்மா அம்மா உம் பெயர் வாழ்க**
அம்மா அம்மா உம் புகழ் வாழ்க - உம்மை
எந்நாளும் போற்றுகின்றோம்

1. அம்மா மரியே அமலனின் தாயே
உமதன்பை பாட வந்தோம்
இறைவனின் அடிமை இறையருள் உரிமை
அம்மா நீ அடைந்தாய்

2. பரலோக வாசலே பாவியெம் துணையே
உம் பதம் நாடி வந்தோம்
இன்பத்தில் இணைந்து துன்பத்தில் ஆறுதல்
அம்மா நீ அளிப்பாய்

**452** **அம்மா உந்தன் அன்பினிலே**
அருள்வாய் எமக்கு அடைக்கலமே

1. இறைவன் படைத்த எழிலே இயேசுவைத் தந்த முகிலே
தூய்மை பொழியும் நிலவே துணையே வாழ்வில் நீயே

2. புவியோர் எங்கள் புகழே புனிதம் பொங்கும் அழகே
உம் மகன் புதிய உறவில் எம்மையும் வதியச் செய்வாய்

**453** **அம்மா இன்று உனக்காக நான் பாடும் பாடலிது-(2)**
தூயவளே தாய் மரியே (2)

1. அம்மா உன் பணிவாலே நீ வென்றாய் உலகை
அம்மா உன் துணையாலே நான் வெல்வேன் அலகை
உன் நம்பிக்கைதனையே வாழ்வில் இணைத்து
துணிவுடன் நடந்திடவே - இறை
அருள்தனை ஏற்று நன்மையின் உருவாய்
நாளும் வாழ்ந்திடவே

2. அம்மா உன் முகம் கண்டு நான் கொண்டேன் மகிழ்ச்சி
அம்மா என் இதயத்தில் நீ தந்தாய் அமைதி
உன் அன்பினை சுவைத்து நாளும் நினைத்து
உன்னிடம் நான் வரவே
உன் வாழ்வினைக் கண்டு உண்மைகள் உணர்ந்து
நானும் மாறிடவே

**454** **அன்னைக்கு கரம் குவிப்போம் - அவள்**
அன்பை பாடிடுவோம் - அவள் அன்பைப் பாடிடுவோம்

1. கன்னிமையில் இறைவன் உருகொடுத்தார்
அந்த முன்னவனின் அன்னை எனத் திகழ்ந்தாள்
மனுக்குலம் வாழ்ந்திட பாதை படைத்தாள்
தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்

2. பாவமதால் மனிதன் அருள் இழந்தான்
அன்று பாசமதால் அன்னை கருணை கொண்டாள்
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார்
பாவினில் அவள் புகழ் பாடிடுவோம்

3. அன்னை மரி உலகில் வாழ்ந்த வழி
நாம் சென்றிடுவோம் அதுவே சிறந்த வழி
நல்வழி நாடிடும் யாவருமின்று
நல்வழி கண்டிடச் செய்திடுவோம்

## 455 அலையொளிர் அருணனை அணிந்திடுமா
மணி முடி மாமரியே

1. வாழ்க்கையின் பேரரசி வழுவில்லா மாதரசி (2)
கலையெல்லாம் சேர்ந்தெழு தலைவியும் நீயல்லோ
காலமும் காத்தருள்வாய்

2. அகால வேளையிலே அம்மா உன் கருணையாலே (2)
பொல்லாத கூளியின் தொல்லைகள் நீங்கிட
வல்ல உன் மகனிடம் கேள்

3. அகோர போர் முழங்கி அல்லலும் தோன்றுதன்றோ (2)
எல்லோரும் விரும்பிடும் நல்லதோர் அமைதியைச்
சொல்லாமல் அளித்திடுவாய்

## 456 அம்மா என்று அழைத்தால்
குழந்தாய் என்று வருவாய்
அபயம் என்று சொன்னால்
அன்பாய் தூக்கி நெஞ்சில் வைத்து
என்னைக் காத்து கொள்வாய்

1. வேடிக்கை உலகம் பின்னால் நான் சென்றேன்
வேண்டியதெல்லாம் தருமென்று நான் சென்றேன்
மீளாத் துன்பம் நானடைந்தேன்
என் நிலை நானுணர்ந்தேன் - அம்மா உனையழைத்தேன்

2. உலக மாந்தர்க்கு கலங்கரை விளக்கம் நீ
கண்மணியாய் எமை நாளும் காப்பவள் நீ
உன்னை நான் பிரிந்திடேன்
நாழியும் நான் மறவேன் - அம்மா உனையடைந்தேன்

## 457 அன்னையின் அருட்திரு வதனம் கண்டால் - நம்
அல்லல்கள் அகன்று விடும் - அவள்
கண்களில் மின்னிடும் கருணையைக் கண்டால்
கவலைகள் மறைந்து விடும்

1. வாடா லில்லியும் வாழ்த்திப் பாடிடும்
தூய்மை தான் அவள் தோற்றம் - இன்று
தேடா மானிடர் யாருளர் தரணியில்
பாடார் அவள் ஏற்றம் - 2

2. பொன் தாள் வெண்ணிலா தாங்கிட வதனம்
பொலிவால் திகழ்ந்தோங்கும் - இன்று
செந்நீர் பாய்ச்சிய கரங்களில் எம்மை
எடுத்தே அரவணைக்கும் - 2

**458** **அன்பு மழை பொழிந்திடும் தாய் மரியே**
அண்டிவந்தோம் அரவணைப்பாய் எமையே
தாயே வாழ்க மரியே நீர் வாழ்க - எங்கள்
தாயே வாழ்க மரியே நீர் வாழ்க

1. துன்பத்தில் துணையாய் வந்திட்ட
தனி முதல் தலைவனின் தாயே
சிறுமைகள் வாழ்வில் வரினும்
பொறுமையாய் தாங்கிட்ட அன்னையே
தாயே

2. புனித பணியின் புகழே
புண்ணிய வாழ்வின் அருளே
எளியோர் எங்கள் துணையே
காத்திடும் வரங்களால் எமையே
தாயே

**459** **அம்மா மரியே வாழ்க**
அம்மா மரியே வாழ்க
மரியே வாழ்க மரியே வாழ்க
மாதா நீ வாழ்க - எங்கள்
மரியே வாழ்க மரியே வாழ்க
மாதா நீ வாழ்க

அறியாத மாந்தருக்கு அறிய வைத்தாய் - உனை
ஆரோக்கிய தாயாக உணர வைத்தாய்
மறையாத வான் நிலவாய்
மாறாத வான்மழையாய்
திகழ்கின்ற திருமரியே - நீ வாழ்க

உருகாத நெஞ்சமெல்லாம் உருகுதம்மா - உன்
அருகாமை காண இருள் விலகுதம்மா
உலகங்கள் கூறுகின்ற
உன் அன்புப் பெருமைகளை
உன் சந்நிதியில் உணர்ந்து கொண்டோம் இந்நாளில்

**460** **அம்மா அன்பின் சிகரம் நீ**
அருளைப் பொழியும் முகிலும் நீ
அம்மா அழகின் முழுமை நீ
அம்மா என்றதும் கனிபவள் நீ
அம்மா அன்பின் சிகரம் நீ

மாசுடன் பிறந்த மனுக்குலத்தில்
மாசின்றிப் பிறந்த மாணிக்கம் நீ
இயேசுவை அணைத்த கரங்களினால்
சேயரை அணைத்திடாய் தாய்மரியே

புழுதியில் பிறந்தோர் புழுதி சென்றார்
பழுதிலா உனக்கோ அழிவுண்டோ
மனிதனின் மாளிகை தகர்ந்து விடும்
மாபரன் ஆலயம் தகர்தலுண்டோ

**461** **அற்புத எங்கள் அன்னையே தஸ்நேவிஸ் தாயே**
நற்கருணையாம் இயேசுவை எமக்களித்தாயே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க மரியே - எம்மை
வாழ வைக்கும் பரிந்துரையும் நீயே

நற்கருணை இயேசுவின் முதல் பேழையே - அந்த
நல்லோனில் நலமடைந்தோம் உம் தயவாலே
அவர் சொற்படி வாழ அழைத்திடும் - 2
உம் அழைப்பில் என்றும் வாழ மன்றாடம்மா - 2

2. இயேசுவின் திருவுடல் நீ ஈந்தது - அந்த
பாசத்தின் திரு ரத்தம் உமது இரத்தமே
இறை வள்ளலை ஈன்ற தாயே - 2
உம்மைக்கண்டு வணங்குகின்ற நெஞ்சம் வாழுமே - 2

**462** **அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்மரி**
என்றும் உந்தன் புகழை பாடுவோம்
தேடும் மாந்தரை தேடிக் காத்திடும்
உந்தன் அருள் வரங்கள் இன்று தேடினோம்

1. எண்ணிறந்த உதவிகளைப் பெற்றுத்தந்த நீ
எங்கள் வாழ்வில் உடனிருந்து காத்து வருகின்றாய்
நன்றிப் பூக்கள் ஒன்று சேர்த்தோம் உந்தன் பாதத்தில்
தஸ்நேவிஸ் தாய் மரியே - எம்மை
அரவணைத்துக் காப்பாய் நீயே

2. அண்ணல் இயேசு அன்பு வழியை கற்றுத்தந்த உன்
அன்புமிகு ஆதரவில் அச்சம் நீங்குதே
நன்றி பூக்கள் ஒன்று சேர்த்தோம் உந்தன் பாதத்தில்
தஸ்நேவிஸ் தாய் மரியே - எம்மை
அரவணைத்துக் காப்பாய் நீயே

**463** **ஆவே கீதம் பாடியே உன்**
புகழைப் பாடுவேன்
உன் அன்பின் பெருமை
அகிலம் வியக்கும் மாண்பை போற்றுவேன்
ஆவே... ஆவே... ஆ... வே

1. பாவிகளின் ஆதரவே பாருலகோர் ஒளியே
அன்பின் தாய் நீயே என்குரல் கேளம்மா

2. தாயெனவே யாம் அழைப்போம்
தாயன்பில் வாழுவோம்
மாய உலகினில் காத்திடுவாய் அம்மா

**464** **ஆரோக்கியத் தாயே அம்மா அம்மா உந்தன்**
அருட்பதம் நாடி வந்தேன்
மயங்கிடும் மனதினில் மரியே என் அன்னையே
இறையருள் நிறையச் செய்வாய்

1. சங்கீதம் பொங்கும் சந்தோஷ வேளையிலே
பொங்கும் மனம் தினம் கொண்டாடும் மாதவமே - 2
உன்னைத்தான் நம்பித்தான் உலகதை
உனக்களித்தான் - தேவன்
வியந்தான் மகிழ்ந்தான் உன் பெருமை எண்ணித்தான்

2. உள்ளம் முழுதும் நீ தந்தாயே தேவனுக்கு
வெள்ளம் போலே அருள் தந்தாளும் தாரகையே - 2
எண்ணில்லா நெஞ்சங்களை
இறைவனின் பதம் கொணர்ந்தாய் - இறை
நிழலாய் நினைவாய் என் வாழ்வில் வருவாய்

**465** **ஆண்டவர் தம்மையே என் ஆன்மா**
ஏற்றிப் போற்றிப் புகழ்ந்திடுதே
மீட்பர் இறைவன் அவர்தமையே
இதயம் நினைந்து மகிழ்ந்திடுதே

1. தாழ்நிலை நின்றதம் அடியாளைக்
கடைக்கண் நோக்கி அருள்செய்தார்
இதோ இந்நாள்முதல் தலைமுறையாய்
பேறுடையாள் எனப் போற்றிடுமே

2. வல்லமை புனிதம் உடையவரே
பெரியன எனக்குச் செய்துள்ளார்
தமக்கு அஞ்சி நடப்போர்க்கு
இரக்கம் என்றும் காட்டுபவர்

3. கரத்தின் வல்லமை கொண்டே அவர்
செருக்குற்றோரை சிதறடித்தார்
வலியவர் அரியணை நின்று வீழ
தாழ்ந்தவர் தம்மை உயர்த்தி விட்டார்

4. பசித்தவர் தமக்கு நலமீந்து
செல்வரை வெறுமையாய் அனுப்பி விட்டார்
முன்னோர் தமக்கு உரைத்ததுபோல்
ஆபிரகாமும் சந்ததியும்

5. இரக்கம் பெறவே என்றென்றும்
இஸ்ராயேல் மக்களை ஆதரித்தார்
தந்தை திருமகன் ஆவியரும்
என்றும் மகிமை பெற்றிடவே

## 466

**இதயம் மகிழுதம்மா**
துயர் கறைகள் மறையுதம்மா
உள்ளமும் துள்ளுதம்மா
உந்தன் தாய்மையின் நினைவாலே அம்மா

1. தாயெனும் போதினிலே - மனம்
தானுன்னைத் தேடுதம்மா - (2)
ஈன்ற தாயும் போற்றும் உந்தன்
பாதம் பணிந்திடுவேன் அம்மா

2. வாழ்வென்னும் பாதையிலே - ஒளி
விளக்காய் நீ இருப்பாய் - (2)
உண்மை மனதும் உயர்ந்த நெறியும்
நிறைந்து வாழ்ந்திடுவேன் அம்மா

## 467

**எங்கள் ஊரிலே கோவில் கொண்டவளே**
கார்மல் அன்னை பெயர் தாங்கினாள்
மண்ணோர்களின் தாயாகினாள்
விண் வாழும் இறைமைந்தன் கரம் ஏந்தினாய்

1. காலம் முழுதும் கருணை யேசு அருளை வழங்கவே - தாய்
கன்னிமேரி நீ வேளை நகரை உனதாக்கினாய்
கடலில் மூழ்கிய மரக்கலத்தை காத்திட்டாய்
நடக்க மறுத்திட்ட கால் முடத்தை நீக்கிட்டாய்
காலம் முழுதும் காத்து நிற்கும் உம்மை போற்றுவோம்

2. பூவின் இதழ்கள் தேனின் சுவையில்
நாளும் நனையுமே - இந்த
பூமி முழுதும் உந்தன் அருளால் சுகம் காணுமே
உள்ளம் உடைந்தவர் தினம் உம்மில் மகிழ்ந்திட
கள்ளமின்றியே மனம் கனிந்து வாழ்ந்திட
காலம் முழுதும் காத்து நிற்கும் உம்மை போற்றுவோம்

## 468 **ஒரு நாளும் உனை மறவேன் - தாயே (2)**

ஒரு நாளும் உனை மறவேன்.

1. கடல் நீரில் மிதந்தாலும் கானகத்தில் பறந்தாலும்
உலகமெல்லாம் அறிந்தாலும் உத்தமனாய் சிறந்தாலும்

2. நினைத்தவைகள் நடந்தாலும் நிலைகுலைந்தே மடிந்தாலு
என்னைப் பிறர் தான் இகழ்ந்தாலும் இனிதாகப் புகழ்ந்தாலு

## 469 **கலங்கரை தீபமே**

கலங்களின் தாரகையே
துலங்கிடும் மணியே
கலங்குவோர்க் கதியே
காத்திடுவாய்த் தாயே

1. மாதர்களின் மாதிரியே
மாயிருளில் ஒளி தாரகையே
மாதரசியே மன ஒளி தாராய் மாசு அகலச் செய்வாய்

2. தாயெனவே தாவி வந்தோம்
சேயெனவே எமைச் சேர்த்திடுவாய்
பாவி என்னுள்ளம் தாயுனைத் தேடி
கூவிடும் குரல் கேளாய்

## 470 **ஞானம் நிறை கன்னிகையே**

நாதனைத் தாங்கிய ஆலயமே
மாண்புயர் ஏழு தூண்களுமாய்
பலிபீடமுமாய் அலங்கரித்தாயே - ஞானம்

1. பாவ நிழலே அணுகா
பாதுகாத்தார் உன்னையே பரமன்
தாயுதரம் நீ தரித்திடவே
தனதோர் அமல தலமெனக் கொண்டாய் - ஞானம்

2. வாழ்வோர் அனைவரின் தாயே
வானுலகை அடையும் வழியே
மக்கள் இஸ்ராயேல் தாரகையே
வானோர் துதிக்கும் இறைவியே வாழி - ஞானம்

**471** **நாதத்தின் இனிமையில் பண்பாடுவோம் - எந்**
நாளுமே அன்னையின் பண்பாடுவோம்
நெஞ்சத்தில் நிறைந்திடும் நல்அன்பிற்கு - புகழ்
பாக்கள் பாடிடுவோம்
ஆ-ஆ-அன்னையே வாழ்க - 2
அருளால் நிறைந்த அன்னையே நீ வாழ்க

1. இறைவனின் திருவுளத்தை - நிறை
வேற்றிட மனமுவந்தாய் - என்றும்
மறைபுகழ் உன்வழி இறையுளம் அறிந்திட
குறையின்றி காத்திடுவாய்

2. தரணிக்கு தாயானாய் - திருத்
தாய்மையைப் பாடுகிறோம் - என்றும்
திருவாம் இயேசுவின் அன்பர்கள் ஆகிட
தாயே உன் அருள் தாராய்

**472** **தரணியர் வாழ்த்தும் தாய்மரியே**
வரம் விழைந்தோம் யாம் வாழ்வளிப்பாயே

1. குவலயம் போற்றிடும் கோமகனை
குறையினைப் போக்கிட கொடுத்தவனே
குறையற மனுக்குலம் மிளிர்ந்திடவே
கருணையின் முகில்தனை பரப்பிடுவாய்

2. சிலுவையின் அடியிலே தாயானாய்
சிறுமையி மனிதரின் துணையானாய்
சிலுவையைச் சுமந்திட துணைபுரிவாய்
சிதறிய மனிதரைச் சேர்த்திடுவாய்!

3. தரணியின் அரசியும் நீயன்றோ
தாழ்ச்சியின் வடிவமும் நீயன்றோ
தாயினும் சிறந்தவள் நீயன்றோ
தாசருக்குறு துணை நீயன்றோ

**473** **தாவீதின் குலமலரே - ஒளி**
தாங்கிடும் அகல் விளக்கே - என்னைக்
காத்திடும் ஆரணங்கே - அருள்
சுரந்திடும் தேன் சுனையே

1. இறைவனே முதலில் உனைத் தெரிந்தார்
கறை சிறிதில்லாக் காத்திருந்தார் - (2)
மறையவர் புகழும் மாமணியே
கரை சேர்ப்பதுவே உன் பணியே

2. மக்களின் மனமே மகிழ்ந்திடவே
நற்கனி சுதனை எமக்களித்தாய் - (2)
கற்றவர் மற்றவர் யாவருமே
பொற்பதம் சேர்த்திட வேண்டுமம்மா

**474** **தாரகை சூடும் மாமரியே**
தாளினைப் பணிந்தோம் காத்திடுவாய்
தாரகை சூடும் மாமரியே!

தேவனை உலகுக்கு அளித்தவளே
தேடிய துணையைக் கொடுப்பவளே
வாடிய மகவை அணைப்பவளே - (2)
வாழிய ஞானியர் காவலியே

தென்னகக் கன்னி கடலலையும்
பன்னெழில் இமய மாமலையும்
மென்னெழிலாளெம் தாயகமும்
உன் புகழ் பணிந்தே பாடாதோ!

475

**திங்களெனத் தங்கமுகம் கொண்ட எங்கள் அன்னை**
மங்களங்கள் சொல்லி உம்மை
வாழ்த்துகின்றோம்
மனதாரப் பாடியே புகழுகின்றோம்

1. வங்கக்கடல் ஓரத்திலே வந்துறைந்த வான்மரியே
சங்கடங்கள் தீர்த்தெம்மை ஆதரியே
எந்நாளும் எம்மையே காத்திடும் உந்தன்
முன்னாலே மண்டியிட்டு வேண்டுகின்றோம்
உம்மை பண்ணாலே பாடியே புகழ்கின்றோம்

2. சங்கத்தமிழ் சொல்லெடுத்து சங்கீதத்தில் இசைதொடுத்து
தங்கமகள் உம்மை இன்று வாழ்த்துகின்றோம்
எங்களூரில் வாழ்கின்ற தஸ்நேவிஸ் தாய்மரியே
மங்காத ஒளிவிளங்கும் மாணிக்கமே உம்மை
பண்ணாலே பாடியே புகழ்ந்திடுவோம்

476

**மனசே மனசே கலங்காதே**
மாதா இருக்க திகையாதே
முழுமனதோடு நம்பிவிட்டால்
முன்னும் பின்னும் அரணாவாள்
தஸ்நேவிஸ் மாதா எனும் அன்னை
சஞ்சலம் தீர்க்கும் நம் அன்னை

1. துன்பத்தினாலே துவண்டிடும் வேளை தஞ்சம் தந்து காப்பாளே
கலங்கியமனதுடன் ஆலயம் வந்தால்
கண்ணீர் துடைத்து அருள்வாளே
பிரிவினை ஒழித்து சமத்துவம் படைத்து
மனங்களில் சங்கமம் அமைப்பாளே - நம்மை
இறைவழி கொண்டு செல்வாளே

2. உறவுகள் எல்லாம் உதறிய போது உறவாய் வந்து காப்பாளே
ஆபத்து வேளை அருகில் வந்து விபத்தினிலிருந்து மீட்பாளே
வாழ்க்கை துணையை தேடும்போது
திருமணவரம் தந்து காப்பாளே - நல்ல
குழந்தை பாக்கியம் தருவாளே

**477** **மாதாவே சரணம் உந்தன்**
பாதாரம் புவிக்காதாரம் - கன்னி
மா பாவம் எமை மேவாமல்
காவாயே அருள் ஈவாயே - கன்னி - மாதாவே

1. மாசில் உன் மனமும் சேசுவின் உள்ளமும்
மாந்தரின் தவறால் நோவுறக் கண்டோம்
ஜெபம் செய்வோம் தினம் ஜெபமாலை சொல்வோம்
பாவத்திற்காக பரிகாரம் புரிவோம் - மாதாவே

2. நானிலத்தில் சமாதானமே நிலவ
நாஸ்திக உலகம் ஆஸ்திகம் அடைய
உடல் உயிர் அனைத்தும் உவப்புடன் அளிப்போம்
உம் இருதயத்தில் இன்றெமை வைப்போம் - மாதாவே

**478** **மாதாவே துணை நீரே - உம்மை**
வாழ்த்திப் போற்ற வரம் தாரும்
ஈதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா
ஏற்றன்பாக எமைப் பாரும்

வானோர் தம் அரசே தாயே - எம்
மன்றாட்டை தயவாய் கேளும்
ஈனோர் என்றெமை நீர் தள்ளாமல்
எக்காலத்துமே தற்காரும்

ஒன்றே கேட்டிடுவோம் தாயே - நாம்
ஓர் சாவான பாவந்தானும்
என்றேனும் செய்திடாமல் காத்து
எம்மை சுத்தர்களாய் பேணும்

**479** **மாசில்லா கன்னியே மாதாவே உம்மில்**
நேசமில்லாதவர் நீசரே ஆவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2

1. மூதாதையர் செய் முற்பாவமற்றாய்
ஆதியில்லா தோனை தாயே நீ பெற்றாய்
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2

2. தாயே நீ ஆனதால் தாபரித்தெம்மில்
நேசம் வைத்தாழ்வதும் நின் கடனாமே
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2

**480** **முதல்வனின் தாயே புதல்வர்கள் பணிந்தோம்**
உதவிட வாராயோ - **உந்தன்**
அருள் நிதி தாராயோ

1. வாழ்ந்திட துடிக்கின்றேன் - **எனக்கு**
வழி வகை தெரியவில்லை
கைகளை பிடித்திடுவாய் - **அம்மா**
துயரின்றி நடந்திடுவேன்

2. இறைவனின் மகளானாய் - **எங்கள்**
ஆண்டவர் தாயானாய்
நீயின்று அறிந்திடுவாய் - **உந்தன்**
சேய்களின் குறைகள் அம்மா

**481** **வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே**
சிலுவை அடியினிலே சிந்தை நொந்தழுதாயோ

1. பன்னிரு வயதில் ஆலயத்தில் அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை
கரங்களை விரித்தே கள்வனைப் போல்
கழு மரத்தினில் கண்டதினால்

2. திருமணப் பந்தியில் கனி இரசமே அன்று
அருளிய திருமகனே
குருதி சிந்தி கடற்காடியினை இன்று பருகிட கண்டதினால்

3. கண்ணீரே சிந்திய மனிதருக்கு அருள் பண்ணிய திருமகனே
மண்ணவர்க்காகத் தன்னுயிரை இன்று
மாய்த்திடக் கண்டதினால்

## மாதா மன்றாட்டு மாலை

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி தயவாயிரும்
கிறிஸ்துவே பிரார்ர்த்தனை கேட்டருளும்
கிறிஸ்துவே நன்றாய்க் கேட்டருளும்
பாரினை படைத்த பிதா தேவா
பாரினை மீட்ட சுதன் தேவா
பரிசுத்த ஆவி இறை தேவா

*- எங்கள் மேல் இரக்கமாயிரும்*

புனித கன்னி மரியாயே
இறைவனின் புனித மாதாவே
கன்னியரில் நல்ல கன்னிகையே

*- எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்*

கிறிஸ்துவினுடைய மாதாவே
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே
மகா பரிசுத்த மாதாவே
அத்தியந்த வீரத்தி மாதாவே
பழுதற்ற கன்னி மாதாவே
கன்னி சுத்தம் கெடாத மாதாவே
அன்புக்கு உரிய மாதாவே
ஆச்சரியமான மாதாவே
நல்ல ஆலோசனை மாதாவே
சிருஷ்டிகருடைய மாதாவே
இரட்சகருடைய மாதாவே
மகா புத்தியுள்ள கன்னிகையே
வணக்கத்திற்குரிய கன்னிகையே
துதிக்க யோக்கியமான கன்னிகையே
சக்தியுடைத்தான கன்னிகையே
தயைமிகவுள்ள கன்னிகையே
விசுவாசமான கன்னிகையே
தருமத்தினுடைய கண்ணாடியே

ஞானத்துக்கு இருப்பிடமே
எங்கள் மகிழ்வின் காரணமே
ஞானம் நிறைந்த பாத்திரமே
மகிமைக்குரிய பாத்திரமே
அத்தியந்த பக்திமிகு பாத்திரமே
தேவரகசிய ரோஜாவே
தாவீது ராஜாவின் உப்பரிகையே
தந்தமயமான உப்பரிகையே
சொர்ணமயமான ஆலயமே
வாக்குத்தத்தத்தின் பெட்டகமே
பரலோகத்தினுடைய வாசலே
விடியற்காலத்தின் நட்சத்திரமே
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே
பாவிகளுக்கு அடைக்கலமே
கஸ்திப்படுவோரின் தேற்றரவே
கிறிஸ்தவர்களின் சகாயமே
சம்மனசுக்களின் இராக்கினியே
பிதாப்பிதாக்களின் இராக்கினியே
திருத்தூதர்களின் இராக்கினியே
மறைசாட்சிகளின் இராக்கினியே
துதியர்களுடைய இராக்கினியே
கன்னியர்களுடைய இராக்கினியே
ஜென்ம மாசில்லா இராக்கினியே
திருச்செபமாலையின் இராக்கினியே
மோட்ச ஆரோபண இராக்கினியே
எங்கள் சமாதான இராக்கினியே
எங்கள் பங்கின் காவலியே

உலகின் பாவங்களை போக்கும்
உத்தம செம்மறி புருவையாம்
உன்னத இயேசு கிறிஸ்துவே

1. எங்கள் பாவங்களை போக்கியருளும்
2. எங்கள் மன்றாட்டை கேட்டருளும்
3. எங்கள்மேல் இரக்கமாயிரும்

**482** **ஸஸ் ஸஸ் ஸா நிஸகா ஸகமா**
பாம கமபா கரிஸா
நிநிநி தநிதபம
பா ஸா நிஸா நிதபா

**இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார் - 2**
அவரே ஆண்டவர் மெசியாவாம் - 2
நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்
இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்

1. ஆண்டவரை பாடுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள்
அவரை அறியார் நடுவினில்
அவரின் மாட்சியை சொல்லுங்கள்
வயல்வெளி தந்த மலர்களும்
வாழ்த்துப்பாடி மகிழுங்கள்

2. வானங்கள் மகிழட்டும்
வையகம் களிகூரட்டும்
கடலும் அதில்வாழ் அனைத்துமே
களிநடனம் புரியட்டும்
நீதி நேர்மை நிறைந்திடும்
நிலைத்த ஆட்சியை அறியுங்கள்

**483** **இந்த மண்ணில் வந்து மன்னன் யேசு பிறந்தார்**
இன்று நாமும் கூடி பாட்டுப்பாடி மகிழ்வோம்
இறைவாக்கினர்கள் சொன்னபடி
பிறந்த நம் யேசுவைப் போற்றிடுவோம்
போற்றிடுவோம் நாம் போற்றிடுவோம்
லல்லல்லா லல்லல்லா லல்லல் லல்லல் லல்லல்லா
லல்லல்லா லல்லல்லா லல்லல் லல்லல்லா

1. மார்கழி இரவின் குளிரினிலே
மாமரி மகனாய் வந்துதித்தார்
மாடுகள் அடையும் தொழுவத்திலே - ஆ ஆ
மனிதருள் மாணிக்கம் பிறந்தாரே
Happy Christmas Happy Christmas
Happy Happy Christmas

2. புவியில் நன்மனம் கொண்டவர்கள்
நெஞ்சினில் நிம்மதி கண்டிடவே
அமைதியின் வேந்தன் அவனியிலே - ஆ ஆ
அழகிய குழந்தையாய் உதித்தாரே
Happy Christmas . . .

**484** **எந்தன் நெஞ்சுக்குள்ளே நீ பிறக்க**
எனக்கென்ன கவலை என் இறைவா - இனி
அச்சமென்பதெனக்கில்லை
வழியெங்கும் தடையில்லை தலைவா
உந்தன் பிறப்பு சிறப்பு தருமே - ஆ ஆ ஆ
இறைஅரசு நனவாகுமே - ஆ ஆ ஆ
உந்தன் மூச்சு என் வாழ்வின் உயிராகுமே - 2
எந்தன் நெஞ்சுக்குள்ளே (3) பிறக்கவா

1. பாதைகள் தெரியாமல் நான் திரிந்தேன் - வழி
காட்டிடும் விண்மீனாய் நீ திகழ்ந்தாய்
உந்தன் கரமானது ஆ ஆ ஆ
எந்தன் துணையாகுமே ஆ ஆ ஆ
உந்தன் மூச்சு என் வாழ்வின் உயிராகுமே - 2
எந்தன் நெஞ்சுக்குள்ளே - 3 பிறக்கவா

2. வாழ்க்கையை இழந்து நான் தவித்தேன் - நான்
உன்னோடு என்று என்னில் மலர்ந்தாய்
உன் உறவானது ஆ ஆ ஆ
உயிர்த் துணையானது - ஆ ஆ ஆ
உந்தன் மூச்சு என் வாழ்வின் உயிராகுமே - 2
எந்தன் நெஞ்சுக்குள்ளே - 3 பிறக்கவா

**485** **கன்னிமரி பாலகனே**

குடிலில் பிறந்த மன்னவனே
பொன்னுமில்லை பொருளுமில்லை
உனக்கு நான் தர
சின்ன இதயம் ஒன்று உனக்கு
உவந்து நான்தர
கன்னிமரி பாலகனே

ஏழைகண்ட கண்ணீரும்
அடிமைகண்ட அவலமும்
அன்புடனே உவந்து தருகின்றோம்
இந்த நிலை மாறிட குடிலில் பிறந்தாய் - 2
கண்ணான கண்மணியே
விடியல் தந்து என்னை ஏற்றிடு

உழைப்பு மிகுந்த உள்ளமும்
உருக்குலைந்த நெஞ்சமும்
பலியாக உமக்கு தருகின்றோம்
இந்த நிலை மாறிட மனிதனாகினாய் - 2
வழிகாட்டும் முழுநிலவே
என்னை உமது பலியாய் மாற்றிடு

**486** **சின்னராசாவே எங்க செல்லராசாவே!**

சேசுராசாவே எங்க நேச ராசாவே!
சேத்துல மலர்ந்ததிந்த
செந்தாமர பெத்தமுல்ல!
ஆத்துல தண்ணிபோல
ஆறுதலா வந்த புள்ள!

பொம்பளயா பொறந்துபுட்டா பொறப்புலயே கொல்வாங்கண்ணு
ஆம்பளயா பொறந்தாயோ கன்னிமரியின் பாலகனே
கொழந்தயில வேலய தந்து கொடுமையெல்லாம்
செய்வாங்கண்ணு
ஏழ்மையுள்ள யோசேப்பிடம் உதித்தாயோ உத்தமனே

புத்துலகம் பொறந்ததிண்ணு பூத்திருக்கும் நெல்மணியே
நித்தியமும் வாழுகின்ற தந்தையோட சொல்மணியே
இத்தனையும் காலங்களாய் ஏக்கத்தோட காத்திருந்தோம்
சத்தியத்தின் காலமுன்னில் கனிந்ததொரு கண்மணியே!

2. மனுஷரெல்லாம் மிருகங்களா மாறிகிட்டே இருக்காங்கண்ணு
மானுடத்தின் பெருமை சொல்ல மாட்டிடையில் பொறந்தாயோ
வீடு இல்லா மக்களோட விதியினையே மாற்றிடவே
விலங்குகளின் கூடாரத்தில் துலங்குனியோ மாணிக்கமே
வீதியில கெடக்கிறோம் வேதனயில் வாழுறோம்
விடுதல கெடைக்குமுனு ஏங்கியே தவிக்கிறோம்
எங்களோட தங்கியிருந்து எங்களுக்கு வாழ்வுதர
எண்ணியே வந்தாயோ தங்கத்தாயின் கண்மணியே!

**487** **தேவகுமாரா கேட்கிறதா - என்**
தியான கீதம் கேட்கிறதா?
இமைகள் திறந்து உந்தன் கண்கள்
எனை மட்டும் பார்க்கிறதா - 2

1. உன்னைக் காண விழிகொடுத்தாய்
உன்னைப் பாட மொழி கொடுத்தாய்
பயணம் போக வழி கொடுத்தாய்
பாதை எங்கும் ஒளி கொடுத்தாய்
உன்னை நினைத்தே உருகிவிட்டேன்
என்னை உமக்கே கொடுத்துவிட்டேன்
உமக்கே என்னைக் கொடுத்துவிட்டேன் - 2

2. கண்ணீர் வெள்ளம் வருகிறது
கர்த்தர் பாதம் தொடுகிறது
என்னைப் போல ஆலயத்தில்
மெழுகுவர்த்தி அழுகிறது
உன்னை நினைத்தே உருகிவிட்டேன்
என்னை உமக்கே கொடுத்து விட்டேன்
உமக்கே என்னைக் கொடுத்துவிட்டேன் - 2

**488** **நல்ல நல்ல சேதி வானில் இன்று வந்ததே**
எல்லோரும் கேளுங்களே
நாம் வாழும் பூமி நலமாகும் என்று
நம்பிக்கை வளருங்களே
ஆலேலூயா ஆலேலூயா ஆலேலூயா - 2

1. எல்லோரும் கடவுள் பிள்ளைகள் என்று
இயேசு சொல்லுகின்றார்
எங்கெங்கும் நிலவும் பகைபிரிவுகளை
தன்னுடலில் வெல்லுகின்றார் - ஆலேலூயா . . . . .

2. நல்லவர் எல்லாம் விடுதலை அடைவர்
நற்செய்தி அதுவாகும்
அன்பினில் வாழ்ந்து அனைத்தையும் பகிர்ந்தால்
இறையாட்சி நனவாகும் - ஆலேலூயா . . . .

**489** **பொழுது புலரும் நேரமிது**
தந்தான தந்தான தந்தானனா
தென்றல் தாலாட்டும் பாடுது
தந்தானே தந்தானே தந்தானேனா
பூத்தூவி வானவர் உன்னை வாழ்த்துப்பாடிட - 2
புன்சிரிப்போடு துயிலும் பாலன் யேசுவே ஆராரோ - 2
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

1. துன்பத்திலே துவண்டு வாழும் ஏழை உள்ளங்களே
பாவத்திலே பரிதவிக்கும் இறைவன் சாயல்களே
கண்கலங்கிட வேண்டாம் உள்ளம் வருந்திட வேண்டாம் - நல்
வரம் கொடுத்து வாழவைக்க யேசு பிறந்துள்ளார் - 2
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

2. உள்ளத்திலே இறைவன் அரசு உதயமாகட்டும் - நம்
இல்லத்திலே இறைவன் அருள் வந்து தங்கட்டும்
உலகெத்திசையிலும் இறைமாட்சி ஓங்கட்டும்
உலக மாந்தர் அனைவரும் இறை அன்பில் வாழட்டும் - 2
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

**490** **இயேசுவின் இருதயமே - எங்கும்**
எரிந்திடும் அருள் மயமே - உந்தன்
ஆசியும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலை பெறுமே

1. இறைவனுக்கிதயம் உண்டு - அந்த்
இதயத்தில் இரக்கம் உண்டு - என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால் - இங்கு
அனைவர்க்கும் வாழ்வு உண்டு

2. கடவுளின் கருணை உண்டு - அந்த
கருணைக்கு உருவம் உண்டு - அவர்
உருவத்தில் உதித்தெழும் உயிர் அதனால் - எங்கள்
உள்ளத்தில் உவகை உண்டு

3. இரவினில் தீபமுண்டு - இந்த
இல்லத்தில் ஒளியுமுண்டு - எங்கள்
இருதய அன்பர் விழித்திருந்தால் - எந்த
இரவிலும் காவல் உண்டு

**491** **எல்லாம் உமக்காக**
இயேசுவின் திவ்ய இருதயமே

1. எந்தன் சிந்தனை சொல் அனைத்தும்
எந்தன் செயல்கள் ஒவ்வொன்றும்
எந்தன் உடல்பொருள் ஆவி முற்றும்
உன் புகழ் அதிமிகு மகிமைக்கே

2. ஒளியை நோக்கா மலரில்லை
நீரை நோக்கா வேரில்லை
உன் புகழ் நோக்கா வாழ்வனைத்தும்
வாழ்வில்லை அதில் பயனில்லை

## 492 அக்கினி அபிஷேகம்
ஆவியின் அபிஷேகம்

1. சுட்டு எரித்திடும் என்னை சுத்திகரித்திடும்
பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பிடும்
பரிசுத்தமாய் என்னை மாற்றிடும்

2. அக்கினி போட வந்தேன் பற்றி எரியட்டும்
என்று சொன்னவரே இன்று அபிஷேகியும்
ஆவியினாலே சரீரத்திலேயுள்ள
மாய இச்சைகளை என்னில் சுட்டு எரித்திடும்

3. உம்மை போலவே என்னை மாற்றிடும்
சுயம் என்னிலே சாம்பலாகட்டும்
அபிஷேகம் கற்றுக் கொடுத்திடும்
என்று சொன்னவரே என்னை அபிஷேகியும்

## 493 அப்பா தந்தையே - உம்
ஆவியை அனுப்பிவையும்

1. ஞானத்தின் ஆவியை அனுப்பிவையும்
சமாதானத்தின் ஆவியை அனுப்பிவையும்
ஆற்றலின் ஆவியை அனுப்பிவையும்
ஞான ஊற்றான ஆவியை அனுப்பிவையும்

2. அன்பின் ஆவியை அனுப்பிவையும்
ஞான கனிதரும் ஆவியை அனுப்பிவையும்
தேற்றிடும் ஆவியை அனுப்பிவையும்
உம்மை போற்றிடும் ஆவியை அனுப்பிவையும்

## 494 அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச்சென்றேன்
நான் கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் காண்பாரும் உந்தன் பிள்ளை நான்

1. பாடி வரும் பறவைகளும்
காடுகளின் மிருகங்களும்
உன் அன்பில் மகிழ்ந்திருக்க
உன்னைப் பிரிந்து நொந்தேன்

2. சுமைகளில் சோர்ந்தோரே
என்னிடத்தில் வாருமென்றீரே
அந்த ஆறுதல் வார்த்தை என்னை
உம்மிடத்தில் ஈர்த்ததைய்யா

3. வாழ்வு தரும் வசனமெல்லாம்
நீர் என்று அறிந்த பின்னே
வேறு எங்கு நான் போவேன்
எந்தன் புகலிடம் நீரே அப்பா

**495** **அப்பா உம்மை பார்க்கின்றேன்**
அன்பே உம்மை துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே எந்தன் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர்தானப்பா
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீரூற்று நீர்தானப்பா
உம்மில் நான் தாகம் கொண்டேன்

**496** **ஆதிமுதல் அனைத்தையும் ஆளும்**
பரமனின் ஆவியே வருக
ஆண்டவன் பாருக்கு வாக்களித்திட்ட
பரிசுத்த ஆவியே வருக

1. தவறிடும் உலகினில் தாய்த் திருச்சபைதனை
தவறாமல் காத்திட வருக
தேவனின் பிரதிநிதி திருமறையாள
தவறா வரம் தர வருக

2. பொய்மிகு போதகம் அறிந்திடும் உலகினில்
புவியினரை காத்திட வருக
பரமனின் வார்த்தைக்கு பிழையாய் பொருள்தரும்
பாரினை காத்திட வருக

**497** **ஆண்டவரே ஆவியானவர் - அவர்**
எங்குண்டோ அங்கு விடுதலை
பாவத்திலிருந்து விடுதலை, சாபத்திலிருந்து விடுதலை
அழிவிலிருந்து விடுதலை, அடிமைத் தனத்திலிருந்து விடுதலை
அல்லேலூயா அல்லேலூயா

1. பாவி என்மீது அன்பு வைத்தாரே
சேற்றில் விழுந்த என்னை தெரிந்து கொண்டாரே
தம் இரத்தத்தாலே கழுவி விட்டாரே
ஆவியாலே அபிஷேகம் செய்தாரே
ஆனந்தம் ஆனந்தமே கிறிஸ்துவுக்குள்
வாழும் வாழ்க்கை ஆனந்தமே - அல்லேலூயா

2. என் இயேசுவுக்கு நான் செல்லப் பிள்ளை
இனி கவலை என்றும் என் வாழ்வில் இல்லை
அவர் அனுதினமும் வழி நடத்தும் தேவன்
கண்ணின் மணிபோல் என்றும் என்னை அவர்
காப்பார் - ஆனந்தம் . . .

**498** **ஆவியைத் தாரும் இயேசுவே - தூய**
ஆவியைத் தாரும் இயேசுவே

1. புது உயிர் பெற்று நான் வாழ
புதுப்படைப்பாய் நான் மாற - தூய
2. எந்தன் தாகத்தை தீர்க்க
உயிருள்ள நீர் என்னில் சுரக்க - தூய
3. பாவக் கறைகளை கழுவ
பாவத் தளைகளை அறுக்க - தூய

4. மனத்தின் கவலையைப் போக்க
மகிழ்ச்சியால் என்னை நிரப்ப - தூய

5. சாத்தானின் சேனையை வெல்ல
உமது புகழை நான் சொல்ல - தூய

**499** **ஆவியே தூய ஆவியே**
இவர்களில் நிலைத்திடுவீர்
பாரிலே பணி வாழ்விலே
தினம் துணை புரிந்திடுவீர்

1. நீதியின் ஆதவன் இறையேசு
ஓதிய அருள் மொழி அத்தனையும்
நீதியில் இன்றே நிலை பெறவே
ஜோதியே இவர் மேல் ஒளிர்ந்திடுவீர்

2. உலகங்கள் தோன்றிய நாள் முதலே
உயிர் தரும் செயல்களை ஆற்றி வந்தீர்
பணிகளில் புத்துயிர் தருபவரே
இவர் பணிதனில் துணையாய் இருப்பீரே

**500** **ஆவியானவரே அன்பின் ஆவியானவரே**
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
இந்த வேளையிலே

2. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்க வாரும்
இந்த வேளையிலே

3. ஆவியின் வரங்களினால்
என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும்
இந்த வேளையிலே

**501** **ஆவியைப் பொழிந்திடுவீர் என்னை**
அபிஷேகம் செய்திடுவீர் தேவா
உம் வரங்களினால் என்னை நிரப்பி
வழி நடத்தும்

1. தேசமெல்லாம் எழுப்பிடுவீர்
இயேசுவிலே உயர்ந்திடுவீர்
ஆவியின் வல்லமை பொழிந்திடுவீர்
உம் சீடராய் எம்மை மாற்றிடுவீர்

2. இறைவார்த்தை போதிக்கவே
சாட்சிகளாய் எழுப்பிடவே
ஆவியின் வல்லமை பொழிந்திடுவீர்
உம் சீடராய் எம்மை மாற்றிடுவீர்

3. அவர் நாமம் பாடிடவே
அவர் வார்த்தை தியானிக்கவே
ஆவியின் வல்லமை பொழிந்திடுவீர்
உம் சீடராய் எம்மை மாற்றிடுவீர்

**502** **ஆவியை தரவேண்டும் இறைவா - தூய**
ஆவியை தரவேண்டும் தயவாய் - எம்மை
ஆட்கொள்ள வரவேண்டும் விரைவாய்

1. கோவிலாய் நெஞ்சத்தை கொண்டிடவேண்டும்
கோபுரம்போல் ஞானம் ஓங்கிடவேண்டும்
மூவித பகையினை வென்றிடவேண்டும்
மூச்சிலும் பேச்சிலும் நின்றிடவேண்டும்

2. சான்று பகர்ந்திட ஆர்வமும் வேண்டும்
சத்தியம் காத்திட வீரமும் வேண்டும்
நோன்புகள் ஆற்றிட ஆவலும் வேண்டும்
நோய்நொடி தீர்த்திட ஆற்றலும் வேண்டும்

**503** **ஆவியின் திருமுழுக்கீந்திடும் - தேவ**
ஆவியால் நிரப்பிடும்
தேவா தேவா இக்கணமே நிரப்பிடும்

1. புறாவாய் இயேசுமேல் வந்தீரே
புனித ஆவியே வந்திடும்
நாவாய் சீடர்மேல் தங்கினீரே
இன்று எங்கள் மேல் தங்கிடும் - தேவா . . .

2. நிழலாய் மரியாளை நிரப்பினீரே
வரங்களால் எம்மை நிரப்பிடும்
ஒளியால் சின்னப்பரை சூழ்ந்தீரே
ஒளியாய் எம்மை மாற்றிடும் - தேவா . . .

**504** **ஆவியினால் என்னை நடத்தும்**
பாவி என்னை வழிநடத்தும்
தூயன் உன்பதம் சரணடைந்தேன்
சேயன் என்னும் பெயர் அருள்வாய்

1. என்றும் நீ எந்தன் உயிரே - இனி
என்றும் நான் உந்தன் பொருளே
முன்னாள் கனிவினை தீர்த்தாய்
இந்நாள் உனதடி சேர்த்தாய்

2. அன்பு மகிழ்ச்சி அமைதி - பெரும்
பொறுமை தயவுடன் குணங்கள்
நம்பிக்கை சாந்தம் அடக்கம்
நவகனி தரும் மரமாவேன்

**505** **ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே**
ஜீவ நதியே என்னில் பொங்கி பொங்கி வா
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையை பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உன் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே

2. ஜீவதண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தாவே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே
கனி தந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட

## 506

**தூய ஆவியே துணையாக வருவீர்**
இயேசுவின் சாட்சிகளாய் எம்மை மாற்றிடுவீர்

1. மனத்தின் தீமைகளை மன்னிக்க வருவீர்
மனத்தின் கீறல்களை மாற்றிட வருவீர்

2. மனத்தின் பாரங்களை போக்கிட வருவீர்
மனத்தின் காயங்களை ஆற்றிட வருவீர்

3. தாழ்வு மனம் நீக்கி தேற்றிட வருவீர்
தடுமாறி நான் விழாமல் தாங்கிட வருவீர்

## 507

**வல்லமை தேவை தேவா**
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

பொழிந்திடும் வல்லமை
உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை
அக்கினியின் வல்லமை

1. இறுதிநாளில் எல்லோர் மேலும்
ஆவியை பொழிவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்கத் தரிசனம் சொல்வாரே

2. பெந்தெகோஸ்தே நாளின்போது
பெரிதான முழக்கத்தோடு
வல்லமை இறங்கி
வரங்களினாலே நிரப்பும்

**508** **வருக தூய ஆவியே**
வருக எங்கள் நெஞ்சிலே
தருக வானின் வரங்களைத்
தவழும் தீமை விலகவே

1. அகத்தில் ஒளியை ஏற்றவே
அன்புக் கனலை மூட்டவே
சுகமும் வலுவும் நல்கவே
சோர்வும் பயமும் அகலவே

2. உலவும் பேயை ஓட்டவே
உமது வழியைக் காட்டவே
நலமும் மகிழ்வும் அமைதியும்
நல்கி எம்மைத் தேற்றவே

**509** **வானத்திலிருந்து வையகம் எழுந்த**
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனத்தினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக

1. உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக
பயிருக்கு மழையே பார்வையின் ஒளியே
பரமனின் அருளே வருக

2. கீழ்த்திசை வானில் வாழ்த்திசைப் பாடும்
காலைக் கதிரே வருக
ஆழ்கடல் மீனில் அலையுடன் ஆடும்
ஆனந்த நிலவே வருக

3. மனிதனின் மனதில் மதியெனத் துலங்கும்
மாணிக்க விளக்கே வருக
இனிய நல் வாழ்வை உவப்புடன் வழங்கும்
இன்னருள் பெருக்கே வருக

# தவக்காலப் பாடல்கள்

**510**

1. **மைந்தனார் சிலுவை மீது**
மாதுயருடன் வருந்த
நொந்தழுதாள் தாய் மரி

2. திருமகன் அறையுண்ட
சிலுவை அடியில் நின்ற
தேவதாய் நொந்தழுதாள்

3. வேதனை கடலமிழ்ந்த
மாதா ஆத்துமம் வதைய
வாள் பாய்ந் தூடுருவிற்று

4. நேய மகனை இழந்த
தாய் அனுபவித்த துயர்
தானுரைக்க நாவுண்டோ ?

5. அருமையாய் ஈன்ற சுதன்
அவஸ்தையை கண்டிளகி
உருகிப் புலம்பினாள்

6. இரட்சகர் திருத்தாயார்
இக்கொடிய வாதைப்பட
யார் கண்டழாதிருப்பார்

7. திருமகன் துயரத்தால்
உருகும் தாயை கண்டுள்ளம்
கரையாதார் யாருண்டு ?

8. அன்புள்ள தன் திருமகன்
துன்ப துயர் அவஸ்தையில்
தன் ஜீவன் தரக் கண்டாள்

9. பட்வூரணி மாதாவே
பரிதபித்தே உம்மோடு
பாவி நான் அழச் செய்யும்

10. ஆதி இயேசுவை நேசித்தே
யான் அவருக்கினியனாய்
அன்பால் என்னுள்ளம் சுடும்

11. தேவ தாயே தயை செய்து
பாவி என்னிருதயத்தில்
இயேசு காயம் பதியும்

12. சிலுவை அடியில் நின்று
தேவதாயே உம்மோடு நான்
புலம்ப ஆசிக்கின்றேன்

13. கன்னியர் அரசே தாயே
என் கண்ணீரை உம்முடைய
கண்ணீரோ டேற்றருளும்

14. அன்பாம் அக்கினியை மூட்டி
அடியோரைத் தீர்வை நாளில்
ஆதரிப்பீர் கன்னியே

15. மண் உடல் பிரிந்தால்
வான் மோட்சத்தாத்துமம் சேர்ந்து
வாழவும் செய்தருளும்

**511** **சிலுவையின் பாதை சேவிக்க வந்தோம்**
வலுமன நீச வர்ம மைந்தர் யாம்
பலுகும் எம் பாவ பரிகாரமாய்த்
தொழுதோம் கையேற்பாய் துக்க இயேசுவே

1. ஆதியந்தமில்லா ஆண்டவா உன்னை
நீதி என்ற நீதித் தீர்வை விதித்து
யூதர் வர்மம்' தீரக் கையளித்துமா
தீது நாங்கள் செய்தோம் தேவ இயேசுவே

2. பூவுலகை மீட்கும் வேளை வந்ததால்
பாவப் பாரமான பாழ்சிலுவையை
ஆவலாயணைத்து தோளின் மேல் வைத்து
சேவகர் செலுத்த செல்லும் இயேசுவே

3. பசியால் மெலிந்து பகை சூழ்ந்ததால்
வசையால் நலிந்து வன்மை இழந்து
தசைகள் தளர்ந்து தவறித்தரை
அசைந்து விழுந்தீர் ஆசை இயேசுவே

4. கண்ணை கண் சந்திக்க கஸ்திமேலிட
கண்ணீர் ஆநேயோ கதறித் தேம்பி
மண்ணில் ஈன்ற மாதா மனம் உருக
என்னில் சோகம் கண்டு ஏங்கும் இயேசுவே

5. மிஞ்சும் பாரத்தால் நீர்பாதி தூரத்தில்
துஞ்சு வீரரென்றெண்ணி துஷ்ட யூதர்கள்
அஞ்சும் சீமோன் தாங்க செய்திட்டார் இவர்
சஞ்சலம் அகற்றும் சாந்த இயேசுவே

6. வேர்வை இரத்தம் கண்ணீர் தோற்றம் மாற்றவே
சோர்வைக் கண்டு சோர்ந்தார் நல்வெரோணிக்காள்
கூர்வாா் வீரர் சுழந்தும் கூசாமல் வந்து
போர்வையால் துடைக்கப் பெற்ற இயேசுவே

7. வன்மனத்து யூதர் வாதைகள் செய்ய
வன்முறை அயர்ந்து பாதை விழுந்தீர்
இம்முறையாய் பாரக் குருசேந்தி எம்
சென்மவினை தீர்க்கச் செல்லும் இயேசுவே

பச்சை மரத்திற்கே பாடு ஈதென்றால்
பட்டமரக்கேடு பார்க்க கூடுமோ
கெட்டவர் யாம் நித்ய கேடுமீளவே
இஷ்டமாய் இப் பாரம் பெற்ற இயேசுவே

9. எங்கட்காக வீழ்ந்தீர் எங்கட்காகவே
தாங்கினீர் இப்பாரச் சிலுவைதனை
எங்கட்காக வீழ்ந்தீர் இன்னும் ஓர் முறை
எங்கட்காக சாக ஏங்கும் இயேசுவே

10. செம்மறியின் தோள்மேல் சேவகர் அந்தோ
உம் உடை உரித்தார் உத்தமா துஷ்டர்
கண்முன்னே நிர்வாணக் கோலமாய் நின்று
விம்பி உலகம் ஏங்கி வேகும் இயேசுவே

11. ஓ சிலுவை மீது உன் கைகால்களை
நீசர் கட்டி மூன்று ஆணியடித்து
பாசத்தால் இழுத்துப் பாடுபடுத்த
ஆசைப்பட்ட தேவனோ ஆ என் இயேசுவே

12. தேவகோபம் தீர தீயர் மத்தியில்
பாவக்கோலம் பூண்டு பாடுகள் பட்டு
பூவிற்கேழு அன்பார் போதனை தந்து
ஜீவனை விட்டீரோ சினேக இயேசுவே

13. கழுமரம் நின்று உன்னை இறக்க
அழும் அன்னை ஏற்று அரவணைக்க
எழும் துயர் மீட்பை எங்கட்கீயவே
தொழுதோம் உன் காயம் துஞ்சும் இயேசுவே

14. கல்லறை அடக்கம் கொண்ட ஆண்டவர்
மெல்ல உன்னை நீங்க மனம் இல்லையே
தொல்லை துயர் வேளை உன்னைப் பின்செல்ல
நல்லமனம் நீ தா நாதா இயேசுவே.

## 512 எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையை சுமக்கும் தெய்வமே

1. குற்றம் எதுவுமே இல்லா தேவனே
எம் குறையைத் தீர்க்கவே மரணம் ஏற்றீரே
பிறர் சுமத்தும் குற்றத்தை சுமக்க அருள் தாரும்

2. பாரச் சிலுவையோ எம்பாவச் சிலுவையோ
நீ சுமந்தது எம்பாவச் சிலுவையோ
உன் உள்ளம் உடைந்ததோ எம்பாவ சேற்றினால்

3. உலகின் பாவமோ சிலுவை வடிவிலே
நீ தோளில் சுமக்கவே தளர்ந்து வீழ்ந்தீரே
எம்பாவச் சுமையினால் உன் உள்ளம் உடைந்ததோ

4. உடலோ இரத்தத்தால் உருவில்லாமலே
எதிர் கொண்டாள் அன்னை ஏதும் பேசாமல்
அவர் உள்ளம் துடித்ததோ அன்பு தாயின் வருகையால்

5. மனித வாழ்க்கையை உயர்த்தும் சிலுவையே
மறுக்க முடியாமல் சீமோன் வருந்தி சுமந்தானே
பிறரன்பு பணியிலே நிலைக்க அருள் செய்வீர்

6. துகள் படிந்த உம் திருமுகத்தையே
துணிந்து வெரோணிக்காள் துடைக்க வந்தாளே
நிலையாய் பதித்ததோ உம் வதனம் துணியில்

7. புழுதி வீழ்ந்தது எம்பாவ பளுவினால்
நீர் மீண்டும் எழுந்தது எம்மை மீட்கவே
உன் உள்ளம் உடைந்ததோ என்பாவ வாழ்க்கையால்

8. வருந்தும் மகளிருக்கு மொழி நீர் நல்கினீர்
பாவிகள் நாங்களும் வருந்த வரம் தாரீர்
பொங்கும் கடல் போல உம் அன்பை அறிவாரோ

9. மூன்றாம் முறையாக நிலத்தில் வீழ்ந்தீரே
கால் ஊன்றி நடந்திடும் நிலையும் தளர்ந்தீரே
என் அன்பு தேவனே எம் வாழ்வை மீட்கவா

10. உடைகள் களைந்திட உம்மைக் கொடுத்தீரே
மடைதிறக்கும் வெள்ளம் போல் உதிரம் சொரிந்தீரே
யாம் தூய்மையில் வாழ எமக்கு அருள் தாரும்

11. மூன்று ஆணிகள் உம்மை துளைக்கவே
மீளாத் துயரினால் நீர் நொந்து வருந்தினீர்
உதிரம் வடிந்திட உம்மை ஈந்தீரே

12. இன்னுயிர் அகன்றது இருளில் ஆழ்ந்தது
இயற்கை சீற்றமும் மரணம் அறிவித்தது
உம் அன்பாம் உயிரையே எமக்காய் ஈந்தீரே

13. துயருற்று துடிக்க உள்ளம் நைந்திட
உயிரற்ற உடலை அன்னை சுமந்திட
ஆறாதத் துயரினால் உம் அன்னை வருந்தினாள்

14. ஒடுங்கிய உடலோ துணியால் பொதிந்திட
நீர் அடங்கிய கல்லறை உமக்கு சொந்தமல்ல
எம்பாவ செயல்களை அடக்க வரம் தாரும்

## 513 தயை செய்வாய் நாதா

என் பாவங்களை நீக்கி

1. அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்
பரிதவித்து என் பிழையை அகற்றுமய்யா
பாவமதை நீக்கி என்னை பனிபோலாக்கும்
தோஷமெல்லாம் தீர்த்து என்னை தூய்மையாக்கும்

2. என் குற்றம் நான் அறிவேன் வெள்ளிடை மலைபோல்
என் தீவினையை மறவாதென் மனம் என்றும் - உம்
புனிதத்தை போக்கி நான் பாவியானேன் - நீர்
தீமை என்று கருதுவதைத் துணிந்து செய்வேன்.

3. பாவத்தில் ஜென்மித்தேன் நீயறிவாய்
தோஷத்தில் பெற்றெடுத்தாய் என் தாயே - உம்
தீர்ப்பு தனில் குற்றமோ குறையோ இல்லை - உம்
முடிவுகளின் நீதியையும் எதிர்ப்பாரில்லை

4. உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகின்றீர் - எம்
ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவை ஊட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன் - பனி
வெண்மைக் குயர்வாக புனிதமாவேன்

5. வல்லவராய் பிதாவை நாம் வாழ்த்திடுவோம்
சுதனேசு கிறிஸ்துவுக்கும் தோத்திரமே - நம்
உள்ளத்தில் குடி கொள்ளும் ஆவிக்கும்
என்றென்றும் புகழ் ஒலிக்க ஆமென்.

**514** **தாவீதின் மகனுக்கு ஓசானா**
ஆண்டவர் பெயரால் வருகிறவர்
ஆசி நிரம்பப் பெற்றவரே
இஸ்ராயேலின் பேரரசே
உன்னதங்களிலே ஓசானா - (2)

**515** **ஆண்டவர் புனித நகரத்தில்**
நுழைகையில் எபிரேயர் சிறுவர் குழாம்
உயிர்த்தெழுதலை அறிவித்தவராய்
குருத்து மடல்களை ஏந்தி நின்று
உன்னதங்களிலே ஓசான்னா
என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்.

1. எருசலேம் நகருக்கு இயேசுபிரான்
வருவதைக் கேட்ட மக்களெல்லாம்
அவரை எதிர் கொண்டழைத்தனரே
குருத்து மடல்களை ஏந்தி நின்று
உன்னதங்களிலே ஓசான்னா
என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்

**516** **எபிரேயர்களின் சிறுவர் குழாம்**
ஒலிவக் கிளைகள் பிடித்தவராய்
உன்னதங்களிலே ஓசானா
என்று முழங்கி ஆர்ப்பரித்து
ஆண்டவரை எதிர் கொண்டனரே

1. பூவுலகும் அதில் நிறைந்த பொருள்யாவும்
குவலயமும் அதில் வாழும் குடிகளும் நம்
ஆண்டவர்க்கே உரிமையான உடைமைகளாம்

2. ஏனென்றால் கடல்களின் மேல் பூவுலகை
நிலைநிறுத்தி அமைத்தவரும் நதிகளின் மேல்
அதற்கு நிலை தந்தவரும் அவர்தாமே

3. வாயில்களே நிலைகளைமேல் உயர்த்துங்கள்
பழங்கால கதவுகளே மேலெழுங்கள்
மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழைவதற்கே

4. மாட்சிமிகு பேரரசர் இவர் யாரோ
வீரமொடு வலிமையும் கொள் ஆண்டவரே
போரினிலே வல்லவராம் ஆண்டவரே

5. மாட்சிமிகு பேரரசர் இவர் யாரோ
சேனைகளின் வலிமை கொள் ஆண்டவரும்
மாட்சிமிகு மன்னவரும் இவர்தாமே

6. பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த
ஆவிக்கும் ஆதியிலே இருந்ததுபோல்
என்றென்றும் மகிமையுண்டாவதாக - ஆமென்

## 517 கிறிஸ்து அரசே இரட்சகரே

மகிமை வணக்கம் புகழ் உமக்கே
எழிலார் சிறுவர் திரள் உமக்கே
அன்புடன் பாடினார் ஓசானா

1. இஸ்ராயேலின் அரசர் நீர்
தாவீதின் புகழ் சேர் புதல்வர் நீர்
ஆசி பெற்ற அரசே நீர்
ஆண்டவர் பெயரால் வருகின்றீர்

2. வானோர் அணிகள் அத்தனையும்
உன்னதங்களிலே உமைப் புகழ
அழிவுறும் மனிதரும் படைப்புகளும்
யாவும் ஒன்றாய் புகழ்ந்திடுமே

3. எபிரேயர்களின் மக்கள் திரள்
குருத்துக்கள் ஏந்தி எதிர் கொண்டார்
ஜெபமும் கீதமும் காணிக்கையும்
கொண்டு யாம் இதோ வருகின்றோம்

4. பாடுகள் படுமுன் உமக்கவர் தம்
வாழ்த்துக் கடனை செலுத்தினாரே
ஆட்சி செய்திடும் உமக்கின்றே
யாம் இதோ இன்னிசை எழுப்புகின்றோம்

5. அவர் தம் பக்தியை ஏற்றீரே
நலமார் அரசே அருள் அரசே
நல்லன் எல்லாம் ஏற்கும் நீர்
எங்கள் பக்தியும் ஏற்பீரே

## 518 ஓசான்னா தாவீதின் புதல்வா
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

1. ஆயிரக்கணக்கான வருடங்களாய் எம்
ஆண்டவரே உம்மை எதிர்ப்பார்த்தோம்
இஸ்ராயேல் ஜனங்களை ஆளவரும் - எம்
ஏசு ரட்சகரே எழுந்தருளும்.

2. மாமரி வயிற்றினில் பிறந்தவரே - மா
முனி சூசை கரங்களில் வளர்ந்தவரே
மானிடர் குலத்தினில் உதித்தவரே - எம்
மன்னவரே எழுந்தருள்வீரே

3. அற்புத யோர்தானில் தீட்சை பெற்றீர் - மா
அருள் தாபரதனரால் புகழப்பட்டீர்
ஆகாயங்களை நீர் திறக்க விட்டீர் - உம்
ஆதி பிதாவிடம் பதவி பெற்றீர்

4. தாவீது அரசனின் புத்திரரே - ஓர்
தெய்வீக முடியோடு வந்தவரே
தருமர் எனப்புகழ் அடைந்தவரே - எம்
தேவனே தேவனே எழுந்தருள்வீரே

5. கானான் மனத்தினில் அழைக்கப்பட்டீர் - நீர்
கலங்கினவர்கள் பேரில் இரக்கப்பட்டீர்
கொண்டு வரச் சொன்னீர் சுத்த தண்ணீர் - அதை
கந்த ரசமாக்கிப் பெயரடைந்தீர்

6. புவியினில் புரிந்தீர் புண்ணியங்கள் - எம்
புத்தியில் புகுந்தீனீர் அருள் மொழிகள்
பக்தியில் சேர்த்தீர் பல சீடர்கள் - மா
பவனியோடு வாரீர் படைத்தவரே

7. மரித்தவர்கள் அநேகர் உயிர்பெற்றார் - ஒரு
மனமுடைந்த விதவை மகன் அடைந்தார்
மமெதலேன் சகோதரன் பெற்றார் - எம்
மனுக்குலம் ரட்சிக்க வந்தவரே

8. குருடர்கள் பலர் உயிர்பெற்றார் - முடம்
கூன் செவிடர் பலர் சுகம் பெற்றார்
குஷ்டர் அதிகமே நலம் பெற்றார் - எம்
கடவுளே எம்மோடே வாரும் நீர்

9. யூதேயா நாட்டினில் புகழ் பெற்றீர் - எம்
யூதர் ராஜரென்று முடிபெற்றீர்
யெருசலேம் நகர்தனில் களிப்புற்றீர் - எம்
இயேசு அரசனே அரசாள்வீர்

10. பாவிகளை தேடி வந்தவரே - எம்
பாவங்கள் பொறுக்க வல்லவரே
பாடுகள் பட்டு உழைத்தவரே - எம்
பராபரனே உட்செல்வீரே

11. கோவேறு குட்டியை ஆசனமாய் - எம்
குழந்தைகள் துணியே பஞ்சணையாய்
கிளைகளே உமது ஜெய கொடியாய் - எம்
கர்த்தரே சீக்கிரம் நடப்பீரே

12. உலகமே உமது அரிய வேலை - எம்
உயிருமே உமது மா புதுமை
உலகத்தை ஆண்டு வருபவரே - எம்
உலகரசே உள்ளே புகுவீரே.

## 519 என் இறைவா என் இறைவா
ஏன் என்னை கை நெகிழ்ந்தீர்

1. என்னைப்பார்ப்போர் எல்லோரும் என்னை ஏளனம் செய்கின்றனர்
உதட்டைப் பிதுக்கி தலையை அசைக்கின்றனர்
ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே அவர் மீட்கட்டும்
அவருக்கு இவன் மீது பிரியமிருந்தால் இவனை
விடுவிக்கட்டும் என்றார்கள்

2. ஏனெனில் பல நாய்கள் என்னை சூழ்ந்து கொண்டன
பொல்லாதவர்கள் கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளையெல்லாம் நான்
எண்ணி விடமுடியும்
அவர்களோ என்னைப் பார்க்கிறார்கள்
பார்த்து அக்களிக்கிறார்கள்

3. என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள்
என் உடைமீது சீட்டுப் போடுகிறார்கள்
ஆனால் நீரோ ஆண்டவரே
என்னை விட்டுத் தொலைவில் போய் விடாதேயும்
எனக்குத் துணையான நீர் எனக்கு
உதவிபுரிய விரைந்து வாரும்

# பெரிய வியாழன்

## 520 நாம் ஆசீர்வதிக்கும் கிண்ணம்
கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்வதன்றோ

1. ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் என்ன கைமாறு செய்வேன்
மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணத்தை கையில் எடுத்து
ஆண்டவருடைய திருப் பெயரைச் சொல்லி கூப்பிடுவேன்

2. ஆண்டவர் தம் அடியாரின் மரணம்
அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது

நான் உன் அடியேன் உம் அடியாரின் மகன்
என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர்

3. புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்
ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன்
ஆண்டவருடைய மக்கள் அனைவரிடை யேயும்
அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்

## 521

**அன்பும் நட்பும் எங்குள்ளதோ**
அங்கே இறைவன் இருக்கின்றார்

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய் கூட்டி சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே

2. ஜீவிய தேவனுக்கஞ்சிடுவோம்
அவருக்கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

3. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே

## 522

**பாடுவாய் என் நாவே**
மாண்புமிக்க உடலின் இரகசியத்தை
பாரின் அரசர் சீருயர்ந்த
வயிற்றுதித்த கனியவர் தம்
பூதலத்தை மீட்க சிந்தும்
விலைமதிப்பில்லாதுயர்ந்த
தேவ இரத்த இரகசியத்தை
எந்தன் நாவே பாடுவாயே

அவர் நமக்காய் அளிக்கப்படவே
மாசில்லாத கன்னி நின்று
நமக்கு என்றே பிறக்கலானார்
அவனி மீதில் அவர் வதிந்து
அரிய தேவ வார்த்தையான
வித்து அதனை விதைத்த பின்னர்
உலக வாழ்வின் நாளை மிகவே
வியத்தகு முறையில் முடிக்கலானார்

இறுதி உணவை அருந்த இரவில்
சகோதரர்கள் யாவரோடும்
